95/2002

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

மார்ச் 8, ௨௲

தொகுதி 89 எண் 1

V211,31 P00
P00.89.1
222771

வெளியீடு 18-10-2000

Issued 18-10-2000

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

புதன்கிழமை, மார்ச் 8, 2000 – தொகுதி 89– எண் 1

Wednesday the 8th March, 2000 – Volume 89 – No. 1

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009*

**Legislative Assembly Secretariat, Fort St. George,**
**Chennai-600 009**

*விலை ரூ. 3.00]*

[Price Rs. 3.00

D
V211,31'P00
P00.89.1
இ22771

95 -
2002

8-3-2000

## உள்ளடக்கம்

| | பக்கங்கள் |
|---|---|
| தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும் | iii - vii |
| Personnel of the Government of Tamil Nadu | ix- xii |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் பட்டியல் | xv - xvii |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி) | xix - xxix |
| **1. வினாக்கள்—விடைகள்—** | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | 1 - 45 |
| **2. அரசினர் தனித் தீர்மானம்—** | |
| சேலம் உருக்காலை நிர்வாகம் தொடர்ந்து பொதுத் துறையின்கீழ் இருக்கவும், தனியாரிடம் ஒப்படைப்பதைத் தவிர்க்கவும், தேவையான நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொள்ள பேரவை கேட்டுக்கொள்ளுதல் | 45 - 85 |
| திரு. சி. ஞானசேகரன் | 46 - 53 |
| திரு. ஜி. பழனிசாமி | 54 - 57 |
| திரு. பி.ஆர். சுந்தரம் | 57 - 64 |
| திரு. ஐ. கணேசன் | 64 - 67 |
| திரு. ம. அப்துல் லத்தீப் | 67 - 71 |
| திரு. லா. சந்தானம் | 71 - 74 |
| திரு. ஜே. ஹேமச்சந்திரன் | 74 - 76 |
| திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில் | 76 - 77 |
| *டாக்டர் க. கிருஷ்ணசாமி | 78 - 79 |
| திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் | 79 - 81 |
| மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி | 81 - 85 |

பக்கங்கள்

3. விதி 110-ன்கீழ் அறிக்கை—

தமிழ் இலக்கியச் சங்கப் பலகையில் குறள்பீடம் அமைத்தல் குறித்து மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சரின் அறிக்கை 85 - 87

4. அறிக்கை அளித்தல்—

பொதுக் கணக்குக் குழு 87

5. ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின் மீது விவாதம்—தொடர்ச்சி 88 - 140

*திரு. வி.கே. லட்சுமணன் 88 - 96

*திரு. இரா. மணிமாறன் 96 - 101

திரு. பி. வெங்கடசாமி 101 - 103

திரு. வா. சந்தானம் 104 - 107

திரு. ஏ.வி.ஏ. நாசர் 107 - 110

*திரு. ஜே. ஹேமச்சந்திரன் 110 - 118

திரு. ம. அப்துல் லத்தீப் 118 - 128

திரு. பி.ஆர். சுந்தரம் 129 - 140

6. அரசினர் தீர்மானம்—

விதி 32-ஐத் தளர்த்தல் 141

7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் 142 - 144




## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்

### ஆளுநர் — நீதிபதி செல்வி மீ. பாத்திமா பீவி

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. முதலமைச்சர் .. மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:
*பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, மாவட்ட வருவாய் அதிகாரிகள், உள் துறை, நிதி, திட்டம், தொழில்கள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, சிறுபான்மையினர் நலன், கடவுச் சீட்டு, வணிக வரிகள் மற்றும் சுற்றுச் சூழல் மாசுக் கட்டுப்பாடு.*

2. கல்வி அமைச்சர் .. மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:
*தொழிற்கல்வி உள்ளிட்ட கல்வி, சட்டமன்றம், தேர்தல்கள், மின்னணுவியல், அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் மற்றும் முன்னாள் இராணுவத்தினர்.*

3. மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:
*மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலம் மற்றும் மின்சாரம்.*

4. வருவாய்த் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்:
*வருவாய், வருவாய் வாரியம், மாவட்ட வருவாய் நிருவாகம் மற்றும் மாவட்டத் துணை ஆட்சியாளர்கள்.*

5. ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. கோ.சி. மணி:
*நகராட்சி நிருவாகம், சமுதாய வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும்*

| | | |
|---|---|---|
| 6. வேளாண்மைத் துறை அமைச்சர் | .. | மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: *வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக்கலை, கரும்புத் தீர்வை மற்றும் கரும்புப் பயிர் மேம்பாடு.* |
| 7. பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் | .. | மாண்புமிகு திரு. துரைமுருகன்: *பொதுப் பணிகள், சிறு பாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டம், செயற் திட்டப் பணிகள், வனம் மற்றும் சின்கோனா.* |
| 8. போக்குவரத்துத் துறை அமைச்சர் | .. | மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: *போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப் பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம் மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்.* |
| 9. நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் | .. | மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்: *நெடுஞ்சாலைகள் மற்றும் துறை முகங்கள்.* |
| 10. தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் | .. | மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்: *தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை.* |
| 11. உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் | .. | மாண்புமிகு திரு. கா.நா. நேரு: *உணவு, விலைக் கட்டுப்பாடு மற்றும் குடிமைப் பொருட்கள் வழங்கல், பொது விநியோக முறை, கூட்டுறவு மற்றும் புள்ளிவிவரங்கள்.* |



| | | |
|---|---|---|
| 12. பால் வளத் துறை அமைச்சர் | .. | *மாண்புமிகு திரு. க. சுந்தரம்: பால், பால் பண்ணை வளர்ச்சி, குடிசை மாற்றுத் திட்டம் மற்றும் இட வசதிக் கட்டுப்பாடு.* |
| 13. தொழிலாளர் நலத் துறை அமைச்சர் | .. | *மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்: தொழிலாளர் நலன், மக்கள் தொகை, வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சி, இரும்பு மற்றும் எஃகுக் கட்டுப்பாடு, பத்திரிகை அச்சுக் காகிதக் கட்டுப்பாடு, மற்றும் இசுலாமிய அறக்கட்டளை (வக்ஃப்).* |
| 14. சட்டத் துறை அமைச்சர் | .. | *மாண்புமிகு திரு. ஆலடி அருணா: சட்டம், நீதிமன்றங்கள், சிறைச் சாலைகள், எடைகள் மற்றும் அளவைகள் குறித்த சட்டம், கம்பெனிகள் பதிவு, கடன் வழங்கல் பற்றிய சட்டமியற்றல் உட்பட கடன் நிவாரணம் மற்றும் சீட்டு நிதி பற்றிய சட்டம் இயற்றுதல்.* |
| 15. கைத்தறித் துறை அமைச்சர் | .. | *மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி: கைத்தறி, துணித் தொழில்.* |
| 16. பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் | .. | *மாண்புமிகு திரு. எம்.ஆர். கே. பன்னீர்செல்வம்: பிற்படுத்தப்பட்டோர் நலன், மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலன் மற்றும் சீர்மரபினர் நலன், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டோர்.* |

17. விளையாட்டு மற்றும் இளைஞர் பணிப் படைத் துறை அமைச்சர் .. *மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:*
*விளையாட்டு மற்றும் இளைஞர் பணிப் படை.*

18. வீட்டு வசதித் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி:
*வீட்டு வசதி, ஊரக வீட்டு வசதி, நகர அமைப்புத் திட்டமிடல் மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சி.*

19. ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் .. *மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:*
*கிராமக் குடிசைத் தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள், பதிவுத் துறை, முத்திரைத் தாள் சட்டம் மற்றும் சத்துணவு.*

20. செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் .. *மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன்:*
*செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல் மற்றும் திரைப்படச் சட்டம், எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை மற்றும் அரசு அச்சகம்.*

21. கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் .. மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:
*கால்நடை பராமரிப்பு.*

22. சமூக நலத் துறை அமைச்சர் .. *மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன்:*
*மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உட்பட சமூக நலன், இரவலர் காப்பு இல்லம், அனாதை இல்லங்கள், குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்டம்.*



23. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் .. *மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:*
*ஆதிதிராவிடர் நலன், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர்.*

24. சுற்றுலாத் துறை அமைச்சர் .. *மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன்:*
*சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்.*

25. கதர்த் துறை அமைச்சர் .. *மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு:*
*கதர் வாரியம், பூமிதானம் மற்றும் கிராமதானம்.*

26. மீன் வளத் துறை அமைச்சர் .. *மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்:*
*மீன் வளம் மற்றும் மீன் வளர்ச்சிக் கழகம்.*

---

# PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

## GOVERNOR -- Justice Selvi M. FATHIMA BEEVI

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

| | | |
|---|---|---|
| 1. **Chief Minister** | .. | **The Hon. Kalaignar M.Karunanidhi:** Public, General Administration, Indian Administrative Service, District Revenue Officers, Home, Finance, Planning, Industries, Prohibition and Excise, Minorities Welfare, Passports, Commercial Taxes and Environmental Pollution Control. |
| 2. **Minister for Education** | .. | **The Hon. Prof. K. Anbazhagan:** Education including Technical Education, Legislature, Elections, Electronics, Science and Technology and Ex-Servicemen. |
| 3. **Minister for Health and Electricity** | .. | **The Hon. Thiru Arcot N. Veerasamy:** Health, Medical Education and Family Welfare and Electricity. |
| 4. **Minister for Revenue** | .. | **The Hon. Thiru Nanjil K. Manoharan:** Revenue, Board of Revenue, District Revenue Establishment and Deputy Collectors. |
| 5. **Minister for Rural Development and Local Administration** | .. | **The Hon. Thiru Ko. Si. Mani:** Municipal Administration, Community Development, Panchayats, Panchayat Unions and Rural Indebtedness and Urban and Rural Water Supply. |

6. **Minister for Agriculture** .. **The Hon. Thiru Veerapandi S. Arumugam:** Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess and Sugarcane Development.

7. **Minister for Public Works and Forest** .. **The Hon. Thiru *Duraimurugan*:** Public Works, Irrigation including Minor Irrigation, Programme Works , Forest and Cinchona.

8. **Minister for Transport** .. **The Hon. Dr. K. Ponmudi:** Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Chennai Metropolitan Development Authority.

9. **Minister for Highways** .. **The Hon. Thiru Pasumpon Tha. Kiruttinan:** Highways and Ports.

10. **Minister for Tamil Official Language, Tamil Culture and Hindu Religious and Charitable Endowments** .. **The Hon. Dr. M. Thamizhkudimagan:** Tamil Official Language, Tamil Culture and Hindu Religious and Charitable Endowments.

11. **Minister for Food, Public Distribution System and Co-operation** .. **The Hon. Thiru K. N. Nehru:** Food, Price Control and Civil Supplies, Public Distribution System, Co-operation and Statistics.

12. **Minister for Milk** .. **The Hon. Thiru K. Sundaram:** Milk and Dairy Development, Slum Clearance and Accommodation Control.



13. **Minister for Labour** .. **The Hon. Thiru A. Rahman Khan:** Labour, Census, Employment and Training, Iron and Steel Control, Newsprint Control and Wakf.

14. **Minister for Law** .. **The Hon. Thiru Aladi Aruna:** Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of Companies, Debt Relief including Legislation on Money Lending and Legislation on Chits.

15. **Minister for Handlooms** .. **The Hon. Thiru N.K.K. Periasamy:** Handlooms, Textiles.

16. **Minister for Backward Classes** .. **The Hon. Thiru M.R.K. Panneerselvam:** Backward Classes, Most Backward Classes and Denotified Communities, Indians Overseas, Refugees and Evacuees.

17. **Minister for Sports and Youth Service Corps** .. **The Hon. Thiru Pongalur N. Palanisamy:** Sports and Youth Service Corps.

18. **Minister for Housing** .. **The Hon. Thiru K. Pitchandi:** Housing, Rural Housing Development, Town Planning and Urban Development.

19. **Minister for Rural Industries and Registration** .. **The Hon. Thiru I. Periasamy:** Rural Industries including Village and Cottage Industries, Registration and Stamp Act and Nutritious Meals.

20. **Minister for Information, Publicity and Printing** .. **The Hon. Thiru V. Mullaivendan:** Information and Publicity, Film Technology and Cinematography Act, Stationery and Printing and Government Press.

| | | |
|---|---|---|
| **21. Minister for Animal Husbandry** | .. | **The Hon. Pulavar P.M. Senguttuvan:** Animal Husbandry. |
| **22. Minister for Social Welfare** | .. | **The Hon. Tmt. S.P. Sarkunapandian:** Social Welfare including Women's and Children's Welfare, Beggars Home, Orphanages and Correctional Administration and Integrated Child Development Services Scheme. |
| **23. Minister for Adi-Dravidar and Tribal Welfare** | .. | **The Hon. Thiru Samayanallur S. Selvarasu:** Adi-Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour. |
| **24. Minister for Tourism** | .. | **The Hon. Thiru N. Suresh Rajan:** Tourism and Tourism Development Corporation. |
| **25. Minister for Khadi** | .. | **The Hon. Thiru Andhiyur P. Selvarasu:** Khadi Board, Bhoodan and Gramdan. |
| **26. Minister for Fisheries** | .. | **The Hon. Tmt. S. Jenefer Chandran:** Fisheries and Fisheries Development Corporation. |

---



# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**பேரவைத் தலைவர்**

மாண்புமிகு திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்

**பேரவைத் துணைத் தலைவர்**

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி

**மாற்றுத் தலைவர்கள் பட்டியல்**

*திரு. அ.லெ. சுப்பிரமணியன்*

*திரு. சி.டி. தண்டபாணி*

*திரு. குத்தாலம் பி. கல்யாணம்*

*டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்*

*திரு. நா. பெரியசாமி*

**செயலாளர்**

*திரு. வெ. இராசாராமன்*

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் பட்டியல்

| | | |
|---|---|---|
| 1. | திருமதி பானுமதி ஆனந்தராஜன், பி.எஸ்சி., பி.ஜி.எல். | .. கூடுதல் செயலாளர் |
| 2. | திரு. செ.ஏ. துரைபாண்டியன், பி.ஏ., பி.எல். | .. இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 3. | திரு. இரா. வெங்கடேசன், எம்.ஏ., எல்.எல்.பி. | .. இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 4. | திரு. கி. சாயிநாதன், பி.ஏ., பி.ஜி.எல். | .. இணைச் செயலாளர் |
| 5. | திருமதி பவானி சுப்பையா, பி.ஏ., பி.ஜி.எல். | .. இணைச் செயலாளர் |
| 6. | திருமதி வீ.நா. உமா, பி.ஏ. | .. குழு அலுவலர் |
| 7. | திரு. சா. கணேசன், பி.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| 8. | திரு. தி. திருமாவளவன், பி.எஸ்சி., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| 9. | திரு. வெ. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.எல். | .. பேரவைத் தலைவரின் சிறப்புத் தனிச் செயலர் |
| 10. | திரு. மு. ஆறுமுகப்பெருமாள், எம்.ஏ., பி.லிட். | .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 11. | திரு. சு. ராஜகுரு | . குழு அலுவலர் |
| 12. | திரு. சௌரி அய்யாத்துரை | .. பேரவைத் தலைவரின் சிறப்பு நேர்முக உதவியாளர் |

13. திரு. க. சம்பத்ராஜன், பி.ஏ., பி.ஜி.எல். .. துணைச் செயலாளர்

14. திரு. கோ. ஸ்ரீராமன், பி.காம். .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்)

15. திரு. எம். ஜோபாய், பி.காம்., பி.ஜி.எல். .. துணைச் செயலாளர்

16. திரு. இரா. முருகானந்தம், பி.எஸ்சி., பி.எல். .. துணைச் செயலாளர்

17. திரு. இல. மாரியப்பன், பி.ஏ. .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்)

18. திரு. கோ. ஞானப்பிரகாசம், எம்.ஏ., பி.எல். .. துணைச் செயலாளர்

19. திரு. ஜி. அனீஸ் அகமத், எம்.ஏ., பி.ஜி.எல். .. துணைச் செயலாளர்

20. திரு. மா. செல்வராஜ், பி.எஸ்சி., பி.எல். .. துணைச் செயலாளர்

21. திரு. வெ.சி. சுப்பிரமணியன், எம்.ஏ., பி.எல். .. சார்புச் செயலாளர்

22. திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல். .. சார்புச் செயலாளர்

23. திருமதி என். துளசிபாய், பி.ஏ. .. சார்புச் செயலாளர்

24. திரு. கோ. ரவீந்திரன், எம்.ஏ., பி.ஜி.எல். .. சார்புச் செயலாளர்

25. திரு. ஊ.கு. சுப்பிரமணியன், எம்.ஏ. .. சார்புச் செயலாளர்

26. திரு. டி. கோவிந்தராஜு, எம்.ஏ., பி.எல். .. சார்புச் செயலாளர்



27. திரு. ஏ.எம்.பி. ஜமாலுதீன், எம்.எஸ்சி., பி.எல். .. சார்புச் செயலாளர்

28. திரு. ம. பிலிப், எம்.ஏ., பி.ஜி.எல்.. தலைமை நிருபர்

29. திருமதி சீ. கனகவல்லி, டி.சி.பி... தலைமை நிருபர்

30. திரு. வெ. வெங்கடேசன், எம்.ஏ... தலைமை நிருபர்

31. திரு. ச. பாலகிருஷ்ணன், பி.எஸ்சி., பி.எல். .. சார்புச் செயலாளர்

32. திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். .. சார்புச் செயலாளர்

33. திருமதி கி. இந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். .. சார்புச் செயலாளர்

34. திரு. நா. நடராஜன், பி.ஏ. பி.ஜி.எல் .. தலைமை நிருபர்

35. திருமதி என். மீனாட்சி, எம்.ஏ., பி.ஜி.எல். .. சார்புச் செயலாளர்

36. திரு. மு. பொன்னுரங்கம், எம்.ஏ., பி.எல். .. தலைமை நிருபர்

37. திரு. தி. உமாபதி, பி.ஏ. .. தலைமை நிருபர்

38. திருமதி ப. சரஸ்வதி, எம்.ஏ., பி.ஜி.எல். .. சார்புச் செயலாளர்

39. திரு. கோ. தேவராஜன், பி.ஏ. .. சார்புச் செயலாளர்

40. திருமதி இரா. கஸ்தூரி, பி.ஏ., பி.ஜி.எல். .. சார்புச் செயலாளர்

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி)

### பெயர்களும் தொகுதிகளும்

| | | |
|---|---|---|
| 1. | அசோகன், திரு. அ. | .. திருவாரூர் (செ.வ.) |
| 2. | அந்தியூர் ப. செல்வராசு, திரு. | .. அந்தியூர் (செ.வ.) |
| 3. | அபுல்ஹசன், திரு. எம்.எம்.எஸ். | .. மயிலாடுதுறை |
| 4. | அப்துல் லத்தீப், திரு. ம. | .. வாணியம்பாடி |
| 5. | அப்பாவு, திரு. மு. | .. ராதாபுரம் |
| 6. | அமரமூர்த்தி, திரு. டி. | .. அரியலூர் |
| 7. | அய்யலுசாமி, திரு. வி. | .. கோவில்பட்டி |
| 8. | அருண்குமார், திரு. பா. | .. மேட்டுப்பாளையம் |
| 9. | அழகராஜா, திரு. என்.ஆர். | .. தேனி |
| 10. | அழகிரி, திரு. ச. | .. சிதம்பரம் |
| 11. | அழகுவேலு, திரு. ச. | .. கண்டமங்கலம் (செ.வ.) |
| 12. | அன்பரசன், திரு. சி. | .. அறந்தாங்கி |
| 13. | அன்பழகன், திரு. வ. | .. செய்யார் |
| 14. | அன்பழகன், பேராசிரியர் க. | .. துறைமுகம் |
| 15. | அன்பில் பெரியசாமி, திரு. | .. திருச்சிராப்பள்ளி-2 |
| 16. | ஆசையன், திரு. பெ. | .. ஆண்டிப்பட்டி |
| 17. | ஆண்டமுத்து, திரு. வெ.அ. | .. பவானிசாகர் |
| 18. | ஆருண் ரஷீத், திரு. ஜே.எம். | .. வில்லிவாக்கம் |
| 19. | ஆலடி அருணா, திரு. | .. ஆலங்குளம் |
| 20. | ஆவுடையப்பன், திரு. இரா. | .. அம்பாசமுத்திரம் |
| 21. | ஆறுமுகம், திரு. தி.ப. | .. திருச்செங்கோடு |

22. ஆற்காடு நா. வீராசாமி, திரு. .. அண்ணா நகர்
23. ஆனந்தன், திரு. பால. .. வந்தவாசி (செ.வ.)
24. இரகுமான்கான், திரு. அ. .. இராமநாதபுரம்
25. இராசமாணிக்கம், திரு. க.வெ.வீ.. மேலூர்
26. இராசமாணிக்கம், திரு. பி. .. ஒரத்தநாடு
27. இராசன், திரு. வி.பி. .. ராஜபாளையம் (செ.வ.)
28. இராசேந்திரன் என்கிற தீரன், திரு. ஆ. .. ஆண்டிமடம்
29. இராமசாமி, டாக்டர் வை. .. பண்ருட்டி
30. இராமசாமி, திரு. கே.ஆர். .. திருவாடனை
31. இராமச்சந்திரன், திரு. ஓ.ஆர். .. கம்பம்
32. இராமச்சந்திரன், திரு. சி.இரா. .. தொண்டாமுத்தூர்
33. இராமச்சந்திரன், திரு. மா. .. திருவோணம்
34. இராமலிங்கம், திரு. ஏ. .. காட்டுமன்னார்கோவில்(செ.வ.)
35. இராமலிங்கம், திரு. செ. .. திருவிடைமருதூர்
36. இராமன், டாக்டர் இ.எஸ்.எஸ். .. பள்ளிப்பட்டு
37. இராமஜெயம், திரு. ந.பூ. .. மயிலாப்பூர்
38. இராஜ ரெட்டி, திரு. ச. .. தளி
39. இராஜேந்தர், திரு. டி. .. பூங்கா நகர்
40. இளங்கோ, திரு. கோ. .. அவினாசி (செ.வ.)
41. ஈஸ்வரன், திரு. ரா. .. வாசுதேவநல்லூர் (செ.வ.)
42. உதயசூரியன், திரு. தா. .. சங்கராபுரம்
43. உபயதுல்லா, திரு. எஸ்.என்.எம்... தஞ்சாவூர்
44. கணேசன், திரு. ஐ. .. எடப்பாடி



45. கணேசன், திரு. கே.சி. .. ஜெயங்கொண்டம்
46. கருணாநிதி, கலைஞர் மு. .. சேப்பாக்கம்
47. கருப்பசாமி, திரு. சொ. .. சங்கரநயினார்கோவில் (செ.வ.)
48. கருப்பண்ண உடையார், திரு. ந. .. பாபநாசம்
49. கருப்புசாமி, திரு. டி. .. உப்பிலியாபுரம் (ஆ.வா.)
50. கன்னையன், திரு. க. .. தொட்டியம்
51. காஞ்சனா கமலநாதன், டாக்டர் .. கிருஷ்ணகிரி
52. காந்தி, திரு. ஆர். .. இராணிப்பேட்டை
53. கிருஷ்ணசாமி, டாக்டர் க. .. ஒட்டப்பிடாரம் (செ.வ.)
54. கிருஷ்ணன், திரு. எஸ்.வி. .. நாங்குநேரி
55. கிருஷ்ணன், திரு. சீ.வெ. .. வேடசந்தூர்
56. குண்டன், திரு. டி. .. உதகமண்டலம்
57. குத்தாலம் பி. கல்யாணம், திரு. .. குத்தாலம்
58. குமாரதாஸ், டாக்டர் தே. .. கிள்ளியூர்
59. கும்மிடிப்பூண்டி கி. வேணு, திரு. .. கும்மிடிப்பூண்டி
60. குழந்தை தமிழரசன், திரு. .. விருத்தாசலம்
61. கோதண்டம், திரு. ஏ. .. ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.)
62. கோபால், திரு. பா. .. மேட்டூர்
63. கோபு, திரு. சி. .. அணைக்கட்டு
64. கோமதி சீனிவாசன், திருமதி .. வலங்கைமான் (செ.வ.)
65. கோவிந்தன், திரு. ப. .. தாரமங்கலம்
66. கோவிந்தன், திரு. வெ. .. பேரணாம்பட்டு (செ.வ.)
67. சக்ரபாணி, திரு. ஆர். .. ஒட்டன்சத்திரம்

68. சண்முகம், திரு. கோ. .. திருப்பத்தூர்
69. சண்முகம், திரு. சி. .. ஆலந்தூர்
70. சண்முகம், திரு. ம. .. கிணத்துக்கடவு
71. சண்முகம் திரு. வி.சி. .. நெல்லிக்குப்பம்
72. சந்தானம், திரு. லா. .. சோழவந்தான்
73. சந்திரசேகரன், திரு. சி. .. சேந்தமங்கலம் (ஆ.வா.)
74. சந்திரசேகரன், திரு. துரை. .. திருவையாறு
75. சமயநல்லூர் எஸ். செல்வராசு, திரு. .. சமயநல்லூர் (செ.வ.)
76. சம்பத், திரு. ஏ.ஜி. .. முகையூர்
77. சரஸ்வதி, திருமதி ஆர். .. தாராபுரம் (செ.வ.)
78. சற்குணபாண்டியன், திருமதி எஸ்.பி. .. டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்
79. சாமிநாதன், திரு. மு.பெ. .. வெள்ளக்கோவில்
80. சிங்காரவேலு, திரு. வி.பி. .. வால்பாறை (செ.வ.)
81. சிவபுண்ணியம், திரு. வை. .. மன்னார்குடி
82. சிவராமன், திரு. ஆர். .. திருப்பத்தூர்
83. சிவராஜ், திரு. சு. .. ரிஷிவந்தியம்
84. சிவலிங்கம், திரு. எஸ்.ஆர். .. பனமரத்துப்பட்டி
85. சிவானந்தம், திரு. ஆர். .. ஆரணி
86. சிவாஜி, திரு. இ.ஏ.பி. .. திருத்தணி
87. சின்னய்யா, திரு. வெ. .. திருமயம்
88. சீனிவாசன், திரு. ஏ.ஆர்.ஆர். .. விருதுநகர்
89. சுகவனம், திரு. இ.ஜி. .. பர்கூர்



90. சுடலைமுத்து, திரு. அ. .. போடிநாயக்கனூர்
91. சுதர்சனம், திரு. டி. .. பூந்தமல்லி
92. சுந்தரம், திரு. க. .. பொன்னேரி (செ.வ.)
93. சுந்தரம், திரு. ந. .. காரைக்குடி
94. சுந்தரம், திரு. பி.ஆர். .. ராசிபுரம்
95. சுந்தர், திரு. கே. .. உத்திரமேரூர்
96. சுப்பராயன், திரு. கே. .. திருப்பூர்
97. சுப்பிரமணி என்கிற சி.சு. மணி, திரு. சி. .. திருவள்ளூர்
98. சுப்பிரமணி, திரு. பி.என். .. ஆற்காடு
99. சுப்பிரமணியன், திரு. அ.லெ. .. திருநெல்வேலி
100. சுப்புலட்சுமி செகதீசன், திருமதி .. மொடக்குறிச்சி
101. சுரேஷ் ராசன், திரு. என். .. கன்னியாகுமரி
102. செங்குட்டுவன், புலவர் பூ.ம. .. மருங்காபுரி
103. செங்கை சிவம், திரு. .. பெரம்பூர் (செ.வ.)
104. செல்லக்குமார், டாக்டர் அ. .. தியாகராய நகர்
105. செல்வம், திரு. ரெ. .. குளித்தலை
106. செல்வராஜ் என்கிற கவிதைப்பித்தன், திரு. .. கொளத்தூர் (செ.வ.)
107. செல்வராஜ், திரு. து. .. உடுமலைப்பேட்டை
108. சேகரன், திரு. ஆர்.ஆர். .. ஓமலூர்
109. சேதுநாதன், திரு. ரா. .. திண்டிவனம்
110. சைதை கா. கிட்டு, திரு. .. சைதாப்பேட்டை

111. சொக்கர், திரு. ஆர். .. சிவகாசி
112. சொக்கலிங்கம், திரு. ஜி. .. திருப்போரூர் (செ.வ.)
113. ஞானசேகரன், டாக்டர் ஆ. .. மேல்மலையனூர்
114. ஞானசேகரன், திரு. சி. .. வேலூர்
115. டேவிட் செல்வின், திரு. எஸ். .. ஸ்ரீவைகுண்டம்
116. தங்கமணி, திரு. கே. .. மானாமதுரை (செ.வ.)
117. தங்கம் தென்னரசு, திரு. .. அருப்புக்கோட்டை
118. தங்கவேலன், திரு. சுப. .. கடலாடி
119. தங்கவேல், திரு. அ.ல. .. சேலம்-2
120. தண்டபாணி, திரு. சி.டி. .. கோயம்புத்தூர் மேற்கு
121. தமிழ்க்குடிமகன், முனைவர் மு. .. இளையான்குடி
122. தமிழ்ச்செல்வன், திரு. ஆர். .. அரக்கோணம் (செ.வ.)
123. தமிழ்மணி, திரு. வீ. .. செங்கல்பட்டு
124. தளபதி, திரு. கோ. .. சேடப்பட்டி
125. தனபாலன், திரு. கே.ஆர்.ஜி. .. சேலம்-1
126. தனபால், திரு. வி.ஜி. .. குடியாத்தம்
127. தாமரைக்கனி, திரு. இரா. .. ஸ்ரீவில்லிபுத்தூர்
128. திசைவீரன், திரு. உ. .. பரமக்குடி (செ.வ.)
129. திருஞானசம்பந்தம், திரு.எஸ்.வி... பேராவூரணி
130. திருவேங்கடம், திரு. பெ.சு. .. கலசப்பாக்கம்
131. துரைசாமி, திரு. பா. .. வரகூர் (செ.வ.)
132. துரை, திரு. கே. .. திருவெறும்பூர்
133. துரைமுருகன், திரு. .. காட்பாடி



134. தெய்வநாயகம், திரு. எ. .. மதுரை மத்தி
135. தேவராஜன், டாக்டர் மு. .. பெரம்பலூர் (செ.வ.)
136. நடராசன், திரு. ஆ. .. பேரூர்
137. நடராஜன், திரு. த. .. செஞ்சி
138. நயினா முகமது, திரு. கோ. .. கடையநல்லூர்
139. நன்னன், திரு. கொ.வீ. .. செங்கம் (செ.வ.)
140. நாகரத்தினம், திரு. ச. .. கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
141. நாசர், திரு. ஏ.வி.ஏ. .. புவனகிரி
142. நாஞ்சில் கி. மனோகரன், திரு... திருவல்லிக்கேணி
143. நிஜாமுதீன், திரு. ஜி. .. நாகப்பட்டினம்
144. நேரு, திரு. கா.நா. .. லால்குடி
145. பசும்பொன் தா. கிருட்டிணன், திரு. .. சிவகங்கை
146. பத்மா, டாக்டர் .. நன்னிலம் (செ.வ.)
147. பரணிகுமார், திரு. பா. .. திருச்சிராப்பள்ளி-1
148. பரிதி இளம்வழுதி, திரு. .. எழும்பூர் (செ.வ.)
149. பழனிசாமி, திரு. ஜி. .. திருத்துறைப்பூண்டி (செ.வ.)
150. பழனிவேல் ராஜன், திரு. பி.டி.ஆர். .. மதுரை மேற்கு
151. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. .. குறிஞ்சிப்பாடி
152. பன்னீர்செல்வம், திரு. மு. .. சீர்காழி (செ.வ.)
153. பாண்டுரங்கன், திரு. ந. .. பெரணமல்லூர்
154. பாலகிருஷ்ணன், திரு. சோ. .. முதுகுளத்தூர்

155. பாலசுப்பிரமணியன், திரு. எஸ்.என். .. பவானி

156. பாலசுப்பிரமணியன், திரு. ப. .. பட்டுக்கோட்டை

157. பிச்சாண்டி, திரு. கு. .. திருவண்ணாமலை

158. புகழேந்தி, திரு. இ. .. கடலூர்

159. புரட்சிமணி, திரு. ச. .. மங்களூர் (செ.வ.)

160. பூவேந்தன், திரு. த. .. பழனி (செ.வ.)

161. பெரியசாமி, திரு. இ. .. ஆத்தூர்

162. பெரியசாமி, திரு. என். .. தூத்துக்குடி

163. பெரியசாமி, திரு. என்.கே.கே. .. ஈரோடு

164. பெரியசாமி, திரு. நா. .. பெருந்துறை

165. பெருமாள், திரு. வி. .. ஏற்காடு (ஆ.வா)

166. பெர்னார்டு, திரு. இரா. .. குளச்சல்

167. பொங்கலூர் நா. பழனிசாமி, திரு. .. சிங்காநல்லூர்

168. பொன்முடி, டாக்டர் க. .. விழுப்புரம்

169. பொன்முடி, திரு. எஸ்.எஸ். .. பல்லடம்

170. பொன்னம்மாள், திருமதி ஏ.எஸ். .. நிலக்கோட்டை (செ.வ.)

171. மகேந்திரன், திரு. இரா. .. நாட்ராம்பள்ளி

172. மணிக்கண்ணன், திரு. ஆ.செ. .. திருநாவலூர்

173. மணி, டாக்டர் அ. .. உளுந்தூர்பேட்டை (செ.வ.)

174. மணி, திரு. கோ.சி. .. கும்பகோணம்

175. மணி, திரு. டி. .. விளவங்கோடு



176. மணி, திரு. ஜி.கே. .. பெண்ணாகரம்

177. மணி நாடார், திரு. எஸ்.எஸ். .. சாத்தான்குளம்

178. மணிமாறன், திரு. இரா. .. திண்டுக்கல்

179. மணிவர்மா, திரு. க. .. தண்டராம்பட்டு

180. மதிவாணன், திரு. இரா. .. இராயபுரம்

181. மதிவாணன், திரு. செ. .. அச்சரப்பாக்கம் (செ.வ.)

182. மனோகரன், திரு. கு. .. தருமபுரி

183. மாயவன், திரு. தி.ப. .. ஸ்ரீரங்கம்

184. மாரி அய்யா, திரு. பே. .. புதுக்கோட்டை

185. மாரிமுத்து, திரு. அ. .. வானூர் (செ.வ.)

186. முகம்மது இஸ்மாயில், திரு. எஸ்.எஸ். .. அரவக்குறிச்சி

187. முகம்மது கோதர் மைதீன், திரு. .. பாளையங்கோட்டை

188 முத்து, திரு. வி. .. சங்கரி (செ.வ.)

189. முத்துராமலிங்கம், திரு. ம. .. திருமங்கலம்

190. முபாரக், திரு. பா.மு. .. கூடலூர்

191. முருகேசன், திரு. பொ. .. காஞ்சிபுரம்

192. முல்லைவேந்தன், திரு. வ. .. மொரப்பூர்

193. முனிரத்தினம், திரு. ஆ.மு. .. சோளிங்கர்

194. மூக்கப்பன், திரு. இரா. .. சின்னசேலம்

195. மூக்கையா, திரு. எல். .. பெரியகுளம்

196. மோகனதாசன், திரு. கோ. .. பூம்புகார்

197. மோகன் கந்தசாமி, திரு. ப. .. பொங்கலூர்

198. மோசஸ், டாக்டர் எம். .. நாகர்கோவில்

199. ரங்கநாதன், திரு. எம். .. குன்னூர் (செ.வ.)
200. ரங்கநாதன், திரு. ப. .. புரசைவாக்கம்
201. ரவி அருணன், திரு. கே. .. தென்காசி
202. ரவிசங்கர், திரு. கு. .. விளாத்திகுளம்
203. ராசேந்திரன், திரு. ஏ. .. போளூர்
204. ராணி, செல்வி க. .. தலைவாசல் (செ.வ.)
205. ராமசாமி, திரு. ஏ.எம். .. ஆத்தூர்
206. ராமச்சந்திரன், திரு. செ. .. திருப்பரங்குன்றம்
207. ராஜு, திரு. எஸ். .. பொள்ளாச்சி
208. ராஜேந்திரன், திரு. எஸ்.கே. ., சத்தியமங்கலம்
209. ராஜ்குமார் மன்றாடியார், திரு. என்.எஸ். .. காங்கேயம்
210. லட்சுமணன், திரு. வி.கே. .. கோயம்புத்தூர் கிழக்கு
211. வல்லரசு, திரு. பி.என். .. உசிலம்பட்டி
212. வாசுகி முருகேசன், திருமதி .. கரூர்
213. விசுவநாதன் திரு. இரா. .. நத்தம்
214. வீரபாண்டி எஸ்.ஆறுமுகம், திரு... வீரபாண்டி
215. வீரப்பன், திரு. கே.கே. .. கபிலர்மலை
216. விஜயகுமார், திரு. கே.எம். .. சாத்தூர்
217. விஜயன், திரு. டி.சி. .. திருவொற்றியூர்
218. வெங்கடசாமி, திரு. பி. .. ஓசூர்
219. வெங்கடாசலம், திரு. அ. .. ஆலங்குடி
220. வெங்கடாசலம், திரு. ஜி.எல். .. பாலக்கோடு



221. வெங்கடேசன், திரு. ச.க. .. மதுராந்தகம்
222. வெங்கடேசன், திரு. பி.வி.எஸ். .. காவேரிப்பட்டினம்
223. வெங்கிடு, திரு. ஜி.பி. .. கோபிச்செட்டிப்பாளையம்
224. வேடம்மாள், திருமதி ஏ.ஆர். .. அரூர் (செ.வ.)
225. வேதரத்தினம், திரு. எஸ்.கே. .. வேதாரண்யம்
226. வேலாயுதன், திரு. சி. .. பத்மநாபபுரம்
227. வேலுசாமி, திரு. வ. .. மதுரை கிழக்கு
228. வேல்சாமி, திரு. க. .. நாமக்கல் (செ.வ.)
229. வேல்துரை, திரு. பா. .. சேரன்மகாதேவி
230. வைதியலிங்கம், திரு. மீ.அ. .. தாம்பரம்
231. ஹேமச்சந்திரன், திரு. ஜே. .. திருவட்டாறு
232. ஜெனிபர் சந்திரன், திருமதி எஸ். .. திருச்செந்தூர்
233. ஜோதிகண்ணன், திரு. மு.ந. .. முசிறி
234. ஸ்டாலின், திரு. மு.க. .. ஆயிரம் விளக்கு
235. ஆன் டி' மான்டி, திருமதி .. நியமனம்

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

திரு. கே.வி. வெங்கடபதி .. அரசு தலைமை வழக்கறிஞர்

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

மாசி 25, பிரமாதி – திருவள்ளுவர் ஆண்டு 2031

2000 மார்ச் 8, புதன்கிழமை

*மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன் அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.*

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:*

*"ஆக்கங் கருதி முதலிழக்குஞ் செய்வினை*
*ஊக்கா ரறிவுடை யார்."*

*பெரும் ஆதாயம் கிட்டுமென்று எதிர்பார்த்துக் கை முதலையும் இழந்துவிடக்கூடிய காரியத்தை அறிவுடையவர்கள் செய்யமாட்டார்கள்.*

### 1. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

*மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள். வினா எண் 61, திரு. கு. மனோகரன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

61—

### கழிவுநீரால் பாதிப்பு

**19409—திரு. கு. மனோகரன்:*

*மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) புகளூர் காகித ஆலையிலிருந்து வெளியேறும் கழிவுநீரின் நிறம், மணம், அரிக்கும் தன்மை ஆகியவற்றின் காரணமாக அப்பகுதி மக்களிடையே ஒருவித அச்ச உணர்வு இருப்பதை அரசு அறியுமா?*

*(ஆ) ஆம் எனில், இவற்றைப் போக்க என்ன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன?*

[2000 மார்ச் 8

*மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) புகளூர் காகித ஆலையிலிருந்து வெளியேறும் கழிவுநீர், தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தால் குறிப்பிடப்பட்டுள்ள தரத்தோடு ஒத்திருக்கிறது. எனவே, புகளூர் காகித ஆலை 31-3-1999 வரை தொடர்ந்து இயங்க அனுமதி அளித்திருக்கிறது. விவசாயிகளின் வேண்டுதலுக்கிணங்க, சுமார் 1,250 ஏக்கர் வறண்ட நிலம் நீர்ப்பாசன வசதி பெற, இக்கழிவுநீர் 'விவசாயிகள் பாசன சங்கத்தால்' வெளியேற்றப்படுகிறது. இவ்விதமாக, பெரும்பகுதியான சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீர் விவசாய நிலங்களுக்கு பாசனத்திற்காக உபயோகப்படுத்தப்படுகிறது. எனவே, சுத்திகரிக்கப்பட்டுள்ள தரத்தோடு ஒத்து இருப்பதால் கழிவுநீரின் தரம் குறித்து அச்சம் கொள்வதற்கு யாதொரு காரணமும் இல்லை.

*திரு. கு. மனோகரன்:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கேளுங்கள் கொடுக்கப்படும், தட்டுங்கள் திறக்கப்படும்' என்ற வரிகளுக்கு ஏற்ப சொல்வதைச் செய்யும் அரசாகத் திகழும் தமிழக அரசு புகளூர் காகித ஆலையில் எற்கெனவேயிருந்த மாசுகளை அகற்றி, அந்த நீரின் தன்மை, அரிப்புத் தன்மை, நிறம் ஆகியவற்றைச் சரிசெய்து ஒழுங்குபடுத்தியதற்கு அந்தப் பகுதி விவசாயிகளின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இப்போது அந்த ஆலையிலிருந்து வெளியேறும் நீரை 10 கிலோ மீட்டர் தூரத்திற்கு வெளியே கொண்டு சென்று, ஆலைக்குத் தேவைப்படும் யூக்கலிப்டஸ் மரங்களைத் தயார் செய்து, ஆலைக்குக் காகிதத்தைப் பயன்படுத்த உரிய வழிவகைகளை அரசு செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக முதலமைச்சர்அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:* தலைவர் அவர்களே, இது சுத்திகரிப்புத் திட்டத்தின் அடிப்படையிலே சொல்லப்படுகிற கருத்து அல்ல, இது அந்த ஆலையினுடைய வளர்ச்சிக்காகச் சொல்லப்படுகிற கருத்து. அது பற்றிப் பிறகு பரிசீலிக்கப்படும்.

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* திருமதி வாசுகி முருகேசன்.



2000 மார்ச் 8]

*திருமதி வாசுகி முருகேசன்:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போதைய மத்திய பட்ஜெட்டில் கரும்புச் சக்கை போன்ற மரபுசாரா பொருள்களைக் கொண்டு அச்சு மற்றும் எழுது காகிதத்திற்கு இதுவரை இருந்து வந்த 8 சதவிகித ஆயத் தீர்வை, மரக்கூழ் கொண்டு காகிதம் தயாரிக்கும் ஆலைகளுக்கு உள்ளது போல, 16 சதவிகிதம் உயர்த்தப்பட்டுள்ளது. இது தமிழ்நாட்டிலுள்ள காகித ஆலைகளை, குறிப்பாக தமிழ்நாடு காகித ஆலை (TNPL) நிறுவனத்தை மிகவும் பாதிக்கும் என்று கூறுகிறார்களே, இதுகுறித்து மாநில அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:* தலைவர் அவர்களே, இந்த ஆயத் தீர்வையை மத்திய அரசு உயர்த்தியுள்ளதால் தமிழ்நாடு காகித நிறுவனம் பாதிக்கப்படும் என்பதை உணர்ந்து இந்த அரசின் சார்பில் இந்தியப் பிரதமரையும் மத்திய அரசின் நிதி அமைச்சரையும் கேட்டுக்கொண்டு, இந்த ஆயத் தீர்வையை உடனடியாக இரத்து செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, 6-3-2000 அன்று ஃபேக்ஸ் செய்தி மூலமாக பிரதமருக்கும், மத்திய நிதி அமைச்சருக்கும் இத்தகைய தகவலைக் கொடுத்திருக்கிறேன்.

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* திரு. லா. சந்தானம்.

*திரு. லா. சந்தானம்:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் காகித ஆலைகளில் ஏற்படுகின்ற கழிவுநீர் போல, கரும்பு ஆலைகளிலும் கரும்பினுடைய கழிவுநீர் வருகின்ற நிலையிருக்கிற காரணத்தால், அந்தக் கழிவுநீரால் சுற்றுப்புறச் சூழல் மிகவும் பாதிக்கின்ற நிலையிருக்கிறது. என்னுடைய தொகுதியில்கூட, அலங்காநல்லூரிலே இருக்கின்ற கரும்பு ஆலைக் கழிவுநீரால் அந்தப் பகுதியிலே இருக்கின்ற விவசாயிகள் எல்லாம் பாதிக்கின்ற நிலையிருக்கிறது. அதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:* தலைவர் அவர்களே, கரூர் விவசாயிகள் எல்லாம் ஒன்று திரண்டு விவசாயிகள் பாசனச் சங்கம் என்றவொரு சங்கத்தை அமைத்து அதன் வழி விவசாயத்திற்கு மாத்திரம் பயன்படக்கூடிய அளவிற்கு அந்த நீரைப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அதுபோல ஓர் ஏற்பாட்டை அந்தப் பகுதியிலும் செய்வதற்கு முடியுமா என்பதை அரசு யோசிக்கும்.

[2000 மார்ச் 8

*மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ச. அழகிரி.*

*முற்பகல் 9-35*

*திரு. ச. அழகிரி:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புகளூர் காகித ஆலையிலிருந்து வெளி வருகின்ற கழிவு சாம்பல் 20 கிராமங்களில் கொட்டி வைக்கப்பட்டிருக்கிறது. லாரி எங்கே போக முடிகிறதோ அங்கெல்லாம் கொண்டுபோய் கொட்டுகிறார்கள். அதற்கு ஒரு வரைமுறை இல்லாமல் இருக்கிறது. எனவே, அவற்றை ஏதாவது ஓர் இடத்தில் கொட்டி, சரிப்படுத்த முடியுமா என்பதனை அரசு ஆராய வேண்டும். இரண்டாவதாக, நிலத்தடி நீர் மிகவும் மாசுபட்டிருக்கிறது. அந்த நிலத்தடி நீரை வைத்துக்கொண்டு முதலில் கரும்பு பயிரிட்டார்கள், கரும்பு வளரவில்லை. நெல் பயிரிட்டார்கள், நெல் வளரவில்லை. உளுந்து பயிரிட்டார்கள், உளுந்து வளரவில்லை. இப்போது கோரை பயிரிடுகிறார்கள். இவையெல்லாம் அரசின் கவனத்திற்கு வந்திருக்கிறதா? ஆம் என்றால், அதற்கு அரசு எடுக்க இருக்கின்ற நடவடிக்கை என்ன என்பதனை அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:* தலைவர் அவர்களே, அங்கு விவசாயிகளுடைய பாசன சங்கத்தின் சார்பாக, அவர்கள் எடுத்துள்ள முயற்சியின் காரணமாக, வகைப்படுத்தப்பட்டு, சுத்திகரிக்கப்பட்ட தண்ணீரைப் பயன்படுத்தி, கழிவு நீரையும் பயன்படுத்தி நெல், வாழை, கரும்பு, கோரை, சோளம், நிலக்கடலை கேழ்வரகு போன்ற பயிர்கள் மூன்று போகங்கள் செய்யப்படுகின்றன என்று எனக்குக் குறிப்பு தரப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகிரி சொன்னது விந்தையாக இருக்கிறது. இதற்கு மாறுபாடாக இருக்கிறது. அதைப்பற்றி சரியான முறையிலே விசாரித்து பிறகு தெரிவிக்கிறேன்.

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* வினா எண் 62, திரு. எஸ்.கே. வேதரத்தினம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

*62—*

## தொழிற்சாலை அமைத்தல்

***19416—திரு. எஸ்.கே. வேதரத்தினம்:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2000 மார்ச் 8]

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யம் பகுதியில் பெருமளவில் சிலிகேட் மண் கிடைப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், சிலிகேட் மணலை மூலப்பொருளாகக் கொண்டு அப்பகுதியிலேயே தொழிற்சாலை அமைக்கும் செயற்குறிப்பு ஆய்வில் உள்ளதா?

*மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) சிலிகேட் மணலை மூலப்பொருளாகக் கொண்டு அப்பகுதியிலேயே தொழிற்சாலை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் இல்லை.

*திரு. எஸ்.கே. வேதரத்தினம்:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேதாரண்யம் பகுதியிலே செட்டிக்குளம், கரியாபட்டினம், வடமலை மணக்காடு போன்ற 15 கிராமங்களிலே சிலிகேட் மணல் குன்றுகள்போல குவிந்து கிடக்கின்றன. சோப்பு, கண்ணாடி போன்ற பொருட்களைத் தயார் செய்வதற்குரிய மூலப்பொருளாகவும் இது விளங்குகிறது. பெருமளவிலே ஏற்றுமதி செய்வதற்குரிய வாய்ப்பு இருப்பதாகக் கூறுகிறார்கள். எனவே, இதுசம்பந்தமாக ஆய்வு செய்து தனியார் துறை மூலமாகவாவது ஒரு தொழிற்சாலையை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அது மட்டுமல்ல, ஏற்கெனவே உப்புத் தொழிற்சாலை ஒன்றை அங்கே நிறுவுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு, அது நிறுத்தப்பட்டுவிட்டது. பெருமளவிலே கூலித் தொழிலாளர்கள் உள்ள பகுதியாக இருக்கிற காரணத்தால் அங்கே தொழிற்சாலை அமைய அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:* தலைவர் அவர்களே, வேதாரண்யம் பகுதியில் தற்போது ஆண்டு ஒன்றுக்கு 3000 டன் சிலிகேட் மணல் மாத்திரம்தான் அகழ்ந்தெடுக்கப் படுகிறது. இது ஒரு தொழிற்சாலை அமைப்பதற்கென போதுமானது அல்ல என்பது நிபுணர்களுடைய கருத்தாகும். எனவேதான், அங்கு கிடைக்கின்ற சிலிகேட் மணலை அந்தந்த லாரி உரிமைதாரர்கள்.

[2000 மார்ச் 8

பாண்டிச்சேரி மாநிலம் காரைக்காலில் உள்ள கண்ணாடித் தொழிற்சாலைக்கு வியாபாரம் செய்கின்றார்கள். அந்த அளவுக்குத்தான் அது இப்போது தேவையை நிறைவு செய்கின்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. அ. மாரிமுத்து.

திரு. அ. மாரிமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழுப்புரம் மாவட்டம், வானூர் தொகுதியில், வட அகரம், ஊரணி, அனுமந்தை போன்ற பகுதிகளிலே சிலிகேட் என்ற வெள்ளை மணல் மிகுதியாகக் கிடைக்கிறது. அங்கேயிருந்து வெளி மாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. என்னுடைய தொகுதி மிகவும் பின்தங்கிய தொகுதி. வேலைவாய்ப்பில்லாமல் இளைஞர்கள் மிகவும் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். தயவுகூர்ந்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் என்னுடைய தொகுதியிலே, அந்த வெள்ளை மணலைக் கொண்டு ஒரு பீங்கான் தொழிற்சாலை அல்லது கண்ணாடித் தொழிற்சாலை உருவாக்கித் தருவார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, அது குறித்து ஆராய்வதைப் பற்றிப் பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வை. சிவபுண்ணியம்.

திரு. வை. சிவபுண்ணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பாக ஒன்றுபட்ட தஞ்சை மாவட்டத்திலே எந்தத் தொழிற்சாலையும் தொடங்கப்படுவதில்லை. நான் சென்ற ஆண்டுகூட மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே, இந்த அவையிலே கேட்டிருக்கிறேன். தொழிற்சாலை தொடங்குவதற்குரிய தடைகள் இருக்கின்றன என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. விவசாயத்தை மூலப்பொருளாகக் கொண்டு ஏதாவது தொழில்கள் தொடங்கலாமா என்பதைப் பற்றி ஆராய வேண்டுமென்று கேட்டிருக்கிறேன். அதுபற்றிப் பரிசீலிக்கப்படும் என்று முதல்வர் அவர்கள் சொன்னார்கள். இந்த அரசு அதுபற்றி என்ன முடிவு எடுத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, ஆராயப்படுகின்ற கருத்துருக்களில் அதுவும் ஒன்றாக



2000 மார்ச் 8]

இருக்கிறது. அவ்வளவுதான் இப்போது தஞ்சை மாவட்டத்தைப் பற்றிச் சொல்ல முடியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 63, திரு. கொ.வீ. நன்னன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

63—

## பள்ளிகளுக்குக் கூடுதல் வகுப்பறைகள்

*20916—திரு. கொ. வீ. நன்னன்:

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் அரசினர் பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்குக் கூடுதல் வகுப்பறைகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் அரசினர் பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்குக் கூடுதல் வகுப்பறைகள் கட்ட சம்பந்தப்பட்ட நாடாளுமன்ற/சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் நிதி ஒதுக்கி பணியினை முடிக்குமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் அறிவுறுத்தப்பட்டுள்ளார்.

முற்பகல் 9-40

திரு. கொ.வீ. நன்னன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியில், செங்கம் நகரில் அமைந்துள்ள பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் போதுமான இடவசதி இன்றி நெருக்கடியாய் மாணவர்கள் வருத்தப்படும் நிலையில் இருக்கிறார்கள். கூடுதல் கட்டடம் கட்டுவதற்கு, சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் கட்டுவதற்கு அங்கே இடவசதி இல்லை.

எனவே, இடம் வாங்கித் தந்தால் கட்டடம் கட்டலாம். எனவே, இடம் வாங்கித் தந்து மாணவர்களுக்கு நல்ல வசதி ஏற்படுத்திக் கொடுக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, அரசு அப்படியொரு கருத்தை ஏற்பதாக இருந்தாலும்கூட, அந்தத் தொகுதியிலே உள்ள சட்டமன்ற உறுப்பினர், பெற்றோர் ஆசிரியர் கழகத்தின் மூலமாக அதற்குரிய இடம் எங்கு இருக்கிறது, அதை மாவட்ட ஆட்சித் தலைவரால் வழங்க முடியுமா என்பதையெல்லாம் கண்டு தெரிவிப்பார்களேயானால் அரசு முடிந்த அளவிற்கு அதை நிறைவேற்றத் துணை செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 64, திரு. உ. திசைவீரன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

*64—*

## இருதய நோய் சிகிச்சைப் பிரிவு

***29625—திரு. உ. திசைவீரன்:***

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமக்குடி வட்ட மருத்துவமனையில் இருதய நோய் சிகிச்சைப் பிரிவு இல்லாமல் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில் தொடங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) பரமக்குடி வட்ட மருத்துவமனையில் இருதய நோய் சிகிச்சைப் பிரிவு இல்லை. எனினும், அவ்வட்ட மருத்துவமனையில் இருக்கும் மருத்துவர்களைக்கொண்டு முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. தேவை ஏற்பட்டால் இராமநாதபுரம் மாவட்ட



தலைமை மருத்துவமனைக்கு நோயாளிகளை அனுப்பி சிகிச்சை அளிக்கப்படுகிறது.

(ஆ) நடப்பாண்டில் பரமக்குடி வட்ட மருத்துவமனையில் இருதய நோய் சிகிச்சைப் பிரிவு தொடங்க செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.

**திரு. உ. திசைவீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரமக்குடி நகரமானது ஒரு மாவட்டத் தலைநகரமாக ஆவதற்குரிய தகுதி உடையது என்பதைத் தாங்கள் அறிவீர்கள். மேலும் பரமக்குடி பகுதி அடிக்கடி வறட்சிக்கு இலக்காகும் பகுதி மட்டுமல்லாமல், உணர்ச்சிகளுக்கு இலக்காகும் பகுதியாகவும் இருக்கின்ற காரணத்தினால் பல நபர்கள் இந்த இருதய நோய்க்கு ஆட்படுவதாக மருத்துவர்கள் கூறுகின்றார்கள். எனவே, தனியாக இருதய நோய் சிறப்புப் பிரிவு பரமக்குடி வட்ட மருத்துவமனையில் தொடங்கப்படுமா? அரசு பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இங்கே குறிப்பிடுவதுபோல, அந்த மருத்துவமனையில் 58 படுக்கைகள் ஏற்பாடு செய்து, அதிலே பெண்களுக்கு என்று 12 படுக்கைகளும், ஆண்களுக்கு என்று 12 படுக்கைகளும், குழந்தைப் பேறுக்கு 6 படுக்கைகளும் அங்கே உருவாக்கப்பட்டிருக்கின்றன. அதுவன்றி, பல்வேறு பிரிவுகள் அங்கே தொடங்கப்பட்டிருக்கின்றன. பல் சிகிச்சைப் பிரிவு மற்றும் அறுவை அரங்கம் போன்ற சிறப்புப் பிரிவுகள் அங்கே செயல்பட்டு வருகின்றன. இரத்த வங்கி இருக்கின்றது. குழந்தைகள் நலப் பிரிவு இருக்கின்றது. நுண்கதிர் படப்பிடிப்பு நிலையம் இருக்கின்றது. Ultrasound Scan போன்ற வசதிகள் எல்லாம் இருக்கின்றன. இருந்தாலும், இருதய அறுவை சிகிச்சைப் பிரிவு தொடங்குவதற்கான சாத்தியக்கூறுகள் இப்போது இல்லை. எதிர்காலத்திலே தமிழக அரசினுடைய நிதிநிலை திருப்திகரமாக இருக்குமானால், அப்போது அதுபற்றிப் பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 65, திரு. க. மணிவர்மா, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

[2000 மார்ச் 8

65–

## கூட்டுக் குடிநீர்த் திட்டம்

***16550—திரு. க. மணிவர்மா:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தண்டராம்பட்டு தொகுதி, சாத்தனூர் மற்றும் அதைச் சுற்றியுள்ள 35 கிராமங்களில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும்?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) திருவண்ணாமலை மாவட்டம், தண்டராம்பட்டு சட்டமன்றத் தொகுதி உட்பட சாத்தனூர் மற்றும் 35 கிராமங்களுக்கான குடிநீர், சாத்தனூர் நீர்த்தேக்கத்திலிருந்து எடுக்கப்பட வேண்டும். அதற்கான ஒப்புதல் பொதுப் பணித் துறையிடமிருந்து பெற்று இதர கள ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். ஆய்வுப் பணி முடிந்த பின் திட்டத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வாரியத் தொழில்நுட்ப அனுமதி பெற்றவுடன் திட்டம் செயலுக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

**திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாத்தனூர் அணை அருகே அமைந்திருக்கின்ற சாத்தனூர் கிராம மக்களுக்கு, 20 ஆயிரம் மக்களுக்கு மேல் வாழ்கின்ற அந்த கிராமத்திலேயிருக்கின்ற மக்களுக்கு கடுமையான குடிநீர்ப் பிரச்சினை இருக்கிறது. கடந்த நாடாளுமன்ற பொதுத் தேர்தலைக்கூட புறக்கணித்தார்கள். அமைச்சர் மற்றும் அதிகாரிகள், நாங்கள் எல்லாம் சென்று அந்தத் தேர்தலைப் புறக்கணிக்க வேண்டாம் என்று சொல்லிய பிறகு வாபஸ் பெற்றுக்கொண்டார்கள். கடந்த 27-2-2000 அன்று ஆயிரம் பெண்கள் உட்பட அனைத்துக்



2000 மார்ச் 8]

கட்சிகளைச் சார்ந்த 2 ஆயிரம் பேர்கள் மாபெரும் உண்ணாவிரதம் இருந்தார்கள், கடுமையான குடிநீர்ப் பிரச்சினை. இரண்டு கிலோ மீட்டர், மூன்று கிலோ மீட்டர் சென்றுதான் தண்ணீர் எடுத்துக்கொண்டு வந்து தண்ணீர் அருந்திக் கொண்டிருக்கிறார்கள். சாத்தனூரிலிருந்து 50 ஆயிரம் ஏக்கர்களுக்கு மேற்பட்ட பல பகுதிகளுக்கு பாசனமும், 5, 6 இலட்சம் மக்களுக்குக் குடி தண்ணீரும் கொடுத்துக் கொண்டிருக்கின்ற நிலையில், இதுவரையிலும் குடிநீர் இல்லாமல் இக்கிராம மக்கள் அவதிப்படுவதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கருத்தில் கொண்டு, இப்போது கடுமையான குடிநீர்ப் பிரச்சினை இருப்பதால் லாரிகள் மூலமாவது சாத்தனூர் கிராமத்திற்குக் குடி தண்ணீர் வழங்கி மற்ற 35 கிராமங்களிலே இருக்கின்ற மக்களுக்கு கூடிய விரைவிலே அந்தச் செயல்திட்டத்தினை நிறைவேற்றுவதற்கு வேகமாக ஆவன செய்வார்களா எனத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-45

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு தலைவர் அவர்களே, குடிநீர்த் தட்டுப்பாடு இருப்பது உண்மை. ஆனால், அந்தப் பகுதிகளில் நிலத்தடி நீர் இல்லாத காரணத்தால்— ஏறத்தாழ 6 மாதங்களுக்கு மேல் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு கண்டு பிடிக்கப்பட்டு, நிலத்தடி நீர் தேவைப்படுகிற அளவிற்கு இல்லை என்ற முடிவிற்கு வந்த பிறகு— சாத்தனூர் அணையிலிருந்து தண்ணீர் எடுத்து கூட்டுக் குடிநீர்த் திட்டமாக உபயோகப்படுத்த ஏறத்தாழ 35 கிராமங்களுக்கு மட்டுமே 25 இலட்சம் லிட்டர் தண்ணீர் தேவைப்படுகிறது. ஆகையினால் அந்த நீர்த்தேக்கத்திலிருந்து எடுப்பதற்கான நடவடிக்கைகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பொதுப்பணித் துறையிடமிருந்து அனுமதி பெற்றவுடன் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளை விரைவாக எடுத்து, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதைப்போல, எவ்வளவு விரைவாக அந்தத் திட்டத்திற்கான ஆய்வுப் பணிகள் முடிக்கப்பட்டு, நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டுமோ, அவ்வளவு விரைவாக எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 66, திரு. சீ.வெ. கிருஷ்ணன், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

[2000 மார்ச் 8

66—

## ஆரம்பப் பள்ளிக்கு வசதிகள்

*17899—திரு. சீ. வெ. கிருஷ்ணன்:

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குஜிலியம்பாறை ஆரம்பப் பள்ளிக்குக் கட்டடமும், விளையாட்டு மைதானமும் அமைத்துத்தர ஆவன செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

குஜிலியம்பாறை ஆரம்பப் பள்ளிக்கு உரிய கட்டடம் மற்றும் விளையாட்டு மைதானம் போதுமானதாக உள்ளது.

**திரு. சீ.வெ.கிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய வேடசந்தூர் ஆரம்பப் பள்ளிக்குக் கூடுதல் கட்டடப் பணிகள் நம்முடைய அரசு பொறுப்பு ஏற்ற பிறகுதான் நிறைய நடைபெற்றிருக்கின்றன. அதற்கு உள்ளாட்சித் துறையினுடைய அமைச்சருக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அதைப்போல, குஜிலியம்பாறை ஆரம்பப் பள்ளியில் மாணவர்கள் எண்ணிக்கை அதிகம் இருக்கிற அளவுக்குக் கட்டடம் போதுமான அளவில் இல்லை. ஆகவே கூடுதல் கட்டடம், விளையாட்டு மைதானம் அமைக்க அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வினாவைப் பொறுத்தவரையில், மேல்நிலைப் பள்ளி கட்டடத்திற்காக எனக் கருதி, ஆரம்பப் பள்ளிக் கட்டடம் என்று வினாவில் குறிப்பிட்டுவிட்டார் என்று என்னைப் பொறுத்தவரை நான் கருதுகிறேன். காரணம், அந்தப் பள்ளிக்கு இடம் தேவையில்லை. அப்படிப் புதிதாக இன்னும் ஒன்று கட்டுவதென்றால்கூட, அந்த ஊரிலேயே இடம் இல்லை என்பது எனக்குத் தெரிகிறது. ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்



2000 மார்ச் 8]

மேல்நிலைப் பள்ளி கட்டுவதற்காகத்தான் அதை விரும்புகிறார் என்று கருதுகிறேன். அப்படி இருக்குமானால், அதைப் பரிசீலித்து, வரும் நிதியாண்டில் தக்க நடவடிக்கை எடுத்து, அது கிராமப் பகுதியில் இருக்கிற காரணத்தால், கட்டித் தருகிற முயற்சியில் இந்த அரசு ஈடுபடும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 67, திரு. எஸ். என். பாலசுப்பிரமணியன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

67—

## உழவர் பயிற்சி நிலையங்கள்

*24413—திரு. எஸ். என். பாலசுப்பிரமணியன்:

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நமது மாநிலத்தில் உழவர் பயிற்சி நிலையங்கள் எங்கெங்கு உள்ளன?

(ஆ) மேலும் புதிய உழவர் பயிற்சி நிலையங்கள் ஆரம்பிக்கும் திட்டம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மாநிலத்தில் காஞ்சிபுரம், நவ்லாக், திண்டிவனம், சாக்கோட்டை, தர்மபுரி, சேலம், பவானி, லால்குடி, குடுமியான்மலை, பரமக்குடி, திருநெல்வேலி மற்றும் திருப்பதிசாரம் ஆகிய 12 இடங்களில் உழவர் பயிற்சி நிலையங்கள் இயங்கி வருகின்றன.

(ஆ) தற்சமயம் ஏதும் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 68, திரு. டி. இராஜேந்தர், மாண்புமிகு பொதுப்பணி மற்றும் வனத் துறை அமைச்சர்.

[2000 மார்ச் 8

68—

### கால்வாய்களில் தூர் வாருதல்

*2703—திரு. டி. இராஜேந்தர்:

மாண்புமிகு பொதுப்பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓட்டேரி நல்லா கால்வாய், பக்கிங்காம் கால்வாய் வழியாக பூங்கா நகரில் உள்ள பெரியார் நகர் வரை செல்லும் கால்வாய்களில் தூர் வார அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஓட்டேரி நல்லா கால்வாய் தூர்வாரும் பணி முழுமையாக 1999 ஆம் ஆண்டு பிப்ரவரியில் முடிக்கப்பட்டது. தற்போது கால்வாயில் தண்ணீர் எவ்விதத் தேக்கமும் இல்லாமல் சீராக ஓடுகிறது. அப்பகுதியில் உள்ள பக்கிங்காம் கால்வாயில் சென்ற ஆண்டு தூர் வாரப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 69, திரு. ந. பாண்டுரங்கன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

69—

### புறநகர்ப் பேருந்து

*24933—திரு. ந. பாண்டுரங்கன்:

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூரிலிருந்து கடலூருக்கு, ஆரணி, பெரணமல்லூர், தேசூர் வழியாகப் புறநகர்ப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2000 மார்ச் 8]

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி , போக்குவரத்துத் துறை அமைச்சர் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கோரிக்கைத் தடம் சுற்றுத் தடமாக இருப்பதாலும், பயண நேரம் மற்றும் பயணக் கட்டணம் கூடுதலானதாலும் கோரிக்கைத் தடத்தில் பேருந்து இயக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

**திரு. ந. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது அரசுக்குத் தவறான தகவலோ என்று நான் கருதுகிறேன். இது மிகவும் குறைவான தூரமே வரும். குறிப்பாக, வேலூர், ஆரணி, பெரணமல்லூர், தேசூர், தெள்ளார், திண்டிவனம், பாண்டி வழியாக ஏறக்குறைய 25 கிலோமீட்டர் அளவிற்கு தூரம் குறைவாக வருகிறது. பயண தூரம் குறையும். அதேபோல, பயணிகள் அதிகமாகும் அடர்வும் நல்ல வருவாய் ஈட்டித் தரும். எனவே, 2 பேரூராட்சிகளும், 2 கிராமங்களும் ஒட்டி வருகிற அந்தப் பகுதிகளிலே இந்தப் புறநகர்ப் பேருந்தை இயக்க அரசு மறுபரிசீலனை செய்யுமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூரிலிருந்து கடலூருக்கு, ஆரணி வழியாகவும், பெரணமல்லூர், தேசூர் வழியாகவும் செல்வதென்று சொன்னால், 166 கிலோமீட்டர் தூரம் ஆகிறது. இப்போது குறுக்கு வழியாக 158 கிலோமீட்டர் தூரத்திலேயே பேருந்து இயக்கப்படுகிறது. ஆகவே, கூடுதல் தூரத்திலே பயணம் செய்வதற்கு நெடுந்தூரம் பயணம் செய்யும் பயணிகள் விரும்பமாட்டார்கள். இதுபோன்ற சுருக்க வழியைத்தான் விரும்புவார்கள் என்ற காரணத்தால்தான் நேரடியாகப் பயணம் மேற்கொள்கின்ற வகையிலே பேருந்துகள் இயக்கப் படுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்திற்கேற்ப, இந்த வழித் தடங்களில், வேலூரிலிருந்து ஆரணிக்கும், பெரணமல்லூருக்கும் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. ஆகவே, ஒவ்வொரு ஊரிலிருந்தும் இதுபோன்ற சுற்றுப்புறங்களின் மூலமாகப் பேருந்துகள் இயக்க வேண்டுமென்று சொன்னால் அடர்வும் குறைவாக இருக்கிறது என்ற காரணத்தால், அதை இயக்குவதற்குச் சாத்தியக்கூறுகள் குறைவு.

[2000 மார்ச் 8

**திரு. லா. சந்தானம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கம்ப இராமாயணத்திலே ஒரு பாடல் உண்டு.

"கண் இலான் பெற்று இழந்தான் என உழந்தான்

கடுந் துயரம் - கால வேலான்"

என்று. கண்ணில்லாத ஒருவர், தான் திரும்ப அந்தப் பார்வையைப் பெற்று, அதை இழந்துவிட்டால் என்ன துயரத்தை அடைவானோ என்று சொல்வதுபோல, எங்களுக்கென்று தொகுதிக்கு இரண்டு பேருந்துகளைக் கொடுத்து, அதில் சில வேண்டுமானால் நட்டத்தில் இயங்கலாம். ஆனால், பல பேருந்துகள் இலாபத்திலே இயங்கிக் கொண்டிருக்கின்றன. எனவே, கொடுக்கப்பட்ட சலுகையை மீண்டும்தர மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்—அடுத்த ஆண்டு தேர்தலைச் சந்திக்க வேண்டிய ஆண்டாக இருக்கின்ற காரணத்தால்—இந்தமுறை அதற்கு மனமுவந்து ஏதாவது செய்வார்களா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, மனம் இருக்கிறது, மார்க்கம் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 70, திரு. டி. மணி, மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

70—

**சுரங்கப் பாதை அமைத்தல்**

***22726—திரு. டி. மணி:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

போக்குவரத்து நெருக்கடி மிகுந்த நாகர்கோவில் நகரத்தில், நகராட்சிப் பூங்காவிலிருந்து மீனாட்சிபுரம் பேருந்து நிலையத்திற்கு, சுரங்கப்பாதை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,



2000 மார்ச் 8]

தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையைத் தெரிவிக்க விரும்புகிறேன். இந்தச் சுரங்கப்பாதை நகராட்சி மூலம்தான் அமைக்கப்பட வேண்டும். நகராட்சி முயற்சி எடுத்து, நெடுஞ்சாலைத் துறையை அணுகும்போது, தேசிய நெடுஞ்சாலையைக் கடக்க வேண்டிய அவசியம் இருக்கிற காரணத்தால், மத்திய அரசினுடைய தரைவழிப் போக்குவரத்துத் துறையின் அனுமதியைப் பெற்று, இந்தச் சுரங்கப் பாதையை அமைப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ளலாம்.

முற்பகல் 9-55

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகர்கோவில் நகரத்திலே இருக்கக்கூடிய மிகப் பெரிய நெருக்கடி, அந்தச் சாலையின் அகலம் போதுமானதாக இல்லை. இரு பேருந்துகள் போனாலேகூட, மக்களால் செல்ல முடியாதஅளவிற்கு நெருக்கடி மிகுந்த பகுதி. எனவே, நகராட்சியிடம் இந்த அளவிற்குச் சுரங்கப்பாதை அமைப்பதற்குப் போதுமான நிதியாதாரம் இருக்கிறது என்று சொல்ல முடியாது. அந்த அளவிற்கு நிதி இருக்காது. எனவே, மாநில அரசாங்கம் மத்திய அரசோடு தொடர்பு கொண்டு, இதனுடைய அவசியத்தைக் கணக்கில் எடுத்துக்கொண்டு அந்தச் சுரங்கப்பாதையை கட்டுவதன் மூலமாகத்தான் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும். அந்த வகையிலே இந்தச் சுரங்கப்பாதையைக் கட்டுவதற்குத் துரித நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு தரைவழிப் போக்குவரத்துத் துறையினுடைய கொள்கையானது, இப்படிப்பட்ட சுரங்கப்பாதைகள் அமைக்கின்ற பொறுப்புக்கு அவர்கள் பணம் தர ஒத்துக்கொள்ளமாட்டார்கள். நகராட்சிகள், மாநகராட்சிகள்தான் அந்தச் சுரங்கப்பாதையை அமைக்க வேண்டுமென்ற கொள்கை இருக்கிறது. இந்தச் சுரங்கப்பாதையைப் பொறுத்தவரையில் 45 இலட்சம் ரூபாய் தோராயமாகத் தேவைப்படுகிறது. அது தவிர, 4 மீட்டர் அகலத்திற்கு நிலம் கையகப்படுத்த வேண்டிய அவசியமும் இருக்கிறது. ஆகையினால் தேசிய நெடுஞ்சாலையாக இருக்கின்ற காரணத்தால் மாநில அரசும் அதற்கு முன்வர முடியாது. மத்திய அரசும்

[2000 மார்ச் 8

அதற்குரிய நிதியாதாரத்தைத் தரும் என்று எதிர்பார்க்க முடியாது. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினருடைய ஆலோசனையைப் பெற்று, அந்த ஆலோசனையை ஏற்றுக்கொண்டு வேண்டுமானால் மத்திய அரசிற்கு எழுதிப் பார்க்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. வேலாயுதன்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகர்கோவில் நகராட்சியைப் பொறுத்தவரையில் பல வேலைகள் நிதிநிலை சரியில்லாத காரணத்தால் செய்ய முடியாத நிலையில் உள்ளன. எனவே, நெடுஞ்சாலைத் துறை அதற்கு என்று நிதி ஒதுக்கி கட்டாயமாகச் செய்ய வேண்டிய பணி - கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில், அதிகமான ஜன நெருக்கடி உள்ள பகுதி. போக்குவரத்து ஒரு நாளைக்குக் குறைந்தபட்சம் 5,6 தடவையாவது ஸ்தம்பிக்கக்கூடிய நிலையில் உள்ள பகுதி - அதனுடைய முக்கியத்துவத்தைக் கருத்திற்கொண்டு ஏதாவது நிதி ஒதுக்கி கண்டிப்பாக மாநில அரசு அதற்கு ஆவன செய்ய வேண்டும். மத்தியஅரசின் அனுமதியைப் பெறுவதற்குண்டான தக்க முயற்சி எடுத்து ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே குறிப்பிட்டேன். கொள்கை முடிவை மாற்றுவது என்பது மத்திய அரசினுடைய முடிவு. எனவே நாம் முயற்சி செய்யலாம். அந்த முயற்சி பலன் அளிக்குமா என்று என்னால் இப்போது உறுதியாகச் சொல்ல முடியாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெருக்கடியான அந்தச் சாலையினுடைய பிரச்சினை சம்பந்தமாக ஏற்கெனவே சாலையை அகலப்படுத்த வேண்டுமென்ற ஒரு கோரிக்கை இருந்தாலும், தேசிய நெடுஞ்சாலைத் துறையினுடைய விதிகள்கூட மீறப்படுகின்ற ஒரு சூழ்நிலையும், நகராட்சி அதைக் கண்டுகொள்ளாத சூழ்நிலையும் பல நகராட்சிகளில் இருக்கிறது. சமீபத்திலே களியக்காவிளையில் வேலையை ஆரம்பித்தார்கள். ஒரு அங்குலம்கூட எடுத்துக்கொள்ள முடியாத சூழ்நிலை நமக்கு அதில் உருவாகியிருக்கிறது. எனவே, இந்த தேசிய நெடுஞ்சாலையில் வீடுகளைக் கட்டினாலும் சரி, கடைகளைக் கட்டினாலும் சரி, சட்டப்படி நடவடிக்கையை மேற்கொள்வதன் மூலமாக இந்தப் பிரச்சினை எழாமல் பாதுகாத்துக்கொள்ள முடியும். அந்த வகையிலே நம்முடைய சட்டத்தை முடுக்கிவிட்டு ஆக்கிரமிப்புகளைத் தடுக்கக்கூடிய அளவில் இந்தப் பூங்காவின் பக்கத்தில் இருக்கின்ற— அங்கே தனியார் நிலம் இல்லை. ஒன்று நகராட்சிக்குச் சொந்தமான பூங்கா. இன்னொன்று நம்முடைய பேருந்து நிலையம். நிலத்தை ஆர்ஜிதம் செய்ய வேண்டிய நிலை இல்லை. அந்த வகையிலே, நகராட்சியுடன் தொடர்பு கொண்டு அதைச் செய்வதற்கு அரசு தீவிரமாக நடவடிக்கையை மேற்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.



2000 மார்ச் 8]

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய நெடுஞ்சாலையாக இருந்தாலும், மாநில நெடுஞ்சாலையாக இருந்தாலும் அதிலே ஆக்கிரமிப்புகள் இருக்கின்றபோது, கடுமையான நடவடிக்கை எடுத்து, ஆக்கிரமிப்புகளை அகற்றுகின்ற நடவடிக்கை இப்போது தீவிரமாக நடைபெறுவது மாண்புமிகு உறுப்பினருக்கு நன்றாகத் தெரியும். நாங்கள் கடந்த 4 ஆண்டுகாலமாக அதைத் தீவிரப்படுத்து கிறோமேதவிர, அதற்கு முன்பு யார் வேண்டுமானாலும் ஆக்கிரமிப்பு செய்துகொள்ளலாம் என்று அனுமதிக்கப்பட்டு, அவர்களெல்லாம் 5,6 ஆண்டுகளாக அங்கேயே இருக்கிறார்கள். இருந்தாலும், அது சட்டவிரோதம் என்ற காரணத்தால் நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ.லெ. சுப்பிரமணியன்.

**திரு. அ.லெ. சுப்பிரமணியன்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லையிலும் இதுபோன்ற சுரங்கப்பாதை அமைக்கும் பிரச்சினை இருக்கிறது. பாளையங் கோட்டை, முருகன்குறிச்சியில், கிறிஸ்தவ சர்ச் முன்பு இருபுறமும் மேல்நிலைப் பள்ளிகள் இருக்கின்றன. அங்கே பேருந்து விபத்துக்கள் ஏற்பட்டு, ஆண்டுக்கு 3, 4 மாணவர்கள் இறந்து போகிறார்கள். அதேபோல, திருநெல்வேலி சாப்டர் மேல்நிலைப்பள்ளி பக்கத்தில் விபத்து

[2000 மார்ச் 8

நடந்து மாணவர்கள் இறந்த நிகழ்ச்சிகள் அடிக்கடி நடந்து இருக்கின்றன. அங்கே சுரங்கப்பாதை அமைக்கப்படுமா? அப்படி இல்லையென்றாலும், அங்கே இருக்கிற விளம்பர நிறுவனங்கள், சில ஜவுளிக் கடைகள் அதிலே, எழும்பூர் இரயில் நிலையத்தின் அருகில் இருப்பதைப் போல இரும்பு கர்டர்கள் மூலமாக மேம்பாலம் - pedestrian crossing - அவர்களுடைய செலவில் அமைப்பதற்கு முன்வந்து, அதில் அவர்கள் விளம்பரம் செய்வதற்கு அனுமதி கேட்கிறார்கள். அதற்கு அரசு அனுமதி தருமா என்று அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-00*

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலிலேயே குறிப்பிட்டேன். சுரங்கப்பாதை அமைப்பதாக இருந்தாலும், மேலே நடைபாதை அமைப்பதாக இருந்தாலும் அவற்றையெல்லாம் மாநகராட்சிகள், நகராட்சிகள்தான் செய்ய வேண்டும். அந்தச் செலவுகளை அவர்கள்தான் ஏற்றுக்கொள்ள வேண்டும். சென்னை மாநகராட்சியிலேகூட மேம்பாலங்கள் அமைக்கப்படுகின்றன. அவை மாநகராட்சியின் மூலமாகத்தான் நிறைவேற்றப்படுகின்றன. மதுரையிலே ஒரு நடைபாதைப் பாலம் மேலே அமைக்கப் பட்டிருக்கிறது. அதுவும் மாநகராட்சி மூலமாகத்தான் நிறைவேற்றப் பட்டிருக்கிறது. அதைப்போல, திருநெல்வேலி மாநகராட்சியிலேயும் அந்த நடைபாதை மேம்பாலமோ அல்லது சுரங்கப்பாதையோ நகராட்சிதான் அமைக்க வேண்டும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 71, திரு. ப. பாலசுப்பிரமணியன், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

*71—*

## பாலம் விரிவுபடுத்துதல்

***27803—திரு. ப. பாலசுப்பிரமணியன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2000 மார்ச் 8]

(அ) வெள்ளப் பாதிப்பை ஏற்படுத்தும் பட்டுக்கோட்டை வட்டம், முத்தாகுறிச்சி குறுகிய பாலத்தை விரிவுபடுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இல்லை.

**திரு. ப. பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சிறிய பாலம் பட்டுக்கோட்டை தொகுதி, அதிராமபட்டினம், மதுக்கூர் செல்லும் சாலையில் இருக்கிறது. மழைக்காலங்களிலே நீரினுடைய கொள்ளளவைக் கொள்ள முடியாத நிலை ஏற்படும்போது உடைப்பு ஏற்பட்டு பயிர்கள் எல்லாம் நாசப்படுத்தப்படுகின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வருமாண்டில் அதைச் செய்து கொடுப்பார்களா என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடக்கூடிய அந்தப் பாலமானது, கும்பகோணம், மன்னார்குடி, மதுக்கூர், அதிராம்பட்டினம் சாலையில் அமைந்துள்ளது. அது பழைய காலத்துப் பாலம்தான். ஒன்று செங்கற்களால் வளைவு வைத்து கட்டப்பட்டிருக்கிறது. இன்னொரு பாலம் இரும்பு கர்டர்களால் கட்டப்பட்டிருக்கிறது. குறுகிய பாலம்தான் மாற்றப்பட வேண்டும். இது Major District Roads, மாவட்ட முக்கியச் சாலை என்ற வகையில் வருகிறது. இந்தப் பாலங்களை மாற்றிக் கட்டுவதானால் பகுதி இரண்டு திட்டத்திலேதான் நிதி ஆதாரம் பெற்று செய்யக்கூடிய நிலை இருக்கிறது. வருங்காலத்தில் நிதி ஆதாரத்திற்கு ஏற்றவாறு இது குறித்துப் பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 72, திரு. ப. கோவிந்தன், மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.

[2000 மார்ச் 8

72—

சுற்றுலாத் தலமாக்குதல்

*18506—திரு. ப. கோவிந்தன்:

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதி, தாரமங்கலத்திலுள்ள அருள்மிகு கைலாசநாதர் ஆலயத்தைச் சுற்றுலாத் தலமாக அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருக்கோயில்களைச் சுற்றுலாத் தலமாக அமைக்க இந்து சமய அறநிலையத் துறை சட்ட விதிகளில் இடமில்லை.

திரு. ப. கோவிந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே சிற்பக் கலையிலே பெயர்போனவை தாரமங்கலம், தாடிக்கொம்பு கோயில்களாகும். இந்த இரண்டு ஆலயங்கள்தான் தமிழகத்திலே சிற்பக் கலையிலே பெயர்போனவை என்று பழங்கால சிற்பிகள் கூறுகிறார்கள். சிற்பக் கலைக்குப் பெயர் பெற்ற அருள்மிகு கைலாசநாதர் ஆலயத் தலம் சுற்றுலாத் தலமாக அமைந்தால் அது அந்த ஆலயத்திற்குச் சிறப்பாக இருக்கும் என்பதைத் தெரிவித்து, அதைச் சுற்றுலாத் தலமாக அமைத்துத் தர அரசு முன்வருமா என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தாரமங்கலம் கைலாசநாதர் கோயிலினுடைய சிற்பச் சிறப்பு பற்றிக் குறிப்பிட்டார்கள். அதிலே எனக்கு இரண்டாவது கருத்து இல்லை. என்றாலும், தமிழகத்தில் இருக்கின்ற கோயில்களிலேயே சிற்பச் சிறப்பு உடையது என்று கருதப்படுகின்ற முதல் கோயில் தாராசுரத்தில் இருக்கிற கோயில், இரண்டாவது திருபுவனத்தில் இருக்கிற கோயில். இவை பெரிய அளவிலே வருமானம் வருகின்ற கோயில்களாகவும் இருக்கின்றன. அதேநேரத்தில் தாரமங்கலம் கோயிலின் மொத்த வருமானமே ஒன்றரை இலட்சம் ரூபாய்தான். இதற்கென்று ஏற்கெனவே பேருந்து வசதிகள், சேலம், ஈரோடு, பவானி, மேட்டூர் போன்ற நகரங்களிலிருந்து இருக்கின்றன. என்றாலும், ஒரு சுற்றுலாத் தலமாக அமைப்பதற்குரிய மக்கள் வரவு ஆகியவற்றைக் கணக்கில்கொண்டு சுற்றுலாத் துறைக்குப் பரிந்துரை செய்யலாம். எனினும், அந்த அளவிற்கு மக்கள் தொகை வரவு இருக்கிறதா என்பதை அதனுடைய வருமானத்தை வைத்துத்தான் கண்டுபிடிக்க முடியும். எனவே, இது இன்னும் பெருகுமானால் அதனுடைய சிறப்புச் சிறப்பு கருதி வருங்காலத்தில் இதற்குப் பரிந்துரை செய்யப்படும்.



2000 மார்ச் 8]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 73, திரு. ஜி. பழனிசாமி, மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

73—

நெல் கொள்முதல் நிலையக் கட்டடம்

*16913—திரு. ஜி. பழனிசாமி:

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டியில் நேரடி நெல் கொள்முதல் நிலையக் கட்டடம் (DPC 1) கட்ட நிலம் இலவசமாகக் கொடுத்து நான்கு ஆண்டுகள் ஆகியும் கட்டடம் கட்டாததை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், கட்டட வேலை எப்போது தொடங்கப்படும்?

மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

[2000 மார்ச் 8

(அ) மற்றும் (ஆ)திருவாரூர் மாவட்டம், திருத்துறைப் பூண்டியில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் கட்ட இனாமாகக் கொடுத்த புல எண் 252/4ல் 31/3 சென்ட் நிலம் போதுமானதாக இல்லாத காரணத்தினால், அடுத்துள்ள காலி நிலம் புல எண் 252/5ல், 26 சென்ட் நிலம் அரசு புறம்போக்கு நிலமாக இருப்பதால் அரசின் அனுமதி பெற்று மேற்கண்ட இடத்தில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-05

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீதம் இருக்கக்கூடிய 26 சென்ட் நிலத்தையும் எத்தனை ஆண்டுகளிலே எடுத்து இதைக் கட்டிக் கொடுக்க முடியும்? ஏனென்றால், பக்கத்திலே இருப்பதும் அரசு புறம்போக்கு நிலம்தான். அனேகமாக என்னிடம் இருந்ததே அதுதான். 10 சென்ட் இருந்தது. 10 சென்டையும் கொடுத்துவிட்டேன். நல்ல விலை; உயர்ந்த நிலம். அதைக் கொடுத்து விட்டேன். பக்கத்திலே புறம்போக்கு நிலம் இருக்கிற காரணத்தினால்தான், அந்த இடத்திலே நேரடிக் கொள்முதல் நிலையம் கட்டலாம் என்று கொடுக்கப்பட்டது. கொடுத்தே 4 ஆண்டுகள் ஆகியிருக்கின்றன. எத்தனை ஆண்டுகளுக்குள் அந்த நிலத்தை எடுத்து, கட்டிக் கொடுப்பதற்கு, T.N.C.S.C. மூலமாக அரசு முயற்சி எடுக்கும் என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 9 மார்ச், 1999 அன்று நுகர்பொருள் வாணிபக் கழகத்தினுடைய பொது மேலாளர், அங்கே இருக்கின்ற மாவட்ட ஆட்சித் தலைவருக்கு ஒரு கடிதத்தை எழுதியிருக்கிறார். அதற்கு விரைவிலே அரசின் அனுமதி பெற்றுத் தருகிறேன் என்று மாவட்ட ஆட்சித் தலைவரும் எங்களுக்குப் பதில் எழுதியிருக்கிறார். மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கை, இங்கே அரசால் துரிதப்படுத்தப்பட்டு விரைவிலே, வரும் ஆண்டிலே நிச்சயமாக கட்டித்தர ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 74, திரு. எம். ரங்கநாதன், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.



2000 மார்ச் 8]

74—

### பணி நிரந்தரம்

***30739—திரு. எம். ரங்கநாதன்:***

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தேயிலைத் தோட்டங்களில் சுமார் 10 ஆண்டுகளாக தற்காலிகத் தொழிலாளராகவுள்ள தொழிலாளர்களை நிரந்தரப்படுத்த அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தங்களது அனுமதியுடன் திருத்திய விடையைப் படிக்கிறேன். 1981 ஆம் வருடம் தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (நிரந்தர அந்தஸ்து வழங்குதல்) சட்டம் பிரிவு 3-ன்கீழ் 24 காலண்டர் மாதங்களில் 480 நாட்கள் தொடர்ச்சியான பணி முடித்த தொழிலாளர்களுக்கு நிரந்தர அந்தஸ்து வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதன்படி தோட்ட நிறுவனங்களில் பணிபுரியும் தற்காலிகத் தொழிலாளர்களில், தகுதி வாய்ந்த தொழிலாளர்கள் கண்டறியப்பட்டு அவர்களுக்கு நிரந்தர அந்தஸ்து வழங்கப்படுகிறது. தோட்ட நிறுவன ஆய்வர்கள் 1999 ஆம் ஆண்டு டிசம்பர் மாத இறுதி வரை 2562 தொழிலாளர்களுக்கு நிரந்தர அந்தஸ்து வழங்கி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

**திரு. எம். ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரிய கம்பெனி தோட்டங்களில் 3 ஆண்டுகள், 5 ஆண்டுகள், 10 ஆண்டுகள் என்று ஏராளமான தொழிலாளர்கள் தற்காலிகத் தொழிலாளர்களாக இருக்கிறார்கள். அவர்களுக்கு, நிரந்தர தொழிலாளர்களுக்குக் கிடைக்கின்ற சலுகைகளெல்லாம் இல்லாமல் இருப்பதற்காக அவர்களை எப்பொழுதுமே தற்காலிகத் தொழிலாளர்களாக வைத்துக்கொண்டிருக்கிற நிலையைப் போக்கி, 480 நாட்கள் என்று இருப்பதை, அவர்களுக்கு ஒரு நாள், இரண்டு நாட்கள் விடுமுறை அளித்துவிட்டு, பின்பு அவர்களைச் சேர்த்து, இப்படி சட்டத்தின் சந்துபொந்துகளின் வழியே தப்பித்துக்

[2000 மார்ச் 8

கொள்வதை நிறுத்தி, அவர்களைப் பணி நிரந்தரம் செய்ய அரசு முன்வருமா? அதோடு, ஒரு ஏக்கருக்கு இத்தனை ஆட்கள் என்றுதான் ஒரு குறியீடு (Norm) உள்ளது என்று அறிகிறேன். அந்தக் குறியீடு பின்பற்றப்படுகிறதா, அது கண்காணிக்கப்படுகிறதா என தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டத்தின்படி தொழிலாளர்களை நிரந்தரம் ஆக்குகிற பணியைத் துறை அதிகாரிகள் சிறப்பாகச் செய்து வருகிறார்கள். ஆனால், எல்லா தொழிற்சங்கத் தலைவர்களும் அரசிடத்திலே-குறிப்பாக,துறையிடத்திலே ஒரு மனு கொடுத் திருக்கிறார்கள். நாங்கள் retire ஆகிவிடுகிறோம். வீடுகளில் சிலர் இறந்து விடுகிறார்கள். எங்களுடைய dependents, எங்களை நம்பி இருப்பவர்கள் இருக்கிறார்கள். வாரிசுதாரர்கள் இருக்கிறார்கள். எனவே, சட்டத்தின் அடிப்படையிலே permanent செய்வதற்கு முன்பாக, எங்களையெல்லாம் கலந்து ஆலோசித்து, இந்த நடைமுறையைக் கொஞ்சகாலம் நிறுத்தி வைத்து பேச்சு வார்த்தைக்குப் பிறகு அமல் நடத்துங்கள் என்று சொல்லியதன் காரணமாக, அதற்கான பேச்சுவார்த்தையும் நடைபெற்று வருகிறது. ஆனாலும், இந்தச் சட்டத்தைச் சரியாக நாங்கள் அமல்படுத்தி வருகிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜே.ஹேமச்சந்திரன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1971 ஆம் வருடத்தில் அரசு நியமனம் செய்ததின் அடிப்படையில், Deputy Labour Commissioner Mr. Devarajan ஒரு ஏக்கர் நிலத்திற்கு ஒரு தொழிலாளி என்ற முறையில் நிரந்தரப்படுத்தப்பட வேண்டுமென்று கொடுத்த அந்த அறிக்கையை அரசு அமல்படுத்துவதற்கும், தற்காலிகத் தொழிலாளிகளாக 10 ஆண்டும் அதற்கு மேலும் இருப்பவர்கள், வேலை செய்ததற்கு எந்தவிதமான ஆதாரமும் சில நேரங்களில் இல்லாமல் இருப்பதால், தற்காலிகத் தொழிலாளர்களுக்கும் Service Book முறையை அமல்படுத்தப்பட வேண்டுமென்று 1973 ஆம் வருடத்தில் Plantation Labour Advisory Committee கொடுத்த சிபாரிசையும் அமல்படுத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?



2000 மார்ச் 8]

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது இருக்கக்கூடிய இந்தச் சட்டத்தினுடைய அடிப்படையிலும், Advisory Committee கொடுத்த சிபாரிசின் அடிப்படையிலும் தொடர்ந்து நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. எங்கேனும் நடவடிக்கை எடுக்கப்படாத குறைகள் இருக்குமானால், சட்டத்தின் அடிப்படையிலே அந்தக் குறைகளைச் சொல்லி பரிகாரம் காண்பதற்கு வழி இருக்கிறது. நாங்களும் நடவடிக்கை எடுப்பதற்குத் தயாராக இருக்கிறோம்.

முற்பகல் 10-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் க. கிருஷ்ணசாமி.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய 5, 6 மாவட்டங்களில் ஆயிரக்கணக்கான தோட்டத் தொழிலாளர்கள் தற்காலிகமாக பல்லாண்டு காலம் பணிபுரிந்து வருகிறார்கள். அவர்களிடத்திலே இரண்டு மடங்கு வேலை வாங்கப்படுவதை இந்த அரசு அறியுமா? ஏறக்குறைய ஒரு வருடத்திற்கு முன்பு திருநெல்வேலி மாவட்டம், மாஞ்சோலைத் தோட்டத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தைத் தொடங்கி அவர்கள் இப்போது வேலைக்குத் திரும்பிய பின்பும் அமைச்சர் அவர்கள் முன்னிலையில் ஒத்துக்கொண்டதற்கு மாறாக இன்னும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட தற்காலிகத் தொழிலாளர்கள் அந்த B.B.T.C.நிர்வாகத்தால் எடுத்துக்கொள்ளப் படாமல் இருப்பதைக் கணக்கில்கொண்டு அந்த நிர்வாகத்தின்மீது அரசு நடவடிக்கை எடுக்குமா; மேலும் அந்தத் தற்காலிகத் தொழிலாளர்களை உடனடியாக நிரந்தரமாக்குவதற்கு அரசு ஆணை பிறப்பிக்குமா என்பதையும் அமைச்சர் அவர்கள் மூலமாக தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் கிருஷ்ணசாமி அவர்கள் பல்வேறு கோரிக்கைகளை வைத்து, அரசும், துறையும் அவற்றைப் பரிசீலித்து, பெரும்பகுதியான பல கோரிக்கைகளை நாங்கள் நிறைவேற்றிவிட்டோம். ஆகையினால் தான் இப்போது அரசை அவர் அதிகமாகக் குறை சொல்வதில்லை. ஒன்றிரண்டு கோரிக்கைகள் இருக்கின்றன. அவற்றைப்பற்றி 15

ஆம் தேதி பேசி தீர்வு காண்போம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு.ஜே.எம். ஆரூண் ரஷீத்.

**திரு. ஜே. எம். ஆரூண் ரஷீத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல தொழிற்சங்கத் தகராறுகள் நடந்து மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் முன்னிலையிலே சமாதானம் ஆனபின்பும் அந்தத் தொழிற் தகராறுகளுக்கான தீர்வுகளை ஒத்துக்கொண்டபடி நிர்வாகம் ஏற்றுக்கொள்வதில்லை. அவ்வாறு ஏற்றுக்கொள்ளாத நிர்வாகத்தின்மீது அரசு criminal சட்டப்படி நடவடிக்கை எடுக்குமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை விசாரணையில் இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பா.மு. முபாரக்.

**திரு. பா.மு. முபாரக்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர்கள் தற்காலிகத் தொழிலாளர்களாக பல்லாண்டு காலம் பணியாற்றினாலும், பல்வேறு சட்டப் பிரிவுகள் இருக்கிற நிலையால் அவர்கள் நிரந்தரப்படுத்தப்படாமல் இருக்கிறார்கள். அதேபோல 1971-72 ஆம் ஆண்டுகளில் தாயகம் திரும்பிய இலங்கைத் தமிழர்களுக்காகவே நம்முடைய கருணை உள்ளம் கொண்ட மாண்புமிகு முதல்வர் அவர்களால் ஆரம்பிக்கப் பட்ட அரசு தேயிலைத் தோட்டம், நீலகிரி, வால்பாறை பகுதிகளில் இருக்கிறது. இதில் பணியாற்றிய தற்காலிகத் தொழிலாளர்களுக்கு இதுவரையிலும் எந்தப் போனசும் கொடுக்கப்படாமல் இருந்து, இந்த ஆண்டுதான் முதன்முதலாக இந்த அரசின் சார்பில் தற்காலிகத் தொழிலாளர்களுக்கும், நிரந்தரத் தொழிலாளர்களுக்கு இருக்கிற அனைத்து அந்தஸ்துகளும், உரிமைகளும் வழங்கப்பட்டன. இருப்பினும் அந்தத் தொழிலாளர்களையும் நிரந்தரத் தொழிலாளர் களாக மாற்றுவதற்கு அரசு தேயிலைத் தோட்டமாக இருக்கிற காரணத்தினால் அரசே தனிக் கவனம் செலுத்தி 8 வருடம், 10 வருடம் தற்காலிகத் தொழிலாளர்களாக இருக்கிற அந்த TANTEA தோட்டத் தொழிலாளர்களுக்கு வாழ்வு தருமா என மாண்புமிகு அமைச்சர் மூலம் அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தோட்டத் தொழிலாளர்களைப் பொறுத்தமட்டில் இந்தியாவிலேயே எல்லா மாநிலங்களைக் காட்டிலும் தமிழ்நாட்டில்தான் Daily wages 71 ரூபாய் 63 பைசா கொடுக்கிறோம். அதைப்போலவே Housing Board வைத்து Advisory Committee வைத்து முத்தரப்பு வைத்து பல வீடுகள் கட்ட , அந்தச் சட்டத்தினுடைய ஷரத்துக்களை அமல் நடத்த முயற்சிகள் செய்து வருகிறோம். மாண்புமிகு உறுப்பினர் சொல்லியிருக்கக்கூடிய கோரிக்கையை கவனத்தில் கொண்டு உரிய நேரத்திலே நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 75, திரு. வை. சிவபுண்ணியம், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

75—

## நீதிமன்ற வளாகம்

***25789—திரு. வை. சிவபுண்ணியம்:**

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மன்னார்குடியில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் கட்டித் தரப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மன்னார்குடியில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் கட்டித் தரும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மன்னார்குடியிலே செயல்படுகிற குற்றவியல்

[2000 மார்ச் 8

நீதிமன்றங்கள் ஒரே வளாகத்திற்குள்ளே இருக்கின்றன. அதோடு அந்த வளாகத்திலேயே தாலுகா அலுவலகம், ஊராட்சி ஒன்றிய அலுவலகம், இப்படிப்பட்ட மிக முக்கியமான அலுவலகங்கள் இருக்கிற பகுதியாக இருக்கிறது. பல்லாயிரக்கணக்கான மக்கள் அந்தப் பகுதிக்கு வருகிறபோது இந்த நீதிமன்றங்களும் அந்தப் பகுதியிலே இருக்கிறபோது மிகவும் சிரமத்தை ஏற்படுத்துகிறது. ஆகவே, மாற்று இடத்திலே ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தை இந்த அரசு ஏற்படுத்தித்தர முன்வருமா என்பதோடு சென்ற ஆண்டு மன்னார்குடிக்கு Sub-Court அமைப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்படும் என்று நம்முடைய அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அங்கே புதிய Sub-Court இன்னும் தொடங்கப்படாமல் இருக்கிறது. அதைப் பற்றியும் அமைச்சர் அவர்கள் கருத்துக் கூறுவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-15

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மன்னார்குடியில் 3 நீதிமன்றங்கள் இருக்கின்றன. அந்த 3 நீதிமன்றங்களுமே அரசுக் கட்டடத்தில்தான் இருக்கின்றன, வாடகைக் கட்டடத்தில் இல்லை. எனவே, இதற்குப் புதிதாக நிதியைச் செலவழிக்க வேண்டிய அவசியம் இல்லை. கடந்த முறை மன்னார்குடியில் Sub-Court அமைப்பதைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டார்கள். அதுகுறித்து உயர்நீதிமன்றத்திலே இருந்து எந்தப் பரிந்துரையும் வரவில்லை என்ற விவரத்தைச் சொன்னேன். அப்படிப் பரிந்துரை வருமானால், அரசு பரிசீலிக்கலாம் என்பதையும் சொன்னேன். இன்னும் அவருக்கு ஒன்றை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அவருடைய மாவட்டத்தின் தலைநகரான திருவாரூரிலேயே இன்னும் Sub-Court வரவில்லை. அங்கே Sub-Court வந்தபிறகுதான் மன்னார்குடியைப் பற்றிப் பரிசீலிக்க முடியும்.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மன்னார்குடியா? மன்னார்குடி இல்லையென்றால் நான் கேள்வியை அனுமதிக்க மாட்டேன். திரு. இரா. தாமரைக்கனி.



2000 மார்ச் 8]

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம் கட்டுவதற்கு அரசு நில ஒதுக்கீடு செய்கிறது. அதை High Court-ம் பரிந்துரை செய்கிற இடத்தில் High Court first priority கொடுத்து எங்கே பரிந்துரை செய்கிறதோ, அந்த இடத்திலே கட்டடங்கள் கட்டாமல், பரிந்துரை செய்யாத இடங்களிலே எல்லாம் கட்டடம் கட்டுகிறார்களே, இது நியாயமா? 234 தொகுதிகளும் தன் தொகுதி என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சட்டசபையிலே சொன்னார்கள். ஆகவே, norms அடிப்படையிலே, High Court பரிந்துரையின் அடிப்படையிலே, ஸ்ரீவில்லிப்புத்தூரிலே கட்டடம் கட்ட,அரசு ஆவன செய்யுமா, நிதி ஒதுக்கீடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதுதான் மன்னார்குடியா? உட்காருங்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி:** Norms-படிதானே கேட்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், சத்தம் போடக்கூடாது. உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர்நீதிமன்றத்திலே இருந்து பல நீதிமன்றங்களுக்குக் கட்டடங்கள் கட்டுவதற்குப் பரிந்துரை வருகிறது. என்றாலும், அரசு தனது நிதிநிலைமைக்கேற்பத்தான் முடிவு செய்ய முடியும். அவருடைய மாவட்டத்தைப் பொறுத்த அளவில், மாவட்டத்தின் தலைநகரான விருதுநகரில் கட்டடம் கட்டுவதற்கு உயர்நீதிமன்றம் பரிந்துரை செய்திருக்கிறது. அந்தப் பரிந்துரையின் அடிப்படையிலேதான் அங்கே அந்தக் கட்டடங்கள் எல்லாம் கட்டப்பட்டு வருகின்றன. பரிந்துரை இல்லாமல் அந்தக் கட்டடங்கள் கட்டப்படவில்லை.

**திரு. இரா. தாமரைக்கனி:** தவறான தகவலை அமைச்சர் தருகிறார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தவறான தகவல் என்றால் உரிமைப் பிரச்சினை கொண்டு வாருங்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி:** இப்போதே கொடுக்கிறேன்; எடுத்துக்கொள்ளுங்கள்.

[2000 மார்ச் 8

***மாண்புமிகு பேரவைத் தலைவர்:*** வினா எண் 76, டாக்டர் இ.எஸ்.எஸ்.இராமன், மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர்.

*76—*

**கைத்தறித் துணி விற்பனைக்கு மானியம்**

***31666 — டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:***

மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவள்ளூர் மாவட்டம், பள்ளிப்பட்டு வட்டத்திற்கு நடப்பு நிதியாண்டில் கைத்தறித் துணி விற்பனைக்காக தள்ளுபடி மானியம் வழங்கப்படுமா?

***மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:*** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருவள்ளூர் மாவட்டத்திலுள்ள பள்ளிப்பட்டு வட்டத்தில் இயங்கும் பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் தள்ளுபடி மானியம் அளித்து விற்பனை செய்யக்கூடிய இரகங்கள் எதுவும் தற்போது உற்பத்தி செய்யாத காரணத்தால், தள்ளுபடி மானியம் வழங்கப்பட வில்லை. இருப்பினும், தள்ளுபடி மானியம் அளித்து விற்பனை செய்யக்கூடிய இரகங்கள் ஏதேனும் நடப்பு ஆண்டில் உற்பத்தி செய்து, விற்பனை செய்யும்பட்சத்தில், தள்ளுபடி மானியம் வழங்கப்படும்.

***டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:*** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1993 ஆம் ஆண்டு முதல் பள்ளிப்பட்டுத் தொகுதியிலே இருக்கிற அனைத்து நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் உண்டான தள்ளுபடி வழங்கப்படவில்லை. மாநிலத்திலே தள்ளுபடி உச்சவரம்பு ரூ.40 கோடியாக இருந்ததைக்கூட உயர்த்தி, நம்முடைய அரசு உத்தரவிட்டிருக்கிறது. ஆனால், பள்ளிப்பட்டுத் தொகுதியைப் பொறுத்தவரையில் அங்கே இருக்கிற பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்பட வேண்டிய நிலுவைத் தொகை இதுகாறும் வழங்கப்படவில்லை. நடப்பாண்டிலும் வழங்கப்படவில்லை. ஒரு மிகப் பெரிய அநீதியைத் துறை இழைத்து வருகிறது. இந்த அநீதியைப் போக்குவதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை உங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.



2000 மார்ச் 8]

***மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:*** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரிய அநீதி இழைக்கப் பட்டிருக்கிறது என்று நம்முடைய பேரவை உறுப்பினர் தெரிவித்திருக்கிறார். திருவள்ளூர் மாவட்டத்திலுள்ள கூட்டுறவு நெசவாளர் சங்கங்கள் 41. இந்த 41-லும், பூந்தமல்லி, பொன்னேரி, கும்மிடிப்பூண்டி ஆகிய பகுதிகளில் மட்டும் 4 சங்கங்கள் தள்ளுபடி மானியம் செய்யக்கூடிய உற்பத்தியைச் செய்து, விற்பனையின் மூலம் தள்ளுபடி மானியம் பெற்றிருக்கின்றன. பள்ளிப்பட்டு பகுதிக்குத் தள்ளுபடி மானியம் என்ற அளவில் எந்த நிலுவையும் இல்லை என்பதை நான் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

***டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:*** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தள்ளுபடி தரக்கூடிய வகையிலேதான் 1993 ஆம் ஆண்டு முதல் பள்ளிப்பட்டிலே கூட்டுறவுச் சங்கங்கள் விற்பனை செய்து வந்தன. அவற்றினுடைய விவரங்கள் என்னிடம் இருக்கின்றன. ஆனால், என்ன காரணத்தினாலோ, அந்தத் தள்ளுபடி மானியம் இதுவரை அளிக்கப்படவில்லை என்பதுதான் உண்மை. ஆகவே, நிலுவையில் இருக்கின்ற அந்தத் தள்ளுபடி மானியத்தை வழங்குவதற்கு அரசு முன்வர வேண்டும்; முன்வருமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-20*

***மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:*** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் பகுதியிலே உற்பத்தி செய்கின்ற ஜனதா ரகம், இலவச வேட்டி, சேலை ஆகியவற்றிற்குத் தள்ளுபடி மானியம் அளிக்க வாய்ப்பில்லை. சட்டரீதியாகவும், அதற்கு இடம் இல்லை. ஆகவேதான், அங்கே நிலுவையில்லை என்று சொல்லியிருக்கிறேன். பொதுப்படையாக, மாநில அளவிலே எடுத்துக்கொண்டால், 1998-99-ல் மொத்தம் நான்கு காலாண்டிலும், 1999-2000-ல் முதல் காலாண்டிற்கும் தமிழக அரசு ஏறத்தாழ 43 கோடியே 84 இலட்சம் ரூபாய் அளித்து இருக்கிறது. அடுத்த காலாண்டு என்று சொல்லப்படுகின்ற, 1999-2000-ல் ஏப்ரல், மே, ஜூன் முடிய,

[2000 மார்ச் 8

வருகின்ற 10 தினங்களுக்குள் அளிக்கக்கூடிய சூழ்நிலை உருவாக்கப்பட்டிருக்கிறது. பள்ளிப்பட்டைப் பொறுத்தவரையில் எந்தவித நிலுவையும் இல்லை. ஜனதா ரகம் மற்றவற்றிற்கு நாம் தள்ளுபடி மானியம் அளிப்பது இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 77, திரு. ஏ. ராசேந்திரன், மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர்.

77—

## திருமணக்கூடம்

*13455—**திரு. ஏ. ராசேந்திரன்:**

மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை மாவட்டம், போளூர் தொகுதி, வெண்மணி, ரெண்டேரிப்பட்டு ஆகிய ஊராட்சிகளின் எல்லைக்குள், வீட்டுவசதி வாரியத்திற்குட்பட்ட இடத்தில், வாரியத்தின் மூலம் திருமணக்கூடம் கட்ட அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி, வீட்டுவசதித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்பொழுது இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 78, திரு. அ. சுடலைமுத்து, மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.

78—

## வணிக வளாகம்

*8786—**திரு. அ. சுடலைமுத்து:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போடிநாயக்கனூர் தொகுதி, போடிநாயக்கனூரில் உள்ள



2000 மார்ச் 8]

ஆவணப் பதிவுத் துறை அலுவலக வளாகத்தில் வணிக வளாகம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) போடிநாயக்கனூர் தொகுதி, போடி நாயக்கனூரில் உள்ள சார்பதிவாளர் அலுவலக வளாகத்தில் வணிக வளாகம் கட்டும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. அ. சுடலைமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போடி நகராட்சி எல்லைக்கு உட்பட்ட காமராஜர் பஜாரில் ஆவணப் பதிவுத் துறை அலுவலக வளாகத்தில், சிறு சிறு கடைகள் கொண்ட வணிக வளாகம் அமைத்துக் கொடுத்தால் அதன்மூலம் அரசுக்கு வருவாய் கிடைத்திடும். தற்போதுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுகின்றபோது சிறு சிறு கடை வைத்திருப்பவர்கள் கஷ்டப்படுவார்கள். இதை மறுபரிசீலனை செய்து ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் தே. குமாரதாஸ்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்திரப் பதிவு என்று சொல்கிறபோது, பொதுவான ஒரு கருத்து, வங்கிகளிலே loan வாங்கவேண்டுமென்று வைத்துக் கொள்ளுங்கள், சுமார் ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள நிலத்தை, 25,000, 35,000 ரூபாய் என்று சொல்லி ஒரு சென்டோ, இரண்டு சென்டோ பதிவு செய்துவிடுகிறார்கள். அதை வைத்து loan-களைப் பெற்றுக் கொள்கிறார்கள். ஆனால், அதைப் பெற்றுக்கொண்ட பிறகு, பக்கத்திலுள்ள ஏழையெளிய மக்கள் அந்த நிலத்தை விற்கவேண்டுமென்று சொன்னாலோ, வாங்கவேண்டுமென்று சொன்னாலோ, அதை ஒரு guidelines மாதிரி வைத்துக் கொள்கிறார்கள். உண்மையிலேயே அதனுடைய விலை 1000 ரூபாயாகத்தான் இருக்கும். அவர்கள் loan வாங்குவதற்காக வாங்கியது. ஏழையெளிய மக்களைப்

பெரிதும் பாதிக்கின்ற சூழ்நிலையிலே இடங்களை விற்கவும் முடியவில்லை, வாங்கவும் முடியவில்லை. குறைந்தபட்சம் அந்தத் தொகை இருந்தால்தான் நாங்கள் வாங்குவோம் என்று சொல்கிறார்கள். எனவே, அப்படிப்பட்ட பாதிப்புகள் ஏழையெளிய மக்களுக்கு வராத விதத்தில் தனியாக ஏதாவது நடவடிக்கையினை அரசு மேற்கொள்ளுமா என்று நான் மாண்புமிகு அமைச்சர் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ.பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய கருத்தினுடைய அடிப்படையிலே கடந்த, மூன்று ஆண்டு, நான்கு ஆண்டு காலமாக தமிழகத்திலே எந்த எந்தப் பகுதிகளிலே கூடுதலாக மதிப்பீடு இருக்கின்றதோ, வழிகாட்டு மதிப்பீடு கூடுதலாக இருக்கின்றதோ, அதை ஆய்வு செய்து மக்களுடைய கோரிக்கைக்கு ஏற்றாற்போல அவையெல்லாம் குறைக்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்த இடத்திலே அதிகமாக இருக்கிறது என்று தெரிவித்தால், இந்த அரசு உறுதியாக நடவடிக்கை எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 79, டாக்டர் ஆ. ஞானசேகரன், மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்.

*79—*

## தொலைக்காட்சி ஒளிபரப்பு

***6234—டாக்டர் ஆ. ஞானசேகரன்:***

மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசின் திட்டங்கள் உடனுக்குடன் மக்களைச் சென்றடைவதற்கு ஏதுவாக, தனியார் தொலைக்காட்சி மூலமாக ஒளிபரப்ப அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன், செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,





(அ) ஆம்.

(ஆ) அரசின் நலத் திட்டங்கள் உடனுக்குடன் விரைவாக மக்களைச் சென்றடைவதற்காக, 'வளமான தமிழகம்' என்ற தலைப்பில் தமிழ்நாடு திரைப்படப் பிரிவு மூலமாக வீடியோ படங்கள் தயாரிக்கப்பட்டு, திங்கள்தோறும் சென்னை தொலைக்காட்சி மற்றும் தனியார் தொலைக்காட்சிகளான ராஜ், விஜய் மற்றும் சன் டி.வி.க்களின் மூலமாக ஒளிபரப்பட்டு வருகின்றன. திங்கள்தோறும் அரசாணை எண் 60, செய்தி மற்றும் சுற்றுலாத் (திதொ-3) துறை நாள் 31-3-1998 இன்படி 'வளமான தமிழகம்' என்ற தலைப்பில் வீடியோவில் தயார் செய்து ஒளிபரப்பப்பட்டு வருகிறது.

**டாக்டர் ஆ. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய வணக்கத்திற்குரிய மேயர் அவர்களுடைய சீரிய முயற்சியால், இப்போது சென்னை மாநகரம் எழில்மிக்க மாநகரமாக ஏற்றம் பெற்றுவரும் சூழ்நிலையில், அந்தப் பகுதியினுடைய மக்களுடைய முழு ஒத்துழைப்பு நிரந்தரமாகத் தேவை, அவர்களுக்கு விழிப்புணர்ச்சியும் தேவை. அவர்களுக்கு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துகின்ற வகையில் நல்ல அரிய ஆலோசனைகளை, அறிவுரைகளை சிறு, மிகச் சிறு கார்ட்டூன் படங்களாகத் தயாரித்து, அந்தப் படங்களைத் தனியார் தொலைக்காட்சிகளின் மூலமாக நிகழ்ச்சிகளின் இடையிடையே ஒளிபரப்பச் செய்வதற்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் முன்முயற்சி மேற்கொள்வார்களா என அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-25*

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் திட்டங்கள், செயல்பாடுகள், இந்தியாவிற்கே வழிகாட்டுகின்ற வகையில் நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்த திட்டங்களுடைய நிலைப்பாடுகள் குறித்து அவ்வப்போது செய்திப் படங்களும், செய்தி மலர்களும் எடுக்கப்பட்டு தனியார் தொலைக் காட்சிகளிலும், சென்னைத் தொலைக்காட்சியிலும் வெளியிடப் பட்டு வருகின்றன. அதுமாத்திரமல்லாமல், கடந்த ஆண்டு தீண்டாமை ஒழிப்பு ஆண்டாக நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்து, அதன் அடிப்படையில் தீண்டாமை

ஒழிப்பிற்காகப் பல்வேறு வகைகளில் பிரச்சாரங்களை இந்த அரசு மேற்கொண்டு தொலைக்காட்சியிலும், தனியார் தொலைக்காட்சி களிலும் இடையிடையே செய்தி நேரத்தின்போதுகூடக் காட்டப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. டி. இராஜேந்தர்.

திரு. டி. இராஜேந்தர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது சின்னத்திரையின் ஆதிக்கத்தால், சின்னத்திரையின் வரவால் திரையுலகம் அழிந்து கொண்டிருக்கக் கூடிய அபாயகரமான சூழ்நிலை நிலவிக் கொண்டிருக்கிறது. தமிழகமெங்கும் இன்று பல ஆயிரக்கணக்கான திரையரங்குகள் மூடப்படக்கூடிய ஒரு அபாயகரமான சூழ்நிலை இருக்கின்ற காரணத்தால், இது விஞ்ஞானத்தின் வளர்ச்சியின் காரணமாக ஏற்பட்ட ஒன்று என்றாலும், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஆட்சிக்கு வந்தபிறகு, கேளிக்கை வரியைக் குறைத்து, திரையுலகத்தை வாழவைத்தார் என்று சொன்னாலும், இன்றைக்கு சூழ்நிலை திரையுலகம் மேலும் மேலும் விஞ்ஞானத்தின் வளர்ச்சி என்று சொல்லக்கூடிய இந்த சின்னத்திரையின் ஆதிக்கத்தால் அழிந்து கொண்டிருக்கக்கூடிய காரணத்தால் கேளிக்கை வரியை இன்னும் கொஞ்சம் குறைத்தால்தான் திரையுலகம் வாழுமோ என்ற நிலையில், திரைப்படங்களின் வரவு குறைந்துவிட்டது. திரைப்படங்களை எடுப்பவர்களின் எண்ணிக்கையும் குறைந்துவிட்டது. திரையரங்குகள் மூடப்படக்கூடிய சூழ்நிலை உருவாகி வருகின்ற காரணத்தால், அண்டை மாநிலமான கர்நாடக மாநிலத்தில் இப்போது கேளிக்கை வரியை முழுமையாக ரத்து செய்து அந்தத் திரைப்பட உலகத்தைக் காப்பாற்றக்கூடிய சூழ்நிலை இருக்கிற காரணத்தால், தமிழகத்தில் மேலும் கேளிக்கை வரியைக் குறைக்கக்கூடிய சூழ்நிலையை அரசு ஏற்படுத்துமா? அப்படி ஏற்படுத்த முன்வருவதற்கு ஆவன செய்யுமா என்றுகேட்கின்ற இந்தத் தருணத்தில், மேலும் கழக ஆட்சியின் கொள்கைகளை....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: துணை வினா நேரத்தில் நீங்கள் பேருரை நிகழ்த்தக் கூடாது. ஒரு துணை வினா கேட்டீர்கள். அதற்குப் பதில் சொல்வார்கள்.



திரு. டி. இராஜேந்தர்: மற்றும் கழக அரசின் கொள்கைகளான மூதாட்டியார் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் அவர்களுடைய பெயரால் வழங்கக்கூடிய திருமண உதவித் திட்டம், மதுவிலக்குப் பிரச்சாரம் மற்றும் பல நல்ல கொள்கைகளைக் கழக அரசு நிறைவேற்றி வருகிறது. இந்தத் திட்டங்கள் மக்களிடையே சென்றடையக்கூடிய நல்ல கொள்கைகளைக் கொண்ட படங்களை எடுப்பதற்கு அரசு மானியம் அளித்து, அப்படிப்பட்ட திரைப்படங்களை எடுப்பவர்களை ஊக்குவிக்க முன்வருமா? அல்லது அப்படிப்பட்ட படங்களைத் தனியார் எடுத்தால் அதற்கு அரசு ஏதாவது சிறப்புச் சலுகைகளாக உதவிகளை வழங்குமா என்றும் அறிய ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, சிறப்பாக message சொல்கின்ற சமூகச் சீர்திருத்தங்களைப் போதிக்கின்ற படங்களை யார் எடுத்தாலும் அவர்களுக்கு ஊக்கம் அளிக்கின்ற வகையில், இப்போதே அரசு செயல்பட்டு வருகின்றது. இந்த அரசால் ஆண்டுதோறும் 30, 40 படங்கள், அதற்காகவே அமைக்கப்பட்ட ஒரு குழுவால் பார்க்கப்பட்டு, அந்தக் குழுவினர் தேர்ந்தெடுத்து, அந்தப் படங்களுக்குப் பரிசு அளிக்கப்படுகின்றது.

அதேபோல, இன்னும் சிறந்த படங்களாக, சமுதாயச் சீர்திருத்தம் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு எடுக்கப்படுகின்ற படங்களாக இருந்தால், அதற்கு கேளிக்கை வரியைக்கூட ரத்து செய்யக்கூடிய அந்தச் சூழ்நிலைகளும் பல நேரங்களிலே இந்த அரசு கடைபிடித்திருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அப்படிப்பட்ட படங்களை எடுப்பார்களேயானால், ஏதோ கட்சியைச் சேர்ந்தவர் என்பதற்காகக் கொடுத்தோம் என்று இல்லாமல், ஒரு சமுதாயச் சீர்திருத்தப் படத்தை எடுத்தார் என்பதை நடுநிலையோடு எல்லோரும் ஒப்புக்கொள்ளக்கூடிய அளவில் இந்த அரசு நிச்சயமாகச் செய்யும்.

கேளிக்கை வரியைக் குறைக்கமுடியுமா என்று கேட்டார்கள். இப்போது ஏறத்தாழ 15 ஆயிரம் கோடி ரூபாய்க்கு வரவு-செலவுத் திட்டம் உள்ள இந்த ஆட்சியில், கேளிக்கை வரி என்பது நூறு கோடி ரூபாய் என்பது சாதாரணமாகக் கடுகு போன்றதுதான்

என்றாலும்கூட, கேளிக்கை வரி அரசுக்குச் சேரக்கூடியது அல்ல, உள்ளாட்சி மன்றங்களுக்குச் சேரக்கூடிய வரிதான் கேளிக்கை வரி. எனவேதான், கேளிக்கை வரியை அதிகமாகக் குறைத்தால் உள்ளாட்சி மன்றங்கள்தான் பாதிக்கப்படும். கர்நாடகம் போன்ற சில மாநிலங்களில் theatres குறைவாக இருக்கின்ற காரணத்தாலும், அங்கே திரைப்படங்கள் குறைவாக எடுக்கப்படுகின்ற காரணத்தாலும், படம் எடுக்கிறவர்களை ஊக்கப்படுத்துவதற்காக கேளிக்கை வரி போன்றவற்றை ரத்து செய்திருக்கிறார்கள். இங்கே ஆண்டொன்றுக்கு 100 படங்கள் என்ற அளவிலே எடுக்கக்கூடிய சூழ்நிலை இருந்தது. இப்போதும் அது அறவே பட்டுப் போய்விடவில்லை. அந்த அளவிலே அந்தப் படங்களுக்கு இதுவரையிலும் குறைத்திருக்கிற கேளிக்கை வரியிலேயே நாம் பெருமளவுக்கு நட்டமடைந்திருக்கிறோம்.

முற்பகல் 10-30

தமிழக அரசு, நிதியாதாரத்தைக் கொண்டு இப்பொழுது செய்யப்பட்டு வருகின்ற சலுகைகளே, இந்த அரசின் சார்பில் செய்யப்பட்டு வருகின்ற சலுகைகளே சினிமா உலகத்திற்குப் போதுமானது என்று நான் கருதுகின்றேன். சின்னத் திரைகளால், பெரிய திரைகள் ஒன்றும் கெட்டுப்போய் விடவில்லை. சின்னத் திரைகள் சில நேரங்களில் பெரிய திரைகளுக்கு விளம்பர சாதனங்களாகக்கூடப் பயன்படுகின்றன. வளர்ந்துவரும் விஞ்ஞான உலகத்தில் சின்னத் திரையைக்கூட அழிக்கக்கூடிய இன்னொரு திரை எதிர்காலத்திலே வரக்கூடும். விஞ்ஞான வளர்ச்சியிலே நவீனங்கள் புதிது புதிதாக வருவது இயற்கைதான். நாடகத்தை அழித்தது சினிமா என்பதற்காக சினிமாவை அழித்து விட முடியாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன் அனுமதியுடன் வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. திரு. ச. அழகிரி.

திரு. ச.அழகிரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை தொலைக்காட்சி டி.டி.1-ல் தமிழ் ஒளிபரப்பு இதுவரை காலை 8.30 மணி வரை இருந்தது. அதனை 8 மணியாக, அதாவது 30 நிமிடங்கள் குறைத்து ஒளிபரப்புவதற்காக ஒப்பந்தம் கையெழுத்தாகி இருக்கிறது. இது அரசுக்குத் தெரியுமா? ஆம் எனில், அந்த அரை மணி நேரம் இந்தி ஒளிபரப்புக்காக ஒதுக்கப் பட்டிருக்கிறது என்பதனை அரசு அறியுமா? அப்படியென்றால் அதன்மீது அரசு எடுக்க இருக்கின்ற நடவடிக்கை என்ன என்பதனை அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை தொலைக்காட்சியில் நிகழ்ச்சிகளை வரைமுறைப்படுத்துவது அல்லது ஒழுங்குபடுத்தி, நேரத்தை அறிவிப்பது அனைத்தும் மத்திய அரசின் கையில் இருக்கின்ற காரணத்தால், நாங்கள் அதில் தலையிடுவதற்கு வாய்ப்பில்லை. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினருடைய கருத்தைக் கவனத்தில் கொண்டு அத்துறை சம்பந்தப் பட்டவர்களுக்கு எழுதுவோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி ஆர். சரஸ்வதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத, இனக் கலவரங்களை ஒடுக்கும் வகையில் தீண்டாமையை ஒழித்திட தனியார் தொலைக்காட்சி மூலம் பிரச்சாரம் செய்ய அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே தமிழக அரசின் சார்பாக 'ஒன்றே குலம்', 'சாதிகள் இல்லையடி பாப்பா' என்ற தலைப்புகளில் தீண்டாமை ஒழிப்பு குறித்து வீடியோ படங்களை எடுத்து ஒளிபரப்பி வருகிறோம். அதுமாத்திரமல்லாமல், இப்பொழுது 6 நிமிட கால அளவிலான தீண்டாமை ஒழிப்பு குறித்து ஒரு கருத்து விளக்கப்படம் எடுக்கப்பட்டிருக்கிறது. கவியரசு வைரமுத்து அவர்கள் அதற்கான பாடலை எழுத, தேவா இசை அமைத்திட பாலசுப்பிரமணியம் பாடிட, சிவகுமார் அவர்கள் நடித்துள்ள அந்தப் படம் கூடிய விரைவிலே ஒளிபரப்பப்பட விருக்கிறது. அதேநேரத்தில் அந்தப் படத்தோடு ஏற்கெனவே வெளியிடப்பட்ட 'ஒன்றே குலம்', 'சாதிகள் இல்லையடி பாப்பா' என்ற படங்களையும் சேர்த்து வெளியிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

[2000 மார்ச் 8

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* வினா எண் 80, திரு. கே.சி. கணேசன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.

80—

கால்நடை மருத்துவமனை

*26179—திரு. கே.சி. கணேசன்:

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஜெயங்கொண்டம் தொகுதி, உடையார்பாளையத்தில் இயங்கும் கால்நடை கிளை நிலையத்தைக் கால்நடை மருத்துவமனையாக உயர்த்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை. இவ்வினாவிற்கு இடமில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே.சி. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உடையார்பாளையம் தாலுகா பழைய தாலுகா, உடையார்பாளையம் வட்டத்திலிருந்து பிரிந்ததுதான் அரியலூர் தாலுகா. அரியலூர் தாலுகாவில் கால்நடை கிளை மருத்துவமனை உள்ளது. உடையார்பாளையம் காடுகள் நிறைந்த பகுதி; ஆடு, மாடுகள் நிறைந்த பகுதி; விவசாயிகள் அதிகம் பேர் உள்ள பகுதி. ஆகவே, அங்கே கால்நடை மருத்துவமனையை 3 ஆண்டுகளாகக் கேட்டு வருகின்றேன், கிடைக்கவில்லை. விவசாயிகள் அதிகமாக இருக்கிற காரணத்தினாலேயும், ஆடு, மாடுகள் அதிகமாக இருக்கிற பகுதி என்ற காரணத்தினாலேயும், பழைய தாலுகா என்ற முறையிலேயும், இந்த ஆண்டாவது அதற்கு கால்நடை மருத்துவமனை அரசிடமிருந்து கிடைக்குமா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.



2000 மார்ச் 8]

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரம்பலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் ஊராட்சி ஒன்றியத்தில் பெரியபாளையம் என்ற இடத்தில் ஒரு கால்நடை மருத்துவமனையும், மீன்சுருட்டி என்ற ஊரில் ஒரு கால்நடை மருந்தகமும், உடையார்பாளையம் இறவாங்குடி, கங்கைகொண்ட சோழபுரம் ஆகிய கிராமங்களில் கால்நடை கிளை நிலையங்களும், அவற்றிற்கு முறையே தாத்தலூர் பொட்டக்கொல்லை, நரசிங்கபுரம், வீரசோழபுரம் ஆகிய ஊர்களில் பார்வைக் கிளை நிலையங்களும் தற்போது செயல்பட்டு வருகின்றன. உடையார்பாளையத்தில் ஒரு கிளை நிலையமும், தாத்தலூர் பொட்டக்கொல்லை என்ற ஊரில் அதற்கு இணையான பார்வைக் கிளை நிலையமும், கால்நடைகளுக்கு சிகிச்சைப் பணிகளைத் தற்போது மேற்கொண்டு வருகின்றன. எதிர்வரும் ஆண்டுகளில் அரசின் நிதி மற்றும் தகுதிகளின் அடிப்படையில் பகுதி 2 திட்டத்தின்கீழ் உடையார்பாளையத்தில் இயங்கும் கால்நடை கிளை நிலையத்தினை கால்நடை மருந்தகமாக உயர்த்த பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்]

## 2. அரசினர் தனித் தீர்மானம் @

**சேலம் உருக்காலை நிர்வாகம் தொடர்ந்து பொதுத் துறையின்கீழ் இருக்கவும், தனியாரிடம் ஒப்படைப்பதைத் தவிர்க்கவும், தேவையான நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொள்ள பேரவை கேட்டுக்கொள்ளுதல்**

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* அடுத்து, சேலம் உருக்காலை தனியார் துறைக்கு விடப்படுவதால், அங்கு பணியாற்றும் தொழிலாளர் மத்தியில் ஏற்பட்டுள்ள நிலை குறித்து கவன ஈர்ப்பு

@ சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக் கொள்ளப்பெற்று இறுதியில் அரசினர் தனித் தீர்மானமாக நிறைவேற்றப்பெற்றது.

அறிவிப்பாக திரு. சி. ஞானசேகரன் அவர்களும், சிறப்புக் கவன ஈர்ப்பு அறிவிப்பாக திரு. குத்தாலம் பி. கல்யாணம், திரு. ஐ. கணேசன், திரு. கே. சுப்பராயன், திரு. மு. அப்பாவு, டாக்டர் க. கிருஷ்ணசாமி, திரு. பி.ஆர். சுந்தரம், திரு. சொ. கருப்பசாமி, திரு. இரா. விசுவநாதன், திரு. ஜி. நிஜாமுதீன், திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன், திரு. லா. சந்தானம், திரு. வை. சிவபுண்ணியம், டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் அவர்களும், ஒத்திவைப்புத் தீர்மானமாக திரு. சி. ஞானசேகரன், திரு. ஆர்.ஆர். சேகரன், திரு. இரா. தாமரைக்கனி, திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில், டாக்டர் தே. குமாரதாஸ், திரு. ம. அப்துல் லத்தீப், திரு. டி. மணி, திரு. ஜே. ஹேமச்சந்திரன், திரு. ஜி. பழனிசாமி அவர்களும் அறிவிப்புகளைக் கொடுத்திருக்கிறார்கள். கட்சிக்கு ஒருவர் என்ற முறையில் திரு. சி. ஞானசேகரன் அவர்களை முதலில் பேச அழைக்கிறேன்.

முற்பகல் 10-35

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1971 ஆம் ஆண்டு அருமை அன்னை இந்திரா காந்தி அவர்கள் பாரதப் பிரதமராக இருந்த காலத்தில் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் நம்முடைய தமிழகத்தினுடைய உணர்வுகளுக்காகப் போராடி 1971 ஆம் ஆண்டு சேலம் இரும்பாலைக்கு அன்று அடிக்கல் நாட்டப்பட்டது. மாண்புமிகு முதல்வர் அவர்கள் இப்பொழுதுகூட பத்திரிகையில் அளித்த பேட்டியிலும் சரி, மற்ற கடிதத்திலும் சரி அவர்கள் - திராவிட முன்னேற்றக் கழகமும் இந்த இரும்பாலை அமைவதற்காக போராடியிருக்கிறது. ஆகவே அது பொதுத் துறையிலே மீண்டும் நிச்சயமாக தமிழகத்திலே இயங்க வேண்டுமென்ற கருத்தையும் வெளிப்படுத்தியிருக்கிறார்கள். தமிழக முதல்வர் அவர்கள் முயற்சியால் அப்போது உருவாக்கப்பட்ட அந்த ஆலை இப்போது ஒரு சோதனைக்கு உள்ளாகியிருக்கிறது என்பது மிக வருத்தமான ஒரு செய்தி. தமிழக மக்களுக்கு மத்திய அரசு ஒரு மாபெரும் துரோகத்தைச் செய்ய முனைந்திருக்கிறது என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டாகும்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் கட்சியும் இப்போது நடைபெற்றுக்கொண்டிருக்கிற அந்த B.J.P. அரசு நடத்திக்



கொண்டிருக்கிற N.D.A.வில் அங்கம் வகித்துக்கொண்டிருக்கக்கூடிய ஒரு கட்சி. நம்முடைய தமிழகத்தைச் சேர்ந்த 3 பேர் அந்த அமைச்சரவையில் Cabinet அமைச்சர்களாக இருந்து கொண்டிருக்கிறார்கள். 5 பேர் இணை அமைச்சர்களாக இருந்துகொண்டிருக்கிறார்கள். இன்று, திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆதரவோடுதான் அங்கே B.J.P. அரசு நடந்து கொண்டிருக்கிறது.

1971 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டு, பிறகு 13-9-1981 ஆம் தேதியன்று அப்போதைய அமைச்சர் திரு. என்.டி. திவாரி அவர்களால் இந்த நாட்டிற்கு அந்த இரும்பாலை அர்ப்பணிக்கப்பட்டது. பிறகு அது படிப்படியாக வளர்ச்சி பெறவேண்டுமென்பதற்காக மக்கள் தலைவர் ஐயா மூப்பனார் அவர்கள் 1988 ஆம் ஆண்டு அப்போதைய பாரதப் பிரதமராக இருந்த அருமைத் தலைவர் ராஜிவ் காந்தி அவர்களிடம் சொல்லி, அதேபோல் அப்போது அமைச்சராக இருந்த திரு. ப. சிதம்பரம் அவர்கள் எல்லாம் முயற்சி செய்து, அப்போதைய மத்திய அமைச்சர் பொட்டேதார் அவர்கள் மூலமாக ரூ.600 கோடியை இந்த ஆலைக்காக அப்போது பெற்றுத் தந்தார்கள். பிறகு இரண்டாம் கட்ட விரிவாக்கம் 1991—லே ரூ.76 கோடியிலே தொடங்கிய பிறகு, மூன்றாம் கட்ட விரிவாக்கம் நாணய வில்லை அச்சடிப்பு 1993 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. அப்பொழுது அதற்குக் கொடுக்கப்பட்ட திட்ட முதலீடு ரூ.18 கோடி. பிறகு 3-11-1995 இல் அப்போதைய மத்திய அமைச்சர் திரு. சந்தோஷ் மோகன் தேவ் அவர்களைக் கொண்டு, நான்காம் கட்ட விரிவாக்கம் ரூ.770 கோடியில் உருவானது. இதுவரை ரூ.1200 கோடி அதிலே முதலீடு செய்யப்பட்டிருக்கிறது. தற்காலிக மார்க்கெட் மதிப்பு அந்த இரும்பாலைக்கு ரூ.2000 கோடி. குளிர் உருட்டாலையிலே மொத்த உற்பத்தித் திறன் ஆண்டிற்கு 70,000 டன்கள் இப்போது இருக்கிறது. வெப்ப உருட்டாலையிலே மொத்த உற்பத்தித் திறன் ஆண்டிற்கு 2 இலட்சம் டன்கள். நாணய உற்பத்தித் திறன் ஆண்டிற்கு 3000 டன்கள்.

முற்பகல் 10-40

அந்த ஆலையிலே இப்போது 1600 தொழிலாளர்கள் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். Labour Society -யின் மூலமாக 500 பேர் வேலை செய்கிறார்கள். ஆக மொத்தம் 2100 பேர் அந்த இரும்பாலையிலே, இன்று பணியாளர்களாகப் பணி செய்து

கொண்டிருக்கிறார்கள். 800 வீடுகள் தொழிலாளர்களுக்காகக் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஒரு பெரிய ஆலையை தமிழக முதல்வர் அவர்கள், நம்முடைய தமிழகத்திற்குக் கொண்டு வருகிறார்கள் என்கிற நம்பிக்கையோடு நம்முடைய தமிழ் மக்கள் அந்தப் பகுதியிலே கிட்டத்தட்ட 4000 ஏக்கர் — சரியாகச் சொல்ல வேண்டுமென்றால் 3973 ஏக்கர் நிலத்தை, சொற்ப விலைக்கு இந்த ஆலைக்கு அந்தப் பகுதி மக்கள் வழங்கியிருக்கிறார்கள். இப்படி ஒரு நம்பிக்கையோடு அன்று உருவாக்கப்பட்ட பொதுத் துறையின் மூலமாக ஒரு இரும்பாலை வேண்டும்—சேலம் என்று சொன்னாலேயே மாங்கனி என்ற ஒரு நிலை இருந்தது போய் சேலம் என்று சொன்னால் இரும்பாலை என்று சொல்லக்கூடிய அளவிற்கு தொழில் துறையிலே வளர்ச்சி பெறுவதற்கு அந்த ஆலை தமிழகத்திற்கு ஒரு நல்ல பெயரை எடுத்துக் கொடுத்துக் கொண்டிருந்த நேரம்.

அதோடு மட்டுமல்ல, அந்தத் தொழிற்சாலையிலே மிகத் திறமையாகப் பொருள் உற்பத்தி செய்யப்படுகின்ற காரணத்தினாலே தரம் உள்ள ஸ்டீல் தகடுகள் அங்கே உருவாக்கப்படுகின்ற காரணத்தினாலே உலகத் தர முத்திரை ஐ.எஸ்.ஓ. 900 என்ற சான்றையும் அந்த ஆலை பெற்றிருக்கிறது. பிறகு சுற்றுப்புறச் சூழலுக்காகக் கொடுக்கப்படுகின்ற அந்தச் சான்றையும் ஐ.எஸ்.ஓ. 14000 என்பதையும் இந்த ஆலை பெற்றிருக்கிறது. உலகத்திலேயே தரமான ஸ்டீல் தகடைத் தயாரிக்கக்கூடிய ஒரு நிறுவனமாக இது விளங்கிக் கொண்டிருக்கின்ற காரணத்தினாலே இந்தியாவிற்கேகூட இதிலே ஒரு பெருமை இருக்கிறது. இவ்வளவு பெருமைக்குச் சொந்தக்காரராக இருந்துகொண்டிருக்கக்கூடிய இந்த ஆலைக்கு இப்போது ஆபத்து ஏற்பட்டிருக்கிறது.

இரும்பாலை என்று சொன்னாலே ஏனோ இப்போது நமக்கு ராசி இல்லாமல் போய்க் கொண்டிருக்கிறது என்கிற ஒரு அச்சம் எங்களுடைய தமிழ் மாநில காங்கிரசுக்கு ஏற்பட்டிருக்கிறது. காரணம் அரக்கோணத்தில் இருந்த அரசு எஃகு ஆலை - Steel Plant - மூடிய ஆலைகளைத் திறப்போம் என்று சொன்ன திராவிட முன்னேற்றக் கழக அரசு முதலடியாக மூடி, இப்போது அந்த இடத்திலே இரும்பாலை இல்லை. எங்களுடைய மாவட்டத்தில் இருந்த அந்த எஃகு ஆலை போய்விட்டது. பிறகு இந்த இரும்பாலையாவது நிலைக்கும் என்று இருந்தோம்.



இந்த இரும்பாலைக்கும் சோதனை ஏற்பட்டு இருக்கிற காரணத்தினாலே அனைத்துக் கட்சிகளும் அங்கே - இப்பொழுதுகூட ஒரு போராட்டக் குழு எங்களுடைய தமிழ் மாநில காங்கிரசினுடைய மேற்கு மாவட்டத்தினுடைய தலைவர் மாரியப்பன் தலைமையிலே அங்கே இயங்கிக்கொண்டு - பல போராட்டங்களை அறிவித்துக் கொண்டிருக்கிறது. இப்போது நம்முடைய மாண்புமிகு விவசாயத் துறை அமைச்சருடைய தலைமையிலே நேற்றைக்கு முந்தைய நாள்கூட அங்கே இருக்கக்கூடிய சர்வ கட்சித் தலைவர்கள் எல்லாம் மாண்புமிகு முதல்வர் அவர்களைச் சந்தித்திருக்கிறார்கள். ஒருவகையில் தமிழகத்தில் இருக்கக்கூடிய அத்தனை அரசியல் கட்சித் தலைவர்களையும் நான் பாராட்டியாக வேண்டும். ஒரே குரலில், ஒருமித்த குரலில் N.D.A.விலே அங்கம் வகிக்கக்கூடிய அத்தனை தலைவர்களும் இன்று இந்த பொதுத்துறையிலே இயங்கக்கூடிய இந்த இரும்பாலை தொடர்ந்து இயங்க வேண்டும் என்கிற கருத்தை அவர்கள் வலியுறுத்தியிருக்கிறார்கள். பல அறிக்கைகளும் விட்டிருக்கிறார்கள்.

நம்முடைய தமிழகத்தினுடைய முதல்வர் அவர்கள்கூட 20 ஆம் தேதி திருச்சியிலே பேட்டி அளிக்கின்றபோது "தமிழ்நாட்டில் மேலும் பல தனியார் தொழிற்சாலைகள் வருவதை எனது அரசு ஆதரித்தாலும் பொதுத் துறை ஆலைகளைத் தனியார்மயம் செய்ய முயல்வதை நாங்கள் ஆதரிக்கவில்லை. சேலம் உருக்காலையை தனியார்மயமாக்கும் யோசனையை மறுபரிசீலனை செய்யும்படி மத்திய அரசை நான் கேட்டுக்கொள்வேன். இந்திரா காந்தி ஆட்சிக் காலத்தில் தமிழ்நாட்டில் சேலத்தில் உருக்காலை அமைய வேண்டும் என்பதற்காக தி.மு.க. போராடியது என்பதை நான் நினைவுபடுத்த விரும்புகிறேன்" என்று கூறியிருக்கிறார்கள்.

அதேபோல மாண்புமிகு பாரதப் பிரதமருக்கு அவர்கள் எழுதியிருக்கக்கூடிய கடிதத்தில்கூட சேலம் உருக்காலை தொடர்ந்து பொதுத் துறை நிறுவனமாகவே செயல்பட தனிப்பட்ட முறையிலே உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அவர்கள் வாஜ்பாயை வலியுறுத்தி இருக்கிறார்கள். சேலம் உருக்காலை கடந்த சில ஆண்டுகளாகத்தான் நஷ்டத்தில் இயங்கி வருகிறது. அதுவும் மூலப் பொருட்களின் விலை ஏற்றத்தினாலும் கடனுக்கான வட்டிச் சுமையினாலும்தான் நஷ்டம் ஏற்பட்டு உள்ளது. அந்த இழப்பினை

[திரு. சி. ஞானசேகரன்] [2000 மார்ச் 8

சரிக்கட்டி தொழிற்சாலை தொடர்ந்து நல்லமுறையிலே இயங்குவதற்காக 350 கோடி ரூபாய் நிதி உதவியோடு அனைத்து உதவிகளையும் செய்யவேண்டும் என்று அவர்கள் பாரதப் பிரதமருக்குக் கடிதம் எழுதியிருக்கிறார்கள்.

இங்கு தமிழகத்தில் இருக்கக்கூடிய அத்தனை அரசியல் கட்சித் தலைவர்களும் N.D.A.-விலே அங்கம் வகிக்கக்கூடிய தலைவர்கள் எல்லாம் ஒருமித்து ஒன்றாக மாண்புமிகு பிரதமர் அவர்களை வலியுறுத்திக் கொண்டிருந்தாலும்கூட இன்று இந்த முழக்கம் எல்லாம் செவிடன் காதில் ஊதிய சங்காக மாறிக்கொண்டிருப்பது ஏன் என்றுதான் எங்களுக்குத் தெரியவில்லை. அன்று திராவிட முன்னேற்றக் கழகம், காங்கிரஸ் ஆண்ட காலத்திலே சொன்னார்கள். 'வடக்கு வாழ்கிறது, தெற்கு தேய்கிறது' என்று சொன்னார்கள். ஆனால், இப்பொழுது தெற்குத் தேய்கிறது என்று சொல்வதைவிட தமிழகம் தேய்கிறது என்றுதான் நாம் இங்கே சொல்லியாக வேண்டும். ஏனென்று சொன்னால் பக்கத்தில் இருக்கக்கூடிய ஆந்திராவிலே ...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சீக்கிரம் பேசி முடியுங்கள்.

முற்பகல் 10-45

திரு. சி. ஞானசேகரன்: விசாகப்பட்டினத்தில் இருக்கக்கூடிய இரும்பாலை 4500 கோடி ரூபாய் நஷ்டத்தில் இயங்கிக் கொண்டிருக்கிறது. ஆனால், அங்கு இருக்கக்கூடிய முதலமைச்சர் மாண்புமிகு சந்திரபாபு நாயுடு அவர்கள் தன்னுடைய செல்வாக்கைப் பயன்படுத்தி அந்த ஆலை 4500 கோடி ரூபாய் நஷ்டத்தில் இயங்கினாலும் அதை இயக்குவதற்கு ஆவன செய்யப்பட்டிருக்கிறது. ஆனால், இங்கே வெறும் 350 கோடி ரூபாய் -அதுவும் 1994-95 ஆம் ஆண்டுகூட 21.14 கோடி ரூபாய் லாபம் கிடைத்திருக்கிறது சேலம் இரும்பாலையிலே. அதேபோல, 1995-96லே 4.15 கோடி ரூபாய் இலாபத்திலே இயங்கியிருக்கிறது. 1996-க்குப் பிறகுதான் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. அந்த நஷ்டம் ஏற்பட்டிருந்தாலும்கூட, இதிலே பல்வேறு வகையிலே வரியாக இந்த இரும்பாலை 1260 கோடி ரூபாய் வரி செலுத்தியிருக்கிறது. எவர்சில்வர் ஏற்றுமதி மூலமாக அந்நியச் செலாவணி 700 கோடி ரூபாய்க்கு வழி வகுத்திருக்கிறது. நாணய வில்லை அச்சடிப்பு மூலமாக



2000 மார்ச் 8] [திரு. சி. ஞானசேகரன்]

வெளிநாட்டுக்குப் பணம் தருவதை மிச்சப்படுத்துகிற வகையிலே 200 கோடி ரூபாய் ஈட்டித் தந்திருக்கிறது. இவ்வளவு பெருமைக்குச் சொந்தமாக விளங்கிக் கொண்டிருக்கிற இந்த இரும்பாலையை மூடுவதற்கு அரசு ஏன் முடிவெடுத்தது என்பதுதான் விந்தையாக இருக்கிறது.

இதிலே முதலிலே ஒரு Tender-ஐ விடுகிறார்கள். Joint Venture-லே இது எடுக்கப்படுவதாக முதலிலே 19-11-1999-லே ஒரு Tender விடப்படுகிறது. அதிலே, Joint Venture-லே Melting Plant ஆரம்பிப்பதற்காக என்று சொல்கிறார்கள். அமெரிக்காவிலே இருக்கக்கூடிய Mechanis & Co. என்றவொரு நிறுவனம் தானாக வந்து 1999 ஆம் ஆண்டு இலவசமாக 6 அம்சக் கோரிக்கைகளிலே சில recommendations செய்கிறார்கள். அப்படிச் செய்யப்பட்டு Joint Venture என்று வந்ததற்குப் பிறகு திடீரென்று 29-1-2000 ஆம் தேதி தனியார் துறைக்கு இது முழுமையாகத் தாரை வார்க்கப்படுவதற்காக Tender வெளி வருகிறது என்று சொன்னால் இதற்குப் பின்னாலே மத்தியிலே இருக்கக்கூடிய ஒரு அமைச்சர் ** 300 கோடி ரூபாய் தனியாக ஆதாயம் பெற வேண்டும் என்பதற்காக இப்படிச் செய்தார் என்று ஒரு குற்றச்சாட்டு ....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்த அவையிலே இல்லாதவர்களைப்பற்றி இப்படியெல்லாம் நீங்கள் பேசக் கூடாது. உங்களுக்கு மரபு தெரியாதா? நீங்கள் ஒரு பெயரைச் சொல்லி சொல்லலாமா? யாரோ ஒரு அமைச்சர் வாங்கினார் என்றுகூடச் சொல்லிவிட்டுப் போங்கள். பெயர் சொல்லி அவர் வாங்கினார், இவர் வாங்கினார் என்று சொல்லலாமா? இதை நான் அவைக் குறிப்பிலிருந்து எடுக்கிறேன். அப்படிச் சொல்லக் கூடாது.

திரு. சி. ஞானசேகரன்: ஒரு தனிப்பட்ட ...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாட்டினுடைய மரபைக் கெடுக்காதீர்கள்.

திரு. சி. ஞானசேகரன்: தனிப்பட்ட ...

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நாளைக்கு நாடாளு மன்றத்திலே இங்கே இருக்கிறவர்களைப் பற்றிப் பேசினால் நமக்கு என்ன பாதுகாப்பு?

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திற்கு இவ்வளவு பெரிய கொடுமை இழைக்கப்பட்டு இருக்கிறது என்கிற காரணத்தாலே சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**அதற்கு நீங்கள் பெயரைச் சொல்லக் கூடாது.

**திரு. சி. ஞானசேகரன்:** அப்படியொரு குற்றச்சாட்டு எழுந்திருக்கிறது. பெயரைச் சொல்லாமல் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**அந்தப் பெயரை அவைக் குறிப்பிலேயிருந்து எடுக்கிறேன். யாரோ ஓர் அமைச்சர் பணம் வாங்கினார் என்று குற்றச்சாட்டு இருக்கிறது என்று சொல்லுங்கள். அது வேறு.

**திரு. சி. ஞானசேகரன்:** யாரோ ஒரு அமைச்சர் 300 கோடி ரூபாய் இலாபம் அடைவதற்காகத் திடீரென்று Joint Venture என்று இருக்கக்கூடிய Tender-ஐ திடீரென்று தனியாருக்குத் தாரை வார்த்துக் கொடுப்பதற்காக மாற்றப்பட்டது என்கிற ஒரு நிலை எடுத்திருப்பதை மாண்புமிகு முதல்வர் அவர்கள் நிச்சயமாகக் கடுமையாக எதிர்த்தாக வேண்டும். ஜிண்டால் என்கிற (மணியடிக்கப்பெற்றது) ஒரு தனியார் கம்பெனிக்கு இதைக் கொடுத்து...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேச்சை முடியுங்கள் என்று சொன்னால், நீங்கள் ஏன் பேச்சை இழுத்துக்கொண்டே போகிறீர்கள்?

**திரு. சி. ஞானசேகரன்:** இதோ பேச்சை முடித்துவிடுகிறேன். ஆகவே, மூடிய ஆலைகளைத் திறப்போம் என்று சொன்ன முதலமைச்சர் அவர்கள் நிச்சயமாக பொதுத் துறையிலேயே இந்த ஆலை தொடர்ந்து நடப்பதற்கு அவர்கள் குரல் கொடுத்திருக்கிறார்கள். தமிழக மக்களின் சார்பாக நாங்கள் உங்களுக்கு நன்றி சொல்கிறோம். ஆனால், பக்கத்திலே இருக்கக்கூடிய ஆந்திர முதல்வர் சொன்னதால்



4500 கோடி ரூபாய் நஷ்டத்திலே ஓடிக்கொண்டிருப்பது இன்று செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆனால் 340 கோடி ரூபாய் மட்டும் நஷ்டத்திலே ஓடக்கூடிய சேலம் இரும்பாலை மட்டும் இங்கே எடுக்கப்பட்டு தனியாருக்குத் தாரை வார்க்கப்படுகிறது என்று சொன்னால் தமிழர்கள் என்ன ஏமாளிகளா என்கிற ஒரு நிலை ஏற்படுவதைத் தவிர்க்க வேண்டுமென்று சொன்னால், இதனை நாம் கடுமையாக எதிர்த்தாக வேண்டும். முதற்கட்டமாக இதைக் கண்டித்து இந்த மன்றத்திலே ஒரு கண்டனத் தீர்மானத்தையே இந்த அரசு கொண்டு வரவேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இரண்டாவது, இத்தனை பேர் சொல்லியும், அத்தனைக் கட்சிகளும் சொல்லியும் நேற்றுகூட நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாண்புமிகு பிரதமரைச் சென்று சந்தித்தும்கூட இன்னும் பிரதமர் ஒத்துக்கொள்ளாத காரணத்தினாலே இன்று தமிழகத்தைச் சேர்ந்த, அந்த அமைச்சரவையிலே அங்கம் வகித்துக்கொண்டிருக்கக்கூடிய B.J.P. N.D.A. அரசிலே அங்கம் வகித்துக்கொண்டிருக்கக்கூடிய தமிழகத்தைச் சேர்ந்த அத்தனை அமைச்சர்களும் இதை எதிர்த்து உடனடியாக ராஜினாமா செய்ய வேண்டும் என்கிற கருத்தையும் தமிழ் மாநில காங்கிரஸ் இங்கே வலியுறுத்துகிறது.

அதற்கடுத்த கட்டமாக, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், திராவிட முன்னேற்றக் கழகமும் மற்றும் தமிழகத்தில் இருக்கக்கூடிய உங்களுடைய கூட்டணிக் கட்சிகளைச் சேர்ந்தவர்களெல்லாம் இன்று B.J.P.-க்குக் கொடுத்துக்கொண்டிருக்கக் கூடிய ஆதரவை--இந்த இரும்பாலையை மீண்டும் தனியாருக்குக் கொடுப்போம் என்று B.J.P. அரசு அடம்பிடித்தால் நீங்கள் வாபஸ் வாங்க வேண்டும்.

அதற்கடுத்த கட்டமாக, ஒரு பெரிய bandh-ஐயும் நடத்தி இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்க வேண்டும். பொதுத் துறையிலேயே இது தொடர்ந்து நடக்க மாண்புமிகு முதல்வர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று தமிழ் மாநில காங்கிரஸ் சார்பாகக் கேட்டு அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி.

[2000 மார்ச் 8

*திரு. ஜி. பழனிசாமி:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* பேசியவருக்கு நீங்கள் இப்படி கைகொடுக்க ஆரம்பித்தீர்கள் என்றால், இன்னும் மணிக்கணக்காகப் பேசிக் கொண்டிருப்பார். திரு. ஜி. பழனிசாமி.

முற்பகல் 10-50

*திரு. ஜி. பழனிசாமி:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் உருட்டாலையை உருவாக்குவதற்கு மறைந்த மரியாதைக்குரிய பேரறிஞர் அண்ணா, ஜீவானந்தம், தங்கமணி போன்றவர்களெல்லாம் குரல் கொடுத்து, அந்த உருட்டாலை 1969 ஆம் ஆண்டு தேசிய வளர்ச்சிக் குழுவிலே பேசி 1970, 1972 ஆண்டுகளிலே தமிழ்நாட்டிலே முன்னாள் பிரதமர் மரியாதைக்குரிய இந்திரா காந்தி அம்மையார் அவர்களால் உருவாக்கப்பட்டது. அநேகமாக, 1990 ஆம் ஆண்டு இதே மாமன்றத்தில், சேலம் உருட்டாலை பற்றி ஒரு விவாதம் நடைபெற்றது. மரியாதைக்குரிய நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்தான் அந்த உருட்டாலையை உருக்காலையாக மாற்ற வேண்டும் என்பதற்காக, அதற்கான நிதியாதாரங்களைப் பெறுவதற்காக அன்றைக்கு இருந்த ஐக்கிய முன்னணி அரசோடு தொடர்பு கொண்டு அதனுடைய வளர்ச்சியை உருவாக்குவதற்கு ஆணித்தரமாகக் குரல் கொடுத்தவர். எனக்குச் சரியாக ஞாபகம் இருக்கிறது. அன்றையதினம் எந்தவொரு சூழ்நிலையில் எப்படிப்பட்டவொரு நிலை வந்தாலும் அந்த ஆலையை நாங்கள் பாதுகாப்போம் என்று இந்தச் சபையிலேயே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உறுதி கொடுத்தார்கள். அந்த நம்பிக்கை எங்களுக்கு இப்போதும் இருக்கிறது. அதிலே ஒருபோதும் மாற்றம் இல்லை. காரணம் என்னவென்று சொன்னால், 1990 ஆம் ஆண்டு மாண்புமிகு முதலமைச்சர் எடுத்திருக்கிற நிலை இன்றைக்கு மாறுபடாது என்பதில் எங்களுக்குச் சந்தேகத்திற்கே இடமில்லை. குறிப்பாக, 4000 ஏக்கரில் உருவாக்கப்பட்டிருக்கிற அந்த உருக்காலை, தற்போது சுமார் 2000 கோடி ரூபாய் மதிப்புள்ள அந்த உருக்காலை, 181 கோடி ரூபாய் செலவிலே முன்னாள் பிரதமர் இந்திரா காந்தி அம்மையார் அவர்களால் உருவாக்கப்பட்டது. தொடர்ந்து, 1995 ஆம் ஆண்டு இதை மேலும் புனரமைக்க



வேண்டும் என்பதற்காக வெப்ப உருக்காலையாக உருவாக்கவும், அதேபோன்று எவர்சில்வர் தகடுகளை, தரமுள்ளதாக உருவாக்க வேண்டும் என்பதற்காகவும் கடும் முயற்சிகளை எடுத்ததன் விளைவாக இப்போது அந்த ஆலை செம்மையாக இயங்கிக் கொண்டு வருகிறது. நான் சுருக்கமாகச் சொல்ல வேண்டுமென்றால், 15 ஆண்டுகாலம் நஷ்டம் இல்லாமல் இயங்கிய சிறந்தவொரு உருக்காலை. 15 ஆண்டுகாலம் மிகச் சிறப்பாக எந்தவொரு நஷ்டமும் இல்லாத அளவிற்கு அந்த ஆலை செயல்பட்டு வந்திருக்கிறது. ஆனால், திடீரென்று 2000 பிப்ரவரி 15 ஆம் தேதி அவசர அவசரமாக மத்தியிலே இருக்கிற பாரதிய ஜனதா ஆட்சி, அமைச்சரவை, தனியாருக்குத் தாரைவார்த்துவிடலாம் என்கிற நிலை எடுத்ததற்கான அவசரக்கோலம் எது என்பதனை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறியாதவர்கள் அல்ல. நான்கு விரிவாக்கங்களின் காரணமாக 808 கோடி ரூபாய் கடனோடு இந்த ஆலை செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அதோடுமட்டுமல்ல, வருடத்திற்கு 120 கோடி ரூபாய் வட்டியாக அது செலுத்துகிறது. ஆனால், குறிப்பாக எடுத்துக்கொண்டோம் என்று சொன்னால், இதுவரையிலேயும் அரசுக் கருவூலத்திற்கு இந்த ஆலை உருவாகிய காலத்திலிருந்து 1,300 கோடி ரூபாய் செலுத்தியிருக்கிறது. எந்த அளவிற்கு அது சிறந்தமுறையிலே செயல்பட்டிருக்கிறது என்பதைத் தெரிந்து கொண்டோம் என்று சொன்னால் 1,300 கோடி ரூபாய் அது செலுத்தியதிலிருந்தே தெரியும். அதனுடைய பின்னணி என்ன என்பதைப் பற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உணர வேண்டும். அதேநேரத்திலே பாரதிய ஜனதா கட்சியினுடைய மந்திரி சபையில் அவசரகோலமாக நடவடிக்கை எடுத்திருப்பதைத் தடுத்து நிறுத்துவதற்கான முயற்சிகளை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

19-11-1999 அன்று உலக Tender கோரப்பட்டிருக்கிறது. அதற்கான நிலைகள் ஏன் வந்தன என்பதை ஆராயவேண்டும். மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதைப்போன்று, மொத்தமாக சுமார் 2100 பேர் அதிலே பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். இந்திய நாட்டினுடைய நாணயங்கள் அந்த உருக்காலையிலே சிறந்தமுறையிலே தகட்டிலே அடிக்கப்படுகின்றன. அவற்றுக்கு நாசிக்கிலேதான் முத்திரை இடப்படுகிறது. ஆனால், இங்கேதான் காசு தயார் பண்ணி அங்கே அனுப்புகிறோம். அப்படிப்பட்டதொரு உருக்காலையை தனியாருக்கு

[திரு. ஜி. பழனிசாமி] [2000 மார்ச் 8

விற்பது என்பது படுமோசமான நிலை. இந்த நிலையை எடுக்க பாரதிய ஜனதா கட்சியினுடைய ஆட்சி ஏன் தள்ளப்பட்டிருக்கிறது. அதிலே மாண்புமிகு திராவிட முன்னேற்றக் கழக அமைச்சர்களும் இடம் பெற்றிருக்கிறார்கள்.

தொடர்ந்து நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமிழகத்தில் தொழில் துறையிலே வளர்ச்சி காண வேண்டும்; தமிழகம் தொழில் துறை வளர்ச்சியிலே நான்காவது இடத்தைப் பெறவேண்டும் என்பதிலே உறுதியாக இருக்கக்கூடிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் (குறுக்கீடு) முதல் இடத்திலே இருக்கக்கூடிய இதை தனியாரிடத்திலே தாரைவார்த்துக் கொடுத்தால் எப்படி முதல் இடத்திற்கு வரப்போகிறது? என்ன பாதுகாப்பு இருக்கும்? தொடர்ந்து பார்த்தோம் என்று சொன்னால் ஆட்குறைப்புச் சட்டத்தைக் கொண்டு வந்து அதிலேயிருந்து ஆட்களை நீக்குகிறார்கள்.

முற்பகல் 10-55

அப்படிப்பட்ட நிலை வருவதோடு மட்டுமல்லாமல், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பிற்படுத்தப்பட்டவர்களுக்கும் தாழ்த்தப்பட்டவர்களுக்கும், சீர்மரபினருக்கும் 69 சதவீத ஒதுக்கீடு வழங்க வேண்டும் என்று குரல்கொடுத்துக்கொண்டிருக்கிறபோது, தனியார் துறைக்கு மாற்றினால் எப்படி இந்த 69 சதவீதத்தை தமிழ்நாட்டு மக்களுக்கு நாம் பெற்றுக் கொடுக்கப் போகிறோம்? நூற்றுக்கணக்கான தொழிற்சாலைகள் தமிழ்நாட்டில் இருக்கின்றன. அந்தத் தனியார் தொழிற்சாலைகளில் யாருக்காவது இந்த 69 சதவீத இட ஒதுக்கீடுபடி வேலைவாய்ப்புக்கு இடம் அளிக்கிறார்களா? வேலைவாய்ப்புகள் அளிக்கப்படுகின்றனவா என்று கேட்டால் கிடையாது. தனியார் மில்களில் முதலாளிகளின் விருப்பத்தின் அடிப்படையில்தான் வேலைக்கு ஆட்கள் அமர்த்தப்படுகிறார்கள். ஆகவே மேலும் மேலும் தொழிற்சாலைகள் தனியார் துறைக்கு மாற்றப்பட்டால் எந்த வகையில் நீங்கள் இதையெல்லாம் பாதுகாக்கப் போகிறீர்கள்? ஆகையால் உடனடியாக சேலம் உருக்காலையைத தனியாருக்கு விற்பனை செய்யக்கூடிய செயலைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டு, அதற்குரிய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். மத்தியிலே இருக்கின்ற அமைச்சர்கள் ஆட்சி தொடர்ந்து தமிழகத்தில் இதுபோன்ற அரசுத் துறைகளைத் தனியாருக்குத் தாரை வார்க்கின்ற நடவடிக்கைகளை,



2000 மார்ச் 8] [திரு. ஜி. பழனிசாமி]

மக்கள் விரோதக் கொள்கைகளை எடுத்துக்கொண்டு வருகிறார்கள். தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளைத் தனியாருக்கு விற்றுவிடுவது, விமான ஆலைகளைத் தனியாருக்கு விற்றுவிடுவது, நிலையங்களைத் தனியாருக்கு விற்பனை செய்வது, தொலைபேசி சேவைகளை தனியாருக்கு விற்பனை செய்வது என்று இப்படி படிப்படியாக மக்கள் விரோதக் கொள்கைகளைக் கடைபிடித்துக் கொண்டிருக்கின்ற மத்திய அரசை எதிர்த்து மாநில அரசு குரல் கொடுக்க வேண்டுமென்று கேட்டு அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு, சேலம் உருக்காலையினுடைய வரலாற்றைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்களும், அந்த உருக்காலை தனியாருக்குத் தாரை வார்க்கப்படுவதைப் பற்றி தோழர் பழனிசாமி அவர்களும் மிக விளக்கமாக இங்கே எடுத்துக் கூறியிருக்கின்றார்கள். எங்களுடைய சொந்த மாவட்டம் சேலம் மாவட்டம் என்ற காரணத்தால்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் சேலம் மாவட்டமா? நாமக்கல் மாவட்டமா? ராசிபுரம் தொகுதி எதில் வருகிறது?

**திரு. பி.ஆர். சுந்தரம்:** அன்றைய ஒருங்கிணைந்த சேலம் மாவட்டம். இந்த சேலம் உருக்காலையைப் பொறுத்தவரையில் கிட்டத்தட்ட 4000 ஏக்கர் நிலப்பரப்பில், மொத்தம் 2000 கோடி ரூபாய் முதலீட்டில் அமைக்கப்பட்டிருக்கின்றது. அது என்றைக்கு உருவானதோ அன்றிலிருந்து இதுவரை தேசிய கருவூலத்திற்கு என்று கிட்டத்தட்ட ரூ.1,300 கோடியைத் தன்னுடைய பங்காக ஈட்டித் தந்திருக்கின்றது.

இந்த ஆலையைப் பொறுத்தவரையில் அந்த ஆலைக்குத் தேவையான பணம் கிட்டத்தட்ட ரூ.360 கோடி தான். அதுவும் அந்தச் சேலம் உருக்காலையில் நான்காம் கட்ட விரிவாக்கத்திற்காக வங்கியிலே பெறப்பட்ட கடன் 808 கோடி ரூபாய். அந்த 808 கோடி ரூபாய்க்கு ஆண்டு ஒன்றுக்கு 120 கோடி ரூபாய் வட்டியாகக் கடந்த மூன்றாண்டுக் காலமாகச் செலுத்தாத காரணத்தால் அது வளர்ந்து

[திரு. பி.ஆர். சுந்தரம்] [2000 மார்ச் 8

இன்றைக்குக் கிட்டத்தட்ட 360 கோடி ரூபாயாக உயர்ந்திருக்கின்றது. இந்த 360 கோடி ரூபாயை அந்த ஆலைக்குக் கொடுத்தாலே இன்றைக்கு அந்த ஆலையை மிகச் சிறப்பாக நடத்த முடியும் என்று அனைவரும் கூறியிருக்கிறார்கள். ஆனால் அதைவிட்டுவிட்டு 360 கோடி ரூபாயை அந்த ஆலைக்குக் கொடுக்க முடியாது என்று சொல்லி ஒட்டுமொத்த ஆலையையும் தனியாரிடம் தருவதற்காக tender விட முடிவு செய்து tender தேதி பிப்ரவரி 18 ஆம் தேதி என்று குறிப்பிட்டு, அந்த 18 ஆம் தேதி முடிவதற்கு முன்பாக, பிப்ரவரி 15 ஆம் தேதியன்றே மத்திய அமைச்சரவை கூடி அந்த அமைச்சரவைக் கூட்டத்திலே அந்த நிறுவனத்தைத் தனியாரிடம் ஒப்படைக்க வேண்டுமென்று முடிவு செய்து இருக்கிறார்கள்.

எங்களுடைய கேள்வி, மத்திய அமைச்சரவையில் முடிவெடுத்த போது தமிழகத்திலே இருந்து மத்திய அமைச்சர்களாக அங்கே இருக்கிற மாண்புமிகு முரசொலி மாறன் அவர்களும், டி.ஆர்.பாலுஅவர்களும் ரங்கராஜன் குமாரமங்கலம் அவர்கள் போன்ற கேபினட் அமைச்சர்களும் என்ன செய்து கொண்டிருந்தார்கள்? அவர்கள் அப்போது அதற்கு எதிர்ப்பு தெரிவிக்காததன் காரணம் என்ன? நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள்கூடக் கூறினார்கள். முதல்வர் அவர்கள், திருச்சியிலே ஒரு பேட்டி கொடுக்கும்போது, அவர்கள் என்னென்ன பேட்டி கொடுத்தார்கள் என்ற விபரங்களையெல்லாம் கூறினார்கள். ஆனால் அந்தப் பேட்டியில் மற்றொன்றையும் கூறியிருக்கிறார்கள். முரசொலி மாறன் அவர்கள் சீனா சென்றிருக்கிறார். சீனா சென்று வந்ததற்குப் பிறகு அதைப் பற்றி அவருக்குத் தெரிவிக்கப்படும். அதைப் பற்றி பேசப்படும் என்று கூறியிருக்கிறார்கள். இங்கே பற்றியெரிந்து கொண்டிருக்கிறது. தமிழகத்தின் முதல்வர் உடனடியாகப் பிரதமருடன் தொடர்பு கொண்டு உடனடியாக அதற்கு நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும்.

முற்பகல் 11-00

தொழில் துறை அமைச்சர் எப்போது வருவது, எப்போது அவர் பிரதமரிடம் சொல்வது, ஏன் அவர்கள் பிப்ரவரி 18 ஆம் தேதி கொடுத்த tender-ஐ மாற்றி, பிப்ரவரி 15 என்று, 3 நாட்களுக்கு முன்பாகவே அதைச் செய்திருக்கிறார்கள. தமிழ்நாடு மீது, தமிழ்நாட்டு மக்கள் மீது, சேலம் உருக்காலை மீது, உண்மையிலே



2000 மார்ச் 8] [திரு. பி.ஆர். சுந்தரம்]

உங்களுக்கு அக்கறை இருந்திருக்குமானால், அப்போது 1971 ஆம் ஆண்டு நாங்கள் போராடி அந்த ஆலையைப் பெற்றுத் தந்தோம் என்ற உணர்வு உங்களுக்கு உண்மையாகவே இருந்திருக்குமானால், உடனடியாக நீங்கள் நடவடிக்கை எடுத்திருக்க முடியும். பிரதமர் வாஜ்பாய் அவர்களிடம் அடிக்கடி பேசுகிறீர்கள். எது எதற்கோ நீங்கள் உங்களுடைய சக்திகளைப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறீர்கள். அப்படியிருக்கும்போது இதற்கு ஏன் நீங்கள் வாதாட மறுத்திருக்கிறீர்கள். இதிலே மத்திய அமைச்சர், அந்த tender-லே சம்பந்தப்பட்ட ஜிண்டால் கம்பெனியுடன் சம்பந்தப்பட்டிருக்கிறார். உறுப்பினர் அவர்கள் கூறியபடி இன்றைக்குப் பத்திரிகைகளிலே செய்தி வந்திருக்கிறது. இந்தப் பத்திரிகையிலே ** என்று செய்தி வந்திருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் ஒரு பொறுப்பான உறுப்பினராக நடந்துகொள்ளவில்லையென்றால், நான் நடவடிக்கை எடுப்பேன். எந்தப் பத்திரிகையிலே செய்தி வந்தாலும் அது ஆதாரமாகுமா? நீங்கள் உட்காருங்கள். திரு. பி.ஆர். சுந்தரம் ** என்று சொன்னதைக் குறிப்பிலிருந்து எடுக்கிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் உருக்காலையைத் தனியாரிடம் கொடுப்பது குறித்து இங்கே கவன ஈர்ப்பிலே விவாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். தமிழக அரசின் சார்பில் முதலமைச்சர் அவர்கள் எடுத்த நடவடிக்கை குறித்தும் இங்கே எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். இதைத் தனியாருக்குக் கொடுப்பது தவறு என்பது உண்மையாக அ.தி.மு.க.வினுடைய கொள்கையாக இருக்குமானால், 1994 ஆம் ஆண்டு 'டான்செம்' சிமெண்ட் ஆலையைத் தனியாருக்குக் ** கொடுப்பதற்காக tender விட்டார்களே, அது நியாயமா? அது எந்த அடிப்படையில் விடப்பட்டது? அப்போது நான்தான் உயர் நீதிமன்றத்திற்குப் போய் இடைக்காலத் தடை வாங்கி அந்த ஆலையைக் காப்பாற்றி இருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆக, தனியாருக்குத் தாரை வார்ப்பதைக் கொள்கையாக வைத்துக் கொண்டிருக்கிற ஒரு கட்சி இதிலே இந்த அளவிற்கு தி.மு.க.வை எதிர்த்துப் பேசுவது வேடிக்கையாக இருக்கிறது.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[2000 மார்ச் 8

திரு. பி.ஆர். சுந்தரம்: 'டான்செம்' தொழிற்சாலை பற்றிக் கூறியிருக்கிறீர்கள். அந்தத் தொழிற்சாலையைப் பொறுத்தவரை, எந்தவிதத்திலும் காப்பாற்ற முடியாது, தனியாரிடம் வந்தால்தான் முடியும் என்ற சூழ்நிலை ஏற்பட்ட காரணத்தினால்தான், அப்போது அந்தச் சூழ்நிலை ஏற்பட்டது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: தலைவர் அவர்களே, ஒரு தொழிற்சாலையைக் காப்பாற்றுவதற்கு அதுதான் நடவடிக்கையென்றால் அதே நடவடிக்கையை எல்லா அரசாங்கங்களும் எடுக்கக் கூடும். அது வேறு விவகாரம். ஆனால் அன்று இடைக்காலத் தடை வாங்கிய காரணத்தால், அந்த ஆலை காப்பாற்றப்பட்டு, இன்றுவரையிலே அந்த ஆலை நடந்து கொண்டுதான் இருக்கிறது.

திரு. பி.ஆர். சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த இரும்புத் தொழிற்சாலையைப் பொறுத்தவரையில் கிட்டத்தட்ட இதற்கும் அந்தச் சூழ்நிலை ஏற்பட்ட காரணத்தால்தான் இப்படி ஒரு சூழ்நிலையை அரசு எடுத்து இருக்கக்கூடும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதையெல்லாம் அவர் சொல்லவில்லை. நீங்கள் உங்கள் வாதத்தை வையுங்கள்.

திரு. பி.ஆர். சுந்தரம்: இப்போது மத்தியிலே ஆளுகின்ற பாரதிய ஜனதா அரசு கிட்டத்தட்ட 5500 கோடி ரூபாயை புனரமைப்பு நிதியிலிருந்து ஒதுக்கியிருக்கிறது. மேற்கு வங்கம், துர்காபூரிலே அலாய் ஸ்டீல் கார்ப்பரேஷன், பீகாரிலேயுள்ள பொக்காரோ, ஒரிசாவிலேயுள்ள ரூர்கேலா, மத்தியப் பிரதேசத்திலேயுள்ள பிலாய் ஆகிய இந்த நான்கு தொழிற்சாலைகளுக்குக் கிட்டத்தட்ட 5500 கோடி ரூபாய் புனரமைப்பு நிதியிலிருந்து பிரதமர் அவர்கள் ஒதுக்கியிருக்கிறார்கள். அப்படியென்றால், வடக்கேயிருக்கின்ற தொழிற்சாலைகளுக்கு மட்டும் கிட்டத்தட்ட 5500 கோடி ரூபாயை ஒதுக்கிய பிரதமர், இங்கே 350 கோடி ரூபாயை மட்டும் அனுமதிக்க மறுப்பது ஏன்? இதுதான் என்னுடைய கேள்வி.

அதேபோல ஞானசேகரன் அவர்கள் சந்திரபாபு நாயுடு பற்றிக் கூறினார்கள். 3500 கோடி ரூபாய் தேவைப்படும் விசாகப்பட்டினம் தொழிற்சாலைக்கு போர்க்குரல் கொடுத்தார்கள் என்று கூறினார்கள். அவர்கள் கொடுப்பார்கள். இன்றைககுக்கூட அவர்கள் பீகாரிலே நிதிஷ்குமார் அவர்களை ஆட்சி அமைக்க அழைத்தது தவறு என்று கூறியிருக்கிறார்கள். அவர்கள் கூறுவார்கள். ஆனால் இந்த முதலமைச்சர் கூறமாட்டார். ஏன் என்று எங்களுக்குத் தெரியும். மத்தியிலே நீங்கள் ஆள வேண்டும்.



2000 மார்ச் 8] [திரு. பி.ஆர். சுந்தரம்]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சேலம் உருக் காலையைப் பற்றிப் பேசுங்கள். தேவையில்லாமல் அடுத்த மாநில அரசியலைப் பற்றி விமர்சனம் செய்தீர்களென்றால் உங்கள் பேச்சை நான் நிறுத்துவேன்.

திரு. பி.ஆர். சுந்தரம்: இதே முதலமைச்சர் 'உறவுக்குக் கை கொடுப்போம், உரிமைக்குக் குரல் கொடுப்போம்' என்று கூறிய முதலமைச்சர் இருக்கிற காரணத்தால் இதை நான் கேட்கிறேன். அங்கே 5500 கோடி ரூபாய்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் நேற்றையதினம் ஆளுநர் உரையில் பேச வேண்டியவர். என்னிடம் வந்து 'Sir' என்று ஏதோ காரணம் சொல்லி இன்றைக்குப் பேசுவதாகச் சொல்லியிருக்கிறீர்கள். ஆளுநர் உரையில் எது வேண்டுமானாலும் பேசலாம். இப்போது சேலம் உருக்காலையைப்பற்றி மட்டும் ஒழுங்காகப் பேசுங்கள். இல்லையென்றால், உங்கள் பேச்சை நான் நிறுத்துவேன்.

திரு. பி.ஆர். சுந்தரம்: நான் அதிலே ஒன்றும் தவறாகப் பேசவில்லை.

முற்பகல் 11-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தவறு, சரி என்றே போகவில்லை. சேலம் உருக்காலையைப்பற்றி மட்டும் பேசுங்கள். மற்ற அரசியல் விமர்சனங்களை இங்கே பேசக்கூடாது.

திரு. பி.ஆர். சுந்தரம்: இன்றைக்கு முதல்வர் அவர்கள் பதிலுரையில் கூறும்போதும் "இன்றைக்குக் கடிதம் எழுதியிருக்கிறேன்" என்று கூறுவார்கள். இன்றைக்குக்கூட நாடாளுமன்றத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பிரதமரைச் சந்தித்தார்கள் என்று கூறுவார்கள்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முதல்வர் என்ன கூறப் போகிறார்கள் என்பதை நீங்கள் எப்படி முன்னாலே சொல்ல முடியும்? இது என்ன, வேடிக்கையாக இருக்கிறது. நீங்கள் உங்கள் கருத்தைச் சொல்லுங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** சொந்த மாவட்டத்திலே இருக்கிற வேளாண்மைத் துறை அமைச்சர்—அவர் சொந்தத் தொகுதியில் இருக்கிறது. வேளாண்மைத் துறை அமைச்சருக்கு இதைப் பொறுத்தவரை உண்மையிலே அக்கறை இருக்குமானால் ஏற்கெனவே அவர் சந்தித்து முதல்வரிடம் மகஜர் கொடுத்திருக்கலாம், பேசியிருக்கலாம். அங்கே இருக்கிற பிரதிநிதிகள் எல்லாம் எங்களுடைய கழகப் பொதுச் செயலாளர் புரட்சித் தலைவி...

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, இதற்கு முன்னாலே வேளாண்மைத் துறை அமைச்சர் முதல்வரைச் சந்தித்தாரா இல்லையா என்பது உங்களுக்குத் தெரியுமா? முதல்வருடைய வாசற்படியில் காவல் காத்திருக்கிறார் காவல்காரர், அவரைக் கேட்டால் தெரியும்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** அவர் இரண்டு நாட்களுக்கு முன்புதான் ஒரு மகஜர் கொடுத்திருக்கிறார். இதுவும் எங்கு...

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** தலைவர் அவர்களே, ஒரு முதலமைச்சரை அவருடைய அமைச்சரவையில் இருக்கிற அமைச்சர் தினமும் இரண்டுதரம் பார்க்கிறார். அதற்கு முன்னால் எட்டு தரம் பேசியிருக்கிறார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம், நான் ஏற்கெனவே சொல்லி இருக்கிறேன். ஆளுநர் உரையிலே, உங்கள் கருத்துகள், மற்ற விமர்சனங்களைச் சொல்லலாம். நீங்கள் இப்போது சேலம் உருக்காலையைப்பற்றி மட்டும் பேசுங்கள், இல்லாவிட்டால் நான் அனுமதிக்கமாட்டேன்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** இதிலே எங்களுடைய பொதுச் செயலாளர் தலையிட்டு அவர்கள் அறிக்கை பத்திரிகையில் வந்த பிறகுதான் செய்திருக்கிறார் என்று சொல்கிறேன். ஆகவே, இதிலே...(குறுக்கீடுகள்)



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைதியாக இருங்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, அவர்களுடைய பொதுச் செயலாளரைத் தவிர வேறு எங்குமே பொதுச் செயலாளரே கிடையாதா?

**திரு. பி.ஆர். சுந்தரம்:** அப்போது புரட்சித் தலைவர் பொன்மனச் செம்மல் எம்.ஜி.ஆர். அவர்கள் மத்திய தொகுப்பிலிருந்து அரிசியைக் குறைத்த காரணத்திற்காக...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சேலம் உருக்காலையைப்பற்றி பேசுங்கள் அல்லது நான் உங்கள் பேச்சை நிறுத்த வேண்டி வரும்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** இதிலே இந்த அரசை நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன், நீங்கள் கடிதம் எழுதினால் போதாது; நாடாளுமன்ற உறுப்பினர்கள் பிரதமரைச் சந்தித்துப் பேசினால் போதாது; நீங்கள் இப்போது இந்த அவையில் ஒரு தீர்மானத்தைப் போட்டு மத்திய அரசுக்கு அனுப்ப வேண்டும். ஒரு நாடு தழுவிய போராட்டம் நடத்த வேண்டும். அதையும் நீங்கள் அறிவிப்பீர்களேயானால், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும் அதற்கு ஒத்துழைப்புத் தரும் என்ற உத்தரவாதத்தை இந்த இடத்தில் கூறுகிறேன். மத்திய அமைச்சரவை கூடியபோது அதிலே எதிர்ப்புத் தெரிவிக்காமல் இருந்ததற்காக முரசொலி மாறன்..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மத்திய அமைச்சரவைக் கூட்டத்திலே நடந்ததை வெளியிலே சொன்னால் அது ஒரு குற்றம். அமைச்சரவைக் கூட்டத்திலே நடக்கிறதை வெளியே அமைச்சர்கள், அமைச்சரவைக் கூட்டத்திலே நடக்கிறதை வெளியே சொல்லக்கூடாது. இதுகூடத் தெரியாமல் நீங்கள் எப்படி M.L.A.-வாக இருக்கிறீர்கள். இதை நீங்கள் பேசக்கூடாது. அடுத்து திரு. ஐ. கணேசன்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** பேசி முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் முறையில்லாமல் பேசுகிறீர்கள். எவ்வளவு நேரம் உங்களுக்கு அனுமதி கொடுக்கப்பட்டது?

[2000 மார்ச் 8

திரு. பி.ஆர். சுந்தரம்: கடைசியாக ஒன்றைப் பேசி முடித்துவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சீக்கிரம் பேசி முடியுங்கள்

திரு. பி.ஆர். சுந்தரம்: இதிலே சம்பந்தப்பட்ட அமைச்சர்கள் முரசொலி மாறன் அவர்கள், டி.ஆர். பாலு அவர்கள், ரங்கராஜன் குமாரமங்கலம் அவர்கள், வீரபாண்டி ஆறுமுகம் அவர்கள் ராஜினாமா செய்ய வேண்டுமென்று கூறுகிறேன்...

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, மத்திய அரசிலே அமைச்சர்களாக இருப்பவர்களை இங்கே இருக்கிற சட்டமன்ற உறுப்பினர் ராஜினாமா செய்யச் சொல்ல எந்த அதிகாரமும் கிடையாது, எந்த உரிமையும் கிடையாது. அது அவர்களுடைய கட்சி விவகாரம். ஆகவே, நாடாளுமன்ற உறுப்பினர்களை, அல்லது நாடாளுமன்றத்தின் மூலமாக அமைச்சர்களாக இருப்பவர்களை ராஜினாமா செய்யச் சொல்ல இந்த அவைக்கு என்ன அதிகாரம் இருக்கிறது, என்ன உரிமை இருக்கிறது.

திரு. பி.ஆர். சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனக்குக் கொடுக்கப்பட்ட கடமையை ஒழுங்காகச் செய்யத் தவறிய அமைச்சர்களை நீங்கள் வாபஸ் வாங்க வேண்டும்.

மாண்புமிகு பேராசிரியர் க அன்பழகன்: அமைச்சர் செய்ய வேண்டிய கடமையை சரியாக செய்தார்களா அல்லவா என்பதை மாண்புமிகு உறுப்பினர் எப்படித் தெரிந்துகொள்ள முடியும்? நாங்கள் வேண்டுமானால் தெரிந்துகொள்ள முடியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இந்த விவாதம் தேவையில்லை. அடுத்து, திரு. ஐ. கணேசன்.

முற்பகல் 11-10

திரு. ஐ. கணேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் உருக்காலை அன்று ஒரு காலத்தில் திராவிட இயக்கத்தின் கனவாக இருந்தது. திட்டம் தாருங்கள், வாய்ப்பேச்சு வேண்டாம் என்று அன்றைய உண்மையான பொறுப்புள்ள



2000 மார்ச் 8] [திரு. ஐ. கணேசன்]

காங்கிரஸ்காரர்கள் கேட்டார்கள். பேரறிஞர் அண்ணா தந்த திட்டம் சேலம் இரும்பாலை. மேலும் காவிரிப் படுகையிலே எண்ணெய் வளம் உண்டு என்று சொன்ன திட்டமும் பேரறிஞர் அண்ணாவுடைய திட்டம். இதுபோல, 20 திட்டங்களுக்கு மேலே பேரறிஞர் அண்ணா அவர்கள் தந்த திட்டத்தில், அண்ணாவின் கனவான சேலம் இரும்பாலை இன்று ஏலம் இரும்பாலையாகப் போய்விடும் ஆபத்து ஏற்பட்டிருக்கிறது.

சேலம் இரும்பாலைக்கு சுமார் 4 ஆயிரம் ஏக்கர் நிலத்தை — எங்களுடைய உறவினர்கள் 3002 பேரிடமிருந்து— கையகப் படுத்தினார்கள். 3002 பேருக்குக் குடும்ப அட்டை வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால் அதிலே ஒரு சிலருக்குத்தான் வேலை கிடைத்தது. இருந்தாலும், பரவாயில்லை, பொதுவாக நாட்டினுடைய வளத்துக்காக எங்கள் மக்கள் கொடுத்த அந்த நிலத்தினுடைய விலை, அதிகபட்ச விலையே ரூ.1,500 தான் ஒரு ஏக்கருக்கு. 3002 பேரிடமிருந்து பெற்ற நிலம் 3970 ஏக்கர். அதிகபட்ச விலை ஒரு ஏக்கருக்கு ரூ.1500 என்பதனை இம்மாமன்றத்திற்கு நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த இரும்பாலைக்குப் போக மீதியிருக்கக்கூடிய இடம், 2600 ஏக்கருக்கு மேலே இன்னும் சும்மா இருக்கிறது. இது இப்படி இருக்கையிலே, இந்தத் திட்டம் 1967-லிலிருந்து 1969 வரை மத்திய அரசால், காங்கிரசால் மறுக்கப்பட்டபோதெல்லாம் நம்முடைய முதல்வர் அவர்கள் பேரறிஞர் அண்ணாவுக்குப் பிறகு மத்திய அரசிடம் எத்தனை முறை வாதாடியிருக்கிறார்கள் என்பதனை நம்முடைய முதல்வர் 1990 ஆகஸ்ட் 21-லே பேசிய குறிப்பினைப் பார்க்கும்போது தெரிந்து கொள்ள முடியும். இங்கு இருக்கக்கூடிய, எதிர்க்கட்சியாக இருந்து செயல்பட மறந்து, எதிரிக்கட்சியாகச் செயல்படுபவர்கள், இந்தக் குறிப்பினை பார்க்க வேண்டும். நம்முடைய முதல்வர் கலைஞர் பெருமுயற்சியெடுத்து 16-9-1970 லே அன்னை இந்திராவை இங்கே வரவழைத்து, இங்கே வரவழைத்தது மட்டுமல்ல அவர்களுடைய திருக்கரத்தால் அடிக்கல் நாட்டப்பட்டது. அப்படி நாட்டப்பட்ட இரும்பாலை 13-6-1972 அன்று மோகன் குமாரமங்கலத்தால் 177 கோடி ரூபாய்க்கு உற்பத்தியை முதன் முதலாகத் தொடங்கியது. அதேபோல, 1989-ல் 69.37 கோடி ரூபாய் செலவில் இரண்டாவது விரிவாக்கம் தொடங்கப்பட்டது. 1995-ல் நான்காவது விரிவாக்கம் வரை அந்த இரும்பாலை உருட்டாலையாக செயல்பட்டதிலிருந்து பல

கோடி ரூபாய் மத்திய அரசுக்கு லாபத்தை ஈட்டிக் கொடுத்து, லாபகரமாக 1994 வரை நடந்தது. 1995-லே 770 கோடி ரூபாய்க்கு நான்காவது முறையாக அந்த உருக்காலை விரிவாக்கப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரும் திரும்பத் திரும்ப அதே விவரங்களைச் சொன்னால் எப்படி? நீங்கள் சுருக்கமாகப் பேசுங்கள்.

*முற்பகல் 11-15*

**திரு. ஐ. கணேசன்:** விரிவாக்கத்திற்கான அந்த 770 கோடி ரூபாயை ரிசர்வ் வங்கியிலிருந்து கடனாகப் பெற்று அந்த விரிவாக்கத்தைத் தொட்ங்கியதன் காரணமாக ஆண்டு ஒன்றுக்குப் பல கோடி ரூபாய் கடன் அந்த இரும்பாலைக்கு ஏற்பட்டது. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையவரை அந்த இரும்பாலையினுடைய மொத்த கடன் சுமையே 360 கோடி ரூபாய்தான். இது ஒன்றும் பெரிய தொகை அல்ல. மத்திய அர்சு, வடபுலங்களிலே இருக்கக்கூடிய இரும்பாலைக்கு கிட்டத்தட்ட 5500 கோடி ரூபாய் கடன் சுமையை ஏற்றுக்கொண்டுள்ளது. ஆனால், நம்முடைய சேலம் இரும்பாலைக்கு ஒரு பைசாகூட அவர்கள் கொடுக்கத் தவறியது ஏன் என்பதனை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் நிச்சயமாகக் கேட்பார், கேட்க வேண்டும்.

பொதுத் துறை நிறுவனமான சேலம் இரும்பாலையை தனியார்மயமாக்க மத்திய அரசு முடிவு செய்தது. நம்முடைய மாநில அரசு மூலமாக, இந்த அவையிலே பேசிய அருமை அண்ணன் திரு. பழனிசாமி அவர்கள் கூறியதுபோல, ஒரு தீர்மானத்தையே கொண்டுவரவேண்டும். இது எடப்பாடி தொகுதியிலே, கொங்கனாபுரம் பகுதியிலே இருந்து வீரபாண்டி தொகுதி வரை முழுவதுமாக இருக்கக்கூடிய பகுதி, எங்களுடைய பகுதி. எங்களுடைய மக்கள் பொதுத் துறைக்காக 1500 ரூபாய்க்கு நிலத்தைக் கொடுத்தார்கள். தனியார் அந்த மில்லை வாங்கினார்களேயானால், அந்த நிலம் மட்டும் 2800 ஏக்கர், அதை விற்றார்களேயானால், பல ஆயிரக்கணக்கான ரூபாய் அவர்களுக்கு இலாபம் கிட்டும். அதனுடைய நட்டம் பூராவும் எங்களுடைய மக்களைச் சேரும்.



நம்முடைய திராவிட இயக்கத்தினுடைய நீண்டநாள் கனவு, பேரறிஞர் அண்ணாவின் கனவு, நம்முடைய முத்தமிழ்க் காவலர் டாக்டர் கலைஞர் அவர்கள் பெரும் முயற்சியிலே கொண்டுவரப்பட்ட அந்த சேலம் இரும்பாலையை எந்தக் காரணத்தைக்கொண்டும் தனியாருக்கு விடுவதை எங்களுடைய பாட்டாளி மக்கள் கட்சி வன்மையாகக் கண்டிக்கிறது. இதற்காக எந்தப் போராட்டத்தை நம்முடைய முதல்வர் கலைஞர் அறிவித்தாலும், அந்தப் போராட்டத்திலே எங்களுடைய இயக்கம் நிச்சயமாக இறங்கிச் செயல்படும். இது சாதாரண வேடிக்கையான ஒரு விஷயமல்ல. தமிழர்களுடைய மானப் பிரச்சினை. இந்தப் பிரச்சினையிலே முதல்வர் கலைஞர் அவர்கள் முழுமனதோடு இறங்கி, எங்களுடைய மாவட்டத்தில் இருக்கும் அந்த இரும்பாலையை ம்மத்திய அரசு மீண்டும் பொது நிறுவனமாக அறிவிக்க வேண்டும். இதிலே கிட்டத்தட்ட 2180 பேர் வேலை இழக்கக்கூடிய அபாயம் இருக்கிறது. அவர்களுடைய பெண்டு பிள்ளைகள் எல்லாம் நடு ரோட்டிலே நின்று பரிவு செய்யக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. ஆகையினால், தமிழக அரசை நம்முடைய அண்ணா அவர்கள் கண்ட பல கனவுகளை நிறைவேற்றிய அருமைத் தம்பி முதல்வர் கலைஞர் அவர்களை, சேலம் இரும்பாலையைக் காப்பாற்றுங்கள், தமிழ் மக்களின் மானத்தை இரும்பின் உறுதியோடு காக்க வேண்டுமென்று கேட்டு இந்தக் கவன ஈர்ப்பு அறிவிப்பில் வாய்ப்பு அளித்த சபை நாயகருக்கு நன்றி சொல்லி விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ம. அப்துல் லத்தீப்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினை தமிழ்நாட்டுக்கே ஒரு பொதுப் பிரச்சினை என்று நான் கருதுகின்றேன். அரசியலுக்கு அப்பாற்பட்டு நாம் எல்லோரும் ஒருமித்த கருத்தோடு அணுகவேண்டிய ஒரு பிரச்சினை என்பதை நாம் உணர்ந்திடல் வேண்டும். இங்கு பல்வேறு விளக்கங்கள், விவரங்கள் மாண்புமிகு உறுப்பினர்களால் தரப்பட்டன. இங்கு பேசிய உறுப்பினர்கள் எல்லாம் தமிழ்நாட்டினுடைய ஒட்டுமொத்தமான உணர்வுகளைப் பிரதிபலித்து இருக்கிறார்கள் என்றுதான் நான் கருதுகிறேன். பேசுகின்ற முறை வேறுபட்டு இருந்தாலும், பேசிய நோக்கம் ஒன்று என்பதை நாம் அனைவரும் ஏற்றுக்கொண்டாக வேண்டும். இது

மத்தியப் பட்டியலில் வருகிறதா, அல்லது மாநிலப் பட்டியலில் வருகிறதா, அல்லது Federal List or Concurrent List என்று சொல்லப்படுகிற பொதுப் பட்டியலில் வருகிறதா என்ற விவரங்களுக்கு எல்லாம் நாம் செல்லவில்லை. நம்முடைய நாடு Federal set up-பிலே பணியாற்றிக் கொண்டிருக்கிறது. ஒரு குறிப்பிட்ட இடத்தில் இருக்கக்கூடிய, அந்த மாநிலத்தினுடைய பொருளாதாரத்திற்கு மிக முக்கியமான இடத்தை வகித்துக்கொண்டிருக்கிற ஒரு தொழிற்சாலை தொடர்பாக முடிவு எடுக்கக்கூடிய பொறுப்பும் கடமையும் உரிமையும் மத்திய அரசாங்கத்துக்கே இருந்தாலும்கூட, மத்திய அரசாங்கம்-நான் இன்றைக்கு இருப்பதை மட்டும் சொல்லவில்லை. மத்தியிலே இருக்கிற அரசுகள் - சமஷ்டி கலாச்சாரத்தை இதுவரையில் வளர்த்துக்கொள்ளவில்லையோ என்றுதான் நான் கருதுகிறேன். இதிலே ஒரு முடிவு எடுக்கும்போது, மிகப் பெரிய முயற்சிகளுக்குப் பிறகு, மிகப் பெரிய நிதி ஆதாரத்தைத் திரட்டி 4000 ஏக்கர் நம்முடைய மாநிலத்தின் நிலப் பரப்பிலே இருந்து ஒதுக்கீடு செய்து, இந்தமாநிலத்தினுடைய ஏறக்குறைய இரண்டாயிரம் தொழிலாளர்கள் இதிலே ஈடுபட்டு தொழிலை நடத்தி, வாழ்விற்கு அடிப்படையாக அமைத்துக்கொண்டு இருக்கிற ஒரு தொழிற்சாலையை மூடும்போது, அந்த மாநிலம் எவ்வளவு தூரம் பாதிக்கப்படுகிறது என்பதை மத்திய அரசாங்கம் கருத்தில்கொள்ள வேண்டும்.

முற்பகல் 11-20

எனக்கிருக்கிற கேள்வியெல்லாம் இப்படியொரு முக்கியமான முடிவு எடுக்கும்போது மத்திய அரசு — இதை மத்திய அமைச்சரவையிலே வைத்து முடிவு செய்திருக்கிறார்கள் என்று சொல்லுகிறார்கள். அப்படித்தான் செய்தியும் வந்திருக்கிறது. அமைச்சரவையில் வைத்து ஒரு முடிவு செய்திருக்கும்போது அரசு ரீதியாக, தமிழ்நாடு அரசாங்கத்தை அணுகி, "இன்னின்ன காரணங்களுக்காக இந்தத் தொழிற்சாலையைத் தனியாருக்குக் கொடுக்க வேண்டுமென்று நாங்கள் கருதுகிறோம், இதுகுறித்து தமிழ் மாநில அரசாங்கத்தினுடைய கருத்து என்ன? இதற்கு ஏதாவது மாற்றுத் திட்டங்கள் இருக்கின்றனவா? தொழிற்சாலை நடக்க வேண்டும், நஷ்டம் தடுக்கப்பட வேண்டும், தொழிலாளர்களுடைய வாழ்க்கைச் சாதனம், அவர்களுக்குக் கிடைக்கக்கூடிய வேலை உறுதி செய்யப்பட வேண்டும். அதே நேரத்தில் உங்களுடைய மாநிலத்தினுடைய பொருளாதாரம் காப்பாற்றப்பட வேண்டும். இந்த நிலை உருவாகி இருக்கிற காரணத்தால் மத்திய அரசாங்கம் இதனைத் தனியாருக்கு விடவேண்டுமென்று கருதுகிறது, உங்களுடைய பதில் என்ன? விளக்கம் என்ன? ஏன் இதைத் தனியாருக்கு விடக்கூடாது" "என்று அரசுரீதியாக மாநில அரசிடத்திலே அவர்கள் கலந்து ஏதாவது ஆலோசனை செய்தார்களா? அப்படிச் செய்யாவிட்டால் நம்முடைய நாட்டில் சமஷ்டி கலாச்சாரத்தையே இவர்கள் இதுவரையில் வளர்க்கவில்லை என்ற நிலைக்குத்தான் ஆளாக வேண்டும். மாநில சுயாட்சி, மத்தியிலே கூட்டாட்சி என்றெல்லாம் பேரறிஞர் அண்ணா அவர்களால் உணர்த்தப்பட்டு, அதிலே அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டிருக்கிற நாம், ஒரு மாநிலத்தைக் கலக்காமல், இவ்வளவு பெரிய பாரதூரமான விளைவினை ஏற்படுத்தக்கூடிய ஒரு முடிவை எடுத்து, அமைச்சரவையிலும் முடிவெடுத்துவிட்டோம் என்ற செய்தியை அவர்கள் வெளிப்படுத்தி மாநில அர்சாங்கத்தினுடைய கருத்து என்ன என்பதையும் அவர்கள் கேட்கவில்லை என்று சொன்னால், நான் மிகுந்த வேதனை அடைகிறேன். இதுகுறித்து நான் அரசியல் பேச விரும்பவில்லை.



தயவு செய்து இந்த அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்வது, நாம் அனைவரும் ஒன்றுபட்டிருக்கிறோம். அத்தகைய எண்ணத்தை நாம் உருவாக்க வேண்டும். அப்படி உருவாக்க வேண்டுமானால், முதலமைச்சர் அவர்களே ஒரு முடிவெடுத்து இந்த அவையில் ஒரு தீர்மானமே நிறைவேற்றி, மாற்றுக் கருத்து இல்லை, நாமெல்லாம் இதிலே ஒன்றுபட்டிருக்கிறோம் என்று டெல்லியிலே இருப்பவர் களுக்கும் தெரிவிக்கும் வகையில் நாம் - - அது மட்டுமல்ல, நம்முடைய சமஷ்டி தத்துவத்திற்கே ஆக்கமும் ஊக்கமும் சேர்ந்திடும் வகையில் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றுவது மிகச் சிறப்பாக இருக்கும், பயனுடையதாக இருக்கும். அதற்கு முதலமைச்சர் அவர்களே தலைமையேற்று, இந்தக் கருத்துக்களையெல்லாம் அவர் பிரதிபலிக்கும் வகையில், முதலமைச்சர் அவர்களே ஒரு தீர்மானத்தை முன்மொழிய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே பல்வேறு பிரச்சினைகள் எழுப்பப்பட்டன. அதிலே எனக்குக்கூட சில கருத்துகள் இருக்கின்றன. மத்திய அரசாங்கம் எடுக்கின்ற, அமைச்சரவையில் விவாதம் செய்யப்படுகின்ற

விஷயங்கள் வெளியே சொல்லப்படக்கூடாது என்று இங்கே சொல்லப்பட்ட கருத்தின் வாயிலாக, அங்கே சில கருத்துகள், எதிர்ப்புகள் தெரிவிக்கப்பட்டன என்பதை ஏற்றுக்கொண்டுதான் இந்தக் கருத்து இங்கே வெளியிடப்பட்டிருக்கிறது. அங்கே எதிர்ப்பு சொல்லியிருந்தாலும், அமைச்சரவையிலே சொல்லப்பட்ட கருத்து, அதுவும் நமது அமைச்சர்கள் சொன்ன கருத்தை வெளியிலே வந்து சொல்லக்கூடாது என்பது ஒரு மரபு. அதை நானும் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் அதே நேரத்தில் அந்த அமைச்சரவையில் இருக்கிறவர்கள் அந்தக் கருத்தைச் சொல்ல முடியாவிட்டாலும், அவர்கள் சார்ந்துள்ள கட்சி, அந்தக் கட்சியை உருவாக்கிய பேரறிஞர் அண்ணா, அண்ணா மட்டுமல்ல இன்றைக்கு இருக்கிற நம்முடைய கலைஞர், கலைஞருடைய கட்சி, இவர்களெல்லாம் என்ன கருத்துடையவர்களாக இருக்கிறார்களோ அந்தக் கருத்தை வெளிப்படையாக, தங்களுடைய நிலை இதுதான், இதைத் தமிழகம் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளாது என்று கூற வேண்டும். வடக்கு வாழ்கிறது, தெற்கு தேய்கிறது என்றெல்லாம் அண்ணா அவர்கள் பேசி நம்முடைய திராவிட இயக்கத் தலைவர்கள் மட்டுமல்ல, எல்லோரும் பேசி, தெற்கும் வாழ வேண்டுமென்று இந்த நாட்டில் உருவாக்கப்பட்ட மிக முக்கியமான தொழிற்சாலைகளெல்லாம் இப்படித் தனியாருக்கு தாரை வார்க்கக்கூடிய ஒரு நிலைக்கு மத்திய அரசாங்கம் நம்மையும் அதற்கு வழிவகுத்திட ஆளாக்கிக் கொள்ளாமல் தயவுசெய்து நம்முடைய கொள்கை என்ன, நம்முடைய அணுகுமுறை என்ன, இது எப்படித் தடுத்து நிறுத்தப்பட வேண்டுமென்பதிலே நாம் அனைவரும் ஒன்றுபட்டு, முனைப்போடு இருக்கவேண்டும். அதற்காக இந்த அவையிலே முதலமைச்சர் அவர்களே முன்மொழிந்து ஒரு தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டும். ஏனென்றால் இது தமிழகப் பிரச்சினை. எந்தக் கட்சிக்கும் உரிய பிரச்சினை அல்ல. தமிழகம் முழுவதற்கும் உரிய பிரச்சினை. எனவே, இந்தப் பிரச்சினையில் தமிழ்நாடு சட்டமன்றம் தன்னுடைய கருத்தை முழுமையாக வெளிப்படுத்த வேண்டும். எந்த அளவுக்கு வந்திருக்கிறது என்று சொன்னால், ஓர் அமைச்சர் அவர்களே சிலரை அழைத்துக்கொண்டு முதலமைச்சரைப் பார்க்கக்கூடிய நிலைக்கு இன்றைக்கு தமிழகத்திலே இந்தப் பிரச்சினை மிக முக்கியமான பிரச்சினையாகக் கருதப்படுகிறது. எனவே, அமைச்சரவையில் இருக்கிற ஒருவரே இது கூடாது என்று வெளிப்படையாக ஒரு தூதுக்குழுவை அழைத்துச் சென்று பார்த்திருக்கிறார்கள் என்றால் அது என்னைப் பொறுத்தவரையிலே அமைச்சர் ஒருவர் சொன்னாலும் ஒன்றுதான், அமைச்சரவையில் எல்லோரும் சேர்ந்து சொன்னாலும் ஒன்றுதான். எனவே, அமைச்சரவையில் இருப்பவர்களே இதிலே கலந்துகொண்டு தங்களுடைய கருத்துகளைச் சொல்லியிருக்கின்ற காரணத்தால், நான் மீண்டும் மீண்டும் வலியுறுத்துகிறேன். இந்தச் சபையில் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டு மத்திய அரசுக்கு அனுப்பப்பட வேண்டும்.



முற்பகல் 11-25

அதே நேரத்தில் சமஷ்டி கலாச்சாரத்தை காலில் போட்டு மிதிக்கின்ற வகையில் - முதலமைச்சர் அவர்கள் ஏதாவது விவரம் தெரிந்தால் அவர் சொல்லுவார். மாநில அரசைக் கலக்காமல் இந்தப் பிரச்சினையை மத்திய அரசு அமைச்சரவையில் வைத்து ஒரு முடிவு எடுத்திருந்தால் அதை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன். எவ்வளவுதான் உங்களுடைய பொதுப் பட்டியலில் இருந்தாலும் அல்லது உங்களுடைய சமஷ்டி பட்டியலில் இருந்திருந்தாலும், மாநில அரசைக் கலக்காமல் இப்பேர்ப்பட்ட ஒரு முடிவை மத்திய அமைச்சரவை எடுத்து இருக்குமேயானால், அது வன்மையாகக் கண்டிக்கக்கூடியது. இருந்தாலும் இந்தப் பிரச்சினையை நான் ஆழமாகவும், அழுத்தமாகவும் சொல்லாமல் இப்பொழுது தேவையானது இந்த அவையினுடைய தீர்மானம் என்பதை மட்டும் வலியுறுத்தி என்னுடைய வார்த்தைகளை நிறைவு செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் உருக்காலை மத்திய அரசு மூலமாக நடத்தப்படுகின்ற ஒரு மிகப் பெரிய பொதுத் துறை நிறுவனம். இங்கு எனக்கு முன்னால் பேசிய அனைவரும் சுட்டிக்காட்டியது போல இப்போது முதல்வராக இருக்கின்ற முதலமைச்சர்தான் அப்போது 1971-லே இந்த ஆலை வருவதற்கு மூலகாரணமாக இருந்தவர் என்பதனை எல்லாக் கட்சியினரும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். எனவே, இந்த ஆலை வருவதற்கு காரணகர்த்தாவாக இருந்த முதல்வர், நிச்சயமாக இந்த ஆலை ஒரு தனியாருக்குத் தாரை

வார்த்துக் கொடுக்கின்ற மத்திய அரசின் முடிவுக்கு ஒப்புக்கொள்ள மாட்டார், அதற்காக நிச்சயமாக வாதிடுவார் என்பதிலே எள்ளளவும் ஐயப்பாடு இல்லை.

சேலம் மாவட்டத்தைப் பொறுத்தவரையிலே அனைத்துக் கட்சிகளைச் சார்ந்த பிரதிநிதிகளும் முதல்வர் அவர்களைச் சந்தித்து இதை நீங்கள் தடுத்து நிறுத்த வேண்டும் என்கின்ற கோரிக்கையை முன்வைத்து இருக்கிறார்கள். அதற்கு முதல்வர் அவர்களும் ஆவன செய்வதாக ஏற்றுக்கொண்டு இருக்கிறார்கள். நமது திராவிட முன்னேற்றக் கழகம் மற்றும் தோழமைக் கட்சிகளைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள்கூட பிரதமரைச் சந்தித்து இதை நிச்சயமாக தனியாருக்குக் கொடுக்கக்கூடாது என்கின்ற வாதத்தை எடுத்து வைத்திருக்கிறார்கள். அதேபோல, இது ஒரு மாவட்டத்திற்கு மட்டும் சொந்தமல்ல, ஓர் இயக்கத்திற்கு மட்டும் சொந்தமல்ல. தமிழகத்தினுடைய ஒட்டுமொத்தமான பிரச்சினை என்கின்ற காரணத்தால்தான் இன்றைக்கு இதைச் சட்டமன்றத்திலேயும் நாம் வாதிட்டுக்கொண்டிருக்கிறோம். இன்றைக்கு இந்த நிலைகளை யெல்லாம் பார்க்கின்றபோது நாம் சுதந்திரம் பெறுவதற்காக, இந்த நாடு விடுதலை பெறுவதற்காகப் போராடிய போராட்டங்களெல்லாம் வீணாகி விடுமோ என்கின்ற எண்ணம்கூட இன்றைக்கு நமக்குத் தோன்றுகிறது. இந்த நாடு சுதந்திரம் பெற வேண்டும். அதன் மூலம் இந்த நாட்டினுடைய பொருளாதாரம், இந்த நாட்டு மக்களாலேயே நிறைவு செய்யப்படவேண்டுமென்ற நோக்கத்தோடுதான் அதை நாம் ஏற்றுக்கொண்டிருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சுருக்கமாகப் பேசி முடியுங்கள்.

**திரு. லா. சந்தானம்:** அதேபோல, இன்றைக்கு காங்கிர சினுடைய புதிய பொருளாதாரக் கொள்கை மூலமாக பன்னாட்டு நிறுவனங்களையெல்லாம் வரவேற்கின்ற நேரத்தில்கூட எங்களது இயக்கமும், இடதுசாரி இயக்கமும் இந்த நிலைகளையெல்லாம் அன்றைக்கு மறுத்து வாதாடி இருக்கின்றன.

முற்பகல் 11-30

ஒரு கிழக்கிந்தியக் கம்பெனி மூலமாக இந்திய நாடு 200 ஆண்டு காலம் அடிமைப்பட்டிருந்தது. அன்றைக்குப் பல்வேறு



வெளிநாட்டு கம்பெனிகளின் மூலமாக இந்தியாவினுடைய பொருளாதாரம் என்ன நிலைக்குக் கொண்டு செல்லப் பட்டிருக்கிறது என்பதை எல்லாம் உணர்ந்து, தனியாருக்குக் கொடுக்கின்ற நிலையை மறுக்க வேண்டுமென்கின்ற முடிவோடு எங்களது இயக்கம் என்றைக்கும் வாதாடி வந்திருக்கிறது. இன்றைக்கு, சேலம் உருக்காலையிலே, இங்கே சுட்டிக்காட்டியது போல, 360 கோடி ரூபாய் அளவுக்கு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. அதைத் தனியாருக்குக் கொடுத்தால் அந்தத் தனியார்கள் இலாபம் ஈட்ட முடியும் என்கின்ற காரணத்தால்தான் அதை வாங்குகின்ற எண்ணத்திற்கு வருகிறார்கள். அப்படி தனியாரால் இலாபம் ஈட்டக் கூடிய ஓர் ஆலையை ஏன் அரசு நடத்தி இலாபம் ஈட்ட முடியாது என்பதுதான் எங்களுடைய இயக்கத்தினுடைய கேள்வி. இரண்டு நாட்களுக்கு முன்னால் நான் ஒரு பத்திரிகை வாயிலாகப் பார்த்தேன். சீன நாட்டிலேகூட சில பொதுத் துறை நிறுவனங்கள் நஷ்டத்தில் இயங்கிக் கொண்டிருப்பது குறித்து அந்த நாட்டினுடைய பிரதமரிடத்திலே கேட்கின்றபோது, இன்னும் இரண்டு ஆண்டுகளுக்குள்ளாக, நிச்சயமாக நஷ்டத்தில் ஓடுகின்ற அந்தப் பொதுத் துறை நிறுவனங்களை எல்லாம் இலாபத்தில் ஓட்டிக் காட்டுவேன் என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படி இங்கு நஷ்டத்தில் இயங்குகின்ற ஆலையை நாங்கள் இலாபத்தில் ஓட்டிக் காட்டுவோம், தனியாருக்குக் கிடைக்கக்கூடிய இலாபம் ஏன் அரசுக்குக் கிடைக்காது? இதற்கு என்ன காரணம்? இதில் இருக்கின்ற நிர்வாகச் சீர்கேடுகள் மூலமாகத்தான் அரசுத் துறை நிறுவனங்கள் எல்லாம் நலிந்து கொண்டிருக்கின்றன என்பதை எடுத்துச் சொல்லி, தமிழகத்தினுடைய முதலமைச்சராக இருக்கின்றவர், இன்றைக்கு தேசிய முன்னணியிலே மிக மூத்த தலைவராக இருக்கின்றவர், நமது தலைவர் அவர்கள் சுட்டிக்காட்டியதைப்போல, தேசிய கூட்டணியினுடைய மூத்த தலைவர் பொறுப்பிலே இருக்கின்ற இந்த மாநில அரசினுடைய கருத்தைக்கூட கேட்காது, அவர் கட்சி அங்கம் வகிக்கும் மத்திய அமைச்சரவை ஒரு முடிவை எடுத்திருக்கிறது என்று சொன்னால் அது உண்மையிலேயே வருந்தத்தக்க ஒன்று. எனவே, இதில் நம்முடைய முதல்வர் அவர்கள் மிகக் கவனமாக இருந்து, இவர்கள் எல்லாம் கூறியதைப் போல ஒட்டுமொத்தமாக தமிழ் மக்களுடைய எண்ணங்களைப் பிரதிபலிப்பதைப் போல, சேலம்

உருக்காலையை, நிச்சயமாகத் தனியாருக்குக் கொடுக்கின்ற நிலையை எடுக்கக் கூடாது என்பதை இந்த அவையின் மூலமாக ஒரு தீர்மானமாகக்கூட நிறைவேற்றி அனுப்பலாம் என்கின்ற என்னுடைய கருத்தைச் சொல்லி அமைகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய மிக முக்கியமானதொரு பிரச்சினையை நாம் விவாதித்துக் கொண்டிருக்கிறோம். 1970 ஆம் வருடத்திற்கு முன்னால் தமிழகத்திலே இருக்கின்ற மக்கள் பொதுவாகவும், சேலம் மாவட்டத்திலே இருக்கின்ற மக்கள் பிரத்தியேகமாகவும் ஒரு முக்கியமான பொதுத் துறை ஸ்தாபனம், தொழிற்சாலை இங்கே வர வேண்டும் என்ற எண்ணத்திலே பல நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டதன் காரணமாக, சேலம் மாவட்ட மக்கள் பல தியாகங்களைச் செய்ததன் காரணமாக இந்த உருக்காலை வந்தது. இந்த உருக்காலை உருவானதற்கு ஒரு முக்கியமான பாத்திரமாக திராவிட முன்னேற்றக் கழகக் கட்சியும், அதனுடைய தலைவராகவும் நம்முடைய முதல்வராகவும் இருக்கின்ற முதல்வர், ஆட்சிப் பொறுப்பிலே இருக்கின்ற இந்த நேரத்தில், அதுவும் திராவிட முன்னேற்றக் கழகக் கட்சி மத்தியிலே ஆட்சிப் பொறுப்பிலே இருந்து கொண்டிருக்கின்ற நேரத்தில் இந்த ஆலையைத் தனியாருக்கு விடுவதற்கு எடுக்கப்பட்டிருக்கிற முடிவு மிகவும் துரதிருஷ்டவசமானது என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்த நடவடிக்கையைத் தடுத்து நிறுத்த வேண்டிய பொறுப்பு தமிழகத்திலே இருக்கின்ற அனைத்து மக்களுடைய பொறுப்பு என்ற முறையிலேதான் இந்தப் பிரச்சினையை நாம் பார்க்கிறோம். 1100 கோடி ரூபாய் முதலீட்டிலே உருவாக்கப்பட்ட இந்த ஆலையிலே மத்திய அரசினுடைய பங்கு என்பது 100 கோடி ரூபாய் மட்டும்தான் என்று நமக்கு விவரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அப்படி மத்திய அரசு மிகக் சுருங்கிய மூலதனத்தை மட்டும் போட்டிருக்கின்ற இந்த ஆலையைத் தனியாருக்குக் கொடுப்பதற்காக அவர்கள் பிப்ரவரி மாதம் 15 ஆம் தேதி ஒரு அறிவிக்கையை வெளியிட்டிருக்கிறார்கள்.



முற்பகல் 11-35

5,500 கோடி ரூபாய், பொதுத் துறையிலே இருக்கிற Steel Industry-யைப் பாதுகாப்பதற்கு வழங்கப்பட்டிருக்கிற நேரத்தில், சேலத்திலே இருக்கிற இந்த உருக்காலைக்கு ஒரு பைசாகூட ஒதுக்கப்படவில்லை என்பது மிகவும் துரதிருஷ்டவசமானது, கண்டிக்கத்தக்கது. இன்று, தமிழகத்திலே இருக்கிற மக்களை எவ்வளவு உதாசீனப்படுத்துகின்ற போக்கினை இந்த மத்திய அரசு கொண்டிருக்கிறது என்பதற்கு இது ஒரு தெள்ளத் தெளிவான எடுத்துக்காட்டு.

இன்னும், மத்திய அரசினுடைய கொள்கை காரணமாக, புதிய colony ஆக ஏகாதிபத்தியத்தினுடைய colony-யாக, இந்திய நாட்டை மாற்றுவதற்கு உள்ள ஒரு பொருளாதாரக் கொள்கையை இன்றைக்கு அவர்கள் கடைப்பிடிப்பது, இந்திய நாட்டிலே, அதுவும் இன்று தமிழகத்திலேகூட பல பொதுத் துறை ஸ்தாபனங்களை அழித்துக் கொண்டிருக்கின்ற பின்னணியிலே, சேலத்திலே இருக்கிற Steel Factory. தமிழகத்தினுடைய ஒரு prestigious industry என்ற முறையிலே கருதப்படுகிற இந்த ஆலையை, தமிழகத்திலே இருக்கிற மக்கள் பல ஆண்டு காலம் எடுத்துக்கொண்ட முயற்சியின் காரணமாக உருவாக்கப்பட்ட இந்த ஆலையை, நிச்சயமாக தனியாருக்குத் தாரை வார்ப்பதற்கு நாம் அனுமதிக்கக் கூடாது.

எனக்குத் தெரிந்த அளவிலே தொழிற்சங்கப் பிரதிநிதிகள் முதல்வர் அவர்களைச் சந்தித்து, இந்த ஆலையை நடத்துவதற்கு மூன்று proposals கொடுத்திருப்பதாகத் தெரிகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அவற்றையும் பரிசீலித்து மத்திய அரசுக்கு எடுத்து வைக்க வேண்டும் என்றும், இந்த ஆலையைத் தனியாருக்குக் கொடுப்பதற்கு எந்தக் காரணத்தைக் கொண்டும் நாம் அனுமதிக்கக் கூடாது என்பதையும் இந்த நேரத்திலே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே வலியுறுத்தி, தனியார் துறையை ஊக்கப்படுத்தக் கூடிய முறையிலான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, பன்னாட்டு நிறுவனங்களை வளர வைப்பதற்காக மத்திய அரசு எடுத்துக் கொண்டிருக்கிற நடவடிக்கைகளுடைய, கொள்கைகளுடைய விளைவாகத்தான் இன்று சேலம் Steel ஆலைக்கு இப்படிப்பட்ட ஒரு நிலை ஏற்பட்டிருக்கின்றது. ஆகவே, தமிழகத்திலே இருக்கிற அனைத்து மக்களுடைய உணர்வுகளைப் பிரதிபலிக்கக்கூடிய

முறையிலேயும், மத்திய அரசினுடைய இந்த நடவடிக்கையைக் கண்டிக்கின்ற முறையிலேயும், மத்திய அரசு இந்த ஆலையைத் தனியாருக்கு விட்டுவிடுவதைத் தவிர்த்து, இந்த ஆலையைப் பொதுத் துறையிலே நடத்த வேண்டும் என்று வலியுறுத்தக்கூடிய முறையிலே ஒரு தீர்மானத்தை இங்கே நிறைவேற்ற வேண்டுமென்று வலியுறுத்தி அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்.

**திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுத் துறை நிறுவனத்தின் சார்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கிற சேலம் உருக்காலை குறித்த இந்த விவாதத்திலே தமிழ் மாநில தேசிய லீக்கின் சார்பிலே இங்கே கலந்துகொண்டு என்னுடைய கருத்துகளை எடுத்து வைப்பதற்கு முன்வருகின்றேன். தமிழகத்தினுடைய பெருந்தகை பேரறிஞர் அண்ணா அவர்களாலும், முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களாலும், அன்றைய அமைச்சர் முரசொலி மாறன் அவர்களாலும், தமிழகத்திலே சேலம் உருக்காலையைக் கொண்டுவருவதற்காகப் பாடுபட்ட, மறைந்துவிட்ட இந்திரா காந்தி, ராஜீவ் காந்தி ஆகியோராலும் மோகன் குமாரமங்கலம் அவர்களாலும் 1971-ல் கொண்டுவரப்பட்ட இந்த உருக்காலையைத் தனியாருக்கு விற்பனை செய்வதற்காக இங்கே ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்றால், அதை ஆட்சேப்பிணை செய்வதற்காக நாங்கள் இங்கே கருத்துகளை எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றோம்.

4,000 ஏக்கர் பரப்பளவிலே, 2,000 கோடி ரூபாய் மூலதனத்திலே, 2,100 தொழிலாளர்களைக் கொண்டு 1994 ஆம் ஆண்டு வரை சிறப்பாக இலாபத்திலே இயங்கி வந்த இந்தத் தொழிற்சாலை இப்போது நஷ்டத்திற்குச் சென்றுவிட்டது என்றால் நிர்வாகச் சீர்கேடுகள்தான் இதற்குக் காரணமாக இருக்க முடியும் என்பதை உணர்ந்து, 15-2-2000-லே பிறப்பிக்கப்பட்ட அந்த ஆட்சேபணையை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் திருச்சியிலே இருக்கின்ற நேரத்திலேயே அங்கே கருத்தினை எடுத்து வைத்திருக்கின்றார்கள். மாண்புமிகு மத்திய அமைச்சராக இருக்கின்ற முரசொலி மாறன் அவர்களும் சீனா சென்று வந்த பின்பு



இதை மத்திய அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு சென்றிருக்கிறார்கள். ஆகவே, தேசிய முன்னணியிலே இடம் பெற்றிருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகம், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம், பாட்டாளி மக்கள் கட்சி, எம்.ஜி.ஆர். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், இதைப்போன்று நம்முடைய நாடாளுமன்ற உறுப்பினர்களும், அமைச்சர் பெருமக்களும் அங்கே அங்கம் வகித்து தங்களுடைய குரலை தமிழகத்தினுடைய மக்களுக்காக எடுத்து வைத்திருக்கின்றார்கள். அதன் சார்பாக இன்றையதினம் 360 கோடி ரூபாய் கடனிலே இந்தச் சேலம் உருட்டாலை நஷ்டத்திலே இருந்தாலும், இன்றையதினம் தமிழகத்திலே இருக்கக்கூடிய மக்களுக்காக மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் குரல் கொடுத்திருக்கின்றார்கள். அதனையொட்டி அவர்கள் எடுக்க இருக்கின்ற நடவடிக்கைகளில் தமிழ் மாநில தேசிய லீக்கும் கலந்து கொண்டு ஆதரவு அளிக்கும் என்பதை இந்த நேரத்தில் சொல்லி, சேலம் மாவட்டத்தினுடைய மக்கள் நலன் காக்க, தமிழகத்தினுடைய பெருமை காத்திட, இனத்தால் இந்தியன், மொழியால் தமிழன், என்றாலும், வடக்கு வாழ்கிறது, தெற்கு தேய்கிறது என்ற சொல்லுக்கு ஆளாகாமல், மாண்புமிகு முதல்வர் அவர்கள் நல்ல நடவடிக்கையை மேற்கொள்வதற்கு தமிழ் மாநில தேசிய லீக் என்றும் உறுதுணையாக இருக்கும் என்று இந்த நேரத்திலே சொல்லி வாய்ப்பிற்கு நன்றி கூறி முடித்துக் கொள்கின்றேன், நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் க. கிருஷ்ணசாமி.

முற்பகல் 11-40

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை, உங்களுக்கு அனுமதி கிடையாது, உட்காருங்கள்.

**திரு. சி. வேலாயுதன்:** ஒரே ஒரு கருத்தை...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் எந்தக் கருத்தையும் இப்போது சொல்ல முடியாது. நீங்கள் சிறப்புக் கவன

ஈர்ப்புக்கு அறிவிப்புக் கொடுத்திருந்தால்தான் சொல்ல முடியும். உட்காருங்கள்.

**திரு. சி. வேலாயுதன்:** இது முக்கியமான கருத்து....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அப்படியென்றால் நீங்கள் உங்கள் கட்சியின் சார்பில் கொடுத்திருக்க வேண்டும். டாக்டர் க. கிருஷ்ணசாமி.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை, திரு. சி. வேலாயுதன், நான் உங்களை அனுமதிக்க முடியாது. உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. அப்பாவு, நீங்கள் ஏதோ ஒழுங்காகக் கேட்கிற மாதிரி, அடுத்தவர்களுக்குப் புத்தி சொல்லப் போய்விட்டீர்கள்.

***டாக்டர் க. கிருஷ்ணசாமி:** தமிழ்நாட்டினுடைய "கொடை" என்று ஒருகாலத்திலே வர்ணிக்கப்பட்ட சேலம் உருட்டாலை இன்று மீண்டும் தனியார்வசம் ஆக்கப்படுவதற்கு மத்திய அரசு எடுத்திருக்கக்கூடிய முடிவை புதிய தமிழகம் கட்சியின் சார்பாக நான் வன்மையாகக் கண்டிக்கிறேன். சேலத்திலே உருக்காலை வரவேண்டும் என்று பேரறிஞர் அண்ணா, அன்றைய தமிழகத்தினுடைய தலைவர்களாக இருந்த திரு. சி. சுப்பிரமணியம், திரு. வெங்கட்ராமன், இன்றைய முதல்வர் டாக்டர் கலைஞர், ஒட்டுமொத்தத் தமிழ்நாட்டு மக்கள் ஆகியோருடைய வேண்டுகோளுக்கிணங்க உருக்காலை வந்திருக்க வேண்டும். ஆனால், உருக்காலை வராமல் உருட்டாலைதான் வந்தது. அந்த உருட்டாலையையும் இப்போது இன்றைய மத்திய அரசு உலகமயமாக்குதல், தாராளமயமாக்குதல், தனியார்மயமாக்குதல் என்ற கொள்கையினுடைய அடிப்படையில் சில தனியார்களுக்குத் தாரை வார்க்கக்கூடிய முயற்சியை, நிச்சயமாக நாம் தடுத்து நிறுத்தியாக வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சுருக்கமாக உரையை முடியுங்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** இதிலே என்னுடைய குற்றச்சாட்டு என்னவென்றால், 1967-லிருந்து இன்று வரையிலும் தி.மு.க.-வும்,



அ.இ.அ.தி.மு.க.-வும் ஆட்சியிலே, தமிழ்நாட்டிலே இருந்து கொண்டிருக்கின்றன. மத்தியிலே ஆட்சியிலே இருக்கக்கூடிய ஏதாவது கட்சியோடு கூட்டு வைத்திருந்தாலும்கூட, உருக்காலையாக அந்த ஆலையை மாற்றுவதற்கு இன்று வரையிலும் எந்த முயற்சியும் எடுக்கவில்லை; எடுத்திருக்க வேண்டும். இந்நிலையில் இன்று வெறும் உருட்டாலையைக்கூட நாம் காப்பாற்றுவதற்குப் போராடிக் கொண்டிருக்கக்கூடிய அவல நிலையில் இருந்து கொண்டிருக் கிறோம். எனவே, ஒட்டுமொத்தமாக தமிழ் மக்களுடைய நலன் கருதி, கண்ணை விற்று சித்திரம் வாங்கக் கூடாது என்ற அடிப்படையிலே, கூட்டணிக்கு ஏதாவது பங்கம் வந்துவிடுமோ அல்லது அவர்கள் மனம் புண்படுமோ என்ற அடிப்படையிலே தமிழ்நாடு அரசு செயல்படாமல், தமிழ்நாட்டு மக்களுடைய நலனே பெரிதானது என்ற அடிப்படையில் தமிழ்நாடு அரசு, இன்றைய தி.மு.க. அரசு இதிலே ஒரு கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். தாங்கள் பங்கு பெற்றிருக்கிற அந்த மத்திய அரசிலும் தங்களுடைய அமைச்சர்களும் வலியுறுத்த வேண்டும். அதேபோல, இங்கு முதற்கட்டமாக இந்த மாமன்றத்திலே ஒரு தீர்மானத்தையும் நிறைவேற்றி, தேவையானால் அனைத்துக் கட்சிக் கூட்டத்தையும் நடத்தி, அதற்கு மேலும் தேவையானால் ஒட்டுமொத்தமாகத் தமிழ் மக்களையும் திரட்டிப் போராடுவதற்கும் தயாராக வேண்டும். அந்த உருட்டாலையைக் காப்பாற்றுவது மட்டுமல்ல, அந்த உருட்டாலையை உருக்காலையாக மாற்றுவதற்கும் அதிக நிதியும் கேட்க வேண்டும் என்று புதிய தமிழகம் கட்சியின் சார்பாக வலியுறுத்தி விடைபெறுகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் இரும்பு ஆலையை தனியார்மயப்படுத்துவதை மிக வன்மையாகத் தமிழ் பாட்டாளி மக்கள் கழகத்தினுடைய சார்பிலே நாங்கள் கண்டிக்கக் கடமைப்பட்டிருக் கிறோம். இந்த ஆலை எவ்வளவு அரும்பாடுபட்டுக் கொண்டுவரப்பட்டது என்பதை இன்றைக்கு எண்ணிப் பார்க்க வேண்டும். சுயம்புவாக இருக்கிற இறைவனை எழுப்ப சுப்ரபாதம் பாடப்படுவதைப் போல. அன்றைக்கு மத்தியிலே ஆண்டவர்களுடைய ஆழ்ந்த உறக்கத்தைக் கலைக்க தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர்

அவர்கள், பேரறிஞர் அண்ணா அவர்களுடைய அந்த இலட்சியக் கனவை சேலம் இரும்பு ஆலைத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு அரும்பாடுபட்டு அதனைக் கொண்டு வந்திருக்கிறார்கள். தமிழக நலனை அடிப்படையாக வைத்துக் கொண்டுவரப்பட்ட அந்த இரும்பாலையை, இப்போது தனியார்மயப்படுத்துவதற்குக் காட்டப்படுகிற காரணங்கள் வலுவான காரணங்கள் அல்ல.

முற்பகல் 11-45

இந்த நேரத்திலே நான் ஒன்றைக் குறிப்பிட்டுச் சொல்ல ஆசைப்படுகிறேன். இந்தியக் கூட்டாட்சி முறையை மத்தியிலே இப்போது ஆண்டுகொண்டிருக்கிற பாரதிய ஜனதா அரசு தொடர்ந்து மீறிக் கொண்டு வருகிறதோ என்கின்ற அச்சம் எங்களைப் போன்றவர்களுக்கு இருந்து கொண்டிருக்கிறது. மாநிலங்களுடைய நலனை, உரிமைகளை எந்தவிதத்திலும் பாதிக்காத அளவிலே, மத்தியிலே ஒரு கூட்டாட்சி அமைவதுதான், மாநிலத்திலே சுய ஆட்சி, மத்தியிலே கூட்டாட்சி என்ற தத்துவத்தினுடைய ஆழ்ந்த பொருள். இதை மீறுகின்ற வகையிலே இப்போது மத்தியிலே இருக்கக் கூடியவர்கள் தொடர்ந்து செயல்படுகிறார்கள் என்பதற்காக நான் சொல்கிறேன்.

25 ஆயிரம் கோடி ரூபாய் நலிவடைந்த பஞ்சாலைகளுக்கு ஒதுக்கப்பட்ட நிதியிலேகூட, தமிழகத்தினுடைய நலிவடைந்த ஆலைகளுக்கு நிதி ஒதுக்கப்படவில்லை. அதேபோல், இப்போது வட மாநிலங்களிலே இருக்கக்கூடிய இரும்பாலைகளினுடைய புனரமைப்புக்காக ஒதுக்கப்படுகின்ற 5,500 கோடி ரூபாய் நிதியிலேகூட, 350 கோடி ரூபாய், சேலம் இரும்பாலையினுடைய நட்டத்தை ஈடுகட்டுவதற்கு ஒதுக்கலாம். ஆனால், என்ன காரணத்தினால் அவர்கள் அப்படிச் செய்கிறார்கள்? ஒருவேளை அலமாதி அணை விவகாரத்திலே மத்திய அரசு எங்களுடைய கருத்துக்கு மாறாக நடக்குமேயானால் எங்களுடைய ஆதரவைத் திரும்பப் பெறுவேன் என்று மாண்புமிகு ஆந்திர முதல்வர் திரு. சந்திரபாபு நாயுடு அவர்கள் அச்சுறுத்துவதுபோல, தமிழக அரசும் அச்சுறுத்த வேண்டுமென்று மத்தியிலே இருப்பவர்கள் நினைக்கிறார்களோ என்பதும் எங்களுக்கு விளங்கவில்லை. ஆக, எது எப்படி இருந்தாலும், இதனால் தமிழகத்தினுடைய நலன், தமிழ் மக்களுடைய நலன், குறிப்பாக தொழிலாளர்களுடைய நலன், நம்முடைய நாட்டினுடைய பொருளாதார நலன் பறிக்கப்படுகிறது; பாதிக்கப்படுகிறது.



தனியார்மயப்படுத்தும் திட்டத்திலே, மக்கள் நலனைக் கருத்திலே கொண்டுதான் பேருந்துகளைக்கூட, அவை நட்டத்திலே இயங்கினாலும்கூட, மக்கள் நலனுக்காக அவற்றை நாம் தொடர்ந்து நடத்துகிறோம். அதேபோல், இந்த சேலம் இரும்பாலையையும், அதன் நட்டத்தைச் சரிகட்டுவதற்கான ஈடுபாட்டிலே நாம் இறங்குவதற்குப் பதிலாக, உலகமயமாக்குகிற அந்தக் கொள்கையின் அடிப்படையிலே, தனியார்மயமாக்கல் முறையிலே மத்திய அரசு ஈடுபடுவதை வன்மையாகக் கண்டித்து, இந்த மாமன்றத்தின் மூலமாக ஏகமனதாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு தீர்மானத்தை முன்மொழிந்து, எக்காரணத்தைக் கொண்டும் இதைத் தனியார் துறைக்கு தாரை வார்க்கக்கூடாது; தொடர்ந்து மக்கள் நலனைப் பாதுகாக்கின்ற வகையிலே, நம்முடைய தொழிலாளர்களாலேயேகூட அதை நடத்துவதற்கான வாய்ப்பு இருந்தால்கூட, அதையும் அரசு ஆலோசித்து, அது தனியார்மயமாக்கப்படுவதை எதிர்த்து, தொடர்ந்து அது நம்முடைய ஆலையாக இருப்பதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டு அமைகிறேன். வணக்கம்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Point of order.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் அனுமதிக்க முடியாது என்று சொல்லிவிட்டேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுத் துறையாக சேலம் இரும்பாலையைப் பெற்றவனுக்குள்ள கவலையைவிட, பொதுத் துறைகள் பலவற்றைத் தனியார் துறைக்கு விற்றுவிட்டவர்களுக்கு இருக்க முடியாது என்ற அந்தக் கருத்தை வெளியிட்டு, சில செய்திகளை இந்த அவைக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். ஒன்று, தீர்மானமாக நிறைவேற்ற வேண்டுமென்று எல்லா உறுப்பினர்களுமே இங்கே உரையாற்றியிருக்கிறார்கள். கிட்டத்தட்ட தீர்மானம் முன்மொழியப் பட்டால், எவ்வளவு நேரம் எடுத்துக்கொண்டு, எவ்வளவு கருத்துக்கள் சொல்லப்பட வேண்டுமோ, அவ்வளவு கருத்துக்கள் இங்கே சொல்லப்பட்டிருக்கின்றன. எனவே, ஒரு

[கலைஞர் மு. கருணாநிதி] [2000 மார்ச் 8

தீர்மானம் நிறைவேறுவதற்கான சூழ்நிலை உருவாகி இருப்பதாகவே நான் கருதுகிறேன். இருந்தாலும், சொல்லப்பட்ட கருத்துக்களுக்கு- - இந்த அவையிலே உறுப்பினர்கள் நல்ல எண்ணத்தின் அடிப்படையிலே சொல்லப்பட்ட எல்லாக் கருத்துக்களும், சேலம் உருக்காலை, பொதுத் துறை வசமே இருக்க வேண்டும் என்பதுதான் மையக் கருத்து; சில பேர்களுடைய கருத்து — இரண்டு, மூன்று பேர் அங்கே இருப்பவர்களைப் பிடிக்காமல், கண்ணெரிச்சலால், அவர்கள் எல்லாம் இராஜிநாமா செய்ய வேண்டும் என்ற கருத்தும் சொல்லப்பட்டிருக்கிறது. அந்தக் கருத்துக்கு நான் முக்கியத்துவம் கொடுக்கவில்லை. இருந்தாலும், ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டு வந்தது அல்லது கவன ஈர்ப்பு அறிவிக்கை கொண்டு வந்ததே முரசொலி மாறனையும், ரங்கராஜன் குமாரமங்கலத்தையும், டி.ஆர். பாலுவையும் இராஜிநாமா செய்யச் சொல்லத்தான் என்கின்ற நிலையிலே கொண்டுவரப்பட்டதோ என்று பொதுமக்கள் சந்தேகப்படும்படியாக சில கருத்துக்கள் இங்கே வெளியிடப்பட்டிருக்கின்றன.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் அனுமதி கொடுக்கவில்லை, உட்காருங்கள்.(குறுக்கீடு) நான் அனுமதி கொடுக்கவில்லை, உட்காருங்கள். (குறுக்கீடு) நான் அனுமதி கொடுக்கவில்லை, உட்காருங்கள்.

முற்பகல் 11-50

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** பொதுத் துறையைத் தனியார் துறைக்கு மாற்றுகின்ற ஒரு நிலை இப்போதல்ல; நரசிம்மராவ் அவர்களுடைய காலத்திலேயே ஏற்பட்ட ஒரு நிலை என்பதை எல்லோரும் அறிவார்கள். பிரதமர் நரசிம்மராவ் ஆட்சியிலே பொதுத் துறை நிறுவனங்கள்போல தனியார் துறைக்கு மாற்றப்பட்ட செய்திகளையெல்லாம் நாம் அறிந்திருக்கின்றோம். நான் வாதத்திற்காகச் சொல்லவில்லை. நான் யாரிடத்திலே கம்யூனிசம் படித்துக் கொண்டிருக்கின்றேனோ, யாரை கம்யூனிசத்திற்கு வழிகாட்டி என்று கருதிக் கொண்டிருக்கின்றேனோ, என்னுடைய தோழர் ஜோதிபாசு அவர்கள் ஆளுகின்ற மேற்கு



2000 மார்ச் 8] [கலைஞர் மு. கருணாநிதி]

வங்கத்திலேயே, பொதுத் துறை நிறுவனங்கள், தனியார் துறைக்குத் தரப்படுகின்ற காட்சிகளையெல்லாம் காண்கின்றோம். இன்று மேற்குவங்கத் தலைநகரமான கல்கத்தாவில் மின்சார விநியோகமேகூட ஒரு தனியார் கம்பெனிக்குத் தரப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே அது சரியாக நடைபெறவில்லை, தனியாருக்குத் தரப்பட்ட பிறகு ஒழுங்காக மின்சாரம் வருகிறது; எரிசக்தி நல்லமுறையிலே பயன்படுகிறது என்கின்ற அளவிற்கு நல்ல பெயரையும் அங்கே பெற்றிருக்கின்றார்கள்.

தனியார் துறையா, பொதுத் துறையா என்கின்ற வாதத்திற்கு இப்போது நான் செல்லவில்லை. ஏனென்றால், இந்த நூற்றாண்டிலே தோன்றிய சோஷலிசம், இந்த நூற்றாண்டிலேயே ஒரு முடிவுக்கு வந்துவிட்ட ஒரு காட்சியை நாம் காண்கிறோம். அது வருந்தத்தக்கது தான். ஏழையினுடைய கண்ணீர் அறவே வற்றாத இந்தச் சூழ்நிலையில் சோஷலிசத்திற்கு அப்படிப்பட்ட ஒரு முடிவு ஏற்பட்டது நாமெல்லாம் எண்ணி வருந்தக்கூடிய ஒன்றாகும். இருந்தபோதிலும், இன்றுள்ள நிலையில் மத்தியிலே உள்ள அரசு, மாநில அரசைக் கலந்தாலோசித்து இந்த முடிவை எடுத்திருக்கலாம். ஆனால், இதை நான் ஒரு யோசனையாக, ஒரு கருத்தாகத்தான் சொல்ல முடியும். இருந்தாலும் நான் விரும்புகின்ற கூட்டாட்சித் தத்துவம் இன்னும் முற்றாக வந்தபாடில்லை. அதற்காகத்தான் நாம் போராடிக் கொண்டிருக்கிறோம்.

இங்கே பேசும்போது யாரோ குறிப்பிட்டார்கள், வெங்கட்ராமன் அவர்கள் இதற்காக நிரம்பப் பாடுபட்டார், சேலம் Steel Plant என்பதற்காகப் பாடுபட்டார் என்று சொன்னார்கள். ஆர். வெங்கட்ராமன் அவர்கள் அமைச்சராக இருந்தபோது, சேலத்தைப் பற்றி இதே அவையிலேதான் நானும் நம்முடைய பேராசிரியர் அவர்களும் எதிர்தரப்பிலேயிருந்து பேசுகின்ற அந்தக் காலகட்டத்தில், சேலம், சேலம் என்கிறீர்களே, சேலம் என்பது அமெரிக்காவில் உள்ள ஒரு ஊரே தவிர, அங்குள்ள இரும்புதான் நல்ல இரும்பே தவிர, இங்குள்ள கஞ்சமலை இரும்பு, சேர்வராயன்மலை இரும்பு எல்லாம் பயனுள்ள இரும்பு அல்ல என்று ஆர். வெங்கட்ராமன் அவர்கள் இதே அவையிலே பேசியிருப்பதை நான் மறந்துவிடவில்லை. அப்பொழுதுதான் பேரறிஞர் அண்ணா அவர்கள் எழுச்சி நாள் கொண்டாடி சேலம் இரும்புக்காக, அதைப் போலவே இன்னும் பல

திட்டங்களுக்காக, தென்னகத்திற்கு தரப்பட வேண்டிய திட்டங்களுக்காக

"சிந்திரி தொழில் சிறக்கிறது அங்கே
முந்திரித் தொழில் சிதைகிறது இங்கே"

என்றெல்லாம் வாசகங்களை அமைத்து, நாட்டு மக்களுக்கு வெளிப்படுத்தி, பல திட்டங்களுக்காகப் போராடினார்கள். அதையொட்டி பல திட்டங்களை நாம் பெற்றிருக்கிறோம். வடக்கு வாழ்கிறது, தெற்கு தேய்கிறது என்றிருந்த நிலை மாறி இருப்பதை நாம் காண்கிறோம். அதையே திரும்பத் திரும்ப சொல்லிக் கொண்டிருக்கக்கூடிய சூழ்நிலையிலே இன்றைக்கு தெற்கு இல்லை. ஆனால், நம்முடைய நண்பர் ஞானசேகரன் தெற்கு இல்லை; ஆனால், தமிழகம் அப்படியாகிவிட்டது என்று சொன்னார். தமிழகம் தேய்ந்துவிட்டது என்று சொன்னார். அதைக்கூட, இன்னும் அடுக்குச் சொல்லில், தமிழகம் தாழ்ந்துவிட்டது என்று சொன்னால் ஞானசேகரனுடைய வாசகத்திற்கு பொருத்தமாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். தமிழகம் ஒன்றும் தாழ்ந்துவிடவில்லை, ஞானசேகரன் போன்ற நல்ல நண்பர்கள் எல்லாம் இருக்கும்போது தமிழகம் தாழாது, தாழவிடமாட்டோம் என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இங்கே இன்று ஆளுநர் உரையிலே இன்னும் பலர் உரையாற்ற வேண்டியிருக்கிறது. நாளையதினம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் உரையாற்றி, நான் பதில் அளிக்க வேண்டியிருக்கிறது. அதற்குப் பிறகு சட்டமன்ற நிகழ்ச்சிகள் ஒத்திவைக்கப்படும். இந்தச் சூழ்நிலையில் நாம் இருக்கின்றோம். இவ்வளவு நேரம் பேசிய பிறகு இன்னொரு நாள் தீர்மானத்திற்காக செலவழிக்கத் தேவையில்லையென்று நான் கருதி, உங்கள் முன்னிலையில் இந்தத் தீர்மானத்தைப் படிக்கின்றேன். உங்கள் அத்தனை பேருடைய கருத்துக்கு ஏற்ப இப்போது நடைபெற்றதே ஒரு தீர்மானத்திற்காக நடைபெற்ற விவாதம் என்ற அளவில் அதைப் படிக்கின்றேன்.

"பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது பொதுத் துறை நிருவாகத்தில் நடைபெற்று வருகின்ற சேலம் உருக்காலை நிருவாகம் தொடர்ந்து பொதுத் துறையிலேயே நடைபெறுவதற்கான ஆக்கப்பூர்வ நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொள்ள வேண்டுமென்றும், தனியாரிடம் ஒப்படைப்பதைத் தவிர்க்க வேண்டுமென்றும் இச்சட்டமன்றப் பேரவை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறது."



என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) இதற்கு எதிர்ப்பு உண்டா இல்லையா என்பதைத் தாங்கள்தான் தெரிந்துகொள்ள வேண்டும்.

முற்பகல் 11-55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முதலமைச்சரின் தீர்மானம்...

**டாக்டர் தே. குமாரதாஸ்:** ஏகமனதாக என்பதைச் சேர்த்துக்கொள்ளலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்போதுதான் வாக்கெடுப்பிற்கு விடப்போகிறேனே, அதற்குள் ஏன் அவசரப்படுகிறீர்கள்? மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லையென்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை.

தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

(மேசையைத் தட்டும் ஒலி)

## 3. விதி 110-ன்கீழ் அறிக்கை

**தமிழ் இலக்கிய சங்கப் பலகையில் குறள் பீடம் அமைத்தல் குறித்து மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சரின் அறிக்கை**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, பேரவை விதி 110-ன்கீழ் அறிக்கை ஒன்றை அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் அனுமதி வேண்டியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகின்றது.

***மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் இலக்கியச் சங்கப்பலகையின் குறள்பீடம், தமிழ் சாகித்திய அகாடமி பற்றிய அறிவிப்பு கடந்த வரவு செலவுத் திட்டத்தின்போது வெளியிடப்பட்டது. 16-1-2000 அன்று நடைபெற்ற அய்யன் திருவள்ளுவர் விழாவில் மாண்புமிகு முதல்வர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. இம்முறை ஆளுநர் உரையில் இவ்வமைப்புபற்றி அறிவிக்கப்பட்டது. அதன்படி, தில்லியிலுள்ள சாகித்தியக் கழகம் மற்றும் தென் மாநிலங்களிலுள்ள சாகித்திய கழகங்கள் ஆகியவற்றை அலசி ஆராய்ந்தும், இந்திய அளவிலான 'ஞானபீடம்' விருதினைப்போல் தமிழகத்தின் 'குறள்பீடம்' விருது வழங்கப்பட வேண்டும் என்ற ஆர்வத்திலும், தமிழ் இலக்கியச் சங்கப் பலகையின் குறள்பீடம் அமைப்புக்கான விதிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. அதன்படி அமைக்கப்படும் பொதுக் குழுவில் 35 பேர் இடம்பெறுகிறார்கள்.

இதில் தமிழ் வளர்ச்சி பண்பாடு மற்றும் அறநிலையத் துறையினுடைய செயலாளர், நிதித் துறைச் செயலாளர், தமிழ் வளர்ச்சி இயக்குநர், உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இயக்குநர், தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத் துணை வேந்தர், தில்லி சாகித்தியக் கழகத்தின் செயலாளர், சுழற்சி முறையில் திருச்சூரிலுள்ள கேரள சாகித்தியக் கழகத்தின் செயலாளர், தமிழ் இலக்கியச் சங்கப் பலகையின் இயக்குநர், அதன் உதவி இயக்குநர் ஆகியோர் பதவி வழி உறுப்பினர்களாவர். மேலும், பல்வேறு தமிழறிஞர் பெருமக்கள் இதன் சிறப்பு உறுப்பினர்களாக அமர்த்தப் பெறுகிறார்கள். வெளிநாட்டுத் தமிழ்ச் சான்றோர் எனும் முறையில், எடின்பர்க் பல்கலைக்கழகத்தின் முனைவர் ஆர்.இ. ஆஷர், முனைவர் தாமஸ் மால்டன் ஆகியோரும், வெளி மாநிலத் தமிழ்ச் சான்றோர் எனும் முறையில், கல்கத்தா சாந்திநிகேதன் பல்கலைக்கழகத்தின் முனைவர் சுப்பையா, பெங்களூர் முனைவர் சு. சண்முகசுந்தரம் ஆகியோரும், தமிழகத்தினுடைய தமிழ்ச் சான்றோர் எனும் முறையில் முனைவர் ச.வே. சுப்பிரமணியம், முனைவர் பொற்கோ, முனைவர் சு.ப. அறவாணன், முனைவர் திருமதி இராதா தியாகராஜன், எழுத்தாளர் திரு. சாவி, முனைவர் சிலம்பொலி சு.செல்லப்பன், பெருங்கவிக்கோ வா.மு. சேதுராமன், முனைவர் கே. செல்லப்பன் ஆகியோரும், பதிப்பகங்கள் சார்பில் முனைவர் சா. மெய்யப்பன்,



இதழ்த் தொடர்பாளர் எனும் முறையில் எழுத்தாளர் திரு. சுஜாதா, பெண் எழுத்தாளர்கள் எனும் முறையில் திருமதி இராஜம் கிருஷ்ணன், திருமதி அரசு மணிமேகலை ஆகியோரும், படைப்பிலக்கிய எழுத்தாளர்கள் எனும் முறையில் கவிதைக்காக கவிக்கோ அப்துல் ரகுமான், உரைநடைக்காக பாவேந்தரின் புதல்வர் திரு. மன்னர்மன்னன், புதினத்திற்காக திரு. கோ.வி. மணிசேகரன், சிறுகதைக்காக திரு. சு. சமுத்திரம், நாடகத்திற்காக முனைவர் மு. இராமசாமி, குழந்தைக் கவிஞர் எனும் முறையில் திரு. பூவண்ணன் ஆகியோரும் இடம்பெறுகின்றனர்.

பல்கலைக்கழகத்தினுடைய தமிழ்த் துறைத் தலைவர் எனும் முறையில் சென்னைப் பல்கலைக்கழகத்தின் முனைவர் மு. இன்னாசி, புதுவைப் பல்கலைக்கழகத்தின் முனைவர் க.அ. குணசேகரன் ஆகியோரும் இடம்பெறுகின்றனர். துணைத் தலைவராக முனைவர் தமிழண்ணல் அவர்கள் அமர்த்தப் பெறுகிறார்கள். இத்தகைய சிறப்புக்குரிய அமைப்பிற்குத் தலைசிறந்த இலக்கிய மேதையும், எத்துறையிலும் தனது முத்திரை பதித்து ஈடு இணையற்று விளங்குபவரும், 'உலகத்தார் உள்ளத்துள் எல்லாம் உளல்' எனும் அய்யன் திருவள்ளுவர் கருத்திற்கு இலக்கணமாகத் திகழ்பவருமாகிய 'ஐந்தமிழறிஞர்' மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) தலைமைப் பொறுப்பை ஏற்றுக்கொண்டுள்ளார்கள் என்பதைப் பெருமிதத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 4. அறிக்கைகள் அளித்தல்

### பொதுக் கணக்குக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல், திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றப் பேரவையின் பொதுக் கணக்குக் குழுவின் 218 முதல் 222 வரையிலான 5 அறிக்கைகளைக் குழுவின் சார்பாக பேரவைக்கு அளிக்கிறேன்.

## 5. ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின் மீது விவாதம்—*தொடர்ச்சி*

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின் மீது விவாதம். திரு. வி.கே. லட்சுமணன்.

*நண்பகல் 12-00*

**திரு. வி.கே. லட்சுமணன்:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு முழுவதுமாக நன்றி சொல்லி பாராட்டிப் பேச வேண்டும் என்ற உணர்வோடுதான் இந்த ஆளுநர் உரையை நான் கேட்டேன், படித்துப் பார்த்தேன். ஆனால், ஏனோ அதிலே எனக்கு அந்த வாய்ப்பு அளிக்கப்படவில்லை என்ற ஒரு ஆதங்கத்தை என்னாலே இங்கே வெளிப்படுத்தாமல் இருக்க முடியவில்லை. நான் இதைப் படித்தபோது மூடிய ஆலைகள் எல்லாம் திறக்கப்படும் என்று கருதிக் கொண்டிருந்தேன். அதைப்பற்றி எந்தப் பேச்சும் அங்கே இடம்பெறவில்லை என்பது தெளிவாகத் தெரிகின்றது. அதேபோல நீர்ப்பாசனத்தைப்பற்றி ஏதாவது சொல்லப்பட்டிருக்கும் என்று அந்தப் பக்கங்களைப் புரட்டிப் பார்த்தேன். அச்சன்கோயில் பம்பா பற்றியோ அல்லது பாண்டியாறு புன்னம்புழாவைப் பற்றியோ அல்லது மேல்பவானி (குறுக்கீடு) அதற்கு இப்போது நான் சொல்கிறேன். மேல்பவானியிலிருந்து 7 t.m.c. தண்ணீரை கோவை பல்லடம் அவிநாசிக்கு கொடுப்பதைப் பற்றியோ அல்லது பெரியார் அணை உயரத்தை அதிகப்படுத்துவது பற்றியோ, இந்தப் பாண்டியாறு புன்னம்புழாவுக்காக அரிசியோ, சிமெண்டோ அல்லது மின்சாரமோ கொடுத்தாகிலும் அந்த நீரைப் பெறலாம் என்ற அறிக்கையாவது இந்த ஆளுநர் உரையிலே இருக்கும் என்று நான் எதிர்பார்த்தேன். அவையெல்லாம் இல்லை என்பதை எண்ணிப் பார்க்கின்றபோது ஒருவேளை வரவு-செலவுத் திட்டத்திலே அதைக் குறிப்பிடலாம் அல்லது 2001 ஆம் ஆண்டு தமிழ் மாநில காங்கிரஸ் ஆட்சிக்கு வருகின்றபோது அதைச் செய்யட்டும் என்று நீங்கள் விட்டிருக்கலாம். (சிரிப்பு)

நம்முடைய மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கோவையிலே மூடிய ஆலைகளின் — நாங்கள் எல்லாம் கேட்டுக் கொண்டதற்கு இணங்க அந்த -- வேலையற்ற தொழிலாளர்களுக்கு 250 ரூபாய் கொடுப்பதற்கு





ஒத்துக்கொண்டார்கள். அதை ஒத்துக்கொண்டு 5 மாதம் சம்பளம் கொடுத்து முடிந்தவுடனே தீபாவளிக்குக் கொடுத்த 500 ரூபாயைப் பிடித்துக்கொண்டார்கள். மிச்சப் பணம்தான் கொடுக்கப்பட்டது. ஸ்ரீஹரி மில் போன்ற மில்களிலே அந்தப் பணம் கொடுக்கப்பட வில்லை. 158 பேர் பணியாற்றுகின்ற அந்த ஆலையிலே 67 பேருக்கு மட்டும்தான் அந்தத் தொகை கொடுக்கப்பட்டிருக்கிறது. மீதம் உள்ளவர்களுக்குக் கொடுக்கப்பட வில்லை என்பதை நான் இங்கே மெத்த வருத்தத்தோடு உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

சேலம் கூட்டுறவு நூற்பாலையிலே 100 தொழிலாளிகள் வி.ஆர்.எஸ்ஸிலே வெளியேறவும் தயாராக இருக்கிறார்கள். அரசு அவர்களுக்குப் பணம் கொடுத்து அவர்களை மகிழ்ச்சியோடு வெளியிலே போவதற்கு வழிவகை செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோல கல்வித் துறையிலே பல்கலைக்கழக மானியக் குழு ஒவ்வொரு மாநிலத்திலும் ஒரு Central University ஆரம்பிக்க வேண்டும். தகுதி உள்ள எல்லாக் கல்லூரிகளுக்கும் தன்னாட்சி வழங்கப்பட வேண்டும். அதேபோல Assessment andAccreditation என்பது கட்டாயமாக்கப்பட வேண்டும் என்று சொல்லியிருந்தும்கூட இங்கே ஒரு மத்திய பல்கலைக்கழகம் தொடங்குவதற்கு எந்த முயற்சியும் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரியவில்லை.

நான் இங்கே சென்ற முறை பாண்டியாறு புன்னம்புழாவைப் பற்றிச் சொன்னபோது நம்முடைய மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் அவர்கள், கேரள அரசு இதற்கு ஒத்துக்கொள்ளவில்லை என்ற ஒரு கருத்தை இங்கே வெளியிட்டார்கள். வழக்கமாக இந்தக் கூட்டத்திலே ஆதாரங்களோடு பேச வேண்டும் என்று சொல்லப்பட்ட காரணத்தினாலே நான் எனக்குக் கிடைத்திருக்கின்ற ஆதாரத்தை முதலமைச்சர் அவர்களிடத்திலே அளிக்கிறேன்.

*(மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் ஒரு தாளை அளித்தார்)*

அதில் என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்று சொன்னால் - கேரள அரசினுடைய செயலாளர் எனக்கு எழுதிய கடிதம். யானை இலட்சினை எல்லாம் போட்டு கேரள அரசு எனக்கு எழுதியிருக்கிற கடிதம். அதிலே என்ன சொல்லியிருக்கிறார்கள் என்று சொன்னால்,

"Sub: Pandiar-Punnampuzha Scheme -- Implementation -Reg.

Ref: Your letter dated 19-10-1994 addressed to Chief Secretary.

...

Please refer to the letter cited wherein you have pointed out the necessity for implementing the Pandiar-Punnampuzha project of Tamil Nadu Government. The matter is connected with Cauvery Water Dispute which is now before Cauvery Water Disputes Tribunal, New Delhi. However..."

இந்த வரிதான் ரொம்ப முக்கியம். "However, I am directed to inform that any requirement of drinking water will be immediately attended to என்பது Secretary கையெழுத்துப் போட்டு எனக்கு எழுதியிருக்கிற கடிதம். இதை முன்பே பலமுறை நான் உங்களுக்குக் கொடுத்திருக்கிறேன். இப்போதும் கொடுக்கத் தயாராக இருக்கிறேன். அதனடிப்படையில் முதல்வர் அவர்கள் கேரள மாநிலத்திற்குச் செல்கின்றபோது இதைப்பேசி இதற்கு ஒரு நல்ல தீர்வு காண வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (குறுக்கீடு) இரண்டையும் மறுக்கவில்லை. நான் உங்களிடத்திலே கேட்கவே இல்லையே.

பிற்பகல் 12-05

இரண்டாவது, அண்மையிலே தமிழக அரசு உள்ளாட்சித் துறைக்கு ஓர் உத்தரவு போட்டிருக்கிறது. உள்ளாட்சிகள் பொதுக் குடிநீர்க் குழாயை அவர்களாகவே போட்டுக்கொள்ளக் கூடாது என்று ஓர் உத்தரவு போடப்பட்டிருக்கிறது. இது குறிப்பாக தாழ்த்தப்பட்ட மக்கள் வாழுகின்ற பகுதியிலே அந்த மக்களுக்கு பெரிதும் இடையூறாக இருக்கிறது. எனவே, அதைத் திரும்பப் பெற்றுக்கொண்டு அந்த மக்களுக்கு பொது குடிநீர்க் குழாய் போடுவதற்கு நீங்கள் தாராளமாக அனுமதி வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தற்போது பேராசிரியர் அவர்கள் வந்துவிட்டதனாலே ஒரு செய்தியைச் சொல்ல விரும்புகிறேன். அண்மையிலே தமிழக அரசு 24-3-1999 ஆம் தேதி அன்றைக்கு ஓர் அரசாணை பிறப்பித்திருக்கிறது. 111-வது அரசாணை. அந்த அரசாணையிலே, ரஸ்தோகி கமிட்டியினுடைய அத்தனை பரிந்துரைகளையும்



ஏற்றுக்கொண்டு ஒவ்வொரு கல்லூரியும் ஒரு Semester-லே 90 நாட்கள் பணியாற்ற வேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறது. அதுமட்டுமல்லாமல் அவர்களுடைய செயல்முறைத் தேர்வையெல்லாம் பாடம் நடத்துகிற நாட்களிலே வைத்துக்கொள்ளாமல் பாடம் நடத்தி முடிந்த பின்புதான் வைத்துக்கொள்ள வேண்டுமென்றும் அறிவுறுத்தியிருக்கிறது. இருந்தாலும் பாரதியார் பல்கலைக் கழகத்திலே மாணவர்கள் 43 நாட்கள்தான் படிக்க அனுமதிக்கப் படுகிறார்கள். ஆகவே, இதை அரசு கவனித்து அவர்களுக்குத் தக்க அறிவுரை வழங்க வேண்டும்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்லூரியிலே மாணவர்கள் பெறுகிற பயிற்சியினுடைய தரத்தை உயர்த்த வேண்டுமென்ற ஓர் அடிப்படையான நோக்கத்தோடு, அதிக நாட்கள் அவர்களுக்கு வகுப்பு எடுக்க வேண்டுமென்று வலியுறுத்துவதற்கான ரஸ்தோகி கமிட்டினுடைய அறிவிப்பு வந்து அந்த அறிவிப்பு இப்போதுதான் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. வருகிற ஆண்டிலிருந்து அதை முழுவதும் நடைமுறைப்படுத்த வேண்டும். வேறு எங்காவது பல்கலைக்கழகத்திற்கு உட்பட்ட கல்லூரிகளில் இப்போது நடத்தப்பட வேண்டிய நாட்களே பாடம் நடத்தாமல் குறைவாக இருக்குமானால், பல்கலைக்கழக ஆட்சிக் குழு அதுபற்றி நிச்சயமாகக் கவனிக்க வேண்டுமென்று அரசு அவர்களுக்குத் தெரிவிக்கும். அரசுக் கல்லூரி அல்லது அரசு உதவி பெறுகிற கல்லூரிகள் இதை நடைமுறைப் படுத்துவதற்கு கல்லூரிக் கல்வித் துறை இயக்குநர் மூலமாக முயற்சிக்கப்படும். வரும் ஆண்டில்தான் இதைச் செயல்படுத்தக்கூடிய வாய்ப்பு இருக்கிறது.

திரு. வி.கே. லட்சுமணன்: நான் சொல்ல வந்தது, பாடம் நடத்தாமலேயே practical பரீட்சையை நடத்துவது எப்படி என்றுதான் எனக்குப் புரியவில்லை. அதனால் மாணவர்கள் துன்பத்திற்கு ஆளாகிறார்கள். கல்லூரிக்கும் கெட்ட பெயர் ஏற்படுகிறது என்பதை உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

கோவை மாவட்டத்திலே அண்மைக் காலத்திலே தென்னைக்கு நோய் வந்து அந்த நோய்க்கு சரியான மருந்து கண்டுபிடிக்கப்படாமல் -தென்னை விவசாயம் பாதிக்கப்பட்டிருக்கிறது. அதேபோல

ஈரோட்டுப் பகுதியிலே மஞ்சளுக்கு நோய் வந்து மஞ்சள் விவசாயமும் வாடல் நோயினாலும் அழுகல் நோயினாலும் மிகப் பெரிதும் பாதிக்கப்பட்டு இருக்கிறது. அரசு உடனடியாக அதற்குத் தக்க தீர்வு காண முயற்சி மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கோவையிலே ஒரு கோளரங்கம் கட்ட வேண்டுமென்று நான்கு ஆண்டுகளாகப் பேராசிரியர் அவர்களிடத்திலே நான் கேட்டுக் கொண்டிருக்கிறேன். அது எந்த நிலையிலே இருக்கிறது என்றுகூடத் தெரியவில்லை.

*மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:* மாண்புமிகு தலைவர் அவர்களே, விளக்கம் சொல்வது நல்லது என்பதற்காகச் சொல்கிறேன். அந்த இடம் கிடைப்பதற்கான முயற்சியிலே ஈடுபட்டு இப்போது மாநகராட்சி மன்றம் அதற்குரிய இடத்தைத் தருவதற்கு ஒப்புக்கொண்டுவிட்டார்கள். அதற்காக நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன், மாநகராட்சி மன்ற மேயருக்கும் அதேபோல உறுப்பினர்களுக்கும், அந்த இடம் கிடைத்தாலும் அதைக் கட்டுவதற்கு 5 கோடி ரூபாயிலிருந்து 7 கோடி ரூபாய் அளவுக்கு மொத்த செலவு ஆகும். கோவை மிக வளமான நகரம் என்ற காரணத்தினால் அங்கே பொதுமக்களினுடைய ஆதரவைப் பெறுவதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக ஒரு குழு நியமிப்பதற்கு தீர்மானித்திருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினரை யும் அந்தக் குழுவில் நியமித்து அந்த நிதி திரட்டுகிற பொறுப்பை அவர்களிடத்திலே ஒப்படைப்பதாக இருக்கிறோம்.

*திரு. வி.கே. லட்சுமணன்:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவையிலே அதைவிட நல்ல இடம் இருக்கிறது. இப்போது இருக்கிற சிறிய நீதிமன்றங்களெல்லாம் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்திற்குப் போகின்றபோது, இப்போது நீதிமன்றங்கள் இருக்கிற இடம் மிகப் பெரிய இடமாக இருக்கிறது. அந்த இடத்திலே இதைக் கட்டுவது நலமாக இருக்கும் என்று நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 12-10



*மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:* மாண்புமிகு தலைவர் அவர்களே, இப்போது தந்திருக்கின்ற இடம் மிக மையமான இடம். மாநகராட்சிப் பகுதியிலே மையமான இடம். அதிகமான மக்கள் வந்து பார்க்கக்கூடிய இடம். அந்த வாய்ப்புள்ள இடம் கிடைத்திருப்பது பற்றி, மறுபடியும் மாண்புமிகு உறுப்பினர் அந்த இடத்தைப் பற்றி ஆலோசித்து கருத்துத் தெரிவித்தால் அதற்குப் பின்னர் அதுபற்றி ஆலோசிக்கலாம்.

*திரு. வி.கே. லட்சுமணன்:* அடுத்து வாக்காளர் அட்டை. ஒட்டுமொத்தமாக நாடு முழுவதும் பார்க்கின்றபோது தமிழ்நாட்டிலே மட்டும்தான் குறைவான வாக்காளர்களுக்கு புகைப்படம் ஒட்டிய அடையாள அட்டை கொடுக்கப்பட்டிருக்கிறது. 30 சதவீதம்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், மற்ற மாநிலங்களில் பல இடங்களில் இது முழு அளவாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. 2001 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலுக்கு முன்பாகவாவது இதை எல்லா மக்களுக்கும் கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அலுவலகம் கட்டிக் கொடுப்பதற்காக மாண்புமிகு முதல்வர் அவர்கள் 5 இலட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். என்னைப் பொறுத்தமட்டில் கோவையிலே எனக்கு நிலம் ஒதுக்கப்பட வேண்டும் என்று பலமுறை கேட்டிருக்கிறேன். மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் கடிதம் எழுதியிருக்கிறேன். இருந்தாலும், பணம் இருந்தும்கூட நிலம் ஒதுக்கப்படாத காரணத்தாலே அது இன்னும் கட்டப்படாமல் இருக்கிறது. எனவே, நிலம் ஒதுக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, சட்டமன்ற உறுப்பினர்களுடைய தொகுதி மேம்பாட்டு நிதியிலே கட்டப்படுகிற கட்டடங்கள், போடப்படுகிற சாலைகள் இவற்றையெல்லாம் யார் பராமரிப்பது? உள்ளாட்சி அமைப்பு சொல்கிறது, நீங்கள் போடலாம், ஆனால் நாங்கள் பராமரிக்க மாட்டோம் என்று.

*மாண்புமிகு திரு. கோ.சி. மணி:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பஞ்சாயத்துக்குக் கொடுக்கப்பட்டு, நகராட்சிக்கே கொடுக்கப்பட்டு அவர்கள் அந்த வேலையைச் செய்து அவர்கள் அதை

[திரு. கோ.சி. மணி] [2000 மார்ச் 8

எடுத்துக்கொள்கிறார்கள். பிறகு பராமரிப்பது அந்தந்தத் துறைகள்தான். நகராட்சி என்றால் நகராட்சி. யாருக்குக் கொடுக்கிறார்களோ அவர்கள்தான் பராமரிக்க வேண்டும். அவர்களுக்கே கொடுத்துவிடுகிறோம். அதற்குப் பிறகு அதிலே யாரும் தலையிடுவதற்கில்லை.

திரு. வி.கே. லட்சுமணன்: அப்படியொரு உத்தரவை நீங்கள் போட வேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

ஆளுநர் உரையிலே 20 ஆண்டுகள் புறம்போக்கு நிலத்திலே குடியிருந்தால் அவர்களுக்கே நிலம் பட்டா செய்து கொடுக்கப்படும் என்றவொரு கருத்து சொல்லப்பட்டிருக்கிறது. கோவையிலே வடக்கு வட்டாட்சியர் பகுதியிலே 733 ஏக்கர் நத்தம் புறம்போக்கு நிலமும் தெற்கு வட்டாட்சியர் பகுதியிலே 2,179 ஏக்கர் நிலமும் இருப்பதாக எனக்கு எழுத்துமூலமாக அரசு தரப்பிலே தகவல் கொடுக்கப் பட்டிருக்கிறது. இந்தப் புள்ளிவிவரம் நிச்சயமாகச் சரியாக இருக்க முடியாது என்று நான் உறுதியாக நம்புகிறேன். ஒவ்வொரு முறையும் தாழ்த்தப்பட்ட மக்களுக்காக நான் நிலம் வேண்டிச் செல்கின்றபோது, எங்கே நிலம் இருக்கிறது என்ற கேள்விதான் வருகிறதேயொழிய நிலம் இருக்கிறது, கொடுக்கிறேன் என்று யாரும் சொல்லவில்லை. ஆகையினாலே, இந்தப் புள்ளிவிவரம் சரியாக இருக்காது; நீங்கள் நிலம் கொடுக்க வேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

நல்ல வேளை, எங்களுடைய கட்சியின் செயலாளர் பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் சிமென்டின் விலையைக் குறைத்ததனாலே இன்றைக்கு சிமென்ட் கொஞ்சம் குறைவான விலையிலே கிடைக்கிறது. அதனுடைய விளைவு என்ன என்று சொன்னால் கட்டடங்கள் கட்டுவோருக்கு சதுர அடிக்கு 50 ரூபாய் குறைந்திருக்கிறது. இதை நான் பதிய வைக்க வேண்டும் என்பதற்காகத்தான் சொல்கிறேன்.

அடுத்து கிருஷ்ணா தண்ணீர். கிருஷ்ணா நீர் நமக்கு....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் பேச ஆரம்பித்து 15 நிமிடங்கள் ஆகிவிட்டன. ஒரு நிமிடத்திலே பேச்சை முடியுங்கள்.



2000 மார்ச் 8]

திரு. வி.கே. லட்சுமணன்: சரி. கிருஷ்ணா நீர் நமக்கு வரவில்லை என்றாலும்கூட அது வரும் என்ற நம்பிக்கையிலே வீராணத்தை நாம் அடியோடு கைவிட்டுவிட்டோம். 3 T.M.C. தண்ணீர் வரும் என்ற நம்பிக்கையிலே கைவிட்டுவிட்டோம். அப்படி கைவிடப் படுகின்றபோது, T.W.A.D. Board செலவழித்தது 5 கோடி ரூபாய்; பொதுப் பணித் துறை செலவழித்தது 1 கோடி ரூபாய். ஆக மொத்தம், வீராணம் திட்டத்திற்கு நாம் செலவழித்த 6 கோடி ரூபாய் முழுவதுமாகப் பயனில்லாமல் போய்விட்டது என்பதை மிகுந்த வருத்தத்தோடு சொல்லிக்கொள்கிறேன்.

மாண்புமிகு முதல்வரிடத்திலே ஒரேயொரு கோரிக்கை. வள்ளுவர் சிலை திறந்தபோது கன்னியாகுமரி மாவட்டத்திலிருக்கிற தியாகிகளுக்கு எல்லாம் நீங்கள் மானியம் கொடுத்தீர்கள். அதை நான் வரவேற்கிறேன், பாராட்டுகிறேன். அதேபோல கோவை மாவட்டத்திலே 21 சுதந்திரப் போராட்ட தியாகிகள் நீண்டகாலமாக இந்த மானியம் பெறாமல் இருக்கிறார்கள். அவர்களுக்கும் இந்த மானியத்தைக் கொடுக்க நீங்கள் ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கோவை குண்டுவெடிப்புச் சம்பவத்திலே பாதிக்கப் பட்டவர்கள் எல்லோருக்கும் நஷ்டயீடு கொடுக்கப்பட்டதாகச் சொல்லிவிட முடியாது. இன்னும் பல பேருக்கு நஷ்டயீடு கொடுக்கப்படாமல் இருக்கிறது. அவர்களுக்கும் நஷ்டயீடு கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-15

கோவையிலே இருக்கிற பத்திரிகையாளர்கள், Press Club, அவர்கள் சென்னையிலே இருப்பதைப் போல Press Club-க்கு ஒரு கட்டடம் கட்டிக்கொள்வதற்கு, நிலம் வேண்டும் என்றவொரு கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். தங்களுக்கும் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். ஆகவே, அவர்களுக்கு நிலம் ஒதுக்கி, சென்னையில் இருப்பதைப்போல, ஒரு Press Club கட்டடம் கட்டிக்கொள்வதற்கு அவர்களுக்கு வாய்ப்பு அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. வி.கே. லட்சுமணன்] [2000 மார்ச் 8

கர்நாடகா மாநிலத்திலே முத்திரைப் பதிவுத் தாள் சட்டம் மிகப் பெரிய மாறுதலுக்குள்ளாகியிருக்கிறது. அதை விவரமாகச் சொல்வதற்கு பல மணி நேரம் பிடிக்கும். நான் கேட்டுக்கொள்வது எல்லாம் அதேபோல் இங்கேயும் சட்டத் திருத்தம் செய்து, ஒரு குடும்பத்திற்குள்ளேயே சொத்தைப் பிரித்துக்கொள்வது என்று சொல்கின்றபோது, 1000 ரூபாய்க்கு மேல் யாரும் முத்திரைத் தாள் வாங்க வேண்டியதில்லை என்று கொண்டுவர வேண்டும். அதுவும் மாநகராட்சியாக இருந்தால்தான். நகராட்சியாக இருந்தால் 500 ரூபாய். கிராமமாக இருந்தால் வெறும் 250 ரூபாய்தான், அது எவ்வளவு பெரிய சொத்தாக இருந்தாலும் சரி. அப்படி ஒரு சட்டம் இருக்கிறபோது, அதேபோல தமிழ்நாட்டிலும் செய்ய வேண்டுமென்று உங்களைக் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) ஒரே ஒரு நிமிடம். ஒரே ஒரு கருத்து.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரே ஒரு நிமிடம் என்று சொல்லியே நான்கு நிமிடத்திற்கு மேல் பேசிவிட்டீர்கள்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** தஞ்சை சரஸ்வதி மகால் நூலகத்தில் 40 பேர்தான் இருக்கிறார்கள். தஞ்சை சரஸ்வதி மகால் மிகப் புகழ்பெற்ற நூலகம். அந்த நூலகத்தில் வெறும் நாற்பது பேர்தான் நிரந்தரப் பணியாளர்களாக இருக்கிறார்கள். எல்லா அரசு ஊழியர்களுக்கும் எப்படி ஊதியமும் சலுகைகளும் வழங்கப்படுகின்றனவோ, அதேபோல் அவர்களுக்கும் சலுகைகள் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. மணிமாறன்.

***திரு. இரா. மணிமாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது பேசுகின்ற வாய்ப்பு அளித்தமைக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆளுநர் உரையில் பல்வேறு அம்சங்கள், அதிலும் குறிப்பாக இப்போது இந்திய அரசாங்கம், இந்திய அரசமைப்புச் சட்டத்தை மறு ஆய்வு செய்வதற்காக ஒரு குழுவை அமைத்திருக்கக் கூடிய இந்த வேளையில், தமிழக அரசு தன்னுடைய முழுக் கவனத்தையும் அதிலே செலுத்துகின்ற வகையில் சமூக, பொருளாதார வளர்ச்சிக்கும், இந்திய ஒருமைப்பாட்டுக்கும்,



2000 மார்ச் 8] [திரு. இரா. மணிமாறன்]

சிறுபான்மை சமூகத்திற்குத் தங்களுடைய பாதுகாப்பை அளிக்கக்கூடிய வகையில் தன்னுடைய கடமையைச் செய்யும் என்று கூறியிருப்பது, தமிழக மக்களுக்கு மட்டுமல்ல; இந்திய மக்களுக்கே ஒரு வழிகாட்டியாக அமையக்கூடிய அளவுக்கு அந்தச் சொற்றொடர், அந்த வாசகம் அமைந்திருப்பது அறிவுசார்ந்த அனைவரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு வாசகம் ஆகும்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் திரு. குத்தாலம் பி. கல்யாணம் தலைமை)

இப்போது மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வழங்குவது குறித்து ஓர் ஆய்வு நடைபெறுகிற இந்த வேளையிலே, பல்வேறு கால கட்டங்களில் மத்திய அரசு பல்வேறு கமிஷன்களை அமைத்திருக்கிறது. சர்க்காரியா கமிஷன், அதைத் தொடர்ந்து மாநில அரசு இராஜமன்னார் குழு அறிக்கை போன்றவற்றையெல்லாம் ஒருங்கிணைத்துத்தான் இந்த மன்றத்திலேகூட மாண்புமிகு முதல்வர் அவர்களால் கடந்த காலங்களிலே மாநில சுயாட்சியை வலியுறுத்தி இங்கே தீர்மானம் நிறைவேற்றி அனுப்பப்பட்டது.

அரசியல் நிர்ணய சபை தோற்றுவிக்கப்பட்ட நேரத்தில். ஆரம்ப நிலையில் மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வழங்கக்கூடிய அளவிலேதான் அரசியல் நிர்ணய சபை தன்னுடைய கடமையைத் தொடங்கியது. ஆனால் பாகிஸ்தான் பிரிவினையினால் ஏற்பட்ட பல சம்பவங்கள், அரசியல் நிர்ணய சபை தன்னுடைய தொலைநோக்குப் பார்வையைச் சற்று சுருக்கிக் கொண்டு - சற்று என்று சொல்ல முடியாது - முழுமையாகவே சுருக்கிக் கொண்டு, மாநிலங்களுக்குக் கொடுக்கப்படுகிற அதிகாரங்களையெல்லாம் குறைத்து, ஒற்றை ஆட்சி முறை என்று சொல்கின்ற அளவுக்கு, மத்திய அரசுக்கு அதிக அதிகாரங்களை வழங்கி, மத்திய அரசு ஒரு எஜமானன் என்ற நிலையிலே இருந்தும், மாநில அரசுகள் வேலைக்காரன் என்ற நிலையிலிருந்தும், அப்படி ஆட்டிப் படைக்கக்கூடிய ஓர் அரசமைப்புச் சட்டமாக அமைந்தது என்று அரசியல் நிர்ணய சபையின் மூலமாக, இந்திய அரசமைப்புச் சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டபோது, பல்வேறு அறிஞர்கள் - இன்னும் சொல்லப்போனால், அரசமைப்புச் சட்டத்தை உருவாக்கிய அம்பேத்கர் அவர்கள் கூட மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வழங்க முடியாத அளவுக்கு இந்த அரசமைப்புச் சட்டம்

[திரு. இரா. மணிமாறன்] [2000 மார்ச் 8

அமைந்திருக்கிறது என்று தன்னுடைய கருத்தைச் சொல்லக்கூடிய அளவுக்கு இருந்தது. ஆனால் அன்றிலிருந்து தொடர்ச்சியாக மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டுமென்று தொடர்ந்து வலியுறுத்தி வருவது திராவிட முன்னேற்றக் கழகம் என்பதை நாடு அறியும். அந்த அடிப்படையிலேதான், இராஜமன்னார் குழு அறிக்கை அடிப்படையிலே இங்கே மாநில சுயாட்சித் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அப்போதுகூட சிலர் அதை வேடிக்கையாகச் சொன்னார்கள். அவர்களுக்கெல்லாம் பதில் அளிக்கின்ற வகையில், 1967 ஆம் ஆண்டே மூதறிஞர் இராஜாஜி அவர்கள் ஒரு கருத்தை வெளியிட்டார்கள்.

பிற்பகல் 12-20

'திராவிட முன்னேற்றக் கழகம் பிராந்தியக் கட்சி என்று மேலோட்டமாக சிலர் கருதலாம். ஆனால் எல்லா மாநில அரசுகளுக்கும் நியாயமான சுயாட்சி என்கிற அடிப்படையில் ஓர் உண்மையான கூட்டாட்சி உருவாவதற்குத்தான் திராவிட முன்னேற்றக் கழகம் பிரதிநிதியாக இருக்கிறது. செயல்பட முடியாத, திறமையற்ற, கொடுமையான மத்திய அரசுக்கான தேசிய எதிர்ப்பைத்தான் திராவிட முன்னேற்றக் கழகம் பிரதிபலிக்கிறது' என்று அன்று மூதறிஞர் இராஜாஜி அவர்கள் சொன்னார்கள்.

இன்று நேற்றல்ல. தொடர்ச்சியாகவே பேரறிஞர் அண்ணா அவர்கள் மாநிலங்களவையில் பேசியபோதுகூட ஒரு கருத்தை வலியுறுத்தினார்கள். 'திராவிட முன்னேற்றக் கழகம், திராவிட நாடு பிரிவினை கொள்கையைக் கைவிட்டிருக்கிறது. ஆனால் பிரிவினை கேட்டதற்கான காரணங்களை இன்னமும் வலியுறுத்திக் கொண்டிருக்கிறது, அதுதான் மாநில சுயாட்சி' என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் அன்றைக்குச் சொன்னார்கள். அதுதான் இந்த ஆளுநர் உரையிலே இங்கே வலியுறுத்தப்பட்டு அதை மறு ஆய்வுக் குழுவிலே தன்னுடைய எண்ணங்களை பிரதிபலிக்கக்கூடிய அளவிற்கு அந்தச் சொற்றொடர் அமைந்திருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

இன்னும்கூட ஒரு விஷயம். மாநில சுயாட்சிப் பிரச்சினையில் என்னுடைய கருத்து, இதுவொரு நல்ல சந்தர்ப்பம். இந்தச் சந்தர்ப்பத்திலே எப்படி இங்கே சட்டமன்றத்திலே தலைவர் கலைஞர்



2000 மார்ச் 8] [திரு. இரா. மணிமாறன்]

அவர்கள், மாண்புமிகு முதல்வர் அவர்கள், ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி அனுப்பினார்களோ, அந்தத் தீர்மானத்தின் அடிப்படையில், அந்தக் குழுவிடம் வாதாடுவதற்கு ஒரு குழுவை அமைத்து, அந்தக் குழுவே நம்முடைய மாநில சுயாட்சிக் கொள்கையை வலியுறுத்தக்கூடிய அளவிற்கு, அமைப்பதற்கு ஒருவழிவகையைக் காணலாம். ஒரு நல்ல சந்தர்ப்பம். இந்தச் சந்தர்ப்பத்தை நாம் பயன்படுத்துவதற்கு ஒரு வாய்ப்பாக இருக்கும். ஏனென்றால், மாநில சுயாட்சி தீர்மானத்தினுடைய தொடர்ச்சியாக பல்வேறு நிலைகளில் நாம் வலியுறுத்தியதற்கு, அதுவொரு வாய்ப்பாக அமையும் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னொன்று. தென் மாவட்டங்களுக்கான சமூக, பொருளாதார, தொழில் வளர்ச்சி குறித்து நீதியரசர் திரு. ரத்தினவேல் பாண்டியன் தலைமையிலே அமைக்கப்பட்ட குழு தன்னுடைய சுற்றுப்பயணங்களை முடித்து, ஓர் இடைக்கால ஆய்வு அறிக்கையை மாநில அரசுக்கு அளித்திருக்கிறது, இன்னும் இறுதி அறிக்கையை அளிக்கவிருக்கிறது. இது, தென் மாவட்டங்களிலே பொருளாதார வளர்ச்சி குன்றி, படித்த இளைஞர்கள் தங்களுடைய பார்வையை வேறு பக்கம் திருப்பி, சமூக விரோத செயல்களில் ஈடுபடுவதைத் தடுப்பதற்கான, இன்னும் சொல்லப்போனால், அவர்களுக்கு வேலைவாய்ப்பை அளிப்பதற்கான ஒரு சூழ்நிலையை உருவாக்குவதற்கு இந்தக் குழுவினுடைய அறிக்கை வழிவகை காணும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். யாரும் செய்யவில்லை, இதற்கு முன்னால் இருந்த எந்த ஆட்சியும் சரி, தொடர்ச்சியாக சமூகப் பொருளாதார மேம்பாட்டிற்காக திராவிட முன்னேற்றக் கழக அரசு, தன்னுடைய பங்களிப்பினை, தன்னுடைய முழுக் கவனத்தை இதிலே செலுத்தி வருகிறது என்பதற்கு இதுவொரு உதாரணம். அதிலேதான் பல்வேறு விஷயங்கள்; தொழில் வளர்ச்சியை ஏற்படுத்த வேண்டுமென்பதற்காக கொடுக்கப்பட்ட அறிக்கைகள். திண்டுக்கல் மாவட்டத்திலேகூட சுற்றுப்பயணம் வந்தபோது நீதியரசர் அவர்களிடம் சொன்ன விஷயங்கள், பல்வேறு இயற்கை வளங்கள் நிறைந்திருக்கக்கூடிய இந்தப் பகுதியில் மத்திய அரசு மூலமாகவும், மாநில அரசு மூலமாகவும், பல தொழிற்சாலைகளை உருவாக்குவதன் மூலமாகவும், இன்னும் சொல்லப் போனால், விவசாய மேம்பாட்டுத்

திட்டங்களை உருவாக்குவதன் மூலமாகவும், திசைமாறி செல்லக்கூடிய இளைஞர்களுக்கு ஒரு வாழ்வு அளிக்கக்கூடிய அளவிற்கு அந்தப் பரிந்துரை அமைந்திடும், அந்தப் பரிந்துரையின் அடிப்படையில் மாநில அரசு தன்னுடைய கடமையைச் செய்து தரும் என்ற நம்பிக்கையிலேதான் பல்வேறு கருத்துக்களை இங்கே சொல்லியிருக்கிறோம். அதைத்தான் நீதியரசர் அவர்களுடைய அறிக்கையின் மூலமாக, தென் மாவட்டங்களில் சமூகப் பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்துவதற்கு வழிவகை காணப்படும் என்று ஆளுநர் உரையில் தெரிவித்திருப்பது வரவேற்கக்கூடிய விஷயமாகும்.

இன்னொன்றுகூடச் சொன்னார்கள். இது கல்லூரி ஆண்டறிக்கை என்று பேசினார்கள்; கருத்துக்களைச் சொன்னார்கள். இந்த நான்காண்டுக் காலத்தில் நடந்து முடிந்து இருக்கக்கூடிய பணிகள், தமிழகத்திலே அடிப்படைத் தேவைகள் என்பது சுதந்திர இந்தியாவில் முழுமையாகச் செயல்படவில்லை என்பது ஒரு குறை. ஆனால் கடந்த 1996 ஆம் ஆண்டிலிருந்து இந்த நான்காண்டு காலத்தில், தனி மனிதர்கள் அல்ல, ஒரு சமூக அமைப்பின் அடிப்படைத் தேவைகள் என்ற அடிப்படையில் குடிநீர் வசதி, சாலை வசதி, சுகாதார வசதி, தெருவிளக்கு போன்ற வசதிகள் இங்கே முழுமையாகச் செய்யப்பட்டிருக்கின்றன. இதைக் கல்லூரி ஆண்டறிக்கை என்று வேண்டுமானால் வைத்துக்கொள்ளலாம், திராவிட முன்னேற்றக் கழக சாதனைப் பட்டியல் என்றுகூட வைத்துக் கொள்ளலாம். அந்த அளவிற்கு, எந்தக் கிராமத்திற்குச் சென்றாலும் அங்கே 50,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட தண்ணீர்த் தொட்டி இருக்கிறது, அங்கே ஒரு மருந்தகம், நூலகம் இருக்கிறது, சாலை போடப்பட்டிருக்கிறது. இதை மக்கள் எல்லாம் சொல்லக்கூடிய அளவிற்கு இந்த அரசால் நான்காண்டு காலத்திலே மிகப் பெரிய சாதனை செய்யப்பட்டு இருக்கிறது. இந்த அரசினுடைய சாதனைகளை சாதாரண கிராமப்புற மக்கள்கூட ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். கிராமப்புறங்களிலே இருக்கக்கூடிய மக்கள், அந்தப் பகுதியிலே சுற்றுப்பயணம் செய்யக்கூடிய நேரத்தில் கேட்கக்கூடிய கேள்வி, நீங்கள் குடிநீர் வழங்கியிருக்கிறீர்கள், தெருவிளக்குகளை ஏற்படுத்தித் தந்திருக்கிறீர்கள்; சாலை வசதிகளை செய்து தந்திருக்கிறீர்கள். இவ்வளவு வசதிகளைச் செய்து கொடுத்த நீங்கள் மேலும் சில வசதிகளைச் செய்து



தரக்கூடாதா என்று அவர்கள் கேட்கிறார்கள். அப்போது இவ்வளவு செய்திருக்கிறோமே, இன்னொரு கிராமத்திற்குச் செய்யக் கூடாதா என்று சொல்லும்போது செய்யக்கூடிய உங்களைப் பார்த்துத்தானே நாங்கள் கேட்க முடியும், செய்யாதவர்களைப் பார்த்து நாங்கள் கேட்க முடியாது என்கிறார்கள். இந்த அரசாங்கம் தொடர்ந்து கிராமப்புற மக்களுக்கு அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவதில் முதன்மையாகச் செயல்படுகிறது. இன்னும் சொல்லப்போனால் மிகத் தீவிரமாகச் செயல்படுகிறது என்ற அடிப்படையிலேதான் மக்கள் மேலும் மேலும் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். எனவே, இந்த ஆளுநர் உரை ஓர் அரசியல் சாசனம் என்று சொல்லத்தக்க அளவிற்கு மக்களுடைய மேம்பாட்டுத் திட்டத்தை உறுதிப்படுத்தக்கூடிய அளவிற்கு அமைந்திருக்கக்கூடியது என்று இந்த அவையில் தெரிவித்துக்கொள்கிறேன்.

என்னுடைய சிறு வேண்டுகோள். மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் இருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இருக்கிறார்கள். பல ஆண்டுகளாக நாங்கள் கோரி வரக்கூடிய திண்டுக்கல் குடிநீர்ப் பிரச்சினை, காவிரி குடிநீர்த் திட்டத்தை நீங்கள் நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டு இந்த வாய்ப்பு தந்த உங்களுக்கு நன்றி கூறி அமைகிறேன், வணக்கம்.

*பிற்பகல் 12-25*

***Hon. Chairman (Thiru Kuttalam P. Kalyanam):*** Hon. Member, Thiru B. Venkatasamy.

***Thiru B. Venkatasamy:*** Honourable Temporary Speaker Sir, on behalf of the B.J.P. I welcome the Address by Justice Selvi M. Fathima Beevi, the Governor of Tamil Nadu. I speak in support of my amendment to the Motion of Thanks to the Governor's Address, namely, the need for creation of Telugu Academy, Kannada Academy and Malayalam Academy in Tamil Nadu for the promotion of the South Indian languages and opening of Uzhavar Santhai type of markets in all major cities for the benefit of the consumers.

There are very good salient features mentioned in the Governor's Address like installation of Iyyan Tiruvalluvar Statue at

Kanyakumari, contribution of Rs.50 crores to the National Defence Fund for the patriotism displayed by the Jawans and contribution to the Cyclone Relief Fund, Orissa, establishment of Urdu Academy in Tamil Nadu, increase in plan outlay from Rs.4500 crores to Rs.5250 crores, irrigation schemes with the aid of NABARD for investment in upgradation of minor irrigation tanks, desilting of channels, etc., holding health camps in rural areas, introduction of livestock promotion scheme by conducting nearly 297 camps in Tamil Nadu, opening of Uzhavar Santhais in about 100 centres, attracting new industries by opening industrial parks in Tamil Nadu and by creating infrastructure facilities, computerisation of district headquarters, generation of power by private sector, allotment of Rs.215 crores to improve roads and streets in the urban areas, provision of fire-proof houses to nearly 12,082 families in Tamil Nadu and provision of house sites for poor people who have occupied poromboke lands for the past 20 years. Like this a lot of things have been mentioned in the Governor's Address, Sir.

Some more important matters have not been mentioned. I hope the Honourable Chief Minister will consider them in the coming Budget session. I am very happy that you have created an Urdu Academy in Tamil Nadu. There are nearly 39% of Telugu speaking people in Tamil Nadu and I request you to see that a Telugu Academy is created. Kannada and Malayalam speaking people are also there and I also request you to see that all the South Indian languages, the Dravidian languages are given more importance and academies are established to improve those languages.

Coming to the other point, namely, Uzhavar Santhai, it was my brainchild. Nearly 30 years back I spoke in the Assembly about opening markets for the vegetables. Our Honourable Minister Veerasamiji has come to open it in the place of our Honourable Chief Minister. It was the first centre and it is running very well in the State. I came to understand that nearly Rupees One lakh worth of goods are sold there everyday and Rs.2.5 lakhs worth of goods are sold on Sundays. I am also one of the ryots. I have sold my water-melons in the market. I myself went there and



sold in the market. (The gong was sounded) I will finish, Sir. So, it is a very good thing you have done. But the space is not sufficient and a lot of vegetables are also produced there. It may be sent to the other Uzhavar Markets. I request the Honourable Chief Minister to arrange for sending the vegetables to other markets from Hosur. I thank the Honourable Chief Minister for opening such santhais. Actually, the ryots are benefitted and the consumers are also benefitted, Sir.

*பிற்பகல் 12-30*

Coming to the other point Sir, nearly 15,000 houses have been constructed in Hosur Municipality. I came to understand that the municipal areas are not eligible for assigning lands. I request you to see that the municipal areas are also assigned.

***Hon. Chairman (Thiru Kuttalam B. Kalyanam):*** Please conclude within a minute.

***Thiru B. Venkatasamy:*** I have not touched my constituency Sir. I will finish within two minutes Sir, please. Nearly 15,000 houses, (the gong was sounded) two minutes please. I will finish within two minutes, Sir.

***Hon. Chairman (Thiru Kuttalam B. Kalyanam):*** No, No.

***Thiru B. Venkatasamy:*** 15,000 houses have been constructed in Hosur, Sir. (The gong was sounded) I will finish within two minutes Sir. I have not touched my constituency Sir. Please give me two minutes, Sir. I will finish within one minute Sir. I request that relaxation may be given in the municipal areas also Sir.

Regarding Kelavarapalli Anaicut, the 4(1)A Notification was not published. I request you to see that it is done Sir. Regarding Thorapalli Anaicut, Budinatham Anaicut, Iranapalli Periya Anaicut, all these.....

***மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. குத்தாலம் பி. கல்யாணம்):*** மாண்புமிகு உறுப்பினர் திரு. லா. சந்தானம்.

[2000 மார்ச் 8

*திரு. லா. சந்தானம்:* மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையிலே பேசுவதற்கு வாய்ப்பு அளித்த தங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த ஆளுநர் உரையிலே தமிழக அரசினுடைய பல்வேறு நலத் திட்டங்கள் குறிப்பிடப்பட்டிருந்தாலும்கூட, அந்த நலத் திட்டங்களிலே குறிப்பிடப்படாது இருக்கின்ற சில விவரங்களை எடுத்துச் சொல்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன் என்கிற முறையில் இங்கு நமது முதலமைச்சர் அவர்கள் வருகின்ற பட்ஜெட் கூட்டத் தொடருக்கு முன்னால் விவசாயப் பெருங்குடி மக்களையும், வியாபாரிகளையும் அழைத்துப் பேசி அவர்களுக்கு இருக்கின்ற கஷ்டங்களையெல்லாம் தெரிந்துகொண்டு அதற்கு ஏற்றாற்போல் வருகின்ற நிதிநிலை அறிக்கையை அமைத்திட வேண்டுமென்ற நோக்கத்தோடு அவர்களையெல்லாம் அழைத்துப் பேசுவதற்கு தேதிகளை ஒதுக்கியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட நல்ல உள்ளம் படைத்த நமது முதல்வர் அவர்கள் விவசாயப் பெருங்குடி மக்களுடைய நன்மைகளுக்காக உழவர் சந்தைகளையெல்லாம் திறந்திருந்தாலும் அந்த உழவர் சந்தைகளின் மூலமாக ஒரு குறிப்பிட்ட விவசாயிகள், ஒரு உழவர் சந்தையிலே ஏறத்தாழ 150 விவசாயிகள்தான் பலன் அடைய முடிகிறது. ஒட்டுமொத்தமான விவசாயிகளும் பயன் அடைகின்ற அளவிலே, இன்றைக்கு விவசாயம் ஒன்றுதான் கால நிலையை நம்பி, இயற்கையை நம்பி, அந்த இயற்கை சூழ்நிலைக்கு ஏற்றவாறு அமைகின்ற ஒன்றாக இருக்கிறது. ஏற்கெனவே, தென் மாவட்டங்களைப் பொறுத்த அளவிலே இந்த ஆண்டு மழை மிகக் குறைவாக இருந்த காரணத்தினால் இராமநாதபுரம் போன்ற மாவட்டங்களில் எல்லாம் மிகப் பெரிதாக அவர்கள் பயிர் செய்திருந்த பயிர்கள் எல்லாம் பாதிக்கப்பட்ட நிலை. தொடர்ச்சியாக ஏறத்தாழ 5, 10 ஆண்டுகளாக விவசாயிகளுடைய விவசாயம் சரியாக இல்லாமல், அது பொய்த்துவிட்டது என்கிற நிலைதான் இருக்கிறது. ஒன்று வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கும், இல்லையென்றால் பெரும் மழையினால், வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டிருக்கிற சூழ்நிலை இருக்கிற காரணத்தினால், அவர்கள் கூட்டுறவு வங்கியிலே பெற்றிருக்கிற கடன்களைக் கட்ட முடியாத இக்கட்டான சூழ்நிலையிலே வைக்கப்பட்டிருக்கிறார்கள். அந்தக் கடன்களைத் தள்ளுபடி செய்வதற்கு நபார்டு நிறுவனத்தோடு சென்ற அரசு போட்டுக்கொண்ட ஒரு ஒப்பந்தம்தான் தடையாக இருக்கிறது



2000 மார்ச் 8] [திரு. லா. சந்தானம்]

என்பதனை அமைச்சர் அவர்கள் சுட்டிக்காட்டினார்கள். கடந்த ஆட்சிக் காலத்திலே செய்திருக்கின்ற தவறுகளையெல்லாம் பல்வேறு கோணத்திலே இந்த அரசு எடுத்துக்கொண்டு நீதிமன்றங்களுக்கு எல்லாம் சென்று இருக்கும்போது விவசாயிகளின் நலனைக் கருதி, அந்த ஒப்பந்தத்தை எப்படியாவது மாற்றுகின்ற வகையிலே ஒரு முயற்சியினை மேற்கொண்டு, அந்த விவசாயிகளுக்குக் கடன் தள்ளுபடி என்கிற சலுகையை நிதிநிலை அறிக்கையிலே அளிக்க வேண்டும். நேற்றைக்கு முன்தினம் இந்த விவாதத்திலே கலந்து கொண்டு பேசுகின்றபோது நமது இந்திய கம்யூனிஸ்ட் கட்சி நண்பர்கள் இதைக் குறிப்பிடுகின்ற நேரத்திலே முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

பிற்பகல் 12-35

இதைத் தள்ளுபடி செய்துவிடலாம்; ஆனால், நிதிப் பற்றாக்குறை காரணமாகத்தான் செய்ய முடியவில்லை என்பது போல இங்கு குறிப்பிட்டார்கள். ஆனால், முதல்வர் அவர்கள் மத்திய அரசு பொது விநியோக அரிசியினுடைய விலையைக் கூட்டியிருந்தாலும் கூட, தமிழக மக்களினுடைய, ஏழை எளிய மக்களினுடைய நன்மையைக் கருதி அதை நாங்கள் உயர்த்த மாட்டோம் என்று சொன்னார்கள். அதைக்கூட நமது தமிழ் மாநில காங்கிரஸ் நண்பர்கள் குறிப்பிட்டுக்காட்டி, ஏன் நீங்கள் மத்திய அரசோடு வாதாடி, நீங்கள் தருகின்ற அந்த 300 கோடி நஷ்டத்தை அவர்களே ஏற்றுக்கொள்கின்ற அளவிற்கு, அதை நீங்கள் வாதாடி குறைக்க வைக்கலாமே என்று கேட்கின்றபோது, ஆயிரம் கோடி ரூபாய் நஷ்டத்தை ஏற்கெனவே இந்த அரசு தாங்கிக் கொண்டு, பொது விநியோக அரிசி வழங்கிக் கொண்டிருக்கிறது.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

இந்த 300 கோடி ரூபாயையும் தாங்கிக் கொள்ள முடியும் என்பதுபோல நமது முதல்வர் அவர்கள் பதில் அளித்தார்கள். அதேபோலத்தான், இந்த விவசாயிகள் பட்டிருக்கின்ற கடனையும் ஏறக்குறைய அவர்களுக்கு 300 கோடி ரூபாய் அளவுக்குத் தள்ளுபடி செய்தாலே, எல்லா விவசாயிகள் பட்டிருக்கின்ற கடனும் தள்ளுபடி ஆகின்ற நிலை இருக்கும் என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நான் எடுத்துச் சொல்லி, எப்படி இந்த பொது

[திரு. லா. சந்தானம்] [2000 மார்ச் 8

விநியோக அரிசியிலே ஏற்படுகின்ற நஷ்டத்தைத் தாங்குவதற்கு வழிவகைகளை இந்த அரசு தேடிக் கண்டுபிடித்துக்கொள்கிறதோ, அதுபோல இதில் ஏற்படுகின்ற அந்த இழப்பீட்டையும் தாங்கிக்கொண்டு வழிவகைகளைத் தேடி விவசாயிகளுடைய கடனைத் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

அதோடு 20 ஆண்டுகளுக்கு மேலாக அரசு புறம்போக்கு நிலங்களிலே குடியிருப்பவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கலாம் என்ற ஒரு நல்ல திட்டத்தை அறிவித்து இருக்கிறார்கள். இப்போது பெருவாரியான கிராமப்புறங்களிலே இருக்கின்றவர்கள் அந்தப் பட்டா இல்லாத நிலையிலேதான் தங்களுடைய வீடுகளை அமைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், அரசு நிலங்களிலே பல்வேறு வகைப்பட்ட நிலங்கள் இருக்கின்றன. பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான நிலங்கள் இருக்கின்றன, ஓடைப் புறம்போக்கு இருக்கிறது, நத்தம் புறம்போக்கு இருக்கிறது, இப்படிப் பல்வேறு புறம்போக்குகள் இருக்கின்றன. மேலும் வன இலாகாவைச் சேர்ந்த நிலங்கள்கூட சில இடங்களிலே கிராமத்திற்குள்ளாகக்கூட வருகின்றன. அங்கே வீடுகள் வைத்துக்கொண்டிருக்கிறவர்கள் ஆயிரக்கணக்கான பேர் இருக்கிறார்கள். ஆகவே, எல்லாப் புறம்போக்குகளையும், எந்தப் புறம்போக்கிலே வீடு வைத்து இருந்தாலும் அவர்களுக்கு பட்டா கொடுக்கலாம் என்று ஒட்டுமொத்தமான ஒரு நிலையை இந்த அரசு எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு தென் மாவட்டங்களிலே, அங்கு இருக்கின்ற பொருளாதாரச் சூழ்நிலையின் காரணமாகத்தான், அவர்கள் பொருளாதாரத்திலே நலிந்து கொண்டிருக்கின்ற நிலையின் காரணமாகத்தான்,வேலைகள் இல்லாது இருக்கின்ற காரணங்களால்தான், இனக்கலவரங்கள் எல்லாம் உருவாகின்றன என்பதை உணர்ந்து நீங்கள் ஒரு குழுவும் அமைத்து அது தனது அறிக்கையை இங்கு சமர்ப்பித்து இருக்கிறது. அந்தக் கலகங்கள் ஓய்ந்தாலும்கூட, மழை ஓய்ந்தாலும் தூரல் ஓயவில்லை என்பதுபோல, பல்வேறு இடங்களிலே அந்தக் கலவரங்கள் மூலமாக வெளியேற்றப்பட்ட மக்கள் மீண்டும் அந்தப் பகுதியிலே ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை முடியுங்கள்.



2000 மார்ச் 8]

**திரு. லா. சந்தானம்:** அந்தக் கிராமங்களிலே குடியிருக்க முடியாத அளவிற்கு சூழ்நிலை இன்றைக்கும் இருக்கிறது. எனவே, அவர்களையெல்லாம் அந்தந்த இடங்களிலே குடியமர்த்துவதற்குரிய முயற்சிகளை இந்த அரசு மேற்கொள்ள வேண்டும்.

அதேபோல, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு, பல்வேறு துறைகளிலும் வேலைவாய்ப்பு என்பது இன்றைக்கு 20 சதவீத அளவிற்கு என்று இந்த அரசு நிர்ணயம் செய்து இருந்தாலும்கூட அவையெல்லாம் அளிக்கப்படவில்லை என்கின்ற நிலை இருக்கின்ற காரணத்தினால், வருகின்ற காலங்களில் அந்த வேலை வாய்ப்புகளிலே மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு முன்னுரிமை கொடுத்து, அந்த 20 விழுக்காட்டைப் பூர்த்தி செய்வதற்கு இந்த அரசு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டு அமைகிறேன், நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஏ.வி.ஏ. நாசர், 5 நிமிடங்கள்தான்.

**திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆளுநர் உரைமீது பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்காக எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆளுநர் உரையை, தமிழ் மாநில தேசிய லீக் கட்சியின் சார்பாக முழுமனதோடு வரவேற்று ஒருசில கருத்துக்களை இங்கே முன்வைக்க விரும்புகின்றேன். ஆளுநர் உரையில் அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், நமக்கு நாமே திட்டம், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம், வரும்முன் காப்போம் திட்டம், விவசாயிகள் நலனைக் காக்க தொகுதிக்கு ஓர் ஏரி தூர் வாரும் திட்டம், தரிசு நில மேம்பாட்டுக்காக 10 ஆயிரம் ஏக்கர் மேம்பாட்டுத் திட்டம், உலக அளவிலே தமிழர்களின் புகழை நிலைநிறுத்துகின்ற அளவிலே குமரிமுனையிலே திருவள்ளுவருக்கு 133 அடி உயர சிலை வைத்து, அதன் வாயிலாக உலகத்திலேயே மிக உயரமான திருவள்ளுவர் சிலையைத் திறந்து வைத்து, குமரிமுனையில் தமிழர் சிலை எனும்போது பெருமகிழ்ச்சி அடைகிறோம்.

அதுமட்டுமல்ல, எல்லாவற்றிற்கும் மேலாக உழவர் மனம் குளிரும் வகையிலே உழவர் சந்தை அமைத்து, உழவர்கள் இடைத்தரகர்கள் இன்றி, மக்களிடையே தங்களுடைய பொருள்களை

விற்று, இலாபம் ஈட்டக்கூடிய வகையிலே அவர்களுக்கு ஒரு நல்ல ஏற்பாட்டைத் தமிழக அரசு செய்து தந்திருக்கிறது.

பிற்பகல் 12-40

நம்முடைய ஆளுநர் உரையிலே இவற்றையெல்லாம் பார்க்கும்போது நிச்சயமாக இந்தக் ஆளுநர் உரை என்பது ஓர் ஆண்டறிக்கை அல்ல, இந்த மக்களுக்கு இந்த அரசு செய்கின்ற சேவையை எடுத்துரைக்கும், பிரதிபலிக்கும் உரை என்பதை நான் இங்கே எடுத்துக்கூற ஆசைப்படுகிறேன்.

இந்த உழவர் சந்தை எனும்போது, சல்லல்லாகு அலைகு அசல்லம் முஹம்மது நபி (சல்) அவர்களுடைய காலத்திலே, விவசாயிகள் மெக்கா மாநகருக்கு தங்களுடைய விளை பொருள்களையெல்லாம் கொண்டு வந்து விற்பதற்கு வரும்போது அங்கேயிருக்கக்கூடிய இடைத்தரகர்கள், பெருந்தனவந்தர்கள் எல்லாம் அந்த விவசாயிகளை மிரட்டி, அவர்களிடமிருந்து அடிமாட்டு விலைக்கு வாங்கி, பெரும் இலாபத்திற்கு விற்கக்கூடிய நிலையிலே, முஹம்மது நபி (சல்) அவர்கள் அப்போது இப்படிப்பட்ட ஒரு நிலையை ஒரு தனிப் படையை உருவாக்கித்தான், அந்தப் படையின் மூலமாக இவற்றையெல்லாம் கட்டுப்படுத்தச் செய்து உழவர்களுக்கு நன்மை பயக்கச் செய்தார். அந்த முறையிலே இப்போது தமிழக அரசு இப்படிப்பட்ட ஒரு திட்டத்தைத் தீட்டியிருக்கிறது என்று எண்ணும்போது நாங்கள் அதனை பெருமகிழ்ச்சியோடு வரவேற்று வாழ்த்துகின்றோம்.

எங்கள் இஸ்லாமிய மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான இட ஒதுக்கீட்டுக் கொள்கையோடு, உருது அகாடமியையும் கேட்டிருந்தோம். உருது அகாட்மியை இன்றைக்கு வழங்கி நசிந்து கொண்டிருக்கிற உருது மொழியை நிலைநிறுத்துகின்ற வகையிலே, உருதுமொழியை மேம்படுத்துகின்ற வகையிலே வழி செய்யப்பட்டுள்ளது. அதற்காக தமிழ் மாநில தேசிய லீகின் சார்பாக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அதோடு வருகின்ற பட்ஜெட் கூட்டத்தொடரிலே இஸ்லாமிய மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான இட ஒதுக்கீட்டையும் நீங்கள் அறிவிக்க வேண்டுமென்று நாங்கள் கேட்டுக்கொள்கிறோம். ஏனென்று சொன்னால் உங்களைத் தவிர வேறு யாரும் எங்களுக்கு இட ஒதுக்கீடு



தர முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி) தருகின்ற எண்ணமும் இல்லை என்பதையெல்லாம் அவர்கள் இன்றைக்கு நிரூபித்துக் கொண்டிருக்கிறார்கள். இப்போது இஸ்லாமிய இயக்கங்கள் என்று சொல்லும் இயக்கங்கள் சில ஜெயலலிதாவை, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆதரித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், இந்த இட ஒதுக்கீடு கேட்பதென்பது ஒரு நியாயமான கோரிக்கைதான் என்பதைக்கூட ஏற்று, அதற்காக ஓர் ஆதரவு அறிக்கைகூட வெளியிட மனமில்லாதவர்தான் இந்த ஜெயலலிதா. இஸ்லாமிய அமைப்பினர் என்று சொல்லக்கூடியவர்கள் சிலர் அவர்களை ஆதரித்துக் கொண்டிருக்கிறார்கள். நிச்சயமாக உங்களுடைய ஆட்சிக் காலத்திலேதான் இஸ்லாமியப் பெருமக்கள் இட ஒதுக்கீடு பெறுகின்ற வாய்ப்பு கிடைக்கும். உங்களை விட்டால் வேறு யாரும் தருவதற்கு இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, தயவுசெய்து எங்களுக்கு இட ஒதுக்கீடு அளிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நாங்கள் கேட்டுக்கொள்கிறோம்.

அதேபோல தமிழ் வழிக் கல்வி. தமிழ் வழிக் கல்வி கற்பதால் ஹிந்தி புகுந்துவிடும் என்ற ஒரு பிரச்சாரம் செய்யப்படுகிறது. ஹிந்தி எதிர்ப்புப் போராட்டத்திலே தன்னை அர்ப்பணித்துக்கொண்ட நம்முடைய தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியிலே ஹிந்தி மொழி மூக்கின் நுனியளவுகூட நுழைந்துவிட முடியாது என்பதை உறுதியிட்டுச் சொல்ல முடியும். தமிழ்வழி கற்பதனால் நம்முடைய மாணவர்கள் எல்லாம் எதிர்காலத்திலே சிரமப்படுவார்கள் என்று சிலர் சொல்கிறார்கள். ஆனால் ஜப்பான் இன்றைக்கு மிக உயர்ந்த நாடு. அதிகத் தொழில் வளர்ச்சி பெற்றிருக்கக்கூடிய ஒரு நாடு. அந்த நாட்டிலே ஆங்கிலம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சீக்கிரம் பேசி முடியுங்கள்.

திரு. ஏ.வி.ஏ. நாசர்: ஒரு நிமிடத்தில் பேசி முடித்துவிடுகிறேன். தொகுதி பற்றி இரண்டு கருத்துக்களைச் சொல்லி முடித்துவிடுகிறேன்.

ஆனால் ஜப்பான், பிரான்ஸ் மற்றும் ரஷ்யா போன்ற நாடுகளிலே அவர்கள் தாய்மொழியிலே கற்ற காரணத்தினாலேதான் -- முதன்முதலாக ரஷ்யா தன்னுடைய குடிமகனை விண்ணுலகத்திற்கு, சந்திர மண்டலத்திற்கு அனுப்பிவைத்த சரித்திரப் புகழ் எல்லாம் இருக்கிறது.

என்னுடைய தொகுதி குறித்து ஒன்றிரண்டு கோரிக்கைகளை வைக்க ஆசைப்படுகிறேன். எங்களுடைய கடலூர் மாவட்டத்தில் சிதம்பரம் மற்றும் காட்டுமன்னார்குடி தாலுகாவிலே சமீபத்தில் பெய்த மழையின் காரணமாக உளுந்து பயிர்கள் எல்லாம் சுத்தமாக நாசமாகிப் போய்விட்டன. அதனால் விவசாயிகள் பெருத்த நஷ்டம் அடைந்திருக்கிறார்கள். கருணையுள்ளம் கொண்ட தமிழக முதல்வர் அவர்கள், அவர்களுக்கு உரிய நஷ்ட ஈடு வழங்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல என்னுடைய தொகுதியிலே கள்ளச் சாராயம் அருந்திய காரணத்தினால் 3 பேர் இறந்துவிட்டார்கள். அவர்களுடைய குடும்பத்திற்கு நிவாரண உதவியையும் அரசு வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதே நேரத்திலே...(மணி யடிக்கப்பெற்றது) இரண்டே இரண்டு கோரிக்கைகள். சேத்தியாத்தோப்பு சர்க்கரைக் கூட்டுறவு....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, திரு. ஜே. ஹேமச்சந்திரன். (குறுக்கீடு) திரு. நாசர், உட்காருங்கள். திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

பிற்பகல் 12-45

***திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையின் மீது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் சில கருத்துக்களை எடுத்துவைக்க விரும்புகிறேன். தமிழகத்திலே ஏராளமான ஆலைகள் மூடப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இந்த ஆளுநர் உரையிலே இந்த ஆலைகளைப் பற்றி எதுவும் சொல்லப்படவில்லை என்பது மட்டுமல்ல, அந்த ஆலைகளைத் தொடர்ந்து நடத்துவதற்கான ஏற்பாடுகளைப் பற்றியும் எந்தக் குறிப்பும் இல்லை என்பது மிகவும் வருந்தத்தக்கது.

என்னுடைய மாவட்டத்தைப் பொறுத்தவரையில் ரப்பர் ஒரு பிரதான தொழில். அந்த ரப்பர் தொழில் நசிந்து கொண்டிருக்கிற நிலை இப்போது ஏற்பட்டிருக்கின்றது. அந்தத் தொழிலை பாதுகாத்துக்கொள்வதற்கு, அந்த மாவட்ட மக்களைப் பாதுகாத்துக்கொள்வதற்கு, ஒரு ரப்பர் தொழிற்சாலையை ஏற்படுத்த வேண்டுமென்று அனைத்துக் கட்சிகளும் கோரிக்கை வைத்திருந்தன.



ஆனால் அதுசம்பந்தமாக எந்தத் தகவலும் இதிலே சொல்லப் படவில்லை.

தோட்டத் தொழில் இப்போது அழிந்து கொண்டிருக்கிறது. தேயிலைத் தொழிலுக்கும் இந்தப் பிரச்சினை ஏற்பட்டிருக்கின்றது. தேயிலைத் தொழிலில் ஈடுபட்டிருக்கின்றவர்கள் முதலமைச்சரைச் சந்தித்து இதுசம்பந்தமாக கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். ஆனால், தோட்டத் தொழிலைப் பாதுகாத்துக்கொள்வதற்கு என்ன நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்பதற்கான குறிப்புகளும் இதிலே இல்லை.

குமரி மாவட்டத்தில் ஒரு மருத்துவமனை ஏற்படுத்த வேண்டுமென்ற ஒரு கோரிக்கை நீண்டநாட்களாக இருக்கிறது. அதுசம்பந்தமாக ஏற்கெனவே முதலமைச்சர் குமரிக்கு வந்திருந்த நேரத்தில் குறிப்பிட்டிருந்தாலும், இந்த ஆளுநர் உரையிலே அதுசம்பந்தமாக எந்தக் குறிப்பும் இல்லை என்பது மிக வருந்தத்தக்கது. அதேபோன்று இந்தக் குமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் அங்கிருக்கிற பொதுத் துறை ஸ்தாபனங்கள் இப்போது அழிந்து கொண்டிருக்கிற அபாயம் ஏற்பட்டு இருக்கிறது. அதேபோன்று, கன்னியாகுமரி மாவட்ட கூட்டுறவு நூற்பாலை, போக்குவரத்துக் கழகம்,....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் தே. குமாரதாஸ்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதில் கருத்து ஒன்றுதான். அவர்கள் மருத்துவக் கல்லூரி என்று சொல்வதற்குப் பதிலாக மருத்துவமனை என்று சொல்லிவிட்டார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள் குமரி மாவட்டத்திற்கு வந்திருந்த நேரத்தில், கன்னியாகுமரி மாவட்டத்திற்கு மருத்துவக் கல்லூரி தருவோம் என்று வாக்குறுதி தந்திருந்தார்கள். அதை நினைவுபடுத்துகின்ற முகத்தான் அவர்கள் சொன்னார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு உறுப்பினர் குமாரதாஸ் அவர்களுக்கு நன்றி. நான் திருத்திக்கொள்கிறேன். It is a only a slip of the tongue. அது மருத்துவக் கல்லூரி. நானும் அதைத்தான் குறிப்பிட்டேன்.

[திரு. ஜே. ஹேமச்சந்திரன்] [2000 மார்ச் 8

குமரி மாவட்டத்தில் மீன் பதப்படுத்துகின்ற ஒரு தொழிற்சாலையை ஏற்படுத்த வேண்டும், டயர் தொழிற்சாலை ஏற்படுத்த வேண்டுமென்ற கோரிக்கைகளெல்லாம் அந்தப் பகுதியில் இருக்கிற மக்களால் வைக்கப்பட்டிருக்கின்றன. சட்டமன்ற உறுப்பினர்களாலேயும் இங்கே எடுத்து வைக்கப்பட்டிருக்கின்றன. அந்த மாவட்டத்தைப் பொறுத்தவரை இப்படிப் பாதுகாக்கக்கூடிய முறையில் தொழிலுக்குப் பாதுகாப்பு கொடுக்கக்கூடிய முறையில் எந்தக் குறிப்பும் இல்லை என்று நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதைச் சொல்லியிருக்க வேண்டும்.

அதேபோன்று, சேதுசமுத்திரத் திட்டத்தைப் பொறுத்த வரையில் இந்த ஆளுநர் உரையிலே எதுவும் சொல்லப்படவில்லை. மத்திய அரசு ஆய்வுக்காக 4% இன்று ஒதுக்கியிருக்கிறது. ஆய்வு என்பது நடந்து முடிந்த ஒரு விஷயம். இந்த ஆய்வு எதற்கென்று தெரியவில்லை. தேவையான நிதியை ஒதுக்கி அந்தத் திட்டத்தை அமல்படுத்துவதற்கான நடவடிக்கையைத்தான் மத்திய அரசு எடுக்க வேண்டும். அதற்கு மாநில அரசு மத்திய அரசை வலியுறுத்த வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, 1978-79 காலகட்டத்திலே வேலையில்லாத வாலிபர்களுக்கு நிவாரணம் வழங்கப்பட்டிருந்தது. அதுவும் இப்போது வழங்கப்படவில்லை. தொழில்களெல்லாம் நசிந்து கொண்டிருக்கிற நேரத்தில், வேலையில்லாத் திண்டாட்டம் அதிகப்பட்டுக் கொண்டிருக்கிற நேரத்தில் வாலிபர்கள் தங்களைப் பாதுகாத்துக்கொள்வதற்கு இப்படிப்பட்ட சில நிவாரணங்களை மீண்டும் இந்த அரசு அளிக்க வேண்டுமென்று பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இயற்கைச் சீற்றத்தின் காரணமாக பாதிக்கப்பட்ட மக்களைப் பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. 1996 ஆம் வருடத்தில் கன்னியாகுமரி மாவட்டத்தில் மிகப் பெரிய வெள்ளச் சேதம் ஏற்பட்டது என்பதும், ஆயிரக்கணக்கானவர்கள் பாதிக்கப்பட்டனர் என்பதும் தெரியும். அதற்குக் கொடுத்த கடனையே இன்னும் ஏழை எளிய மக்கள் திருப்பியளிக்கக் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதைத் தள்ளுபடி செய்வதற்கு மாநில அரசு நடவடிக்கை எடுக்க



2000 மார்ச் 8] [திரு. ஜே. ஹேமச்சந்திரன்]

வேண்டுமென்று இந்த நேரத்தில் வலியுறுத்திக் குறிப்பிட விரும்புகிறேன்.

காவல் துறை சம்பந்தமாக இன்று ஒரு தகவலை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரைக்கும் காவல் துறை மதச்சார்பற்ற முறையில் நடந்து கொள்ளவில்லை என்ற ஐயப்பாடு இன்றைக்கு ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. குறிப்பாக, பாரதிய ஜனதா கட்சியைச் சார்ந்தவர்கள் சம்பந்தப்பட்ட வழக்குகளில் தகுந்த நடவடிக்கை எடுப்பதற்கு அங்கிருக்கிற காவல் துறை அதிகாரிகள் தயங்குகிறார்கள். அதற்கு ஏராளமான எடுத்துக்காட்டுகளை என்னால் சொல்ல முடியும்.

பிற்பகல் 12-50

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தமட்டில், இதுவரையிலும் காவல் துறையோ அல்லது மற்ற துறைகளோ, மதச் சார்பு அடிப்படையில் நடந்து கொண்டன என்று சொல்லத்தக்க வகையில் எந்தப் புகாரும் அந்த மாவட்டத்திலே எழுந்ததே கிடையாது. அப்படி எழுந்திருந்தால், புள்ளிவிவரங்கள் சொன்னால்கூட நானும் தெரிந்துகொள்ள முடியும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது உங்கள் இரண்டு பேருக்கும் விவாதம் நடக்கின்ற இடமல்ல. உறுப்பினரிடத்தில் ஆதாரம் இருந்தால் முதலமைச்சர் அவர்களிடம் கொடுக்க வேண்டும்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈத்தாமொழி காவல் நிலையத்திலே....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் ஐயப்பாடு இருக்கிறது என்று சொன்னீர்கள். அதனால்தான் உங்களை அனுமதிக்கிறேன். இதற்குமேல் உங்களிடம் ஆதாரம் இருந்தால் தயவுசெய்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் கொடுங்கள். இப்போது நீங்கள் கொடுக்க வேண்டாம், பேசுங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** அதேபோன்று, நிலச் சீர்திருத்தம் குறித்தும் எதுவும் சொல்லப்படவில்லை. என்னுடைய மாவட்டத்தைப்

பொறுத்த அளவிலே ஒரு பிரச்சினையை நான் சொல்ல விரும்புகிறேன். பட்டா கொடுக்க நடவடிக்கை எடுப்பது சம்பந்தமாக அரசின் அறிவிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. இந்தப் பட்டா கொடுப்பதைப் பொறுத்தவரையில், சாலை ஓரங்களில் இருக்கக்கூடிய நபர்கள், குளம் என்ற வரம்பிற்குள் இருக்கக்கூடிய நபர்கள், இவர்கள்தான் எங்கள் மாவட்டத்தில் அதிகமாக இருக்கக்கூடியவர்கள். அவர்களுக்கு பட்டா கொடுப்பதற்கு ஏற்ப ஒரு சமத்துவபுரத்தை எங்கள் மாவட்டத்தில் அதிகப்படியாக ஏற்படுத்தித் தருவதற்கு அரசு நடவடிக்கை எடுத்தால்தான் நல்லது. இப்படிப்பட்டவர்கள் சட்டத்தினுடைய—பட்டா என்று வருகின்ற நேரத்திலே அவர்கள் revenue புறம்போக்கில் இருக்கக்கூடியவர்கள் அல்ல. சாலை ஓரங்களிலே, அதேபோன்று குளத்தின் ஓரத்திலே, tank ஓரத்திலே இருக்கக்கூடியவர்களுக்கெல்லாம் பட்டா கொடுக்க முடியாது என்று அரசு அதிகாரிகள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அதுவும் கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். குத்தகை விவசாயிகளுக்கும் பஞ்சமி நிலத்திலுள்ள தாழ்த்தப்பட்டவர்களுக்கும் பட்டா வழங்கவேண்டும்.

இன்று அரசியல் சட்ட ஆய்வு சம்பந்தமாக சில கருத்துக்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. நாங்கள் ஒன்றை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறோம். இந்த நேரத்தில் இந்த அரசியலமைப்புச் சட்டத் திருத்த ஆய்வுக்கான Committee-ஐ Parliament நியமனம் செய்திருக்கவேண்டும் என்பது என்னுடைய கருத்து. ஆனால் Parliament-ஆல் நியமனம் செய்யப்படாமல் இன்று ஒரு குழு நியமிக்கப்பட்டிருக்கிறது. அந்தக் குழு இப்போது மத்தியில் ஆண்டு கொண்டிருக்கிற கட்சியினுடைய இந்துத்வா என்ற கொள்கையை அமல்படுத்துவதற்குத் தகுந்த அளவிலே உள்ள சிபாரிசுகளைக் கொடுப்பதற்காக வேண்டியுள்ள குழு என்று நாங்கள் கருதுகிறோம். ஏற்கெனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வெங்கடாசலையா அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்ற assurance பற்றி இங்கே பேசினார்கள். நான் ஒன்றை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஏற்கெனவே, Supreme Court-க்கு முன்னால் பாரதிய ஜனதா கட்சித் தலைவர்கள், அதேபோன்று National Integration Council -லிலேயும் அவர்கள் அயோத்தியில் இருக்கின்ற கோயில்



சம்பந்தமாக கொடுத்திருக்கின்ற அந்த assurance எல்லாம் என்ன ஆயிற்று என்பதை இந்த நாடு நன்றாக அறியும். ஆகவே, Supreme Court-ல் கொடுக்கப்பட்ட ஒரு assurance-ஐவிட பெரிய assurance இந்த வெங்கடசலையாவுக்கு கொடுக்கப்பட்ட assurance என்று நாங்கள் கருதவில்லை. ஏனென்றால் அந்தக் கட்சியைப் பொறுத்த அளவில் உத்திரப் பிரதேசத்தில் ஒரு சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அந்த மாநிலத்திலே இருக்கின்ற சிறுபான்மை மக்கள் எல்லாம் ஆட்சேபணை தெரிவித்ததற்குப் பிறகும், அந்த மாநிலத்திலே இருக்கின்ற அரசு அதை உறுதியாக நிறைவேற்றுகின்ற அந்த எண்ணத்திலேதான் இருந்து கொண்டிருக்கிறது என்பதை இந்த நாடு நன்றாக அறியும்.

அதேபோன்று, 8 நாட்களாக நாடாளுமன்றத்திலே லோக் சபாவிலே ஆர்.எஸ்.எஸ். பிரச்சினை விவாதிக்கப்பட்டு, லோக் சபா நடக்க முடியாத அளவுக்கு விஷயங்கள் வந்து கொண்டிருக்கின்றன. ஆனால்; துரதிருஷ்டவசமாக திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அங்கே எந்தக் கருத்தையும் சொன்னதாகத் தெரியவில்லை. ராஜ்ய சபாவிலே சொல்லப்பட்டிருக்கிறது என்பதை நான் மறுக்கவில்லை. ஆனால், சொல்லப்பட வேண்டிய லோக் சபாவில் இந்தப் பிரச்சினை ஏற்பட்டுக் கொண்டிருக்கிற அந்த அவையிலே இதுசம்பந்தமாகச் சொன்னதாகத் தெரியவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** லோக் சபாதான் 8 நாட்களாக நடக்கவில்லையே, யார் பேச முடிந்தது, யார் கருத்து சொல்ல முடிந்தது? லோக் சபாவிலே நடவடிக்கைக் குறிப்பே 8 நாட்களாகக் கிடையாது. பிறகு யார் பேசினார்கள், யார் பேசவில்லை என்று எதை வைத்துச் சொல்லுகிறீர்கள்? நீங்கள் பேசி முடியுங்கள்.

**திரு. சி. வேலாயுதன்:** I am on a point of order.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Point of order கிடையாது, உட்காருங்கள். நீங்கள் சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** I am not yielding.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** You do not have to yield.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** பேரவைத் தலைவர் அவர்கள், point of order அனுமதிக்கவில்லை என்று சொன்னதற்குப் பிறகு நான் ஏற்றுக்கொள்ள விரும்பவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் சீக்கிரம் பேசி முடியுங்கள் என்று பேரவைத் தலைவர் சொல்லுகிறேன்.

பிற்பகல் 12-55

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** ஆளுநர் உரையில் 4-வது பத்தியில் மாநிலங்களின் ஆட்சி மொழி சம்பந்தமாகச் சொல்லப்பட்டிருக்கின்ற கருத்தை நாங்கள் ஆதரிக்கிறோம். எங்களுடைய கருத்து, ஆட்சி மொழியாகவும், பயிற்று மொழியாகவும் தமிழ் ஏற்படுத்தப்பட வேண்டும். அதுமட்டுமல்ல, மேல் படிப்பிற்கும், அதேபோன்று technology சம்பந்தமான படிப்பிற்கும் பயிற்று மொழியாக தமிழ் ஏற்படுத்தப்பட வேண்டுமென்று வலியுறுத்திக் கொள்ள விரும்புகிறேன். ஆங்கிலம் ஒரு மொழி என்ற முறையில் படிக்க வசதி செய்யவேண்டும். அதேபோன்று, 12-வது ஷரத்திலே, வரி வருவாயில் 29 சதவிகிதம் மாநிலங்களுக்குக் கொடுக்கப்பட வேண்டுமென்று காட்டப்பட்டிருக்கிறது. ஆனால் மத்திய அரசு இந்த பட்ஜெட்டிலேகூட 29 சதவிகிதம் வரி வருவாயிலிருந்து மாநிலங்களுக்கு ஒதுக்கவில்லை என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் நன்கு அறிவார்கள் என்று நினைக்கிறேன். அதற்கான வழி சொல்லப்படவில்லை. ஆகவே, இந்த 29 சதவிகிதத்தைப் பெறுவதற்கு நாம் அனைவரும் சேர்ந்து முயற்சிக்க வேண்டும் என்று வலியுறுத்திக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோன்று, இன்று மத்திய அரசைப் பொறுத்தவரையிலே rural poverty -ஐ ஒழிப்பதற்காக ஏற்கெனவே 7 சதவிகிதம் பட்ஜெட்டிலே ஒதுக்கப்பட்டிருந்தது. ஆனால், இந்த வருடம் 4 சதவிகிதம்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அது சரியல்ல. 7 சதவிகிதம், இந்தக் கிராமப்புற poverty-ஐ மாற்றுவதற்காக வேண்டி, நாம் பெறவேண்டுமென்று வலியுறுத்திக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோன்று, சமத்துவபுரம் சம்பந்தமாக.. (மணியடிக்கப் பெற்றது) ஒரேயொரு விஷயம். சமத்துவபுரம் சம்பந்தமாக சில இடங்களிலே இன்று சாதிப் பிரச்சினைகள் எல்லாம்



வந்திருக்கின்றன. இந்தச் சாதிப் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் போதுமான அளவிற்குக் கவனம் செலுத்தவில்லை என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்பட வேண்டும்.

இறுதியாக, நான் ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புவது என்னவென்றால்...

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, ஓர் உயர்ந்த நோக்கத்திற்கு, ஓரிரு வார்த்தைகளிலே சில கருத்துக்களைக் கூறிவிடுவதால் களங்கம் ஏற்பட்டுவிடக் கூடாது என்பதற்காக நான் எழுந்து நிற்கிறேன். சமத்துவபுரங்களிலே சாதிப் பிரச்சினை வந்துவிட்டதாகச் சொல்கிறார். இல்லை. அவர் அரசனூர் சமத்துவபுரத்தை ஞாபகத்தில் வைத்துக்கொண்டு சொல்கிறார். அரசனூரில் நடைபெற்றது சமத்துவபுரத்தில் அல்ல. சமத்துவபுரத்திற்கு அப்பால் 4 கிலோ மீட்டர் தூரத்திலே உள்ள அரசனூர் கிராமத்திலே நடைபெற்ற சாதிப் பிரச்சினை. அதைப்பற்றி திரு. சங்கரய்யா அவர்கள் எனக்குக் கடிதம் எழுதினார்கள். எழுதியவுடன், முதலமைச்சர் செயலகத்தினுடைய செயலாளரை நேரடியாக அனுப்பி வைத்து, அந்தப் பிரச்சினையை அவர் தீர்த்து வைத்துவிட்டார். எனவே, சமத்துவபுரத்தில் சாதிப் பிரச்சினை என்று நாமே அதைப் பெரிய விளம்பரமாக ஆக்குவதால், சமத்துவபுரத்தினுடைய நோக்கமே கெட்டுவிடும் என்பதற்காகத்தான் இதைச் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, திரு. அப்துல் லத்தீப். (குறுக்கீடு) நீங்கள் one minute, one minute என்று continue பண்ண முடியாது. (குறுக்கீடு) சரி சொல்லுங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** முதல்வர் அவர்கள் என்னைத் திருத்தினார்கள். எனக்குக் கிடைத்த விவரங்களை வைத்துத்தான் சொன்னேன். நான் அதைத் திருத்திக்கொள்வதற்குத் தயாராக இருக்கிறேன்.

ஒன்றே ஒன்றை மட்டும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். 1,300 கோடி ரூபாய், இந்த ரேஷன் அரிசிக்கான விலையை மத்திய அரசு உயர்த்தியதன் காரணமாக, நம்முடைய அரசு மானியமாகக்

[திரு. ஜே. ஹேமச்சந்திரன்] [2000 மார்ச் 8

கொடுத்து, இன்று தமிழகத்திலே இருக்கின்ற ஏழையெளிய மக்களுக்கு அரிசி விலை ஏறாமல் தடுத்துக் கொண்டிருக்கிறது. 1,300 கோடி ரூபாய் ஒதுக்கப்படுவது என்பது, இந்த ஆளுங்கட்சியினுடைய கொள்கை; நான் அதை விமர்சனம் பண்ணவில்லை. ஆனால், ஒன்றை நான் இந்தநேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புவது, இந்த 1,300 கோடி ரூபாய் என்பது, தமிழகத்திலே இருக்கின்ற மக்களுடைய வளர்ச்சிக்காக, மற்ற முறையிலே பயன்படுத்த வேண்டிய, உபயோகப்படுத்த வேண்டிய பணம், மத்திய அரசினுடைய கொள்கை காரணமாக நமக்கு இழப்பு ஏற்பட்டு இருக்கின்றது. அந்த இழப்பை ஈடுகட்டுவதற்கு மத்திய அரசிடமிருந்து மானியம் அல்லது அந்த முறையிலே ஏதாவது வாங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, இப்படி மானியம் வழங்காமலேதான் மேற்கு வங்கத்திலும், கேரளாவிலும் ரேஷன் அரிசியை அதிக விலைக்கு விற்றுக் கொள்கிறார்கள். அரசின் சார்பில் விநியோகிக்கப்படுகின்ற ரேஷன் அரிசி, அதிக விலைக்கு விற்கப்படுகிறது. இங்கே வாங்க இயலாத மக்கள் இருக்கின்ற காரணத்தினால், இந்த 1,300 கோடி ரூபாய் போனாலும் பரவாயில்லை மானியமாக, என்ற அளவில் ரேஷன் அரிசி விலையை நாம் கட்டுப்படுத்தி வைத்திருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, திரு. அப்துல் லத்தீப். (குறுக்கீடு) நான் பல தடவை சொல்லிவிட்டேன். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் ஒன்றும் பதில் சொல்ல வேண்டாம். அவர்கள் அடுத்த அரசைப் பற்றிச் சொல்கிறார்கள். திரு. அப்துல் லத்தீப். (குறுக்கீடு) அங்கு இருக்கிற நிலைமையைச் சொன்னார்கள், நீங்கள் என்ன பதில் சொல்லப் போகிறீர்கள்? திரு. அப்துல் லத்தீப். (குறுக்கீடு) அதற்கு வாய்ப்பில்லை, நீங்கள் உட்காருங்கள், திரு. அப்துல் லத்தீப்.

பிற்பகல் 1-00

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கும் இந்தத் தீர்மானத்தின்மீது ஒரு சில கருத்துக்களைச் சொல்ல



2000 மார்ச் 8] [திரு. ம. அப்துல் லத்தீப்]

வாய்ப்பளித்தமைக்கு தங்களுக்கு நன்றி சொல்கிறேன். இந்த உரையில் இந்திய அரசமைப்புச் சட்ட மறு ஆய்வு குறித்தும் சொல்லப்பட்டிருக்கிறது. அப்படிக் குறிப்பிட்டிருக்கும்போது சிறுபான்மை மக்களுக்கும் மாநில சுயாட்சிக்கும் ஊறு விளைவிக்கும் எந்த ஒரு மாற்றத்தையும் இந்த அரசு உறுதிபட எதிர்க்கும் என்ற வாக்குறுதி தந்திருக்கிறார்கள். அதனை நான் வரவேற்கிறேன். ஆனால் மாநில அரசு கொடுத்திருக்கிற இந்த வாக்குறுதிப்படி மத்தியிலே ஆளுகிற பா.ஜ.க. அரசு மதித்து நடந்து கொள்ளுமா என்பதுதான் இன்றுள்ள பிரச்சினையாகும். Justice வெங்கடாச்சலையா அவர்கள் பொறுப்பை ஏற்றுக்கொள்வதற்கு முன்பு 'எனக்கு உறுதிபடக் கூறவேண்டும். நீங்கள் எங்களுடைய வேலையில் குறுக்கிடமாட்டீர்கள், நாங்கள் செய்கிற பணியிலே நீங்கள் எந்தவிதமான மாற்றத்தையும் செய்ய மாட்டீர்கள் என்று வாக்குறுதி தர வேண்டும்' என்று பா.ஜ.க. அரசிடமும், நம்முடைய மாண்புமிகு பிரதமர் அவர்களிடத்திலும் வாக்குறுதி கேட்டார்கள் என்று பத்திரிகை செய்தி வந்துள்ளது. அந்த வாக்குறுதியை திரு. வாஜ்பாய் அவர்கள் தந்திருக்கிறார்கள் என்றும் இந்த அவையிலேயே குறிப்பிடப்பட்டது. ஆனால் நான் கேட்பது வெங்கடாச்சலையா ஒரு நீதிபதி. நீதிபதி என்ற முறையிலே அவருக்கு திரு. வாஜ்பாய் மீதும், பா.ஜ.க. மீதும் ஏன் இந்த ஐயப்பாடு ஏற்பட்டது. ஓர் ஐயப்பாடு நீதிபதிக்கு ஏற்படுகிறது என்று சொன்னால் அதைச் சாதாரணமாக எடுத்துக்கொள்ள முடியாது. **"It is the judicial cognisance of the bonafides of the Government in the Centre"** அந்த Judicial Officer -- அதுவும் இந்தியாவினுடைய தலைமை நீதிபதி பொறுப்பிலே இருந்த Justice வெங்கடாச்சலையா அவர்களுக்கு ஒரு வாய்ப்பு கொடுக்கப் படும்போது, நான் ஏற்றுக்கொள்வதற்குத் தயாராக இல்லை, அரசு எனக்கு வாக்குறுதி தர வேண்டும் என்று ஒரு வாக்குறுதியைப் பெற்று அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டார் என்றால், Justice வெங்கடாச்சலையா அவர்களுக்கு அவருடைய bonafide உள்நோக்கம், உள்ளுணர்வு இதைப் பற்றி நம்பிக்கை இல்லை என்பதுதான் அதற்குப் பொருளே தவிர வேறு அல்ல. ஏன் நம்பிக்கை இல்லை? நம்முடைய நண்பர்கள் எல்லாம் இங்கே சுட்டிக்காட்டினார்கள். Supreme Court-லேயே பிரமாண வாக்குமூலம் கொடுத்துவிட்டு இதைச் செய்யமாட்டேன் என்று உறுதி கொடுத்துவிட்டு செய்த நல்லவர்கள். Supreme Court-ஐயும் மதிக்கமாட்டேன் என்று தங்களுடைய

[திரு. ம. அப்துல் லத்தீப்] [2000 மார்ச் 8

கொள்கையின் அடிப்படையிலேதான் செயல்படுவோம் என்று செயல்பூர்வமாக நிரூபித்த நண்பர்கள். எனவே, அவர்கள் மீது Justice வெங்கடாச்சலையா அவர்களுக்கு நியாயமான ஐயப்பாடு ஏற்பட்டது. எனவே, இதை நாம் கருத்தில் கொள்ள வேண்டும். இது நாளைக்கு நடக்காது என்று சொன்னால் Justice வெங்கடாச்சலையா அவர்களுக்கு ஏற்பட்ட சந்தேகம் உறுதியானது என்பதை அவர்கள் செயல் ரூபமாக நிரூபிக்கப் போகிறார்கள் என்பதுதான் என்னுடைய குற்றச்சாட்டு...

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Interruption வேண்டாம். அவருடைய கருத்தைச் சொல்கிறார்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** இல்லை, இல்லை. அரசியல் சட்டத்தினுடைய மறு ஆய்வு பற்றி ஓர் உள்நோக்கத்தை கற்பிக்கிறார், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது அவருடைய கருத்து. அதை நீங்கள் தடுக்கக் கூடாது. திரு. அப்துல் லத்தீப், நீங்கள் பேசுங்கள்.

**Thiru M. Abdul Latheef:** I know what Mr. Aruna knows and I am also coming from the same field he comes from. Therefore, he need not create a suspicion that I am attributing motives to the Judicial Officer. I have got the highest respect to the Judicial Officer as the Hon. Law Minister has. அதாவது...

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. லத்தீப் அவர்கள் ஒரு பெரிய ஐயம் ஏற்பட்டது என்ற அடிப்படையை இங்கே மிக விளக்கமாக எடுத்துச் சொன்னார்கள். என்னைப்போல சாதாரணமான சட்ட அறிவு இல்லாதவர்களுக்கே ஏற்படுகிற கருத்து, அந்த ஐயம் தீர்ந்துபோன காரணத்தினாலேதான் ஜஸ்டிஸ் அந்தப் பொறுப்பை ஏற்றிருக்கிறார்.

பிற்பகல் 1-05



2000 மார்ச் 8]

**திரு. ம. அப்துல் லத்தீப்:** அந்த ஐயத்திற்கு, as by way of abundant caution, Justice Venkatachalliah raised this question and then recorded, "Before accepting the office, I have raised this question", என்று சொல்லி, record செய்திருக்கிறார். என்னுடைய...

**Hon. Prof. K. Anbazhagan:** That itself shows the protection that we have.

**Thiru M. Abdul Latheef:** Other things being equal that protection is not disputed; but the conduct and the activities of the BJP Government, particularly the Government headed by Hon. Mr. Vajpayee cannot be depended upon. That is the message that Justice Venkatachalliah has given, not only to the country but to the world.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதிபதி வெங்கடாச்சலையா அவர்களுக்கு ஏற்பட்டது ஒரு கண்ணோட்டத்தில். அவருக்குத் தரப்படுகிற பொறுப்பில் நாளைக்குத் தலையிடுவார்களோ என்ற எண்ணம், அந்த ஐயம் ஏற்பட்டது. அவருடைய பொறுப்பைப் பொறுத்தவரையில், இந்த அரசு வேறுவிதமாக தலையிடாது; அல்லது, அவருடைய கருத்தை மீறி ஒன்றை அவர்மீது திணிக்காது என்ற அந்த அடிப்படையிலே ஐயம் தீர்ந்திருக்கிறது. ஆகவே, இந்தப் பிரச்சினையில், பா.ஜ.க. அரசைப் பற்றிய மொத்த கண்ணோட்டத்தை வைத்துக் கொண்டு இந்தப் பிரச்சினையை அணுகுவது அவ்வளவு பொருத்தமாக இருக்காது.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** இந்தப் பிரச்சினையில் அவருக்கு ஒரு கண்ணோட்டம். ஒவ்வொருவருக்கும் ஒரு கண்ணோட்டம். எனக்கு ஒரு கண்ணோட்டம். எனவே, என்னுடைய கண்ணோட்டத்தைச் சரியில்லை என்று நீங்கள் சொல்லலாம். உங்களுடைய கண்ணோட்டம் சரியில்லை என்று நான் சொல்லலாம். ஆகையினால், அந்தக் கண்ணோட்டத்தை விட்டுவிட்டு...

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசியலமைப்புச் சட்டத்தின் ஆய்வு என்பதே ஒரு மறு ஆய்வுக்கு என்று ஒப்புக்கொண்டால், அரசமைப்புச் சட்டத்தின் எந்தப் பிரிவைப் பற்றியும் பரிசீலிக்கலாம் என்பது பொது நியதி. நீதிபதி வெங்கடாசலையாவுக்கு ஏற்பட்ட சந்தேகம், 1973

ஆம் ஆண்டு கேசவாநந்த பாரதி வழக்கில் basic structure-ஐ மாற்றக் கூடாது என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பு சொல்லியிருக்கிறது. இந்த அரசாங்கம், அந்தத் தீர்ப்புக்கு மாறாகவும் மறு ஆய்வு செய்ய விரும்புகிறதா என்ற சந்தேகம் அவருக்கு எழுந்தது. அதனாலேதான் அந்த basic structure-ஐ மாற்றாத அளவுக்கு நீங்கள் மறு ஆய்வு செய்யுங்கள் என்று அமைச்சரவையிலே தீர்மானம் போட்டுக் கொடுத்திருக்கிறார்கள். நீதிபதி வெங்கடாசலையாவுக்கு ஏற்பட்ட சந்தேகம், கேசவாநந்த பாரதி வழக்கின் தீர்ப்பின் அடிப்படையில் மாற்றம் செய்வதா என்ற அடிப்படையே தவிர, மாண்புமிகு உறுப்பினர் சொல்வதைப் போன்ற அடிப்படையைக் கொண்டது அல்ல.

*திரு. ம. அப்துல் லத்தீப்:* அது உங்களுடைய கண்ணோட்டம். நான் தெரிந்து வைத்திருப்பது என்னவென்றால், இந்தச் சந்தேகம் ஏற்பட்டதே மிகப் பெரிய பொருளுடையது என்பதுதான் என்னுடைய கருத்து. இதற்குப் பதில் எப்போது கிடைக்கும்? ஏற்கெனவே தன்னுடைய நடத்தையால், தானே பிரமாண வாக்குமூலம் கொடுத்து மீறினார்களே, அதை மாற்றினார்களே, தன்னுடைய வாக்கைத் தாமே தெருவில் தூக்கிப் போட்டார்களே, அவர்களுடைய செயல் எப்படி இருக்கிறது என்பதை Justice வெங்கடாசலையா, அவருடைய சந்தேகத்தின் வாயிலாக எழுப்பியிருக்கிறார் என்பதுதான் என்னுடைய வாதமே தவிர...

*மாண்புமிகு திரு. ஆலடி அருணா:* இதுபோன்று நீதிபதி வெங்கடாசலையா எங்கேயும் சொல்லவேயில்லை. தவறாக, ஒரு நீதிபதி சொன்னதாகச் சொல்லக் கூடாது. உங்களுக்கு அப்படி ஒரு சந்தேகம் இருக்கிறது என்பது உண்மை. நீதிபதி வெங்கடாசலையா அப்படிச் சொன்னார் என்பது தவறு. அவருக்கு இருந்த சந்தேகம், basic structure-ஐ மாற்றச் சொல்கிறார்களா என்பது. உண்மையிலேயே, பாரதிய ஜனதா அரசாங்கம் அதை அரசியல் கண்ணோட்டத்தோடு மறு ஆய்வு செய்ய வேண்டுமென்று எண்ணியிருந்தால், அவர்கள் நீதிபதிகளைக் கொண்டு, வல்லுநர்களைக் கொண்டு ஒரு குழுவை அமைத்திருக்க வேண்டாம். நாடாளுமன்றக் குழுவையே அமைத்து இருக்கலாம். அப்போதுதான் அரசியல் நோக்கம் இதிலே உள்ளே திணிக்கப்பட்டிருக்கும். ஆனால், இது அப்படி அமைக்கப்படவில்லை. இதை மாண்புமிகு உறுப்பினர் உணர வேண்டும்.



*மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:* பாய், பாய், கொஞ்சம் இருங்கள். (சிரிப்பு) பழைய நினைப்பில் அப்படிப் பேசிவிட்டேன். (சிரிப்பு)

தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினை எப்படி ஆரம்பமாயிற்று என்றால், ஜனாதிபதி அரசியல் சட்டத்தை ஆய்வு செய்வதை விரும்பவில்லை என்பதைப் போல ஒரு செய்தி பத்திரிகைகளிலே வெளிவந்தது. அதைத் தொடர்ந்து, வாஜ்பாய் அவர்கள் அல்லது மத்திய அரசு, அரசமைப்புச் சட்டத்தினுடைய மறு ஆய்வில், அடிப்படையையே மாற்ற முனைகிறார்கள் என்ற ஒரு குற்றம், மத்திய அரசின் மீது சுமத்தப்பட்டது. அந்த நேரத்திலேதான் ஜனாதிபதியினுடைய உரை, அவருடைய வாசகங்கள் பத்திரிகையிலே மீண்டும் வந்தது. அரசமைப்புச் சட்டத்தினுடைய அடிப்படை மாற்றப்படக்கூடாது என்று ஜனாதிபதியே அழுத்தந்திருத்தமாக சொல்லியிருந்தார். அதையே திரும்ப ஒரு நிகழ்ச்சியில் பேசும்போது, வாஜ்பாய் அவர்கள், இந்த ஆய்வில் நிச்சயமாக அரசமைப்புச் சட்டத்தினுடைய அடிப்படை மாற்றப்படமாட்டாது; அந்த மாற்றம் இல்லாமல்தான் இந்த ஆய்வையே செய்யவேண்டுமென்று விரும்புகிறோம் என்று சொன்னார்கள். இது பத்திரிகைகளிலே விமர்சனங்களுக்கு ஆளானது. அந்த நேரத்திலேதான், நீதிபதி வெங்கடாசலையாவை தலைமை ஏற்கக் கேட்டபோது, அவர் அடிப்படை மாறாதல்லவா என்று கேட்டுக்கொண்டு, அந்த உறுதியைப் பெற்று அவர் அந்தப் பொறுப்பை ஏற்றார்.

*பிற்பகல் 1-10*

*திரு. ம. அப்துல் லத்தீப்:* நான் இதைப் படித்திருக்கிறேன். பத்திரிகைகளில் எல்லாம் வந்திருக்கின்றன. அடிப்படைகளை, அரசமைப்புச் சட்டத்தினுடைய அடிப்படைகளை, மாற்றுவார்களோ என்ற சந்தேகம் Justice வெங்கடாசலையாவுக்கு மட்டுமல்ல, குடியரசுத் தலைவர் அவர்களுக்கும் வந்தது என்பதைத்தான் அவர்களுடைய உரையிலேயிருந்தும் நாம் தெரிந்துகொண்டோம். குடியரசுத் தலைவர் அவர்கள் பிரதமரை வைத்துக்கொண்டே, இந்தப் பிரச்சினையை எழுப்பினார் என்பதை நாம் மறந்து விடக்கூடாது. இன்னொன்று, நான் மிகுந்த பொறுப்புணர்வோடு சொல்கிறேன். உணர்ச்சிபூர்வமாகச் சொல்கிறேன். பா.ஜ.க. என்ற அந்த இயக்கம்,

அதனுடைய கருத்துக்கள் இன்றைக்கு நாட்டிலே மிக வேகமாகப் பரவி வருகிறது. அதற்குக் காரணம் பாரதிய ஜனதா கட்சிக்காரர்கள் அல்ல, அவர்களுக்கு அவ்வளவு வலிவு இல்லை. மற்ற கட்சிகள் அவர்களைத் தெரிந்தோ, தெரியாமலோ ஊக்குவித்து வருகின்றன.

**திரு. சி.வேலாயுதன் :** Point of order.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. வேலாயுதன் நீங்கள் இடைமறிக்க வேண்டாம். லத்தீப் அவர்கள் 1-15 மணிக்குள் கட்டாயமாக பேச்சை முடித்துக்கொள்ளவேண்டும். எனவே, அடிக்கடி இவ்வளவுதான், இவ்வளவுதான் என்று சொல்லமாட்டேன்.

**திரு. ம.அப்துல் லத்தீப்:** ஏன், என்னோடு இன்றைக்கு முடியட்டுமே?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை, அது என்னுடைய முடிவு. நீங்கள் சொல்லக்கூடாது.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** சரிதான், நான் என்னுடைய வேண்டுகோளைத்தான் வைக்கிறேன். கொஞ்சம் அனுமதி கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வேண்டுகோளை ஏற்க முடியாது, நீங்கள் 1-15 மணிக்குள் பேச்சை முடிக்க வேண்டும்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** இவர்கள் என்ன செய்யப் போகிறார்கள் என்பதை ஊனக் கண்களால் பார்க்க முடியாவிட்டாலும் ஞானக் கண்களாலாவது பார்க்க வேண்டும். நமது ஆட்களையெல்லாம் பிடித்துவிட்டான். அவர்களாலே வளர முடியவில்லை. ஹரியானாவிலே சௌதாலா, பீகாரிலே சமதா கட்சிக்காரர்கள். ஒரிசாவிலே நவீன் பட்நாயக்கினுடைய மகன், நம்முடைய கலைஞர் அவர்களுக்கு நிரம்ப வேண்டியவர், எங்களுக்கும் நிரம்ப வேண்டியவர்தான். அதனாலே, அவருடைய மகன் - இப்படி ஒவ்வொரு இடத்திலேயும் நம்முடைய சூத்திர ஜாதி ஜனங்களைப் பிடித்து இங்கே தமிழகத்திலே நம்மைப் பிடித்து, அதைத்தான் நான் எதிர்க்கிறேன் — கடைசிவரையிலே எதிர்ப்பேன், கடைசி மூச்சு வரை இதை எதிர்ப்பேன். அண்ணாவும், பெரியாரும் வளர்த்த அந்த உணர்வுகள் இன்றைக்கு மங்கி வருகின்றன.



**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** பாபர் மசூதியை இடித்தபோது கரசேவைக்கு ஆள் அனுப்பியவர்கள் எங்கே, யார்? அவர்களுக்கு உறுதுணையாக இருப்பவர்கள் யார்? அதைப் பற்றி மேடைக்கு மேடை பேசிய பாய் அவர்கள் இப்பொழுது, இப்படிப் பேசலாமா என்பதுதான் எனக்குள்ள ஆதங்கம்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** இதைத்தான், நான் கலைஞர் அவர்களை வேண்டிக் கொள்கிறேன். தயவுசெய்து, இந்த முறையை நீங்கள் அடிக்கடி பயன்படுத்தாதீர்கள். நாங்கள் அவர்களோடு இருக்கவில்லை. அன்றைக்கே, நாம் அவர்களை எதிர்த்தோம். அவர்களை எதிர்த்தது,அவர்கள் பா.ஜ.க.வோடு போனது, அவர்களுடைய அடிச்சுவட்டைப் பின்பற்றி நீங்கள் ஏன் போனீர்கள், அவர்கள்தான் உங்களுக்கு வழிகாட்டியா என்று நான் கேட்கிறேன். நான் இன்றைக்கும் எதிர்க்கிறேன். தயவுசெய்து கலைஞர் அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்களுடைய அடிச்சுவட்டைப் பின்பற்ற வேண்டிய அவசியம் இல்லை. அவர்களுடைய அடிச்சுவட்டை அழிப்பதற்காக ஒரு நடவடிக்கை எடுக்கப்பட்டது, அரசியலிலே முறைகேடுகளை அழிப்பதற்கும் சிலர் துணை தேவைப்படுகிறது.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** நான் அதை நன்றாகப் புரிந்து வைத்திருக்கிறேன். கலைஞர் அவர்கள் தன்னுடைய அடிப்படைக் கொள்கையை மாற்றிக்கொள்ள மாட்டார், எனக்குத் தெரியும். அவருடைய உள்ளம் எனக்குத் தெரியும், என்னுடைய உள்ளம் அவருக்குத் தெரியும். இப்படி இயற்கைக்கு மாறாக...

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** இதிலிருந்து ஒன்று தெரிகிறது. இருவருமே அடிப்படைக் கொள்கையை மாற்றாமல் இரண்டு இடங்களிலே இருக்கிறோம்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** ஒரே இடத்தில் பிறந்தவர்கள், ஒரே இடத்தில் வாழ்ந்தவர்கள், ஒரே இடத்தில் கல்வி பயின்றவர்கள், நான் மாறியிருக்கிறேனா, இதுவரையில் நான் ஏதாவது மாற்றம் கண்டிருக்கின்றேனா, அதிலேதான் இருக்கிறேன். ஆயிரம்

*துன்பங்கள் வரட்டும் லத்தீபை உடைக்க முடியுமே தவிர, வளைக்க முடியாது என்பதை மிகத் தெளிவாகச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். எனவே, அரசியலுக்குத் தேவை என்பதை நான் உணர்கிறேன். நீங்கள் சில நடவடிக்கையில், சில முறைகளைக் கையாள வேண்டுமென்பதை நான் உணர்கிறேன்.*

*பிற்பகல் 1-15*

*ஆனால், பெரியாருடைய உணர்வும், அண்ணாவுடைய உணர்வும் இன்றைக்கு வேகமாக தமிழகத்திலே அழிந்து வருகிறது. அதைப் பார்த்துக் கொண்டு, என்னைப் போன்றவர்கள் சும்மா இருக்க மாட்டார்கள். நான் திருச்சியிலே பார்த்தேன். உங்களுடைய இரத்தம் கலந்திருக்கிற அந்தக் கொடிகள், அது தி.மு.க. கொடியாக இருந்தாலும், அண்ணா தி.மு.க. கொடியாக இருந்தாலும், மறுமலர்ச்சி தி.மு.க. கொடியாக இருந்தாலும், அந்தக் கொடிகள் எல்லாம் மறைக்கப்பட்டு, திருச்சி முழுவதும் காவிக் கொடி, எவ்வளவு பெரிய கொடிகள்? நம்முடைய பிள்ளைகள் அந்தக் கொடிகளைத் தூக்கிக் கொண்டு போனார்களே; கலைஞர் அவர்களே, மிக தூரப் பார்வையுடைய கலைஞர் அவர்களே, கொஞ்சம் தூரப் பார்வையோடு இதைப் பாருங்கள். இதைத்தான் நான் உங்களுடைய தம்பி என்கிற முறையிலே தெரிவிக்கிறேன். உங்களுக்கு நான் வேண்டுகோள் வைக்கிற முறையிலே, தயவுசெய்து இதை வளர்க்கக்கூடாது. இது மிக வேகமாக வளர்ந்து வருகிறது. இன்னும் சில மாதங்களிலே, இன்னும் சில ஆண்டுகளிலே, அண்ணா அவர்களுடைய, பெரியார் அவர்களுடைய, காயிதே மில்லத் அவர்களுடைய பெயரைச் சொல்லக்கூட இங்கே யாரும் இருக்க மாட்டார்கள். அந்த அம்மாவை ஆதரிக்கிறோம். எப்பொழுது? நீங்கள் அங்கே போனதனாலே, நாங்கள் இன்றைக்கு அவர்களை ஆதரிக்கிறோம். (சிரிப்பு) வேறு எதற்கு அம்மாவை ஆதரித்தது? நாங்கள் அம்மாவை ஆதரித்தது கூடாது என்று சொன்னால், பா.ஜ.க.வை நீங்கள் ஆதரித்தது எப்படிக் கூடும்? இது கூடும் கூட்டு என்று பேராசிரியர் சொல்வார்கள். அப்படியென்றால் கூடும் கூட்டு என்று...*

***மாண்புமிகு பேரவைத் தலைவர்:*** *நீங்கள் பேரவைத் தலைவரையே பார்க்கமாட்டீர்களா? (சிரிப்பு) நீங்கள் 30*



*வருடங்களாக M.L.A.-ஆக இருப்பவர். நீங்கள் யார் யாரையோ பார்க்கிறீர்களே, என்னைப் பார்க்க மாட்டேன் என்கிறீர்களே? நீங்கள் என்னுடைய வேண்டுகோளை ஏற்று தயவு செய்து உங்கள் பேச்சை சீக்கிரமாக முடியுங்கள். (குறுக்கீடு) நீங்கள் என்னைப் பார்க்கிறதே கிடையாது . (சிரிப்பு)*

***திரு. ம. அப்துல் லத்தீப்:*** *எனக்குத் தெரியும். உங்களைப் பார்த்துத்தான் பேச வேண்டும். அவரைப் பார்த்தாலும், உங்களைப் பார்த்த மாதிரி. ஆகையினாலே நான் கேட்டுக்கொள்கிறேன். அவர்களை நம்பாதீர்கள். இந்த அவையிலே நான் இன்றைக்குச் சொன்னதை நீங்கள் நாளைக்கே எண்ணிப் பார்த்து கை சேதப்படுவீர்கள். உங்களை நான் எச்சரிக்க எனக்கு வயதில்லை. கலைஞரைப் பொறுத்தவரையிலே, பேராசிரியரைப் பொறுத்த வரையிலே, எச்சரிக்க எனக்கு வயதில்லை. ஆனால், என்னுடைய ஆதங்கத்தை வெளிப்படுத்தக்கூடிய வாய்ப்பாகத்தான் இதை நான் பயன்படுத்திக்கொள்கிறேன். மிக வேகமாக வளர்ந்து வருகிறது. தமிழகத்திலே இனிமேல் இந்துத்வாவைத் தடுத்துவிடுவதற்கு மிகவும் பகீரதப் பிரயத்தனத்தை நீங்கள் செய்ய வேண்டும். ஏன் என்றால், அவர்களுக்கு முஸ்லீம்கள் மட்டும் விரோதி அல்ல, முஸ்லீம்களுக்கு முந்தி பெரியார்தான் பெரிய விரோதி. அண்ணாதான் பெரிய விரோதி. திராவிட முன்னேற்றக் கழகம்தான் அவர்களுக்குப் பெரிய விரோதி. உங்களை வைத்தே, சூத்திரத் தலைவர்களையே வைத்து, நம்மையெல்லாம் அடக்கி, இல்லாமல் ஆக்கிய பிறகு உண்மையான விஸ்வரூப தரிசனம் தருவார்கள். உண்மையான விஸ்வரூப தரிசனம் தருவார்கள். ஆகையினாலே, இங்கே இருக்கிற எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் நாம் எல்லாம் கடமையுடையவர்களாக இருக்கிறோம். எனக்கு உடல் நலமில்லை. இருந்தாலும், இன்றைக்குப் பேசுகிறேன். காரணம், என்னவென்றால் பேச வேண்டும் என்ற நிலையிலே - உங்களை நான் கைகூப்பக் கூடாது. ஆனால், கைகூப்பி கலைஞரைக் கேட்டுக்கொள்கிறேன் - தயவுசெய்து, உங்களுடைய கடமையை உணர்ந்து கொள்ளுங்கள். இல்லையென்றால், நாளை வரலாறு அப்படித் தூற்றுவதற்கு நான் விரும்பமாட்டேன். ஏனென்றால், கலைஞருடைய மேன்மை என்ன என்பது...*

*மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:* சூத்திரம் என்று சொன்ன காரணத்தினால் கேட்க விரும்புகிறேன். சூத்திரத் தலைவர்களையெல்லாம் ஒழிக்கிறார்கள் என்று சொன்னீர்கள். தாங்கள் இப்போது கூட்டணியிலே ஏற்றுக்கொண்டிருக்கிற சூத்திரத் தலைவருடைய பெயர் என்ன என்று அறிய விரும்புகிறேன்.

*திரு. ம. அப்துல் லத்தீப்:* அவர் பெயரும் தெரியும், அவர் சூத்திரரா, யார் என்பதும் எனக்குத் தெரியும். நீங்கள் வந்து அந்த சனாதனத்தினுடைய மொத்த நடமாடும்...

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* சரி, நீங்கள் இன்னும் ஒரு நிமிடத்தில் பேசி முடியுங்கள்.

*திரு. ம. அப்துல் லத்தீப்:* நீங்கள் சனாதனத்தினுடைய மொத்த உருவம் — சனாதனத்தை இந்த நாட்டில் நிலைநாட்ட வேண்டும். பெரியார் போன்ற இந்து விரோதிகள், இந்துமத விரோதிகளை இல்லாமல் ஆக்க வேண்டும் என்றிருக்கிற வாஜ்பாயோடு, அத்வானியோடு சேர்ந்திருக்கும்போது, இவர்களை நீங்கள் எப்படிப் பயன்படுத்துவதாகச் சொல்கிறீர்களோ, அப்படித்தான் நான் அவர்களோடு சேர்ந்தேன். (குறுக்கீடு) அது எனக்குத் தேவை. நீங்கள் என்னை விட்டீர்களே?

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* நான் Point of order அனுமதிக்கவில்லை. திரு. சி. வேலாயுதன், நீங்கள் உட்காருங்கள்.

*திரு. ம. அப்துல் லத்தீப்:* நான் வாஜ்பாயைக் கேட்டுக் கொள்கிறேன். வாஜ்பாய்ஜி,'யே காங்கிலி நஹீ சலேகி' அவ்வளவுதான் நான் சொல்கிறேன் உங்களுக்கு. நீங்கள் நேற்றுகூட என்ன சொல்லி இருக்கிறீர்கள்? முதலிலே பாப்ரி மசூதி உடைக்கப்பட்டது. அடுத்தது, காசி, மதுரா. 'யே தோ பெஹலி ஜாங்கி ஹை, காசி, மதுரா பாக்கி ஹை'. நேற்றுகூட அவர்கள் ஊர்வலம் நடத்தி என்ன சொல்கிறார்கள். 'யே தோ பெஹலி ஜாங்கி ஹை' பாப்ரி மசூதியை நாங்கள் உடைத்தது (குறுக்கீடு) ஆகவே, சிறுபான்மை மக்களுக்குப் பாதுகாப்பு கொடுக்க, தயவு செய்து அது உண்மை என்று சொன்னால், அதைத்தான் நீங்கள் நடத்திக் காட்ட வேண்டும் என்று சொன்னால், தயவு செய்து உங்கள் நிலையில் மாற்றம் கொள்ளுங்கள். பெரியாரையும், அண்ணாவையும் எண்ணிப் பாருங்கள். தமிழகத்தில் சனாதனத்தை நிலைநிறுத்தும் பொருட்டு, அவர்களுக்கு உதவி செய்யாதீர்கள் என்று கேட்டு, எனது உரையை நிறைவு செய்கிறேன்.



பிற்பகல் 1-20

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* திரு. பி.ஆர். சுந்தரம்.

*திரு. பி.ஆர். சுந்தரம்:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆளுநர் உரையிலே பேச அனுமதித்த உங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இப்போது மணி 1-20. அதை மனதிலே வைத்து....

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* கூட 5 நிமிடங்கள் தருகிறேன். பேசுங்கள். 1-35-க்கு அவையை ஒத்திவைப்பேன். அதுவரையிலும் பேச அனுமதி கொடுக்கிறேன்.

*திரு. பி.ஆர். சுந்தரம்:* மாண்புமிகு முதல்வர் அவர்களைப் பற்றிச் சொல்ல வேண்டுமானால், அவர் ஒரு சிறந்த திரைப்பட வசன கர்த்தா. அவர்கள் பராசக்திக்கு வசனம் எழுதினாலும் சரி, அதேபோல் மனோகராவிற்கு வசனம் எழுதினாலும் சரி, பாலைவன ரோஜாக்களுக்கு வசனம் எழுதினாலும் சரி, வண்டிக்காரன் மகனுக்கு வசனம் எழுதினாலும் சரி, பாத்திரங்களை மிக அற்புதமாக அவர்கள் படைப்பார்கள். ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமாக வசனத்தை எழுதுவார்கள். ஏனோ இந்த ஆளுநர் உரையில் அவர் சென்ற ஆளுநர் உரையில் என்ன கூறப்பட்டதோ, சொல்ல வேண்டுமானால், 1999 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 17 ஆம் நாள் சென்ற ஆளுநர் உரை. தற்போது 1 ஆம் தேதி. சென்ற கவர்னர் உரையிலே என்ன குறிப்பிட்டிருக்கின்றீர்களோ அதிலே பாதி - வேண்டுமானால் அவரிடம் தருகிறேன். அவரிடம் இருக்குமென்று நினைக்கிறேன். அதை வைத்துக்கூட அவர்கள் பார்த்துக்கொள்ளட்டும். ஆட்சி மொழியைப் பற்றி பக்கம் 2, point 3 பழைய உரையில். இப்போது பக்கம் 2 point 4. சட்டம் ஒழுங்கு, பக்கம் 2, point 4. இப்படி ஒவ்வொன்றையும் நான் சொன்னால், நேரமாகிவிடும். கிட்டத்தட்ட ஆட்சி மொழி, சட்டம் ஒழுங்கு, மொழிவழிக் கல்வி, ஏகபோகக் கொள்முதல், தரிசு நில மேம்பாட்டுக் கழனி, இப்படி கிட்டத்தட்ட 10, 15 திட்டங்கள். ஒன்றையே திரும்பத் திரும்ப இதிலே அதை எடுத்து ஒட்டியிருக்கிறார்களோ என்ற எண்ணம்தான் எனக்கு ஏற்படுகிறது. அவர்களுடைய எண்ணம், ஒரே குறிக்கோள்; தற்போதுகூட

பேராசிரியர் அவர்களுடைய உள்ளக் கிடக்கையை வெளியே கூறினார்களே, ஒரு சிலரை அழிப்பதற்கு, ஒருசில நடவடிக்கைகளை எடுத்தே ஆகவேண்டுமென்று...

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒருசிலரை அழிப்பதற்கு என்று நான் சொல்லவில்லை. அவர் அடிச்சுவட்டைப் பின்பற்றுவதாகச் சொன்னார். அந்த அடிச்சுவடு அழிவதற்காக செய்யப்பட்ட காரியம் என்று நான் சொன்னேன்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** அப்படி ஒரே கொள்கை, ஓர் அம்ச கொள்கை, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை அழிக்க வேண்டும்.....

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் முன்னாலே சொன்னார். ஆனால் அடிக்கடி இந்த அரசாங்கம் கொள்கை, நடைமுறைகளை எல்லாம் மொத்தமாக மாற்ற முடியாது. நான்கு வருடங்களாக சில காரியங்களைத் தொடர்ந்து செய்யலாம். அதனால் ஆளுநர் உரையிலே கடந்த ஆண்டு சொன்னதைத் தொடர்ந்து சொல்ல வேண்டிய அவசியம் ஓர் அரசாங்கத்திற்கு உண்டு. அடிக்கடி மாற்றவும் முடியாது. இன்னும் சொல்லப்போனால் அரசு கூறிய கருத்துக்களைக் கைவிடவும் முடியாது.

**திரு. பி.ஆர்.சுந்தரம்:** இந்த ஆண்டு நீங்கள் கூறியிருப்பதிலே, முதலாவதாக நான் சொல்லக் கடமைப் பட்டிருப்பது, தமிழ்வழிக் கல்வி. இந்தத் தமிழ்வழிக் கல்வியைப் பற்றி court-ல் இருக்கிற காரணத்தினால் அதிகமாக இதிலே நான் பேச விரும்பவில்லை. தமிழைப் பொறுத்தவரையில், எம்.ஜி.ஆர். அவர்கள் இரண்டாம் முறையாக ஆட்சிக்கு வந்தபின் மதுரையிலே ஐந்தாம் உலகத் தமிழ் மாநாட்டை நடத்தினார்கள். நான்காம் தமிழ்ச் சங்கத்தை அமைத்தார்கள். தஞ்சை நகரிலே எட்டாம் உலகத் தமிழ் மாநாட்டை புரட்சித் தலைவி அவர்கள் நடத்தினார்கள். அறிவியல் தமிழையும் அவர்கள் வளர்த்தார்கள். இன்று தமிழுக்கு நாங்கள் விரோதி என்பதுபோல நீங்கள் சித்தரித்திருக்கிறீர்கள். இதிலே ஒன்றே ஒன்றை மட்டும் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். தமிழ்க் கல்வியைப் பொறுத்தவரையில் தமிழ்க் கல்விக்காக 1 ஆம் வகுப்பிலிருந்து 5 ஆம் வகுப்பு வரை நீங்கள் அதை முழுமையாக முழு எண்ணத்தோடு ஆதரிப்பவர்களாக



இருந்தால், இங்கே இந்த அமைச்சரவையிலே இருக்கின்ற முதலமைச்சராக இருந்தாலும் சரி, பேராசிரியராக இருந்தாலும் சரி, உங்களுடைய பேரக் குழந்தைகளை அந்தத் தமிழ்வழிக் கல்வியிலே படிப்பதற்கு நீங்கள் ஏற்பாடு செய்ய வேண்டும். தற்போது எத்தனைபேர் படித்துக்கொண்டிருக்கிறார்கள் என்ற பட்டியலையும் நீங்கள் கொடுப்பீர்களேயானால் நான் மகிழ்ச்சியடைவேன். அதேபோல...

பிற்பகல் 1-25

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொது நாம் முடிவு எடுத்து அறிவித்திருக்கிற அந்தத் திட்டப்படி அன்பழகன் பேரனாக இருந்தாலும், வேறு மாதிரி படிக்க முடியாது.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** அந்தப் பள்ளியிலே சொல்கிறேன் நான்....

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, உறுப்பினர் புரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காக மட்டும் சொல்கிறேன். இது நாட்டிலே வருகின்ற மாற்றம். நாட்டிற்கே சுதந்திரம் வருகின்றபோது நான் வேண்டாம் என்று சொல்லிவிட்டு, நாட்டை விட்டு வெளியிலே போய்விட முடியாது. அதேமாதிரி எல்லா பள்ளிகளிலும் இந்த முறையைக் கையாள வேண்டும் என்பதுதான் அரசாங்கம் அறிவித்த கொள்கை. அது நீதிமன்றத் தீர்ப்பிற்கு உட்பட்டிருக்கிறது.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** அடுத்து கார்கில் போர். தமிழக மக்கள் கார்கில் இராணுவ வீரர் நிவாரண நிதிக்குப் பெருமளவில் வரிசை வரிசையாகத் தாமே முன்வந்து தாராளமாக நன்கொடை வழங்கியதால், தேசியப் பாதுகாப்பு நிதிக்கு 50 கோடி ரூபாயை தமிழ்நாடு அளிக்க இயன்றது என்று கூறியிருக்கின்றீர்கள். தமிழர்களுடைய அந்த உணர்வை நாங்கள் பாராட்டுகின்றோம். அந்த உணர்வைப் பொறுத்தவரையில் தேசிய உணர்வு. நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இலங்கைக்கு அமைதிப் படை சென்று திரும்பி வந்தபோது அந்த அமைதிப் படையை அவர்களால் வரவேற்க முடியவில்லை. அதேபோல...

*மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:* மாண்புமிகு தலைவர் அவர்களே, அது வேறு பிரச்சினை, இது வேறு பிரச்சினை. இது நாட்டைக் காப்பாற்ற, அது நாட்டு நற்பெயருக்குக் கேடு பயக்கக்கூடிய முறையில் வெளிநாட்டில் நடந்துகொண்டவர்களை வரவேற்க முடியாது என்று சொன்னது. அது, இந்த நாட்டுத் தமிழர்களுடைய மானத்தைக் காப்பாற்றுவது. (மேசையைத் தட்டும் ஒலி)

*திரு. பி.ஆர். சுந்தரம்:* தேசப்பற்றைப் பற்றிச் சொல்கிறேன். இந்தத் தேசப்பற்றைப் பொறுத்தவரையில் - சந்திரசேகர் அவர்கள் பிரதமராக இருந்தபோது விடுதலைப் புலிகள் பற்றிய ஒரு தகவலை நம்முடைய முதல்வர் அவர்களிடத்தில் சொன்னபோது, 'அந்தத் தகவல் எனக்குத் தெரியாமலேயே விடுதலைப் புலிகளைச் சென்றடைந்து விட்டது' என்று சொன்னதற்காக ஆட்சியை இழந்தவர்கள்தான் நீங்கள்.

*மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:* சந்திரசேகர் அவர்கள் சொன்னது தவறு என்பதை ஜெயின் கமிஷனிலே எங்களால் எடுத்துக் கூறப்பட்டிருக்கிறது.

*திரு. பி.ஆர். சுந்தரம்:* ஜெயின் கமிஷனே அதை விளக்கமாகச் சொல்லியிருக்கிறார்கள். கவர்னர் உரையைப் பொறுத்தவரையில் கவர்னர் உரை திட்டம் தீட்டும்போது ஒரு திட்டத்தை மாற்றி மாற்றி நீங்கள் சொல்லக் கூடாது என்று சொல்லியிருக்கிறீர்கள். ஏற்றுக்கொள்கிறேன். புதிதாகச் சில திட்டங்களை அறிவித் திருக்கிறீர்கள். சென்ற முறை சமத்துவபுரத் திட்டம். அந்தச் சமத்துவபுரத் திட்டத்திலே ஒன்றைச் சொல்ல வேண்டும். சமத்துவபுரத் திட்டம் இன்றைக்கு எப்படி இருக்கிறது? சமத்துவபுரத் திட்டம் இன்றைக்கு தி.மு.க. புரமாகத்தான் இருக்கிறது. முதல்வர் அவர்களே அதை ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். அந்தத் திட்டம் சரியில்லை என்று முதல்வர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். தாங்கள் பேசியதை நான் நினைவுபடுத்துகிறேன். 'சமத்துவபுரத் திட்டம் சில அதிகாரிகளின் கவனக் குறைவாலும் பொறுப்பில் உள்ளவர்கள் சிலரது அலட்சிய மனப்பான்மையினாலும் வேண்டுமென்றே திட்டமிட்டு இந்தக் காரியத்தைக் கெடுக்கிற முயற்சியை மேற்கொள்ளும் ஒருசில சமூகவிரோதிகள் தங்களுக்குக்



கிடைத்த இடத்தில் விளைவிக்கும் சேஷ்டைகளாலும் மிகக் கவலை தரக்கூடிய அளவுக்கு ஆகியுள்ளதைக் கண்டு வருந்துகிறேன்' என்று நீங்களே அதையும் கூறியிருக்கின்றீர்கள்.

*மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:* 'ஒரு சில' - சில என்பதற்கு அர்த்தம் புரியுமா, புரியாதா என்று தெரியவில்லை. பல என்று சொல்லவில்லை நான். சில இடங்களில் என்று சொல்லியிருக்கிறேன். அது உண்மையை ஒத்துக்கொண்டு இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதுதான் யோக்கியர்களுடைய நிலை. (மேசையைத் தட்டும் ஒலி)

*திரு. பி.ஆர். சுந்தரம்:* அந்தத் திட்டத்திலே அந்த வீடுகள் எப்போது கட்டப்பட்டன? கிட்டத்தட்ட 4, 5 மாதங்கள் அதிகப்படியாக ஒரு வருடக் காலங்கள் ஆகியிருக்கலாம். அந்த வீடுகள் எல்லாம் ஒழுகுகின்றன என்று நாங்கள் தெரிவித்தோம். நீங்கள் அதற்காக 1 கோடி ரூபாயை ஒதுக்கியிருக்கின்றீர்கள், ஒரு வீட்டிற்கு 2,000 ரூபாய் என்று. எனக்குத் தெரிந்தவரையில் புதிதாகக் கட்டடம் கட்டினால் 5 மாதங்கள், 6 மாதங்கள், 1 வருடத்திலே அந்தக் கட்டடம் ஒழுகுமா? நீங்களே ஓர் அத்தாட்சி — நற்சான்றிதழ் கொடுத்திருக் கின்றீர்கள், ஒரு வீட்டிற்கு 2,000 ரூபாய் என்று. முன்புகூட புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். காலத்தில் வீடுகள் எல்லாம் கட்டப்பட்டன. அதற்கு 5 ஆண்டுகள், 10 ஆண்டுகள் கழித்து ஓடுகளை மாற்றுவதற்கு தற்போது புதிய திட்டத்தைக் கொண்டு வந்து கொடுத்தோம். ஆனால், 5 மாதங்கள், 6 மாதங்கள்...

*மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:* தயவுசெய்து வரலாற்றை மாற்றாதீர்கள். ஆதிதிராவிடர்களுக்கு இலவச கான்கிரீட் வீடு கட்டுகிற திட்டமே என்னால் ஆரம்பிக்கப்பட்டதுதான். (மேசையைத் தட்டும் ஒலி) அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட திட்டம் சத்துணவுத் திட்டம். அதை நாங்கள் இன்றைக்கும் பாராட்டுகின்றோம், வரவேற்கின்றோம். அதைத் தொடர்ந்து நடத்திக் கொண்டிருக்கின்றோம். ஆனால், நீங்கள் தேவையில்லாமல் வேண்டுமென்றே சொல்கின்றீர்கள். எந்த வீடு கட்டினாலும் அது புதிதாகக் கட்டப்பட்ட நேரத்தில் கொஞ்சம் வீரல் விடும். சில இடங்களில். அதைக்கூட எதிர்க்கட்சி சொல்கிறது என்று அலட்சியப்படுத்தாமல் — சில இடங்களில் மழை பெய்தால் தண்ணீர்

கசிகிறது என்று எதிர்க்கட்சித் தலைவர் போன்றவர்கள் எல்லாம்கூட சொன்னார்கள். உடனடியாக அந்த இடத்திற்குச் சென்று பார்வையிட்டு இராமநாதபுரத்திலேகூட குறிப்பிட்டார்கள். உடனடியாக கலெக்டரைவிட்டு பார்வையிடச் சொல்லி அதையெல்லாம் பழுது பார்த்திருக்கிறோமே தவிர அதை அலட்சியப் படுத்தவில்லை.

*திரு. பி.ஆர். சுந்தரம்:* சமத்துவபுரத் திட்டத்திலே மற்றொன்று. கொடிகட்டிப் பறக்கும் ஏட்டுப்பட்டி சமத்துவபுரம் என்று என்னுடைய நாமக்கல் மாவட்டத்திலே அனைத்து சமத்துவபுர வீடுகளிலும் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய கொடியைப் பறக்க விட்டிருக்கின்றார்கள். (குறுக்கீடு) அதிலே என்ன தவறு என்று கூறுகிறீர்கள்? அந்த...

*பிற்பகல் 1-30*

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* பேரவையின் அனுமதியுடன் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

*மாண்புமிகு திரு. கோ.சி. மணி:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதே சமத்துவபுரத்தில் இவர்களுடைய இரட்டை இலையைப் போட்டு அந்த அம்மையார் படத்தையே போட்டிருக்கிறதை இவர் பார்த்தாரா இல்லையா என்று தெரியவில்லை. அதற்கு எப்படி அனுமதித்தார்கள்?

*திரு. பி.ஆர். சுந்தரம்:* இப்படியும் சொல்வீர்கள். நீங்கள் ஆதாரமும் சொல்வீர்கள். எங்களையும் ஆதாரம் கேட்பீர்கள். நாங்கள் ஆதாரமாகக் காட்டியிருக்கிறோம், இந்த இடத்திலே இருக்கிறது என்று. அதற்கு நீங்கள் சொல்லுங்கள் பார்ப்போம். எதற்கெடுத்தாலும் எங்களை ஏன் வதைக்கிறீர்கள்?

அடுத்தபடியாக, வரும்முன் காப்போம் திட்டம். இந்த வரும்முன் காப்போம்...

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* கொஞ்சம் கவனியுங்கள். சமத்துவபுரத்திலே வீடு ஒதுக்கலாமேயொழிய அங்கே குடியிருக்கிறவர்கள் அரசியலிலே ஈடுபடக் கூடாது என்று ஒன்றும் வாக்குறுதி வாங்கிக் கொண்டு கொடுப்பதில்லை. நீங்கள் பேசுங்கள்.



*திரு. பி.ஆர். சுந்தரம்:* அடுத்தபடியாக வரும் முன் காப்போம் திட்டம். இந்த வரும்முன் காப்போம் திட்டத்தைப் பொறுத்த அளவில் இது ஒரு கண் துடைப்பு நாடகம். அந்த வரும்முன் காப்போம் திட்டத்திலே அங்கே நோயாளிகளுக்கு டோக்கன் கொடுக்கிறார்களே ஒழிய - இந்த வரும்முன் காப்போம் திட்டத்தைப் பொறுத்தவரையில் புரட்சித் தலைவர், பொன்மனச் செம்மல், டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய 83-வது பிறந்த நாளில் நாங்கள் ஒரு திட்டத்தைக் கொண்டுவந்து அதை அமல்படுத்தப் போகிறோம் என்பதைத் தெரிந்து நீங்கள் திடீரென்று அறிவித்திருக்கின்றீர்கள். இருந்தாலும் (குறுக்கீடுகள்) இதிலே எந்தவிதமான நன்மைகளும் இல்லை. இந்தத் திட்டத்திலே கொடுப்பதற்கு எந்தவிதமான...

*மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:* அவசரத்தில் உளறக் கூடாது. எம்.ஜி.ஆர். அவர்களுடைய பிறந்த நாளில் கொண்டுவரப் போகிறோம் என்று சொன்னால், எம்.ஜி.ஆர். இப்போது எங்கே இருக்கிறார்? புரட்சித் தலைவர் அவர்களுடைய பிறந்த நாளில் கொண்டு வரப்போவதைத் தெரிந்துகொண்டு செய்தீர்கள் என்று சொல்கிறீர்களே, இப்போது எங்கே இருக்கிறார் அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள்?

*திரு. பி.ஆர். சுந்தரம்:* இல்லை. எங்கள் கட்சியின் சார்பாக அப்படியொரு திட்டத்தை நாங்கள் கொண்டு வருவதாக இருந்தோம். நீங்கள் அதை முந்திக் கொண்டு செய்தீர்கள் என்று சொல்கிறேன் நான். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். எங்கே இருக்கிறார் என்பது எல்லோருக்கும் தெரியும். இப்போது எங்கே இருக்கிறார் என்று....

*மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

*திரு. பி.ஆர். சுந்தரம்:* ஒரேயொரு நிமிஷம்.

*மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:* இருங்கள், ஒரு நிமிஷம் இதற்காக நான் வாங்கித் தருகிறேன். (சிரிப்பு) ஓர் அரசாங்கம் செயல்படுத்துகிற திட்டம் என்பது கட்சிக்கு அப்பாற்பட்டது. அரசாங்கம் செயல்படுத்துகிற திட்டம் என்றால் அதிகாரிகளெல்லாம் பங்கெடுத்துக் கொண்டு, அனைத்துக் கட்சியைச் சேர்ந்தவர்களும் சேர்ந்து செயல்படுத்துகிற திட்டம். ஒரு கட்சி

செயல்படுத்துகிற திட்டம் என்பது அந்தக் கட்சியைப் பொறுத்தது. எனவே, அரசாங்கம் செய்ய வேண்டிய மிகப் பெரிய காரியத்தை எந்தவொரு தனிக் கட்சியோ, அமைப்போ செய்துவிட முடியாது. ஏதோ அதைப் பார்த்துச் செய்ததாகச் சொல்வது அவ்வளவு பொருத்தமாக இருக்காது.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** இந்த வரும்முன் காப்போம் திட்டத்திலே ஒழுங்காக மருந்து கொடுப்பதில்லை. மாத்திரை கொடுப்பதில்லை (குறுக்கீடு) இருங்கள், நான் பேச்சை முடித்துவிடுகிறேன். நீங்கள் வேண்டுமானால் அப்புறமாகப் பதில் கொடுங்கள். அதிலே அடையாள அட்டைதான் தருகிறார்களேயொழிய மருந்துகளோ, மாத்திரைகளோ எதுவுமே தருவதில்லை. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர்கள் அமைதியாக இருக்க வேண்டும்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

(திரு. பி.ஆர். சுந்தரம் தொடர்ந்து நின்றுகொண்டே இருந்தார்)

நான் எழுந்து பேசுகிறேன், கொஞ்சம் உட்காருங்கள். நேற்றையதினம் மாண்புமிகு உறுப்பினருடைய கட்சியின் தலைவி சொன்ன வாதத்தை வைத்துக்கொண்டு இங்கே வரும்முன் காப்போம் திட்டத்தைப் பற்றி உறுப்பினர் பேசுகிறார். நான் தெளிவாகச் சவால்விட்டுச் சொல்கிறேன். எங்கேயாவது ஓர் இடத்தில் வரும்முன் காப்போம் திட்டத்தில் நோயாளிகளுக்கு மருந்து கொடுக்கவில்லை என்று சொன்னால் நான் ராஜிநாமா செய்யத் தயார். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், அந்த வரும்முன் காப்போம் திட்டத்தின்கீழ் மருந்துகள் முறையாக வழங்கப்படுகிறது என்று தெரிந்தால், அந்த அரசியல் கட்சியை விட்டு அந்த அம்மையார் அவர்கள் ஒதுங்கத் தயாரா என்றும் நான் கேட்க விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இன்னொன்று. வரும்முன் காப்போம் திட்டம் ஏழையெளிய மக்களுக்கானது. தமிழ்நாட்டு மக்கள் வரவேற்கின்றார்கள்.



முதலமைச்சர் கண்டுபிடித்த அந்தத் திட்டத்தின் மூலம் கிராமத்து மக்கள் பயனடைகிறார்கள். இதுவரையிலும் 15 இலட்சத்திற்கும் மேற்பட்டவர்கள், இந்தச் சிகிச்சை மூலம் பயன் பெற்றிருக்கிறார்கள். 60 இலட்சம் ரூபாய்க்கு மேலே மருந்துகள் வழங்கப்பட்டிருக்கின்றன. ஆனால், ஓர் அரசியல் கட்சியினுடைய தலைவி கிண்டல் செய்கிறார். முதலமைச்சருக்குப் பின்னாலே நிழலாக இருந்து கொண்டு ஆற்காடு வீராசாமி இதைப்பற்றிக் கவனிப்பதில்லை என்று சொல்கிறார். நான் சொல்கிறேன், கலைஞர் இந்த நாட்டுக்காக, ஏழை எளிய மக்களுக்காகப் பாடுபடுபவர், இனத்திற்காகப் பாடுபடுபவர். அவருடைய நிழலாக இருப்பது எனக்கு அவமானம் இல்லை. பேய் பிசாசுகளுக்குத்தான் நிழலாக இருக்கக் கூடாது என்பது என்னுடைய கருத்து.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் நிழலாக இருந்தாலும் சரி, நிஜமாக இருந்தாலும் சரி, எங்களுக்கு அதைப் பற்றிக் கவலையில்லை. உங்களுக்குக் கொடுக்கப்பட்ட வேலைகளை நீங்கள் ஒழுங்காகச் செய்யவில்லை என்பதைத்தான் நாங்கள் சொல்கின்றோம். (குறுக்கீடுகள்) இன்றைக்குச் சொல்கின்றோம். இப்போது ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஒழுங்காகச் செயல்படுவதில்லை. சேலம் மாவட்டத்திலே கிட்டத்தட்ட 8 மாதங்களாக ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் திறக்கப்படாமல் இருக்கிறது. நீங்கள் என்ன செய்து கொண்டிருக் கிறீர்கள்?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த ஆரம்ப சுகாதார நிலையத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சேலம் மாவட்டத்திற்குச் சென்றிருந்தபோது திறந்து வைத்தார்கள். ஆனால், ஏற்கெனவே இயங்கிக் கொண்டிருக்கின்ற ஒரு தனியார் கட்டடத்தில் இருக்கக்கூடிய ஆரம்ப சுகாதார நிலையத்தை அங்கேயிருந்து மாற்றுவதற்கு அ.தி.மு.க.-வினர் தடையாக இருந்தார்கள். அதை மாற்ற மாவட்ட ஆட்சித் தலைவர் தலையிட்டு, மாவட்ட அமைச்சர் நம்முடைய மாண்புமிகு வீரபாண்டியார் அவர்களும் தலையிட்டு 3 தினங்களுக்கு முன்னாலே அந்த மருத்துவமனைக்கு மாற்றி விட்டார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-35

**திரு. பி.ஆர். சுந்தரம்:** இன்றைக்கு இந்த அரசைப் பற்றி மக்கள் தலைவர் ஐயா மூப்பனார் அவர்கள் மக்கள் விரோத அரசு என்று கூறியிருக்கிறார்கள். அதிலே என்ன தவறு? கரும்புக்கு டன் ஒன்றுக்கு ஆயிரம் ரூபாய் கொடுக்கிறேன் என்று கூறி வஞ்சித்துவிட்டீர்கள். இது மக்கள் விரோத அரசு இல்லையா? மூடப்பட்ட தொழிற்சாலைகளைத் திறப்பதற்காக எந்தவிதமான நடவடிக்கைகளும் எடுக்காமல் இருக்கிறீர்கள். இது மக்கள் விரோத அரசு இல்லையா? 2001 வரை பஸ் கட்டணத்தை உயர்த்த மாட்டோம் என்று கூறிவிட்டு இரண்டு முறை பஸ் கட்டணத்தை உயர்த்தியிருக்கிறீர்கள், இது மக்கள் விரோத அரசு இல்லையா? மின்சாரக் கட்டணத்தை மாண்புமிகு அமைச்சர் எத்தனை தடவை உயர்த்தியிருக்கிறார்கள்? மின்சாரக் கட்டணத்தை உயர்த்தியதற்குப் பதிலாக மின்சாரத்திற்குப் புதியதாக இணைப்பு கொடுக்கிறோம் என்ற பெயரிலே கிட்டத்தட்ட 130 சதவீதம் நீங்கள் உயர்த்த வில்லையா? இது மக்கள் விரோத அரசு இல்லையா?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு தலைவர் அவர்களே, அ.தி.மு.க. ஆட்சிக் காலத்திலே ஒவ்வோர் ஆண்டும் மின்சாரக் கட்டணம் உயர்த்தப்பட்டது. திராவிட முன்னேற்றக் கழகம் பொறுப்பு ஏற்றுக்கொண்டு இந்த நான்கு ஆண்டு காலத்திலே இரண்டு முறைதான் மின்சாரக் கட்டணத்தை உயர்த்தியிருக்கிறோம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** இந்த ஆளுநர் உரையிலே கூறியிருக்கிறீர்கள். நாடாளுமன்றத் தேர்தலை மிகச் சிறப்பாக நடத்தி இருக்கிறோம் என்று கூறியிருக்கிறீர்கள். ஒத்துக்கொள்கிறேன். நாடாளுமன்றத் தேர்தலை மிகச் சிறப்பாக நடத்தியிருக்கிறீர்கள் அதைச் சொல்லவில்லை. ஆனால், இந்த நாடாளுமன்றத் தேர்தலில் எங்களுடைய கூட்டணி 11 இடங்களையும் நீங்கள் 12 இடங்களையும் பெற்றிருக்கிறீர்கள். ஆனால், தேர்தல் முடிவைச் சற்று பார்க்க வேண்டும். நாடாளுமன்றத் தேர்தலில், கிட்டத்தட்ட 84 சட்டமன்றத் தொகுதிகளில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றி பெற்றிருக்கிறது. 50 சட்டமன்றத் தொகுதிகளில் 5 ஆயிரத்திற்குக்கீழான வாக்கு வித்தியாசத்தில்தான் வெற்றியை



வாய்ப்பை இழந்திருக்கிறோம். அன்றைக்கு எங்களிடம் இவர்கள், தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் இல்லை. இவர்கள் எல்லாம் இருந்திருந்தால் அன்றைக்கே அந்த நாடாளுமன்றத் தேர்தலைப் பொறுத்தவரையில் கிட்டத்தட்ட 40 இடங்களிலே வெற்றி பெற்றிருப்போம். (மணியடிக்கப்பெற்றது)

அதேபோல, அன்றைக்கே கிட்டத்தட்ட 150 இடங்களில் சட்டமன்றத் தேர்தலில் வெற்றி பெற்றிருப்போம். ஆனால், இப்போது நடந்த இடைத்தேர்தலைப் பற்றி கொக்கரித்துக் கொண்டிருக்கிறீர்கள். இந்த இடைத்தேர்தலில் என்ன நடந்தது என்று நாட்டுக்கே தெரியும். என்ன இந்த இடைத் தேர்தலில்....

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** 84 இடங்களில், நாடாளுமன்றத் தேர்தலின்போது 84 சட்டமன்றத் தொகுதிகளில் தங்கள் அணி வெற்றி பெற்றிருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் சொல்கிறார். இது அவருடைய தொண்டர்களை ஊக்கப்படுத்துவதற்காக சொல்கிற வார்த்தை; அம்மையாரும் சொன்னார். இப்போது சுந்தரமும் சொல்கிறார். நான் அதை ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் கணக்கை மறந்துவிடக் கூடாது. மொத்தம் 234 இடங்கள். நீங்கள் 84 இடங்களிலே வெற்றி பெற்றிருக்கிறீர்கள். நாங்கள் பாக்கியிருக்கிற 150 இடங்களிலே வெற்றி பெற்றிருக்கிறோம் என்பதை மறந்துவிட வேண்டாம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** நேற்றைக்குக்கூட.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு நிமிடத்திலே பேச்சை முடியுங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** நேற்றைக்குக்கூட பேசும்போது புதிய கூட்டணியைப் பற்றி - பேராசிரியர்கூட, அவர்கள் பேச வேண்டாம் என்ற வார்த்தையை நீங்கள் வியாக்யானம் செய்திருக்கிறீர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** நான் ஒன்றும் வியாக்யானம் செய்யவில்லை. கூடும் நட்பு என்றால் நல்ல நட்பு என்று பொருள். கூடா நட்பு என்றால் தீய நட்பு என்று அர்த்தம். கூடா நட்பு என்று சொல்ல நீங்கள் விரும்பாவிட்டால் கூடும் நட்பு; கூடும் என்றால் ஆகும் என்று பொருள்.

*திரு. பி.ஆர். சுந்தரம்:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் இன்றைக்கு அமைத்திருக்கின்ற கூட்டு லட்சியக் கூட்டு. அன்றைக்கு அன்னை இந்திரா காந்தி இருந்த காலத்திலும் சரி, பிரதமர் ராஜீவ் காந்தி இருந்த காலத்திலும் சரி, நாங்கள் ஓர் அற்புதமான...

*மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:* லட்சியக் கூட்டு. அவர்களே மனதார ஒத்துக்கொள்ள மாட்டார்கள். இன்றைக்குப் பிற்பகல் தீர்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது, 25 மாதங்கள் என்று, லட்சியக் கூட்டுக்கு. (மேசையைத் தட்டும் ஒலி)

*திரு. பி.ஆர். சுந்தரம்:* உங்களுடைய கூட்டு பற்றி அன்றைக்குக் கூறினீர்கள். பண்டாரங்கள், பரதேசிகள் இவர்களை எல்லாம் தமிழ்நாட்டிலே நாங்கள் நுழைய விடமாட்டோம் என்று கூறி, இப்போது அந்தப் பண்டாரங்களை, பரதேசிகளைத் தோளிலே தூக்கி வைத்துக்கொண்டு நீங்கள் ஆடும்போது - அன்றைக்கு நீங்கள் கூறினீர்கள், இந்திரா காந்தி அம்மையாரைப் பற்றி. நீங்கள் பேசிய வார்த்தைகள், மதுரையிலே அவர்களுக்கு நீங்கள் கொடுத்த....

*மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:* தலைவர் அவர்களே, இந்திரா காந்தி அம்மையார் அவர்களைப் பற்றி நான் என்றைக்கும் அன்னை இந்திரா காந்தி என்ற சொல்லைத் தவிர வேறு எந்தச் சொல்லையும் என்றைக்கும் மாற்றியது கிடையாது. எப்போதும் எந்த மரியாதைக்குரிய தலைவரையும் இழிமொழிகளால் அர்ச்சிக்கின்ற பழக்கம் எனக்கு என்றைக்கும் இருந்தது கிடையாது. அண்ணா வழியிலே வந்தவன் நான் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

*திரு. பி.ஆர். சுந்தரம்:* ஆகவே, எங்களுடைய கூட்டைப்பற்றி விமர்சிப்பதற்கு உங்களுக்கு அருகதை இல்லையென்று, இந்தப் பெண்கள் தினத்திலே கூறி அடுத்த பெண்கள் தினத்திலே எங்கள் புரட்சித் தலைவி அவர்கள் தமிழகத்தின் முதல்வராக வருவார் என்ற நற்செய்தியை மட்டும் கூறி, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

*மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:* தலைவர் அவர்களே, இந்த wit-ஐ நான் ரசிக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



பிற்பகல் 1-40

## 6. அரசினர் தீர்மானம்

### விதி 32-ஐத் தளர்த்தல்

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* அரசினர் தீர்மானம். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

*மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்-விடைகள் என்று உள்ள சட்டமன்றப் பேரவை விதி 32-ஐ, நாளையதினம் 9-3-2000 (வியாழக்கிழமை) அன்று தளர்த்தி, அந்நேரம் அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை.

தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

நாளை (9-3-2000) வினாக்கள்-விடைகள் நேரம் இல்லை.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (9-3-2000) காலை 9-30 மணிக்குக் கூடும், வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-41 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

## 7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும் ஆணைகளும்

76. 1998-99 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தின் (சேலம் கோட்டம்-2) பனிரெண்டாவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்)

77. 1998-99 ஆம் ஆண்டிற்கான பல்லவன் போக்குவரத்து அறிவுரைப் பணிக் குழுவின் பதினைந்தாவது ஆண்டறிக்கை (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்)

78. 1998-99 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு போக்குரத்து வளர்ச்சி நிதி நிறுவனத்தின் இருபத்தி நான்காவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்)

79. 1997-98 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு முன்னாள் படைவீரர் கழகத்தின் பதிமூன்றாவது ஆண்டறிக்கை.. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்)

80. 1998-99 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தின் எட்டாவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்)

81. 1998-99 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு பஞ்சாலை நிறுவனத்தின் முப்பதாவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்)



82. 1996-97 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு எஃகு நிறுவனத்தின் பதினாறாவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்)

83. 1998-99 ஆம் ஆண்டிற்கான அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின் (தமிழ்நாடு கோட்டம்-1) இருபதாவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956)619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்)

84. 1998-99 ஆம் ஆண்டிற்கான அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின் (தமிழ்நாடு கோட்டம்-2) ஆறாவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956)619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்)

85. 1998-99 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தின் (விழுப்புரம் கோட்டம்-1) இருபத்தி நான்காவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956)619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்)

86. 1998-99 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தின் (சேலம் கோட்டம்-1) இருபத்தி ஏழாவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956)619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்)

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

10. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்றுப் பதினெட்டாவது அறிக்கை, 1999-2000.

11. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்றுப் பத்தொன்பதாவது அறிக்கை, 1999-2000.

12. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று இருபதாவது அறிக்கை, 1999-2000.

[2000 மார்ச் 8

13. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று இருபத்து ஒன்றாவது அறிக்கை, 1999-2000.

14. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று இருபத்து இரண்டாவது அறிக்கை, 1999-2000.

---

இந்நாளைய நடவடிக்கை குறிப்புகள் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை நிருபர்கள் பிரிவால் கணினி மூலம் வடிவமைக்கப்பட்டு அரசு மைய அச்சகத்தால் அச்சிடப்பட்டது.

அரசு மைய அச்சகம், சென்னை — 600 079